# மனித விழுமியத்துக்கான

# சத்திய சாயி கல்வி

SATHYA SAI EDUCATION
IN
HUMAN VALUES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

85/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித விழுமியத்துக்கான

# சத்திய சாயி கல்வி

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவுடைய அருள்
உரைகளில் இருந்து பெறப்பட்டவை

ஆங்கில மூலம்

தொகுப்பு — லொறேன் பறோஸ்

வெளியீடு :

தாய்லாந்திலுள்ள சத்திய சாயி நிறுவனத்தால் அச்சிட்டு
வெளியிடப்பெற்றது.

தமிழில்

தொகுப்பு — கலாநிதி சபா ஜெயராஜா

வெளியீடு :

**பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம்**

பிள்ளையார் கோவிலடி

தாவடி (இலங்கை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| Name of Book | : | MANITHA VILUMIYATHITKANA SATHYA SAI KALVI |
| Compiled | : | LORAINE BURROWS |
| Translated | : | DR. SABA — JEYARAJAH |
| Number of Copies | : | 1000 |
| Price | : | |
| Published | : | BAGHAWAN SRI SATHYA SAI SEVA CENTRE<br>PILLAIYAR KOVILADI<br>THAVADY, KOKUVIL<br>SRI LANKA |
| Printed At | : | SPARTAN PRINTS LTD.<br>154, WOLFENDHAL STREET<br>COLOMBO - 13 |
| Date | : | OCTOBER — 1992 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

"இந்நூல் பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவுக்கு சமர்ப்பணம்"

மனித விழுமியக் கல்வித்திட்டத்தை உருவாக்கிப் புத்துணர்ச்சி தந்தவர் பகவானே. மனித விழுமியங்களும், அறமும் வீழ்ச்சி யடைந்து செல்லும் இன்றைய உலகிலே விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் அதீத வளர்ச்சி யடைந்து மனிதன் தன்னை மட்டு மல்ல முழு உலகையுமே சர்வநாசம் செய்யும் நிலைக்குத் தள் ளப்பட்டு நிற்கும் அவலவின் மத்தியிலே, கல்வியில் மனித மேம் பாட்டு விழுமியங்கள் எதிர்காலத்துக்குரிய நம்பிக்கை ஒளியாகி நிற்கின்றன.

கடந்த இரண்டு தசாப்தங்களாக ஸ்ரீ சத்தியசாயி பாபா நிகழ்த்திய உரையாடல்களில் இருந்து திரண்ட தெள்ளமுதம், தொடரும் அத்தியாயங்களில் தரப்பட்டுள்ளன. ஸ்ரீ சத்தியசாயி பாபா கல்விப் பொருள்மீது ஆற்றிய உரைகள் அனைத்தையும் ஒவ்வொன்றாகப் பதிவு செய்தல் மிக்க கடினமான பணியாகும். ஏனெனில் அவர் மிகுந்த பரவலாக அளவிறந்த கல்விக் கருத்துக் களை அள்ளித் சொரிந்துள்ளார்! கல்வி தொடர்பான அவர்க ளது போதனைகளை ஆசிரிய வாண்மையில் ஈடுபட்டுள்ளோர்க்கு வழிகாட்டும் ஒரு தொகுதியாக வழங்குவதற்கு மேற்கொள்ளப் பட்ட பணிவான பணியாக இது அமைகின்றது.

"எல்லா வாண்மைகளிலும் உங்கள் வாண்மையே மேன்மை யானது. அது மிக்க கடினமானதும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததுமாகும்"

என்று ஸ்ரீ சத்திய சாயிபாபா தனது அருளுரையிலே குறிப் பிட்டுள்ளார்.

நன்றியுடனும், பணிவார்ந்த சேவையுடனும்

**லொறேன் பறோஸ்,**

பாங்கொக், 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சாயிராம்

# மொழிபெயர்ப்பாளர் உரை

சமூக நெருக்கு வாரங்கள் ஏற்படும்பொழுது கல்வி முறைமையின் மீளாய்வு பற்றியே உலக நாடுகள் சிந்திக்கின்றன. பிளேட்டோ தொடக்கம் போலோ பிறீறி வரை இவ்வகை மீளாய்வானது முடிவிலாத் தேடலாகவே இருந்து வருகின்றது. இந்நிலையிற் கல்விக் கோட்பாடுகள் தொடர்ந்து சிக்கலாகும் இயல்பினதாக மாற்றப்பட்டு வருகின்றன மீள் உற்பத்தியும், அறிவும் வீக்கமடைந்து சென்றாலும், அவற்றின் நோக்கிலும், பங்கீட்டிலும் நிகழும் அசமத்துவ நிலைகள் மனிதவிழுமியங்களை வறிதாக்கி வருகின்றன. எதிர் மானுடப்படுத்தலுக்குக் கருவியாக அறிவு பயன்படுகின்றது.

பாரதப் போரின் அவலங்களின் மத்தியில் கீதை உபதேசிக்கப்பட்டமை போன்று இன்றைய சமூக அவலங்களின் மத்தியில் மனித விழுமிய மேம்பாட்டுக்கான கல்வி அருளப்பட்டுள்ளது. உள்ளார்ந்த நிலைமாற்றம் என்பது அகப் பொருளாகமட்டும் அமையாது அனைத்து மனிதர்களையும் மேம்படுத்தும் புறப் பொருளாகவும் பரிணமிக்கின்றது. உடல், உள்ளம், மனவெழுச்சி, ஆன்மிகம் என்ற அனைத்துப் பரிமாணங்களையும் மேம்படுத்த வல்ல இந்தக்கல்வித் தரிசனத்தை எனக்கு அறிமுகம்செய்த பெரியார் திரு. எஸ். சிவஞானம், மற்றும் திரு எஸ். ஆர். சரவணபவன், திரு. செ. கமலாகரன் ஆகியோருக்கும் எனது உளமார்ந்த நன்றி.

**சபா. ஜெயராஜா**

கல்வியியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
25 - 5 - 92

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சாயிராம்

# ஆசியுரை

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் அருளுரைகளிலிருந்து தொகுத்து எடுத்து பாங்கொக் வாசியாகிய திருமதி லொறேன் பறோஸ் அவர்களால் தயாரிக்கப்பட்ட ''மனித விழுமியத்துக்கான சத்திய சாயி கல்வி'' என்ற நூல் 1988ம் ஆண்டு தாய்லாந்திலுள்ள சத்திய சாயி நிறுவனத்தால் ஆங்கிலத்தில் அச்சிட்டு வெளியிடப் பட்டது. இதை தமிழில் மொழிபெயர்த்து இலங்கையில் வெளியிடு வதற்கு தாய்லாந்து சத்திய சாயி நிறுவனத்தின் அனுமதியைக் கேட்டோம் மனமுவந்து தந்தார்கள்.

நூலை தமிழாக்கம் செய்வதற்கு மிகவும் பொருத்தமாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகக் கல்வித்துறையின் சிரேஷ்ட விரிவுரை யாளர் கலாநிதி சபா ஜெயராஜா அவர்கள் சம்மதம் தந்து வெகு விரைவில் தமிழாக்கத்தைப் பூர்த்தி செய்தார்.

இந்நூலை வெளியிடுவதற்கு அநாம தேயமாக இருக்க விரும்பும் ஓர் அடியாரின் முற்பண உதவியுடன் தாவடி பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா சமித்தி பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறது.

சத்திய சாயி மனித விழுமியக்கல்வித் திட்டத்தில் ஈடுபட விரும்பும் ஆசிரியர்களுக்கும் மற்றவர்களுக்கும் பயன் தரக்கூடிய ஓர் கைநூலாகிய இந்நூலை வெளியிடுவதற்கு உதவிய எல்லோருக் கும் பகவானின் ஆசி கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறோம்.

ஜெய் சாயிராம்

**செ. சிவஞானம்**
மத்திய இணைப்பாளர்
பிராந்தியம் X
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

உலகெங்குமே சட்டம், ஒழுங்கு, நீதி என்பன புறக்கணிக்கப் பட்டு, போராட்டங்கள் உருவெடுத்துள்ளதனால் மனிதன் மனநிம் மதியை இழந்து தவிக்கிறான். சமூக ஒழுங்கு சமூக நீதி என்பவற்றை எப்படி நிலைநாட்டுவது என்பதனைச் சரிவரத் தெரியாமல் அரசாங்கங் கள் கூடத் தத்தளித்துக் கொண்டிருக்கின்றன. உலகின் இந்நிலையி லிருந்து விடுபட பேரறிஞர்களெல்லாம் கல்வி, அரசியல், பொருளியல் சார்ந்த கோட்பாடுகளிலிருந்து விடைதேடிப் பெறமுடியாது அவலப் படுகின்றனர்.

இந்த நிலையில்தான் தெய்வவதாரமான பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா ''மனித விழுமிய மேம்பாட்டுக்கான கல்வி'' என்னும் புதிய கல்வி முறையை அறிமுகப் படுத்தியுள்ளார், இதுவே உலகைப் பீடித்து வருத்தும் நோய்க்கான நிவாரணமாகும்.

இன்று பலநாடுகளும் இந்தக் கல்வித் திட்டத்தை ஏற்று நடைமுறைப் படுத்தி வருகின்றன. இக்கல்விமுறை பற்றி பகவான் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆற்றிய உரைகளிலிருந்து இந்நூல் ஆக்கப் பட்டுள்ளது. இதன் தொகுப்பாசிரியரான திருமதி லொறெயின் பறோஸ் தாய்லாந்து நாட்டில் பகவான் பாபாவின் ''மனித விழுமிய மேம்பாட்டுக்கான கல்வி''யை ஆசிரியர்களுக்குப் பயிற்றுவிப்ப தோடு இத்திட்டத்தைப் பாடசாலைகளில் அமுலாக்கும் குழுவிலும் அங்கம் வகிக்கின்றார் இந்நூலைத் தொகுக்க திரு N. கஸ்தூரி, திரு. D. ஹேஜ்மாடி, திருமதி S. ஷா. ஆகியோர் எழுதிய பகவான் பாபா பற்றிய நூல்கள் உசாத்துணையாய் இருந்ததாகக் குறிப்பிடுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல் தமிழ்பேசும் மக்களுக்குப் பயன்படவேண்டும் என்னும் நோக்கில் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடப்படுகிறது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளரும். இணுவில் மண்டலியின் தலைவருமான கலாநிதி சபா. ஜெயராஜா தமக்கே உரித்தான அழகுத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார். அச்சிட்டு நூலுருப் பெறத் தேவையான தொகையை முன் பணமாக செலுத்த வேண்டிய நிலை உருவான போது இணுவில் சாயி அன்பர் ஒருவர் தாமாகவே முன்வந்து தந்து உதவினார். திரு க. நடனசபாபதி அவர்கள் அச்சேற்றும் போது பிழைகளைத் திருத்தியுள்ளார். கொழும்பு ''ஸ்பாரன் பிறின்ஸ்'' தாபனத்தார் உரிய தவணைக்குள் சிறப்புற அச்சிட்டுத் தந்துள்ளனர்.

இவர்களனைவருமே சாயி சேவை எனக்கருதி பக்தி சிரத்தையுடன் செய்த நற்பணியின் பயனே இந்நூலாகும். இவர்களுக்கு சாயியின் பூரண கடாட்சம் கிட்டுவதாக.

ஜெய் சாயிராம்

பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம்
பிள்ளையார் கோவிலடி, தாவடி,
27 - 9 - 92 கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருள் அடக்கம்

1. கல்வியின் நோக்கம் ... ... ... 1

2. ஆசிரியரின் பங்கு ... ... ... 34

3. மாணவரின் கடமை ... ... ... 94

4. இலட்சிய மாதர் இயல்பு ... ... ... 95


5. சிறுவர்களுக்கு அறிவுரை ... ... ... 102

6. பெற்றோரின் வழிகாட்டல் ... ... ... 104

7. சாயி ஆண்மிகக் கல்வி ... ... ... 113

8. மேற் கோள்கள் ... ... ... 122

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா ஞான ஒளியை ஏற்றுகின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் நோக்கம்

## மாற்றத்துக்குரிய கல்வி

இன்றைய கல்வி, நுண்மதியாற்றலையும் திறன்களையும் வளர்த்து வருகின்ற வேளை நற்பண்புகளை வளர்ப்பதிற் குறைந்தளவு பங்களிப்பையே செய்கின்றது நற்பண்புகளை ஒருவர் பெற்றுக் கொள்ளாது, உலகில் உள்ள அனைத்து அறிவையும் பெறுவதற்கு உதவுவதால் என்ன பயன் உண்டாகும்? வீணே பாயும் தண்ணீருக்கு ஒப்பானதாகவே அது அமையும். அறிவு பெருகி வரும் அதே வேளையில் அவாவும் பல்கிப் பெருகுமானால் ஒரு பயனும் ஏற்படப் போவதில்லை. அந் நடவடிக்கையானது சொல்லளவிலே ஒருவனைத் தலைவனாக்கும். ஆனால், செயல் அளவிலே அவனது பங்களிப்பு பூச்சியம் தான்.

விஞ்ஞானம் தொழில்நுட்பம் ஆகிய துறைகளிலே ஏற்பட்ட மனித அடைவுகள், பொருள்சார் நிலமைகளிலே முன்னேற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. இன்றைய நிலையில் ஆன்மா சார்ந்த நிலை மாற்றமே உடனடித்தேவையாகவுள்ளது. கல்வி என்பது ஒருவரது நுண்மதியாற்றல்களையும், திறன்களையும் விருத்தி செய்வதோடு மட்டும் நின்று விடாது அவரது உலக நோக்கை விரிவடையச் செய்தல் வேண்டும். சமூகத்திற்கும் பரந்த உலகத்துக்கும் அவரது பணிகள் பயன்படும் வண்ணம் கல்வி நடவடிக்கைகள் அமைதல் வேண்டும். பௌதிக விஞ்ஞானக் கல்வியுடன் இணைந்த வகையில் ஆன்மாவைப் பண்படுத்தி மேம்படுத்துவதன் வாயிலாகவே இது சாத்தியப்படும். அறக்கல்வியும் தெய்வீகக் கல்வியும், ஒழுக்கமுள்ள வாழ்க்கையை நோக்கி ஒருவர் செல்வதற்குரிய பயிற்சியைத் தரும்.

தற்கட்டுப்பாட்டை ஏற்படுத்தாத கல்வி, உண்மைக் கல்வியாக மாட்டாது. உண்மைக்கல்வி என்பது ஒரு மனிதனைக் கருணையும் மானுடப்பண்பும் உள்ளவனாக்குதல் வேண்டும். தன்மயமாகவும் குறுகிய நோக்கிலும் அது அவனைச் சிந்திக்க வைக்கலாகாது. நன்கு கற்ற ஒருவனது உள்ளத்திலிருந்து அனைவரையும் மதிக்கும் பண்பும், நித்தியமான பரிந்துணர்வும் ஊற்றெடுத்தல் வேண்டும். தனக்கெனப் பொருள் சேகரிக்கும் இலட்சியம் அவனது உள்ளத்திலே ஆழப் பதிந்திராது, சமூகத்திற்கும் பணி செய்யும் ஆர்வம் முனைப் படைதல் வேண்டும். இதுவே கல்விக்குரிய உண்மையான நோக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயமும் நம்பிக்கையும்

மாணவரது பயத்தோடும் நம்பிக்கையோடும் கல்வி ஊடுருவிப் பதியச் செய்யப்படுகின்றது. ''பயம்'' என்பது கோழைத்தனம் அன்று. பாபத்துக்குப் பயப்படுதலும் கடவுள் மீதான நம்பிக்கையும் முன்னேற்றப்படல் வேண்டும். பாபத்துக்குரிய அல்லது அறக்கேடான செயலைப் புரியும் ஒருவர் சமூகத்தின் நன்மதிப்பைப் பெறவோ, சமூகத்தால் அங்கீகரிக்கப்படவோ முடியாது என்பதை உணர வேண்டும். தவறான நடத்தைகளைத் தவிர்த்துக் கொள்ள மாணவர் முயல வேண்டும். பெற்ற தாயின் மீதும் பிறந்த பொன் நாட்டின் மீதும் பக்தி கொள்ளுமாறு கற்பித்தல் வேண்டும். நாட்டின் மீது பக்தி கொள்ளுதல் கடவுள் மீது கொள்ளும் பக்தியின் ஒரு வகையாகும். தாயின் மீதும், தாய் நாட்டின் மீதும், தாய்மொழியின் மீதும் தனது சமயத்தின் மீதும் அன்பு கொள்ளாத வாழ்க்கை பொருளற்ற, சத்தற்ற வாழ்க்கையாகின்றது.

கல்விச் செயல்முறையானது பல்வேறு பிரச்சினைகளை நழுவ விடுகின்றது. இளைஞர்களிடத்து அன்பு, சகிப்புணர்வு, மனோதிடம் போன்ற சீரிய பண்புகளை வளர்க்கக் கல்விச் செயல் முறை தவறிவிட்டது அவற்றுக்குப் பதிலாக விலங்குப் பண்புகளே வளர்த்தெடுக்கப்படுகின்றன. அங்கு சத்தியம், தர்மம் போன்ற மனித விழுமியங்களை வளர்ப்பதற்கு இடமில்லை. உண்மைக் கல்வியின் சான்றாதாரமாய் விளங்கும் பணிவை மாணவரிடம் ஆழ்ந்து பதியச் செய்வதற்கு அது உதவவில்லை.

பிள்ளைகளுக்குக் கல்வியை வழங்குவதற்குப் பெற்றோர் கூடிய கவனம் எடுக்கின்றனர். ஆனால் எத்தகைய கல்வியை வழங்க வேண்டும் என்பது பற்றி அவர்கள் கவனம் கொள்வதில்லை. மனித விழுமியங்களான சத்தியம், பிரேமை தர்மம், சாந்தி, அகிம்சை ஆகியவற்றை மாணவரிடத்து ஏற்படுத்தும் வண்ணம் கல்வி உதவுதல் வேண்டும். புலமை அறிவு மட்டும் உயர்நிலை விழுமியமாகாது. ஒருவர் வாழும் பொருட்டுச் சம்பாதிக்க அது உதவலாம். வாழ்வின் சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடியவாறு அறம், தெய்வீகம் சார்ந்த வழிகளில் ஒருவரைத் தயாரிப்பதற்கு அது உதவுதல் வேண்டும். கற்றவர்களிடத்து மனித விழுமியங்கள் இல்லாதவிடத்து அவர்கள் அவாவும் கவலையும் மிகுந்தவராகின்றனர்.

கற்றவர்களிடத்து அறவிழுமியங்கள் இல்லாமைக்கும், மாணவரிடத்து ஒழுக்கம் வறிதாகியமைக்கும், விசனத்தை உண்டாக்கும் கல்வி நிலைக்கும் யார் காரணமாகின்றனர்? இதற்கு மாணவரைக் குற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமத்துதல் பொருத்தமற்றது. மாணவரின் தேவைகள், உந்தல்கள் முதலியவற்றை ஆசிரியர்கள் அறிந்து கொள்வதில்லை. அதன் பெறுபேறாக மாணவர் தமது ஆசிரியர் மீது பெருமதிப்பும் வைப்ப தில்லை. கல்வி நிறுவனங்களை முகாமை செய்வோரும் நிருவகிப் போரும், ஆசிரியர் பிரச்சினைகளையும் மாணவரின் உண்மைத் தேவைகளையும் விளங்கிக் கொள்வதில்லை. அரசியல் வாதிகள் கல்விச் செயலமைப்பினுள்ளே தலையிடுவதற்கு இந்த நிலையைச் சாதகமாகப் பயன்படுத்துகின்றனர். பொலிசார் தலையிடுவதற்கும், சிலவேளைகளிற் கல்வி நிலையங்களை மூடிவிடுவதற்குமான சந்தர்ப் பங்கள் எழுகின்றன. அத்தகைய ஒரு நிலைக்கு பெற்றோர், ஆசிரியர்கள், நிருவாகிகள், அரசினர் ஆகியோரே பொறுப்பாளிகளாவர். கல்விச் செயலமைப்பின் பிரதி கூலங்களுக்கு இவர்கள் ஏதோ ஒரு வகையிற் பொறுப்பாளிகளாவர். தத்தமக்குரிய வீரிய கடமைகளை அவர்கள் அணுகத் தவறிவிட்டனர்.

பழுதான கல்வியின் பலாபலன்களால் முழுத்தேசமுமே பாதிப் படையும். மாணவர் நல்லொழுக்கத்துடனும், நல்ல நடத்தையுடனும் ஒழுகுவார்களாயின், நாடு நலம் பெறும். இந்நிலையின் அரசின் பொறுப்பு என்ன? எப்பொழுதும் கல்வியமைச்சில் மாற்றம் நிகழ் கின்றது. கல்விப் பூட்டைகள் மாற்றப்படுகின்றன. அதன் விளைவாக நிச்சயமற்ற தன்மையும் உறுதியற்ற அவலமுமே ஏற்படுகின்றன. கல்விச் செயலமைப்பு திருத்தப்படாதிருப்பதே பெரும் குறைபாடாக இருக்கின்றது. அதன் பலாபலனாக மாணவர் இடர்ப்படுகின்றனர்.

மாணவர் மீது எந்த நிலையிலும் குற்றம் சுமத்த முடியாது. தான் விரும்பியவாறு உருவங்களை வடித்தெடுக்கக் கூடிய சிற்பிக்குக் கிடைத்த பளிங்குக்கல் போன்று மாணவர் விளங்குகின்றனர். ஒரு பாறைத் துண்டில் அழகை உண்டாக்குபவன் தான் சிற்பி. தங்களுக்குப் பொறுப்பானவர்களாக விளங்கும் மாணவர்களை வடித்தெடுத்து மெருகூட்டும் சிற்பிகளாகப் பெற்றோரும், ஆசிரியரும் விளங்குகின்றனர். ஆசிரியரும் பெற்றோரும் சரியான எடுத்துக் காட்டை அமைத்துத் தருவார்களாயின் மாணவர் தன்னியக்கமாகவே சரியானதும் உயர் நிலைப்பட்டதுமான காட்டுருவாக மலர்ந்து நாட்டுக்குப் பெருமை தேடித் தருவார்கள்.

**விலக்கவேண்டிய அரசியல்**

மாணவரும் ஆசிரியரும் பின்பற்றப்பட வேண்டிய ஓர் அடிப்படை விதி உண்டு. அவர்கள் முற்று முழுதாக அரசியலை விலக்கி விட வேண்டும். தமது கற்கையை முடித்துத் தாமாகவே தமது வாழ்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையை அமைக்கும் பொழுது மட்டும் மாணவர் அரசியலைத் தேர்ந்தெடுக்கலாம். அரசியல்வாதிகளுக்கோ அரசியலுக்கோ நான் எதிரானவன் அல்லன். ஒரு நாட்டின் வளர்ச்சியில் அரசியல் என்றும் தவிர்க்க முடியாத மூலக்கூறாகும் முதிரா நிலையிலும், கட்டிளமை நிலையிலும் ஒருவர் அரசியலிற் பிரவேசிக்கக் கூடாதென்றே நான் வேண்டுகின்றேன். ஒரு மாணவன் அரசியலிலே தலையிடும் பொழுது அவன் கல்வியிலோ அரசியலிலோ சிறப்பு எய்த முடியாது. அதனால் அவன் பொன்னான நாட்களை வீண் போக விடுகின்றான். அரசியலிலே நுழைவதற்கு ஆசிரியருக்கும் ஏற்புடைமைகள் இல்லை. தமது அரவணைப்பில் விடப்படும் மாணவர்களைப் பயனுடையோராகவும், தேசாபிமானம் கொண்டவராகவும், நற்பிரசைகளாகவும், நாட்டின் பண்பாடு, பாரம்பரியம் ஆகியவற்றைப் பிரதிபலிப்போராகவும் மாற்றுதல் ஆசிரியரின் தலையாய பணி. சுயநலனுக்காகவும், தமது பதவியையும், செல்வாக்கையும் உயர்த்துவதற்காகவும், ஆசிரியர்கள் அரசியலில் ஈடுபடுகின்றனர். அவர்கள் ஆசிரியர்கள் என்ற நம்பிக்கைக்குத் துரோகம் செய்து விடுகின்றனர்.

மாணவர் அமைப்புக்களுக்கான தேர்தல் எப்படிப்பட்டது? அவை சட்டசபைத் தேர்தல்களை ஒத்தவகையில் நிகழ்கின்றன. பிரசாரத்துக்கான பணச் செலவும் அதில் ஏற்படுகின்றது. சிலவேளைகளில் இந்தத் தேர்தற் களங்கள் சொத்துக்களை அழிப்பதிலும், உயிராபத்துக்களை ஏற்படுத்துவதிலும் முடிவடைகின்றன. விரயமான இந்தச் செயல் முறைக்காகப் பெருமளவு பணமும், பலமும் செலவிடப்படுகின்றன. மாணவரிடத்தே தலைமைத்துவத்தை வளர்த்தல் அவசியமானது. இது சரியான வழியிலே செய்யப்பட வேண்டும். கல்லூரியில் மாணவர் ஒரு சொற்பகாலத்துக்கே தங்கியிருக்கப் போகின்றனர் மாணவர் தமது கல்வியை ஆர்வத்துடன் தொடர்வதற்கும் அவர்களிடையே நன் நடத்தையை வளர்ப்பதற்கும், ஒழுக்க உணர்வை ஏற்படுத்துவதற்குமான வழி வகைகளைத் துணைவேந்தர்களும், கல்லூரி அதிபர்களும் கண்டறிந்து அறிவுறுத்தல் வேண்டும் தேர்தல் வேண்டாம், தெரிவே வேண்டும். கற்றலில் முன்னேற்றமடைகின்ற, நடத்தையிற் சிறப்படைகின்ற தன்னலம் கருதாது பிறருக்காகப் பணிபுரிகின்ற ஒரு மாணவனைத் தெரிந்தெடுத்து அவனையே மாணவர் தலைவனாக்குதல் வேண்டும் மாணவர் ஒன்றியம் என்ற ஐக்கியத்துக்காகவா தேர்தல்! ஒன்றியம் என்பதன் பொருள் யாது? அனைவரும் ஒன்று சேர்வதே ஒன்றியம். ஆனால் மாணவர் ஒன்றியங்களிலே கருத்து வேறுபாடு, ஒற்றுமையின்மை, போட்டி, என்பனவே நடைமுறையிற் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் கள்ளம் கபடம் அறியாதவர்கள். அவர்களைச் சரியான பாதையில் அழைத்துச் செல்லும் பொறுப்பு பெற்றாருக்கும் ஆசிரியருக்கும் உரியது. துரதிஷ்டவசமாக ஆசிரியர் தமக்குரிய பணியைச் செய்யவில்லை. ஆசிரியர் தமக்கென ஒன்றியங்களை அமைத்துக் கொண்டு வேண்டாத செயல்களில் ஈடுபட மாணவரும் அவற்றையே பின்பற்றுகின்றனர்.

உண்மைக்கல்வியின் பண்பு ''பணிவு'' ஆகும். பணிவு என்பது மதிப்பளிக்கும் திறனை ஒருவருக்கு உதவுகின்றது. அதனால் ஏற்படும் நேர்மையானது செல்வத்தை தரும். செல்வம் தூய ஒழுக்கத்தைச் சென்றடைதல் வேண்டும் தூய ஒழுக்கமே விடுதலையின் திறவு கோல். இன்று நாம் நுண்மதித்திறனுக்கே முதன்மை அளிக்கின்றோம் இது தவறானது. ஒழுக்கத்துக்கே முதன்மை தரல் வேண்டும். நல்லொழுக்கம் தராத கல்வி விழுமிய மேம்பாடு தராத கல்வியாகும். பத்து வயல் பயனற்ற பாழ்நிலத்தை வைத்திருப்பதால் என்ன பயன்? ஒரு சிறிய வளம் மிக்க நிலமே அதிலும் பயன் கூடியது.

## புலமை நியமங்கள்

மாணவரின் புலமை அடைவுகளை மதிப்பீடு செய்யும் இன்றைய செயல்முறைகள் வருத்தந் தருகின்றன. ஒரு பாடத்தில் மாணவன் ஒருவன் 25% அல்லது 30% மதிப்பு எண்களைப் பெற்றால் அது சித்தி எய்துவதற்குரிய புள்ளியாகக் கருதப்படுமாயின் குறித்த மாணவன் வகுப்பேற்றப்படுவார். ஒருவர் 70% அல்லது 75% அளவு பிழைகள் விடுவதற்குரிய அனுமதியை இத்தகைய நிலை வழங்குகின்றது. மாணவராய் இருக்கும் பொழுது 75% தவறுகளை விடும் ஒருவர் உத்தியோகத்திலிருக்கும் பொழுது, மேலும் எத்தனை தவறுகளை விடுவார்? அவர் 100% தவறுகளைக் கூட விட்டுத் தப்பிக் கொள்ளலாம். இது திருப்தி தரக்கூடிய ஒரு நிலையன்று. ''நிமிர்ந்து, உயர்ந்த இலக்குகளை நோக்குங்கள்'' என்பது இலட்சிய வாக்காக, இருத்தல் வேண்டும். கீழான இலக்குகள் உண்மையிலே குற்றச் செயல்கள் போன்றவையாகும். ஒரு மாணவன் 90% புள்ளிகளுக்கு இலக்கு வைத்துச் செயற்பட்டு 60% புள்ளிகளைப் பெறலாம். அதே வேளை இன்னொரு மாணவர் 30% புள்ளிகளுக்கு மட்டும் இலக்கு வைத்தால் 15% புள்ளிகளையே மட்டும் பெறமுடியும்.

பரீட்சைகளிலே சம்பந்தம் இல்லாதோரின் தலையீடு காரணமாக வெறுக்கத்தக்க இன்னொரு நடைமுறையும் காணப்படுகின்றது கல்வி அமைச்சர் கருணை காட்டிப் புள்ளி வழங்குதலும், முதன் மந்திரி தான் வழங்குதற்குத் தகைமைப்பட்ட கருணைப் புள்ளியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குதலும், மேலும் கல்விச் திணைக்களச் செயலாளர் சில கருணைப் புள்ளியை வழங்குதலும் என்றவாறான நடவடிக்கைகள் காணப்படு கின்றன. இவ்வாறு கருணைப் புள்ளிகளின் மேதகு ஆதரவு காணப் படுமிடத்து மாணவருக்குக் கல்வியின் ஆர்வம் ஏற்படுமா?

## சமநிலைக்குரிய தேவை எழுகின்றது

இன்றைய கல்வியில் வினைத்திறன் மழுங்கடிக்கப்படுகிறது. "SKILL" என்பதிலுள்ள "S" கழன்று விடுகின்றது. அதனால் அது "KILL" என மாறுகின்றது. இது மனித குலத்துக்குப் பேரழிவை ஏற்படுத்துகின்றது. அறிவு, திறன் சமநிலை என்பவற்றை மாணவருக்கு வழங்குதல் வேண்டும். இன்றைய கல்வித் தொகுதியில் இந்த இணைப்பு இல்லை. பிறர் நலனைக் கருதாது தமது நலனையே ஒவ்வொருவரும் முன்னெடுக்கின்றனர்

இதுவே இன்று மனிதனுக்குரிய அவலம். புற உலகைப் பெருமளவு கட்டுப் படுத்துவதற்குரிய ஆற்றலை விஞ்ஞானம் வழங்கியுள்ளது. ஆனால் மனிதன் தன்னைக் கட்டுப்படுத்த முடியாதிருக்கின்றான். "மனிதன் தன்னைத் தவிர மற்றையது அனைத்தையும் கைப்பற்றி விட்டான்" என்று வின்ஸ்சன் சேர்ச்சில் ஒரு சமயம் குறிப்பிட்டார். "ஓ! தந்தையே நீங்கள் உலகங்கள் அனைத்தையும் கைப்பற்றி விட்டீர்கள். உங்களை இன்னமும் கைப்பற்றவில்லை" என்று பிரஹ லாதன் தன் தந்தையாரான இரணியனை நோக்கிக் கூறினான்

இன்றைய கல்வி முறையானது சீர்திருத்தி அமைக்கப்பட வேண்டு மாயின் அதற்குரிய ஒரேயொரு வழி தன்னலத்தை மாணவரிடையே அகற்றுவதாகும், சமூகத்துக்குச் சேவை புரிவதற்குமான பயிற்சியை வழங்குதலாகும். இந்த இலக்கை நோக்கி மாணவருக்கு எவ்வாறு பயிற்சி வழங்கலாம்? தன்னலம் கருதாத அன்பு என்பதைக் கற்பிப்பதன் வாயிலாக மட்டுமே இதனைச் செயற்படுத்த முடியும். அன்பு இரு வகைப்படும். ஒன்று இயற்கை அன்பு மற்றையது தெய்வீக அன்பு. இயற்கை அன்பு பிரதி உபகாரம் கருதியது. பிரதி உபகாரம் கருதாது பிறருக்குச் சேவை செய்வதில் வெளிக் காட்டப்படும் அன்பு, தெய்வீக அன்பாகும். இங்கு பிறருக்கு அன்பு வழங்கப்படுகின்றது. பிறரிடமிருந்து யாதும் எதிர்பார்க்கப் படுவதில்லை. இயற்கை அன்பானது பிறரிடமிருந்து எப்போதும் பிரதிபலனை எதிர்பார்த்த வண்ணம் இருக்கும். உண்மைக் கல்வியா னது இத்தகைய தெய்வீக அன்பை, இதயம், உள்ளம் ஆத்மா என்ப வற்றுடன் ஒட்டியுறவாடும் வண்ணம் கற்பிப்பதாக அமையவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசாட்சியிலிருந்து விடுதலை பெறல்

கல்விச் செயல் முறையில் உண்மையான சீர்திருத்தம் ஏற்படுத்தப்பட வேண்டுமாயின் அரசாட்சியின் கட்டுப்பாட்டிலிருந்து கல்வி நிறுவனங்களை விடுவிப்பதுடன் நீதி நிறுவன அமைப்புப் போன்று இவற்றைச் சுதந்திரமாகச் செயற்பட வைத்தல் வேண்டும். அரசாட்சியினர் மற்றும் அரசியல் என்பவற்றின் செல்வாக்கிலிருந்து அவை விடுவிக்கப்படுவதுடன் தன்னாதிக்கமுள்ள முகவர்களால் நடத்தப்படல் வேண்டும் மாணவர்கள் மீது பற்றும், அவர்கள் மீது முழுமையான கவனமும் கொண்ட கல்வியியலாளரைக் கொண்ட ஒரு தேசிய சபையின் கட்டுப்பாட்டின் கீழே கல்வி கொண்டுவரப்படுதல் வேண்டும்.

மருத்துவக் கல்லூரியில் ஓர் இடத்தைப் பெறுவதற்கு இன்று பெருமளவு பணத்தைச் செலுத்த வேண்டியுள்ளது. தங்களது பிள்ளைகளுக்கு மருத்துவக் கல்வியை வழங்க அவாமிக்குடைய பெற்றோர் எவ்வகையிலோ அதற்குரிய பணத்தைச் செலுத்தி விடுகின்றனர். இந்த வகையில் மருத்துவக் கல்விநெறியைக் கற்று மருத்துவம் செய்யத் தொடங்கும் பொழுது அவரது தலையாய நோக்கம் - எத்தகைய தவறான வழி வகைகளைக் கையாண்டாவது தனது கல்விக்குச் செலவு செய்த பணத்தை மீட்டெடுக்க முயல்வதாகும். அந்நிலையில் தவறான வழி முறைகளுக்கு அவர் தஞ்சமடைய நேரிடும் இந்தச் செயல் முறை தொடங்கும் பொழுது அவரது குணநலன் இரண்டாம் பட்சமாகிவிடும். ஒரு மாணவனது ஆண்மைக் கல்வி நிறைவடையும் பொழுது இவ்வாறு அறக்கேடான செயல்கள் இடம் பெறுவதற்கு நாம் இடமளிக்கக் கூடாது.

## சாயி நிறுவனத்தில் இலவசக்கல்வி

பணத்துக்கும் கல்விக்கும் நேர் இணைப்பு இருத்தலாகாது. பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவை வேந்தராகக் கொண்ட சத்ய சாயி உயர்கல்வி நிறுவகம் புதிய கல்வியாண்டிலிருந்து (யூன் 1986) பட்டப் படிப்பின் கல்விநெறிகள் உட்பட்ட அனைத்து மட்டங்களிலும் மாணவர்க்கு இலவசமாகக் கல்வியை வழங்கிவருகின்றது. இந்நிறுவனத்தின் நல்லொழுக்க நெறிமுறைகளுக்கேற்றவாறு மாணவரை மேதகு வழியில் செயற்படவைப்பதற்குப் பயிற்சி தருவதே தலையாய நோக்கமாகக் கொள்ளப் படுகின்றது. வெளியாரிடமிருந்து பணத்தைப் பெறும் பொழுது நீங்கள் அவர்களின் கருவிகளாகி விடுகின்றீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் கல்வியை இலவசமாக வழங்கும் பொழுது உங்களால் மாணவரைக் கட்டுப்படுத்த முடியும். மாணவரிடத்தே அறவிழுமியங் களை வழங்கி அவர்களை நற்பண்புள்ளவர்களாக வளர்த்தெடுக்க முடியும்.

சில பாடசாலைகளில் இன்று அறப்போதனை என்று அழைக் கப்படும் வகுப்புக்கள் உள்ளன. இவை நேர சூசிகையில் மட்டுமே காட்டப்படும் ஒன்றாக அமைகின்றன. பெரும்பாலும் வேறு பாடங்களைக் கற்பிப்பதற்கு இந்தப் பாட வேளைகள் பயன்படுத்தப்படுகின்றன.

மாணவரிடத்தே மனப்பதிவுகள் வளரத்தொடங்கும் காலம் தொடக்கம் பிறரிடத்தே அன்பை வளர்த்தெடுத்தலைக் கற்பித்தல் வேண்டும். அன்பு என்பது ஒற்றுமைக்கு அழைத்துச் செல்வதுடன், தூய்மையை மேம்படுத்தும். தூய்மை தெய்வீகத்துக்கு அழைத்துச் செல்லும். அன்பு இன்மையால் இன்று ஒற்றுமைக்குப் பதிலாக வேற்றுமைகளே காணப்படுகின்றன அன்பிலா ஒரு மனிதன் கானகத்தே திரியும் கடும் விலங்கிலும் மோசமானவன். விலங்குகள், பறவைகள், மரங்கள் முதலியவை பிறருக்குத் தம்மால் இயன்ற சேவையை வழங்குகின்றன. ஆனால் தன்னலத்துடன் வாழும் ஒரு மனிதன் எதுவித சேவையும் செய்யா திருப்பதுடன் பிறருக்குத் தீங்கும் செய்கின்றான் கல்லாதவர்களிலும் பார்க்கக் கற்றவர்கள் இந்த விஷயத்தில் அதிக பாவம் செய்தவர்களாகின்றனர். விமானக் கடத்தல், வங்கிக் கொள்ளை, மற்றும் சமூகத்துக்கு எதிரான அடாத்து நடவடிக்கைகளில் படித்த இளைஞர்களே ஈடுபடுகின்றார்கள். கல்விச் செயல் முறையானது இவ்வாறான நிலையை ஏற்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றதா?

கல்வியானது நல்ல இலட்சியங்களை மாணவரிடத்தே வளர்த்தெ டுத்தல் வேண்டும். ஒரே ஒரு சாதி தான் - அதாவது மனித சாதி தான் இருக்கின்ற தென்பதை அவர்கள் உணர வேண்டும் ஒரே ஒரு சமயம் - அதாவது அன்பு தான் சமயம். ஒரே ஒரு மொழி - அதாவது இதயத்தின் மொழி. இவ்வாறான அடிப்படை இலட்சியங் களைப் பின்பற்றுவார்களாயின் குறுகிய வேறுபாடுகளுக்கும், குற்றச் சாட்டுக்களுக்கும் இடமில்லாமற் போகும்.

## அன்பின் ஊடாகக் கற்பித்தல்

அன்பின் ஊடாகவே அன்பு யாது என்பதை மாணவர்க ளுக்குக் கற்பிக்க முடியும். நான் செலுத்தும் அன்பு அது என் னிடத்தில் இயற்கையாகவே இருத்தலின் காரணமாக சத்ய சாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனத்திலுள்ள மாணவர்கள் நல்லொழுக்கமும் நற்கட்டுப் பாடும் உடையவர்களாயிருக்கின்றனர். இந்த வளாகத்தில அமைதியின்மை என்பது இல்லை. யார் மீதும் எதிர்க் கோடல் எனக்கு இல்லை. என்னை விமர்சிப்பவர்கள் என்மீது குரோதம்கொண்டவர்கள், என்னை வெறுப்பவர்கள் யாரும் இருக்கலாம். ஆனால் எனக்கு விரோதிகள் யாரும் இலர். யார்மீதும் யான் அன்பு செலுத்துபவன் அமைதியிலும் அன்பே எனது நிரந்தரமான குணவியல்பாக இருந்தலினால் நான் எப்போதும் மகிழ்ச்சியிலும் இருக்கின்றேன். அன்பு என்பது சொல்லில் உண்மையைக் குறிக்கும், செயலில் அது சரியான நடத்தையாகும். சிந்தனையில் அது சமாதானமாகும். விளக்கத்தைப் பொறுத்த வரை அன்பு என்பது சாத்வீகமாகும். கட்டுலனாகாத நதியின் பெருக்குப் போன்று இவ்வாறான அன்பு எங்களிடம் இருந்து பாய்கின்றது. அன்பை விருத்தி செய்வதன் வழியாக மட்டுமே கல்விச் செயலமைப்பைப் புனிதமாக்க முடியும் அதன் வழியாக மேம்பட்ட வாழ்க்கையை நடத்துவதற்கு அடிப்படைத் தகுதியாக அமையும் மனித விழுமியங்களைப் பயிலச் செய்ய முடியும். இந்த நோக்கில் சென்று எமது நாடு பெருமைப்படத் தக்க வகையில் மாணவர்களை நற்பிரசைகளாக்கும், உண்மை இலக்கினைக் கொண்ட கல்வியைக் கட்டியெழுப்பும் வண்ணம் யான் கோரிக்கை விடுகின்றேன்.

## கல்வியைத் தெய்வீகப்படுத்தல்

இறைவன் மீது கொண்ட நம்பிக்கை தளர்கின்றது.
பக்தியுணர்வு தள்ளுபடியாகின்றது.
இறைமறுப்புணர்வு தீவிரமடைகின்றது.
ஆசிரியர் மீதுள்ள கணிப்பு அகல்கின்றது.
இறை பூஜைக்கு இடமில்லை.
பாரம்பரிய பண்பாடு புறக்கணிக்கப்படுகின்றது.
கடவுளுக்குரிய உன்னத மதிப்புச் சென்றுவிடுகின்றது.
இதுவே இன்றைய எமது கல்வி.

ஞானம் என்று கருதப்படும் உன்னதமான அறிவுக்கு ஒப்பான பரிசுத்தமான பொருள் வேறில்லை. உண்மைக் கல்விக்கு மேலான விலையுயர்ந்த செல்வம் வேறில்லை. சமூக அடிப்படையிலும், உள அடிப்படையிலும், பொருள் சார் அடிப்படையிலும், மனித குல மேம்பாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கும், இந்த உலகைப் போஷிப்பதற்குமுரிய இறையருளைக் கல்வி தெரியப்படுத்துகின்றது. இறைவனின் பண்புகளை உணர்ந்தால் மட்டுமே இயற்கைக்கும்' சமூகத்துக்குமுள்ள இணைப்பையும், மனிதனிடத்துப் பொதிந்துள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளார்ந்த வலுவின் முடிவிலாத்திறத்தையும் விளங்கிக் கொள்ள முடியும். இயற்கையின் ஒரு கூறாக மட்டும் மனிதன் இருக்கவில்லை. இயற்கையின் வலுக்களைப் பயன்படுத்தக் கூடிய அறிவை மனிதன் வாயிலாகப் பெற்றுக் கொள்ள முடியும். அதன் வாயிலாக மிகவுயர்ந்த ஆனந்தத்தை (சத்-சித்-ஆனந்தம்) அனுபவிக்க முடியும்

## தெய்வீகத்திலிருந்து இயற்கைக்கு

இன்றைய கல்விச் செயலமைப்பில் தெய்வீகப் பண்புக் கூறுகளுக்கு இடமே இல்லை. இது உண்மைக் கல்வியாகாது. கல்வி என்பது தெய்வீகத்திலிருந்து இயற்கையை நோக்கி முதற்கண் செல்லல் வேண்டும். ஒரே தெய்வீகக் குடும்பத்தில் உள்ளடங்கிய கூறுகளை அது மனிதர்களுக்குக் காட்டுதல் வேண்டும். சமூகத்திலே நிலவும் இறைமாட்சியை அனுபவத்தின் வாயிலாகத் தனிமனிதர்கள் மட்டுமே உணர முடியும். பட்டங்களைப் பெறுவதோடு இன்றைய கல்வி முடிவடைகின்றது. எல்லா மனிதர்களையும் இயலுமான வரையில் மகிழ்ச்சியாக வைத்திருத்தலுக்கும், வாழ்க்கையின் சவால்களை எதிர் கொள்வதற்கு அறிவைப் பயன்படுத்துவதற்கும், உண்மையான கல்வி உதவுதல் வேண்டும். சமூக முன்னேற்றத்துக்கும், நலனுக்கும் உழைத்தல் சமூகத்தில் பிறந்த ஒருவருக்குரிய கடமையாகும்.

கல்வியாற்பெற்ற அறிவானது புலன்சார் மகிழ்ச்சிகளைப் பெறுவதற்கும், வாழ்க்கைச் சுகபோகங்களில் மூழ்கி மகிழ்வதற்குமே என்றவாறு தவறான வழியிற் பயன்படுத்தப்படுகின்றது. சில வகையான நுண்மதியாற்றல்களையும், தொழில் நுட்பத் திறன்களையும் வளர்ப்பதற்குக் கல்வி பயன்பட்டிருக்கின்றதாயினும் நற்பண்புகளை வளர்ப்பதில் அது முற்றும் முழுதாகத் தவறிவிட்டது. சமூகம் உலகியலை நோக்கிக் கவர்ந்திழுக்கப்படுவதால் உலகியல் சார்ந்த இன்பங்களில் ஈடுபாடு ஆழ்ந்திருக்கின்றது.

கல்வி என்பது சொல் சார்ந்த அறிவை வழங்குதல் அன்று. பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் பெறும் அறிவு சமூகத்துக்குச் சேவையாற்றப்பயன்படுவதுடன் சக மனிதர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவற்கும் உதவுதல் வேண்டும். ஆசிரியரும் மாணவரும் ஒன்று கூடியிருக்கும் இடத்தில் சாந்தம், அமைதி, ஒழுங்கு என்பவை நிறைந்திருத்தல் வேண்டும். இதற்கு மாறாக இன்று மாணவர் கூடும் பொழுது, பயமும், பாதுகாப்பு இன்மையும், நிலவுவதைக் காணுகின்றோம். அமைதி ஒழுங்கு ஆகியவை அங்கு தென்படுவதில்லை. இது கல்விக்கும் பெருமை தேடி தரும் நிகழ்ச்சியல்ல. மென்மையும் தயவும் கொண்டதாக இருக்க வேண்டிய மாணவரது உள்ளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிமையும், வன்செயலும். கொண்டதாக மாறி வருகின்றது. பணிவு, பயபக்தி, இரக்கம், சகிப்புத்தன்மை, தியாகம், தற்கட்டுப்பாடு ஆகிய பண்புகளே உண்மைக்கல்வியின் வெளிப்பாடுகளாயிருத்தல் வேண்டும்.

## வேறுபாடுகளுடன் விஞ்ஞானம்

விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் வியத்தகு முன்னேற்றத்தை அடைந்துள்ளன. ஆனால் மனிதப்பண்புகள் கீழ் நோக்கிச் செல்கின்றன. இன்று உலகில் தலை சிறந்த கல்விமான்களும், விஞ்ஞானிகளும் இருக்கின்றார்கள் என்பது வெளிப்படை. ஆனால் விஞ்ஞானம் மட்டும் போதுமானதன்று. சரியான இலக்குகளுக்காக விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களைப் பயன்படுத்துவதற்கு வேறுபாடுகள் இருத்தல் வேண்டும். வேறுபாடுகளைக் கொள்ளாத விஞ்ஞானம், ஒழுக்கமற்ற மனித இருப்பு, நன்றியில்லாத நட்பு, சுருதியில்லாத இசை, நீதியும் அறமும் இல்லாத சமூகம், ஆகியவை மக்களுக்கு நன்மை தரமாட்டா.

விண்வெளியைக் கண்டறிதல், அணுவலு, எலத்திரன்கள், செயற்கைத் தயாரிப்புகள், முதலியவற்றில் விஞ்ஞானிகளும், தொழிநுட்பவியலாளரும் வியத்தகு சாதனங்களைச் செய்துள்ளனர். ஒருபுறம் இவ்வாறான முன்னேற்றம் நிகழ, மறுபுறம் அரசியலிலும் பொருளியலிலும் குழப்ப நிலையை நாம் அனுபவிக்கின்றோம் சமயம், இனம், தேசியம் சார்ந்த முரண்பாடுகளைப் பார்க்கின்றோம். மாகாணவாதம், மாணவர் அமைதியின்மை முதலிய ஐக்கியத்தைச் சீர்குலைக்கும் வலுக்கள் தாண்டவமாடுகின்றன. ஒருபுறம் விஞ்ஞான முன்னேற்றம், மறுபுறம் மனித நடத்தைச் சீர்குலைவு, என்ற இந்த முரண்பாடுகளுக்கு நாம் எவ்வாறு விளக்கம் கொடுப்பது? இதற்குரிய காரணம் யாதெனில் அறிவு வளர்ச்சிக்குச் சமாந்தரமாக அறியாமையும் வளர்கின்றது என்பதாகும். மனித ஒழுக்கம் வீழ்வதற்கும் வன்செயலும் வெறுப்புணர்வும் வளர்வதற்கும் காரணம் யாது? கெட்ட பண்புகளின் வளர்ச்சியும் கெடுதியான செயல்களும், கொடுமையான பழக்கங்களும் முன்னரிலும் பார்க்க இன்றைய மனிதரிடத்திலே மேலோங்கியுள்ளன. இந்த வளர்ச்சிக்குரிய சாதனங்களை ஆராய்ந்து பார்த்தால், மனிதனிடத்துள்ள விலங்கு இயல்பூக்கங்களின் தொடர்ச்சியான ஆதிக்கம் என்பதை உணரமுடியும் 5500 ஆண்டுகளைக் கொண்ட எழுதப்பட்ட வரலாற்றுக் காலத்தில் 15,000 யுத்தங்களுக்கு மேல் இடம்பெற்றிருக்கின்றன. இன்றுகூட யுத்த பயத்திலிருந்து மனிதருக்கு விடுதலை கிடைக்கவில்லை.

இவ்வாறான யுத்தங்கள் வெகுவேகமாக எதிர் மானுடப்படுத்தலை ஏற்படுத்தி வருவதுடன் மனித விழுமியங்களுக்கான கரிசனையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழித்துவிடுகின்றது. யாதாயினும் ஒரு நெருக்கடியால் எக்கணத்திலேனும் ஒருவர் உயிரிழக்கலாம். என்ற தொடர்ச்சியான பயம் மனத்தின் கண் ஒடுக்கு முறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. வாழவேண்டும் என்ற ஆர்வத்தை இழக்கச் செய்வதற்கு இதுவே காரணமாகின்றது. புறத்தே நிகழும் யுத்தம் மட்டும் இதற்குப் பொறுப்பானதன்று. மனிதர் வாழ்கின்ற பொதுவான கவி நிலையும் பயம், நிச்சயமின்மை முதலியவற்றை ஏற்படுத்துகின்றது. மனிதர்கள் மேலும் மேலும் சுயநலமுள்ளவர்களாகவும், சுயநோக்கில் வாழ்பவர்களாகவுமுள்ளனர் அவ்வாறு அகத்தை மத்தியாகக் கொண்டு வாழ்பவர்கள் சமூகத்திலிருந்து எவ்வாறு மகிழ்ச்சியைப் பெற முடியும் அல்லது சமூகத்துக்கு மகிழ்ச்சியை வாங்க முடியும்? படக்காட்சிக்கு அனுமதிச் சீட்டை வாங்குதல், பஸ்சினுள் ஏறுதல் முதலியவற்றுக்குக்கூட மனிதர் முண்டியடித்துக் கொள்கின்றனர். தமது சுய விருப்புக்குள்ளே மூழ்கியுள்ள மனிதர்கள் பிறரது விருப்புகள் பற்றிய கரிசனையற்றவர்களாக இருக்கின்றனர் சுயவிருப்பமே ஒவ்வொரு படியிலும் ஆளுகை செலுத்துகின்றது. ஒருவர் பார்க்கும் பொழுதும், சொல்லும் பொழுதும், அல்லது செயற்படும் பொழுதும் சுயவிருப்பம் மட்டுமே ஆளுகின்றது. இவ்வாறான சுயநலம் மாணவரிடமிருந்து முற்றாக ஒழிக்கப்படடல் வேண்டும்.

கல்விகற்போரது எண்ணிக்கை அதிகரித்துச் செல்வது கற்பதற்காக அல்ல. தமது விருப்புக்களை நிறைவேற்றுவதற்குரிய உபாயமாகவே கல்வியை நாடுகின்றார்கள். இன்றைய கல்வி அதற்குரிய புனிதத் தன்மை அற்றதாக இருக்கின்றது. ஒரு கணமேனும் உறுதியான மனத்தை வைத்திருக்க முடியாதவர்களாயிருக்கின்றனர். இவ்வாறான உறுதியற்ற நிலையில் எவ்வாறு மனப்பூர்வமாக அவர்கள் கல்வியைத் தொடர முடியும்? மேலதிகாரிகள் கூட மாணவர்களுக்கு உரிய உதவியையோ உற்சாகத்தையோ வழங்குவதில்லை.

### அரசாங்கமும் கல்வியும்

இவ்வாறான பிரச்சினைகள் கல்விப் புலத்திலே தொடர்ச்சியாக வளர்ந்த வண்ணமுள்ளன. இதற்குக் காரணம் கல்வி நிறுவனங்கள் அரசாங்கத்தின் தயவில் இருத்தலாகும். அரசாங்கத்தின் தயவில் இருந்து அவற்றைப் பிரித்து வைத்தால், பிரச்சினைகள் எளிதாகத் தீர்க்கப்பட்டுவிடும்.

இன்று பாடசாலையிலுள்ள ஒரு மாணவனைப் பார்த்து, ''என்ன செய்கின்றாய்?'' என்று கேட்டால், யான் கற்கின்றேன் என்பதற்குப் பதிலாக ''யான் கல்வியை வாங்குகின்றேன்'' என்பது விடையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றது. ஆரம்ப வகுப்புக்களில் அனுமதி பெறுவதற்குக் கூட பெரும் தொகையான பணம் செலவிடப்படுகின்றது. இந்த வகையிற் கல்வி பெற்றதனால் உலகத்துக்கு எந்த வகையான நன்மை கிடைக்கப் போகின்றது ! சமகால உலகப்பிரச்சினைகளான பொருளாதாரம், அரசியல் சமூகம், அல்லது அறம் அல்லது வேறு என்ன பிரச்சினை களாக இருந்தாலும் சரி அவற்றை விளங்கிக் கொள்வதற்குரிய ஆற்றல் மாணவர்களுக்கு இல்லை. பண்டைய ஆசிரியர்கள் தமது மாணவர்கள் உண்மை பேச வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தனர். ஆசிரியர்களின் இன்றைய வற்புறுத்தல் உண்மையை உடைத்து விடுதலாகும். நாளாந்த வாழ்க்கைச் சவால்களுக்கு முகம் கொடுப்பதற்குரிய ஆற்றலை அல்லது திறனை இன்றைய கல்வி வழங்குவதில்லை. கல்விப்புலம் என்பது அறியாமை விளையாடும் களமாக மாறிவிட்டது.

இத்தகைய ஒரு நிலையில் மாணவரை அவற்றுக்குப் பொறுப் பாளிகளாக்கி விட முடியாது. தூய உள்ளத்தோடு சமூகத்துக்குச் சேவை செய்வதற்குத் தம்மைத் தாமே ஆக்கிக் கொள்ளும் திறனை மாணவருக்கு வழங்குதல் வேண்டும். தமது பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிப்பதற்கு தாய் தந்தையர் எத்தனையோ தியாகங்களைச் செய்கின்றார்களாயினும், பிள்ளைகள் எதுவித நன்றியறிதலுமின்றி இருக்கின்றனர். மாணவர்கள் பட்டங்களைப் பெற்றதும், உத்தி யோகப் பிச்சையெடுக்க அலைகின்றனர். தமது சுயகால்களிலே நிற்பதற்கும், சுயமாகத் தொழில் செய்வதற்குமுரிய ஆற்றல்களை அவர்கள் பெற்றுக்கொள்ளல் வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக அவர்கள் நல்ல ஒழுக்கத்தை வளர்த்துக்கொள்ளல் வேண்டும். எத்த கைய ஒரு தொழிலையும் பொறுப்பேற்பதற்கும் அதனோடிணைந்த ஆற்றல்களைப் பெறுவதற்கும் அவர்கள் தயாராக இருத்தல் வேண்டும். தமது தாய் நாட்டுப்பற்றை மற்றைய எல்லாவற் றுக்சம் மேலாக முன்வைத்தல் வேண்டும்.

**உரிமைகளும் கடமைகளும்**

மனிதர் தமக்குரிய உரிமைகள் பற்றியே தனித்துக் கவனம் செலுத்துகிறார்களேயன்றி, தமக்குரிய கடமைகள், பொறுப்புக்கள் பற்றிய கரிசினை அற்றவர்களாயிருக்கின்றனர். இன்றைய பல் கலைக் கழகங்கள், பட்டங்கள் வைத்திருப்போரைத் தயாரித்து அனுப்பும் தொழிற்சாலைகளாக இருக்கின்றனவேயன்றி, உண்மை யான அறிவின் நிலையங்களாக விளங்கவில்லை. பகுத்தாராயும் திறனையும், தேசியப் பற்றையும் வளர்க்கக் கல்வி சேவை புரியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதுதான் கல்வி கற்றவர்கள் சமூகத்துக்குச் சேவை செய்யத் தம்மை ஈடுபடுத்திக் கொள்வார்கள்.

''நீங்கள் ஒவ்வொருவரும் தளரா உறுதியும் நேரிய நோக்கும் கொண்டவர்களாக வளர வேண்டுமென நான் விரும்புகின்றேன். தீயவற்றை உமது கண்கள் பார்க்காது விடுக. உமது நாக்குகள் பொல்லா வார்த்தைகளைப் பேசாதிருக்க. உமது கைகள் தீயவற்றை செய்யாதிருக்க. உங்கள் உள்ளம் தீய சிந்தனைகளை நாடாதிருக்க. தூய்மையுடனும் அன்பு நிறைந்தும் இருங்கள். இடரில் இருப்போர்க்கு உதவுங்கள். உதவி வேண்டுவோர்க்கு உதவுங்கள்''.

## மிகுந்த தேவையாகக் கருதப்படும் அன்பை வளருங்கள்

நவீன கல்வியானது நுண்மதியாற்றல்களையும் அதிமுக்கியமானதாகக் கருதப்படும் திறன்களையும் வளர்க்கின்றவேளை நற்பண்புகள் முன்னேற்றம் பெறச் செய்யவில்லை. நல் ஒழுக்கமின்றி உலகத்து அனைத்து அறிவுகளையும் பெறுவதால் யாது பயன்! தனக்குரிய விருப்புக்களோடு அறிவு பெருக்கெடுத்து வருகின்றது. அதன் பெறுபேறு யாதெனில் ஒருவன் சொல்லளவிலே சான்றோனாகின்றான். செயலில் அவன் பூச்சிய நிலையிலுள்ளான்.

கல்வி என்பது வாழ்வதற்கான சம்பாதிப்பு என்ற நோக்கத்தைக் கைவிடும் பொழுது தான் மனிதன் உண்மையான முன்னேற்றத்தை அடைய முடியும். கல்விக்கும் தொழிலுக்குமுள்ள இணைப்பு முறியடிக்கப்படல் வேண்டும். கல்வி வாழ்க்கைக்காக இருக்க வேண்டுமேயன்றி பிழைப்புக்காக இருத்தலாகாது. இந்த யதார்த்தத்தை உணருபவனே உண்மையான கல்வி கற்றவனாவான். பண்டைக்காலம் தொடக்கம் இந்தியாவில் வாழ்ந்து வந்த தேசிய பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பாதுகாத்த தவசீலர்கள் இந்த உண்மையை அறிந்திருந்தார்கள். அறிவு என்பது வெறும் புத்தக இயல் அன்று. அது புத்தகத்திலுள்ள உள்ளடக்கத்தை மூளைக்கு மாற்றும் நடவடிக்கையுமன்று.

உள்ளத்தை மாற்றியமைக்கும் உயரிய நோக்கத்தைக் கல்வி கொண்டுள்ளது. பௌதிக உலகு தொடர்பான சிறிதளவு அறிவை திரட்டி வைத்துக் கொண்டு பிரபஞ்சம் பற்றிய அனைத்தையும் தெரிந்தவன் போன்று மனிதன் இன்று பெருமிதம் அடைகின்றான். உண்மை அறிவானது ஒரு புறம் விஞ்ஞானத்துக்கும் மறுபுறம் ஆன்மிகம் அறம் ஆகியவற்றுக்கிடையேயும் இசைவையும் தொகுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யையும் ஏற்படுத்தல் வேண்டும். ஆகவே மனிதர் தொடக்கத்திலிருந்தே கல்வியின் உண்மை விழுமியத்தை அறிந்து தீர்மானித்துக் கொள்ளல் வேண்டும். இன்று ஏற்பட்டுள்ள பௌதிக விஞ்ஞானத்தின் குறித்துரைக்கத்தக்க வளர்ச்சி காரணமாக மனிதன் தான் அறிவில் மேம்பட்டவன் எனக் கருத முயல்கின்றான். ஆனால் பௌதிக விஞ்ஞானத்துக்கு அப்பால் உள்ள அறிவை விளங்க முற்படும் பொழுதுதான் அறிவு முழுமையான பயனைத் தரும் பௌதிகத்துக்கப்பால் பௌதிக அதீதம் உண்டு. இந்த உண்மையைப் பலர் காலம் கடந்து அறிந்து பின்னர் ஆன்மிகக் கண்டு பிடிப்புக்களில் ஈடுபடுவதுண்டு.

விஞ்ஞான அறிவின் தேவையானது ஐயத்துக்கு இடம் அற்றது. விஞ்ஞான வளர்ச்சியோடு அதன் சரியான உபயோகம் பற்றி அறிதலை விருத்தி செய்வதன் முக்கியத்துவத்தையும் உணர்ந்து கொள்ளல் வேண்டும். விஞ்ஞான உபயோகத்தின் பிரித்தறியும் திறன் பின்னடைந்துள்ளமையால் உலகம் பல்வேறு அபாயங்களுக்கும் கஷ்டங்களுக்கும் முகம் கொடுக்கின்றது.

**சரியான நடத்தை**

ஒருவர் எத்தகைய புலமையைக் கொண்டிருப்பினும், எத்தகைய அந்தஸ்தை அல்லது புகழைக் கொண்டிருப்பினும் சரியான நடத்தை அவரிடம் இல்லாவிடத்து பெயரும் புகழும் பொருளற்று விடுகின்றன. உண்மை ஒழுக்கமே கவனத்துக்கு எடுக்க வேண்டிய ஒரேயொரு பொருளாகின்றது. எதனை நீர் தீர்மானிக்கின்றீரோ அதனையே நீர் பெறுவீர். அதனால் நீர் நல்ல நடத்தையிலே கவனம் கொள்ள வேண்டும் குறுகிய உணர்வுகளைக் கைவிடுங்கள். உங்களது நோக்கை விரிவாக்குங்கள். உண்மைக்கல்வியைப் பின்வருமாறு ஒரு சொல்லிலே தொகுத்துக் கூறலாம். அதுதான் - அன்பு - அதாவது அனைத்தையும் சூழ்ந்து கொள்ளும் அன்பு அன்பிலா வாழ்க்கை இறப்பிலும் கொடியது.

உலகியல் அறிவு அவசியம் என்பது சந்தேகத்துக்கு இடமற்றது. ஆனால் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இது சரியன்று. மனிதனது ஊழ்பற்றியும், வாழ்க்கை பற்றிய அடிப்படை உண்மை பற்றியும் தெரிந்திருத்தல் வேண்டும். அறிவைத் தேடிக் கொள்ளும் அதே வேளை சரியான நடத்தைக்குரிய ஒழுக்கங்களை வளர்த்தெடுத்தல் வேண்டும். அதாவது வளர்ந்தோருக்கு மதிப்பளித்தல், பெற்றார் மீது அன்பு செலுத்துதல், நண்பர்கள் மீது அன்பு வைத்தல், விசுவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தல் போன்று நீங்கள் செலுத்தும் அன்பானது தொடர்ச்சியாயும், ஒழுங்கு முறை வாய்ந்ததாகவும் இருத்தல் வேண்டும்.

இன்றைய கல்வி செயல் முறையானது, உள்ளத்தைப் புத்தக உள்ளடக்கத்தால் நிரப்புதலும், பரீட்சை மண்டபத்தில் அவற்றை வெளியேற்றி விடுவதும், பின்னர் வெற்று உள்ளத்தோடு திரும்புதலுமாக அமைகின்றது. உண்மைக்கல்வியானது உள்ளத்தைப் பண்படுத்துவதைத் தன்னகத்தே கொண்டுள்ளது. நீங்கள் கற்பவை முழுமையாக இருப்பதற்குரிய பூரணத்துவத்தின் ஒரு பகுதியாக வர வேண்டும். அப்பொழுது தான் நீங்கள் மன நிறைவையும், சிந்தனையிலும் சொல்லிலும் செயலிலும் முழுமையான இசைவையும் ஏற்படுத்த முடியும். அவ்வாறு ஒருங்கிணைந்த வாழ்க்கையைக் கொண்ட மனிதர்களே இன்றைய நாட்டின் தேவைகளாகின்றனர்.

அனைத்து நாடுகளிலுமுள்ள மக்கள் சமாதானம் பற்றிப் பேசுகின்றார்கள். ஆனால் அவர்களது செயல்கள் பேச்சுக்கு மாறாகவுள்ளன. அவர்கள் ஒரு கையில் சமாதானம் பற்றிப் பேசுகின்றார்கள். மறுகையில் அணுக்குண்டை வைத்திருக்கிறார்கள். முழு உலகமும் சூழல் மாசடைதலால் அல்லலுறுகின்றது. நட்சத்திரப் போர் பற்றிய பேச்சு விண்வெளியை மாசுபடுத்துவதற்குரிய பயமுறுத்தலாகின்றது. சமாதானத்துக்கான ஊன்றிய விளைவு மனிதரின் உள்ளங்களிலே கட்டியெழுப்பப்படல் வேண்டும்.

**தாய்நாட்டின் மீது அன்பு**

கல்வியின் பெறுபேறு பணிவை உண்டாக்குதலாக வேண்டும். வாழ்க்கையின் வெற்றிற்குரிய சிறந்த நற்சாட்சிப்பத்திரமாக அமைவது பணிவாகும். அது செல்வத்தைத் தருகின்றது. அந்தச் செல்வத்தினூடாக ஒருவர் நேர்மையாக வாழ்வதை முன்னெடுக்கவும் அறக் கொடைகளில் ஈடுபடவும் முடியும். இன்றும் இனிமேலும், மகிழ்ச்சிக்கு உறுதியை இது தருகின்றது புத்தகங்களினூடாக பணிவு பெறப்படமாட்டாது. இன்று நடைமுறையிலுள்ள கல்விச் செயல் முறையானது பணிவை முன்னெடுத்துச் செல்வதாக அமையவில்லை கல்வி பெறுவோரது தலையை வீங்கச் செய்யும் பட்டங்களைத் தான் இது வழங்குகின்றது. கல்வி பெற்றோரை இது புனிதமாக்கவில்லை நாட்டின் முன்னேற்றத்தை இது முன்னெடுத்துச் செல்ல வில்லை. யதார்த்தமாகச் சொல்லப்போனால் நாட்டின் உண்மையான தேவைகளையும் அவற்றை நிறைவேற்றுவதற்குரிய வழிமுறைகளையும் கண்டறியக் கல்வி உற்சாகமளித்தல் வேண்டும். இந்தச் செயலுக்கு இளைஞர்கள் தம்மை அர்ப்பணித்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் வயது முதிர்ந்து, பல் உதிர்ந்து. நரை திரை தழுவி. நடப்பதற்கு ஊன்றுகோலைப் பயன்படுத்தி நடக்கும் முதியோர் கூட வாழ்க்கையிலிருந்து ஓரிரு துளி இன்பத்தைப் பெற முயல்கின்றனர், அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் தொழில் தேடி அலைகின்றனர். இரட்சகர் போன்று உலாவருகின்றனர். தமது சக மனிதருக்கு முதுமையின் எஞ்சிய காலப்பகுதியிலாவது உதவ வேண்டும் என்ற கருத்து அவர்களது மூளையில் உதயமாகவில்லை.

**''கற்ற'' பிச்சைக்காரர்கள்**

கல்லாதவன் தேசாபிமானம் அற்றவனாக இருக்கலாம். ஆனால் கற்றவர்கள் நாட்டுக்குக் கூடிய கேடு செய்கின்றார்கள். ஒரு டாக்டர் அல்லது பொறியியலாளராக வருவதற்குரிய பட்டத்தை அல்லது சான்றிதழை அவர்கள் பெற்றதும் அவர்கள் ஒரு முகவருக்குப் பின்னால், ஓடிக் கடவுட்சீட்டுக்களைப் பெற்று வெளிநாடுகளில் வேலை செய்வதற்கு இலஞ்சம் கொடுக்க முனைகின்றனர் பணம் என்பது தேவைதான்; ஆனால் தேவைக்குரிய அளவுபணமே வேண்டும். தனது தாய்நாட்டில் மட்டும் ஒருவர் உழைக்கும் பணம் போதாதா? கிராமங்களில் அல்லலுறும் வறுமை நிலையிலுள்ள சகோதர சகோதரிகளுக்கு அவர்கள் உதவ முடியாதா? தான் பிறந்த நாட்டைப் பற்றிய அன்பை ஒருவருக்கு வளர்க்காத விடயத்துக் கல்வி சரியான குறிகாட்டியாக அமைய முடியுமா?

தனது தாய்நாட்டின் மீது வெறுப்பும், வேறொரு நாட்டின் மீது ஊன்றிய விருப்பும் கொண்ட ஒருவரது ஞானத்தைப் பற்றி ஒரு கணம் சிந்தியுங்கள் ஒருவன் தனது நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல வேற்று நாட்டு மக்களுக்கும் சேவை செய்தல் வேண்டும். ஆனால் ஒரு சிலரை வெறுத்து மற்றவர்கள் மீது அன்பு செலுத்து பவர்களை என்னவென்று சொல்வது. தான் பிறந்த நாட்டுக்கு மதிப்பளிக்காத ஒருவரை அவர் விரும்பிச் செல்லும் வேறு நாடு எவ்வாறு மதிப்பளிக்க முடியும்?

இவ்வாறு உருக்குலைந்த நிலை கல்விச் செயலமைப்பின் பெறு பேறாகும். வாயிற்படியில் நிற்கும் பிச்சைக்காரன் ''அம்மா தாயே நான் பிறவூரைச்சேர்ந்தவன் பிச்சை போடுங்கள்'' என்று புலம்புவ துண்டு அவன் இந்தக் கிராமத்தைச் சேர்ந்தவன் அல்லன் ஆகையால் அவனுக்கு உதவுவதற்கோ, உண்டி கொடுப்பதற்கோ யாரும் இங்கு இல்லை என்பது பொருளாகும். பிச்சைக்காரன் உணவை அல்லது பணத்தை எதிர் பார்க்கின்றான். அன்னிய நாட்டிலுள்ள எமது படித்த மனிதர் பெருமளவு பணத்தை எதிர்பார்க்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு படித்த மனிதரும் மேற்குறிப்பிட்ட பிச்சைக்காரரும் ஒரே தொழிலையே செய்கின்றனர். கருத்தற்ற இந்த உணர்வுகளில் இருந்து விலகிக் கொள்ள எமது மாணவர் முயல வேண்டும். தமது தாய்நாட்டை விட்டு விலகி வெளிநாடுகளுக்குச் செல்ல முயலக் கூடாது. வெளிநாட்டுக்குச் சென்று திரும்பிய ஒருவரை அவர் பெரியவராக உயர்ந்து விட்டார் என்று கருதும் தவறான எண்ணத்தை மாணவர்கள் கைவிட வேண்டும் விமானப் பணிப்பெண்கள் ஒவ்வொரு நாளும் வெளிநாட்டுக்குச் சென்று திரும்புகிறார்கள். உங்கள் வீட்டின் மீதும், கிராமத்தின் மீதும், நாட்டின் மீதும் அன்பும், நம்பிக்கையும் வையுங்கள் இதன் பொருள் மற்றைய நாடுகள் மீது வெறுப்புக் கொள்ள வேண்டுமென்பதல்ல எந்தவகையிலும் வெறுப்பு, பகைமை, சகிப்பு இல்லாமை என்பவை உங்கள் மனத்தை மாசுபடுத்தலாகாது

தொழில் நுட்பக் கல்வி இன்று மிக்க பெறுமதியுடையதாக இருக்கின்றது. இதிற் கூட மனித விழுமியங்கள் வற்புறுத்தப்பட வேண்டியுள்ளன. உயர்ந்த இலட்சியங்களை வளர்த்தெடுக்க தொழில் நுணுக்க அறிவு அர்ப்பணிக்கப்படல் வேண்டும். மேலைப் பண்பாட்டின் அடிமைகளாகக் கற்றவர்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளனர். ஒரு நாட்டைச் சேர்ந்த மக்கள் தமது நாட்டிலுள்ள சிறப்பார்ந்த சூழலுக்கேற்பவும், தமது நாட்டிலுள்ள வளங்களுக்கேற்பவும், முன்னேற்றிச் செல்லல் வேண்டும். ஆனால் ஒருவர் தன்னுட்டையும் கடந்த மனித குலத்தை நேசித்தல் வேண்டும். அனைவரும் கடவுளின் குழந்தைகளே. நாடுகளிடையே வேற்றுமையை ஒருவர் வலியுறுத்தலாகாது அல்லது ஜாதி வேறுபாடுகளையோ, நிறவேறுபாடுகளையோ பாராட்டலாகாது. அனைத்துலகும் தழுவிய இதய பூர்வமான அன்பை வளர்த்தெடுத்தல் வேண்டும்.

## மனித மேம்பாட்டுக்கான விழுமியங்கள்

கடந்த காலப் பல்கலைக்கழகங்களில் ஒருவர் யாதாவது ஒரு பாடத்திலே சிறப்புப் பெற்றார். ஆனால் இன்று எமது பல்கலைக் கழகங்களில் மனித விழுமியங்களின் கருத்தையும் முக்கியத்துவத்தையும் கற்பித்தல் வேண்டும். மனிதனை மேம்படுத்தாத, அவனிடத்துள்ள தெய்வீக யதார்த்த உணரச் செய்யாத கல்வியை உண்மைப் பெறுமானம் கொண்டதாக நாங்கள் கருதலாகாது. வாழ்வதற்குரிய வழிவகைகளும், வாழ்வதற்குரிய இலக்கும், இரண்டு இறகுகள் போன்றவை உலகியலும் ஆன்மிகமும் திறனும், சாதனையும் (தெய்வீக சாதனை) சில்லுகள் போன்றவை. ஒவ்வொருவரிலும் பொதிந்துள்ள ஆத்மா என்பது பரந்ததாயும் தொடர்ந்து விரிவடைவதாயுமுள்ளது. எங்கள் எல்லோரிடத்தும் ஆத்மா உண்டென்பது வியப்பான கற்பனையாக இருக்கலாம். அது அப்படியல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் ஆத்மாவினுள்ளே இருக்கின்றோம். எல்லோரும் அவ்வாறே ஆத்மாவினுள்ளே இருக்கின்றோம். சர்வவியாபகமான ஆத்மாவினுள்ளே அனைத்துச் சீவராசிகளும் உயிர்ப்புடனும் செயலூக்கத்துடனும் இருக்கின்றன. அசைவுடனும் ஓய்வுடனும் இருக்கின்றன நாங்கள் ஒரு மண்டபத்தினுள்ளே இருக்கின்றோம், மண்டபம் எங்களுக்குள்ளே இல்லை. ''ஆத்மா என்னுள்ளே இருக்கின்றது''. ''உனக்குள்ளே ஆத்மா இருக்கின்றது'' என்று பிரகடனம் செய்தல் உண்மை பற்றிய உங்கள் அறியாமையை வெளிப்படுத்தும்.

இந்த ஐக்கியத்தின் உண்மையை நாம் எம்முள்ளே நிலை நிறுத்திக் கொள்ளும் பொழுது எம்முள்ளே அவமானமும், பொறாமையும், கீழ்த்தரமான சிந்தனைகளும் தொந்தரவு செய்யமாட்டா. இத்தகைய தளைகளிலிருந்தும் குழந்தை நிலையிலேயே மாணவர் விடுவிக்கப்படல் வேண்டும். மகிழ்ச்சியாகவும், ஆரோக்கியமாகவும், உபயோகமான வழிகளிலும் செயற்படுவதற்கு உதவுதல் வேண்டும். அவர்களது தொழிற்பாடுகளை முன்னேற்றகரமாக்கி சுபீட்சத்தையும் உலக நலனையும் மேம்படச் செய்தல் வேண்டும்.

**மனிதமேம்பாட்டுக்கான விழுமியங்கள் ஒவ்வொருவருக்கும் உரியவை**

மனிதமேம்பாட்டுக்கான விழுமியக் கல்வி பற்றியே இன்று நாம் ஆழ்ந்த சிரத்தை கொள்கின்றோம். எனது கருத்தின்படி மனித மேம்பாட்டுக்கான விழுமியங்களை விருத்தி செய்தல் மட்டுமே கல்வியாகின்றது. சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை ஆகிய விழுமியங்களை ஒருவர் சரிவர விளங்கிக் கொள்வாரானால் உற்சாகத்துடனும், நேர்மையுடனும் அவற்றைப் பின்பற்றுவாரானால், உண்மையாகக் கற்றறிந்த ஒருவருக்குரிய நற்சான்றுகளாக அமையும்.

தனது குடும்பத்துக்கும் பிறருக்கும் ஒருவர் நாளாந்தம் செய்ய வேண்டிய பணிகளும் கட்டாயத் கடமைகளும் இருக்கின்றன. இந்த நோக்கங்களுக்காகவும் வாழ்வதற்கென சம்பாதிப்பதற்காகவும், யாதாயினும் ஒரு தொழிலை ஒருவர் தேர்ந்தெடுக்க நேரிடும். இவ்வாறான நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு ஒருவருக்கு இயற்கை விஞ்ஞான அறிவு அவசியமாக அமையலாம். ஆனால் இந்த நிலையில் இயற்கை விஞ்ஞான அறிவோடு மனித மேம்பாட்டு விழுமியங்களோடு இணைந்த அறிவும் அவசியமாகும்.

மனித விழுமியங்கள் தொடர்பான அறிவைப் பெறுவதற்கு அனைவரும் உரிமை உடையவர்கள். பணியகம், தொழிற்சாலை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லம், என்ற அனைத்துத் துறைகளிலும் உள்ளவர்கள் விழுமியங்களைப் பின்பற்றுதல் வேண்டும். ஆனால் இவை மட்டும் போதாது ஒருவர் கட்டாயமாக சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை ஆகியவற்றை பின்பற்றுதல் வேண்டும்.

ஒவ்வொருவரதும் உடல் ஓர் இயந்திரம் போன்றது. அவயங்களும் உள்ளுறுப்புக்களும் இயந்திரத்தின் ஒன்றிணைந்த பகுதிகளாகும். ஒரு பகுதியில் நிகழும், நோவையும், மகிழ்ச்சியையும் எல்லா உள்ளுறுப்புக்களும் பங்கேற்றுத் தாங்குகின்றன.

ஒவ்வொரு அவயங்களினதும் உள்ளுறுப்புக்களினதும் சேதன ஒருமைப்பாட்டை உடல் வெளிப்படுத்தும். இவ்வாறாக நிசமும் மனிதப் பட்டறையின் தொழிற்பாடுகளை நாங்கள் முழுமையாக விளங்கிக் கொள்வோமாயின் வேறுபட்டறைகளைப் பற்றிப் படிக்க வேண்டிய தேவை இல்லை. ஒரு பொருளை பெற்றுக் கொள்ள மனம் விரும்பும் பொழுது, உதாரணமாக மரத்திலுள்ள கனியைப் பெற விரும்பும் பொழுது அனைத்து உள்ளுறுப்புகளும், அங்கங்களும் காலும், கரங்களும் என்றவாறு அனைத்தும் அதனைப் பெற ஐக்கியப்படுகின்றன. அந்தப் பழத்தைச் சாப்பிட்டு முடிந்ததும், அதனைச் சமிபாடடையச் செய்ய வயிறு உதவுகின்றது. அதன் வழியாக இருதயத் துக்குக் குருதி வழங்கல் நிகழ்கின்றது. இருதயத்தில் இருந்து குருதி உடலின் அனைத்துப் பகுதிகளுக்கும் விநியோகிக்கப்படுகின்றது. இந்தச் செயல் முறையில் ஒவ்வோர் உள்ளுறுப்பும் அங்கமும் பிற உறுப்புக்களுடன் ஒத்திசைவோடு கடமை புரிகின்றன. எமது நாளாந்த வாழ்க்கையில் இத்தகைய ஒத்துழைப்பும், ஒத்திசைவும் அடையப்படல் வேண்டும்.

உடலில் உள்ள பல்வேறு உறுப்புக்களினதும் தொழிற்பாடுகள் ஐக்கியத்தையும் பரஸ்பர உதவியையும் விளக்கும் ஒரு புறநிலைப் பாடமாக இருக்கின்றது. இவ்வாறான ஐக்கியமும் பரஸ்பர உதவியும் எமது நாளாந்த தொழிற்பாடுகளிலே அனுபவிக்கப்படல் வேண்டும். உதாரணமாக நீங்கள் நடந்து செல்லும் பொழுது உங்களது கண்கள் வீதியிலுள்ள ஒரு கூரான முள்ளைக் கண்டறிகின்றதென வைத்துக் கொள்வோம். கண்களிலிருந்து கால்களுக்கு நிகழும் அதிசய தொடர்புச் செயல் முறையால் உமது கால்கள் தன்னியக்கமாக கூர்முள்ளைத் தவிர்த்து நடந்து கொள்கின்றன. முள்ளின் மேல் பாதம் வைக்கப் பட்டிருக்குமாயின், அது தாக்கப்பட்டிருக்கும். இரத்தம் பெருக்கெடுக்கத் தொடங்கியிருக்கும் உடனடியாக முன்னர் குறிப்பிட்ட அதிசய செயல் முறையால் முள் குத்திய நோவைக் கண்கள் உணர்வதுடன் கண்ணீர் பெருக்கெடுக்கும். இது கண்களுக்கும், கால்களுக்குமிடையேயுள்ள முக்கியமான தொடர்பை எடுத்துக் காட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு தன்னியல்பாகத் தோன்றும் அன்பு மானுடத்திலும் தோன்றி வளர வேண்டும். பிறர் படும் துன்பத்தை உங்களுக் குரியதாகக் கருதி நீங்கள் அனுபவிக்கும் பொழுது மனித விழுமியம் வெளிப்படுத்தப் படுகின்றது.

எமது புலன்களும், உறுப்புக்களும் இவ்வாறான மனிதப்பண்புகளை வெளிப்படுத்தி எங்களுக்கு ஆசிரியர்கள் போன்று விளங்குகின்றன. எமது உடலில் இருந்து நாங்கள் பல பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. நமது உடல் பல்வேறு தொழிற்பாடுகளில் ஈடுபட்டு அனைத்துச் செயற்பாடுகளுக்கும் ஒரு கருவியாக இருக்கின்றது. எத்தகைய செயலைச் செய்வதற்கு அறிவையும், திறன் களையும் நாங்கள் பெற்றுக் கொள்கின்றோம் இந்த நோக்கத்தை அடைய உடம்பு உரிய நிலையிலே வைத்திருக்கப்படல் வேண்டும். இதற்கென உடலின் அனைத்து உறுப்புக்களும் அதாவது தலையிலிருந்து பாதம் வரை அன்புடனும், கவனத்துடனும் சம முக்கியத்துவத்துடனும் பேணிப் பாதுகாக்கப்படல் வேண்டும். எமது உயிர் வாழ்க்கையை இயக்கும் கோட்பாட்டிலிருந்து அன்பு உதயமாக வேண்டும். அப்பொழுதுதான் நாங்கள் அன்பைப் புனிதமாக்குவோம்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் தான் மனித விழுமிய மேம்பாட்டுக் கல்வி நிகழ்ச்சித் திட்டம் முன் வைக்கப்பட்டதாக நீங்கள் எண்ணலாம். ஆனால் உண்மையில் யான் இதனை ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரே தொடங்கி விட்டேன். புட்டபர்த்தியில் கர்ணம் சுப்பம்மாவின் இல்லத்திலிருக்கும் பொழுது யான் ஒரு பாடலைப் பாடியதுண்டு.

ஓ மனிதரே !
சத்தியம் தர்மம் சாந்தி பிரேமை
ஆகியவற்றை கொண்டு உங்கள்
வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்வீர்
கர்மயோகம் உங்களைக்
கட்டிய கடமையாகின்றது இறைவனே
மிகப் பெரிய இரகசியம் என்பதை
நினைவு படுத்துங்கள் சாதனையே
இறையடியவனின் தரம் குன்றாச் சாதனமாகும்
ஓ மனிதரே ! உமது வாழ்க்கைப்
பயணத்தை சத்தியம், தர்மம், சாந்தி,
பிரேமை என்பவற்றுடன் தொடருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருதயம் என்பது மிகப்பரந்த புலம் என்று கொள்ளுங்கள். மனத்தை அந்தப் புலத்தை உழும் கலப்பையாகப் பயன்படுத்துங்கள். குணங்களை எருதுகளாகக் கொள்ளுங்கள். விவேகத்தை கோலாகக் கொள்ளுங்கள். இவற்றைப் பயன்படுத்தி உமது இருதயத்தைப் பண்படுத்துங்கள். இங்கு விளைவிக்கப்படும் பயிர்கள் யாவை? சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை என்பனவே அந்தப் பயிர்கள். பக்தியே மழையாகும். தியானமே வளமாக்கியாகும். பிரமானந்தமே அங்கு வரும் தானியமாகும்.

இதுவே இன்று உங்களுக்கு விடப்படும் பணியாகும். சத்தியம், தர்மம், சாந்தி பிரேமை ஆகிய அறுவடைகளைப் பெற உங்கள் இருதயத்தைப் பண்படுத்திக் கொள்ளுங்கள். இந்தப் பயிர்கள் உங்கள் இருதயத்திலே உயர்த்தப்படுவதுடன் பிறருடன் பகிர்ந்து கொள்ளப் படவும் வேண்டும்.

ஒவ்வொரு கணமும் உருகிக் கொண்டிருக்கும் ஒருபனிக்கட்டி போன்றதே எமது வாழ்க்கை. அது உருகி முடிப்பதற்கு முன்னர் பிறருக்குச் சேவை செய்ய நேரத்தை ஒதுக்குங்கள். பிறருக்கு விருப் பார்ந்த சேவை செய்வதற்கு ஒவ்வொருவரையும் தயாரிப்பதற்கு வடிவமைக்கப்பட்டதே மனித விழுமிய மேம்பாட்டுக்கான கல்வியாகும்.

இந்த நிகழ்ச்சித்திட்டம் பற்றிச் சந்தேகங்கள் இருக்கலாம் பயனற்ற வாதங்களுக்கு இடமளிக்கலாகாது ஒவ்வொரு மனிதருக்கும் மனித விழுமிய மேம்பாடு அடிப்படையாகக் கொள்ளப்படல் வேண்டும். உலகத்துக்கு இந்த விழுமியம் தொடர்பான செய்தியைப் பரப்புவதற்கு நீங்கள் அனைவரும் ஒருவரோடு ஒருவர் ஒத்திசையுடன் ஐக்கியப்பட்டு நிற்றல் வேண்டும்.

கல்வியல் மனித மேம்பாட்டு விழுமிய நிகழ்ச்சித் திட்டத்தை நோக்கி இன்று ஒவ்வொருவரும் கவரப்படுகின்றார்கள். இந்த விழுமியங்கள் இல்லாமையால் உலகமே பரிதாபத்துக்கிடமான குழப்ப நிலையிலிருப்பதை இன்று அனைவரும் அறிந்து கொள்வதே இதற்குக் காரணமாகும்.

பயங்கரமான பேரழிவை உண்டாக்கும் ஆயுதங்கள் பல்வேறு நாடுகளினதும் ஆயுதக் களஞ்சியங்களிலே காணப்படுகின்றன. அணு யுத்தம், நட்சத்திரயுத்தம் முதலிய ஆபத்துக்கள் நிறைந்துள்ளன. இவ்வாறான பயங்கர நிலைமையில் மனித விழுமியங்களை மேம்படுத் துதல் மிகவுயர்ந்த முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. ஆனால் உண்மையில் எம்மைச்சுற்றிச் சுழலும் அபாயகரமான குண்டுகளும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏவுகணைகளும் அல்ல எம்மிடமுள்ள கெட்ட பண்புகளே மிகவும் ஆபத்தான பிரச்சினைகளாகவுள்ளன. குண்டுகளைப் பயன்படுத்தும் பொழுது மட்டுமே மனித குலத்துக்கு முடிவாக அமையும். எதுவுமே எஞ்சியிருக்க மாட்டாது. ஆனால் மனிதனிடமுள்ள கெட்டவியல்புகள் என்றுமே மனித வாழ்க்கையைப் பாழ்படுத்திக் கொண்டிருக்கும். இந்த அவலம் குண்டுகளினால் ஏற்படும் அவலத்தைக் காட்டிலும் மிகவும் கேடானது. வெறுப்பு, பொறாமை, போலிக் கௌரவம், அகம்பாவம் போன்ற கெட்ட பண்புகளை ஒழிக்க வேண்டுமாயின் நாங்கள் சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை ஆகியவற்றை எம்மைத் தூய்மைப்படுத்தும் கருவிகளாகப் பயன்படுத்துதல் வேண்டும்.

## நடைமுறைச் சிக்கனம்

எமது காலத்தைய விஞ்ஞானிகளுள் ஐன்ஸ்ரின் தலை சிறந்தவர். சடப் பொருளுக்கும், சக்திக்குமிடையேயுள்ள தொடர்புகள் விளக்கும் அற்புதமான உண்மையை அவர் கண்டு பிடித்தார். இந்தப் பிரபஞ்சத்தின் அனைத்துக் கூறுகளும் சத்தியின் தோற்றம் என்பதை அவர் விளக்கினார். இந்த ஆய்வைச் செய்வதற்கு நவீன ஆய்வு கூடங்களில் நீங்கள் மேற்கொள்வது போன்ற அதிக செலவு மிக்க பரிசோதனைக் கருவிகள் அவரிடம் இல்லை அவரிடம் ஒரு பென்சிலும், கடதாசியும், கழிவுப் பொருள்களை இடும் கூடையுமே இருந்தன. எளிமையான வாழ்க்கையும் உயர்ந்த கல்வியும் என்ற இலட்சிய வாசகங்களுக்கு அமைய அவர் வாழ்ந்து காட்டினார். இன்று கல்விக் கூடங்களில் பகட்டையும் ஆடம்பரமான சொகுசுகளையுமே காண்கின்றோம். மாணவர்கள் பஞ்சணை இருக்கைகளை வேண்டுகின்றார்கள். விஞ்ஞானிகள் தங்களுடைய ஆய்வுகளுக்கு மிகவுயர்ந்த விலையுள்ள கருவிகளை வேண்டுகின்றார்கள். ஆசிரியர்கள் குளிரூட்டப்பட்ட அறைகளை வேண்டுகின்றார்கள்.

சாயி கல்வி நிறுவனங்களில் நாங்கள் கண்டிப்பான சிக்கனத்தைக் கடைப் பிடித்தல் வேண்டும். பணத்தைச் சம்பாதிப்பது கடினமானது. ஆதலால் தேவையற்றதும் மேலோட்டதுமான கருவிகள் மீதும், கற்பிக்கும் உழைப்பை இலகுபடுத்தி விடுவதற்கு பயன்படும் சாதனங்கள் மீதும் செலவு செய்வதை தடுப்பதற்குக் கவனம் எடுத்தல் வேண்டும். கணனிகளையும் கணித்தற் பொறிகளையும் அளவுக்கு மீறிப் பயன்படுத்துவதால் தீவிர ஆபத்தை எதிர்கொள்ள நேரிடுகின்றது. தமது ஆற்றல்களிலே தங்கியிராது மாணவரை அவை பொறிகளிலே தங்கியிருக்க வைத்து விடுகின்றன. மனிதனுடைய மூளை கணனியிலும் மேலானது என்பதை உணரல் வேண்டும் சரியான முறையிலும் சிறந்த முறையிலும் மூளையைப் பயன்படுத்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்கு நாங்கள் பயிற்சியளித்தல் வேண்டும். கல்விக்காக விலையுயர்ந்ததும், பெறுமதி மிக்கதுமான கருவிகளைப் பெற்றால் மட்டும் போதாது. அவற்றை முழுமையாகவும் வினையாற்றலுடனும் பயன்படுத்துதல் வேண்டும். அப்பொழுது தான் அவற்றின் மீது செலவு செய்யும் பணம் நியாய பூர்வமானதாகவும், வெகுமதி தருவதாகவும் அமையும்.

மனித விழுமியங்களை வளர்த்தெடுக்கும் பொழுது பணம், உணவு, நேரம் என்பவற்றிலே விரயம் ஏற்படாதிருப்பதற்கு அழுத்தம் கொடுத்தல் வேண்டும். ஆசிரியர்களுக்கும் இந்த விஷயத்தில் பயிற்சி தருதல் வேண்டும்.

## உயர்நிலைக்கற்றல்

ஒருவரது புலக்காட்சியைத் தூய்மைப்படுத்தல் கல்வியின் பெறு பேறாக அமைதல் வேண்டும். அது அறம் சார்ந்ததும், தெய்வீகம் சார்ந்ததுமான உந்தல்களை ஒன்றிணைத்து விருத்தி செய்வதுடன் நல்லொழுக்கத்தையும் வலியுறுத்தல் வேண்டும். "நல்லது" "கெட்டது" என்பவற்றிடையே பாகுபாட்டை ஏற்படுத்தும் பொழுது, கல்வியாளர்கள் மானுடத்துக்குச் சேவை செய்தல் என்பதை அளவுகோலாகப் பயன்படுத்தல் வேண்டும். உலகியல் அறிவு, பரிசோதனை அறிவு, என்பவற்றுக்கிடையே பரிசோதனை அறிவைப் பெறுதல் இன்றியமையாதது. புத்தகங்களில் இருந்து பெறப்படும் அறிவு இரண்டாம் கையளவிலான அறிவு. ஆனால் வாழ்க்கைப் பிரச்சினைகளில் ஈடுபடும் ஒருவருக்கு முதலாம்கை அளவிலான அறிவே துணை செய்யும். இவ்வாறான முதலாம்கை அளவிலான அறிவு அன்பு ஒளி என்பவற்றை நோக்கிய உந்தலில் இருந்து வருகின்றது. துரதிஷ்ட வசமாக இன்றைய கல்வியானது செல்வத்தைச் சம்பாதிப்பதையும், மகிழ்ச்சி, ஓய்வு என்ற வாழ்க்கைச் சுகபோகங்களை அடைதலையும் இலக்காகக் கொண்டு உள்ளது.

கல்வி என்பது உலகியல் தழுவியதாகவும் தெய்வீகம் தழுவியதாகவும் அமைக்கப்படலாம். அது ஒருவரிடத்தும் அவரது குடும்பம், உறவினர் என்போரிடத்தும் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை ஏற்படுத்தும் நோக்கத்தைத் தன்னகத்தே கொண்டு இருக்கலாம். ஆனால் வாழ்தல் என்பது உடல், உணவு, இருப்பிடம் மற்றும் புலன் சார் திருப்திகள் என்பவற்றிலும் மேலானது. மனிதனிடத்து நேர் நேராக அனுகப்பட முடியாத பொருள்களாகிய மனம், நுண்மதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு மட்டங்களிலுமுள்ள உணர்வுகள் என்பனவுள்ளன. இவற்றைத் தெளிவுபடுத்தலும், தூய்மைப்படுத்தலும் வலுப்படுத்தலும் வேண்டப்படுகின்றன. தெய்வீகம் சார்ந்த பயிற்சியினால் இதனைச் செய்ய முடியும். இன்று உலகியற்கல்வி மிகவும் மேலோங்கி உயர்ந்து விட்டது. தெய்வீகக்கல்வி பின் தள்ளப்பட்டுவிட்டது. இதன் காரணமாக கற்ற மனிதரின் ஆளுமையில் ஒருங்கிணைப்பைக் காண முடியாதுள்ளது. விளக்கம் பெறுதல் தொடர்பான முழுமையும், சிறந்த கருத்தைப் பற்றி நிற்றல் தொடர்பான வலிமையும் இவர்களிடத்தே வறிதாகவுள்ளன. ஐயப்பாடுகளும் கவனச் சிதைவுகளும் எந்நேரமும் அவர்களிடத்துக் குடி கொண்டுள்ளன. கல்விச் செயல் முறை என்பது அதிக அளவுக்குப் பொறிமுறையாகி விட்டது. இது உயர்ந்த இலட்சிய உணர்வுகளால் வளமூட்டப்படவில்லை. அல்லது உயர்ந்த நோக்கங்களை நோக்கி மேம்பாடு கொள்ளச் செய்யப்படவில்லை. எந்த மாணவரிடத்தும் தேளுங்கள் தாம் கல்வி பெறுவதன் நோக்கம் வாழ்வதற்காகச் சம்பாதிப்பதற்காகவே என்று கூறுகின்றார்கள். ஆனால் மானுட வாழ்க்கையின் இலக்கு யாது? இதனை அறிதலும் அடைவதற்கு பிரயத்தனம் எடுத்தலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தனவாக இருக்கின்றன.

மனிதன் செல்வத்தைச் சம்பாதிக்கின்றான். செல்வம் உறவினரைக் கவர்ந்திழுக்கின்றது. ஒருவனிடத்துள்ள செல்வம் பற்றியபின் யார் அவரால் கவரப்படுகிறார்கள்? உறவினரும் உலகத்தவரும் ஒருவரிடத்துச் செல்வம் இருக்கும் வரை தான் மரியாதை வழங்குவார்கள். ஆனால் சிறப்பாக வாழ்க்கை பூராவும் ஞானத்தைத் திரட்டிய முதியவர்களுக்கு மரியாதை வழங்குதல் வேண்டும். உயர்ந்த நிலையில் தெய்வீகம் கொண்ட ஒருவரது வயதைப் பொருட்படுத்தாது மரியாதை வழங்க வேண்டும் வேறு எதுவித கட்டளைகளையும் நோக்காது மரியாதை வழங்குதல் வேண்டும். அறிவைக் காட்டிலும் கர்மம் மேலானது என நாம் மரியாதை செலுத்துதல் வேண்டும். மனிதரிடத்தே மானுடப் பண்புகளை வளர்க்கும் செயற்பாடுகளால் ஒருவருடைய நல்லொழுக்கம் மேம்படுத்தப்படும் அதன் வழியாக பிறருக்குச் சேவை செய்தலை இலக்குகளாகக் கொள்ளல், வாழும் சமூகத்தை மேல் நிலைக்கு உயர்த்துதல், என்பவை மேலாக வணங்கப்படவும் பின்பற்றப்படவும் வேண்டும்.

இவை எல்லாவற்றிலும் மேலானது வித்யாவாகும். இது ஒளிதரும் கல்வியாக அமைந்து சத்தியம் பற்றிய பிரக்ஞையை அகவுலகிலும் ஏற்படுத்துதல் வேண்டும். அதுவே மனித ஊழினை நிறைவு செய்ய உதவுகின்றது ஆத்மம் அற்ற புலமையானது துர்நாற்றமுள்ள மலருக்கு ஒப்பானது. மேலும் அது உள்ளே புழுக்களைக் கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகிய பழத்தைப் போன்றது. மாணவர்கள் நவீன மோஸ்தரில் ஆடையணிந்து கர்வமடையலாம். ஆனால் யதார்த்தத்தில் அவர்களது உள்ளம் அருவருப்பான கருத்துக்களாலும் விருப்புக்களினாலும் நிறைந்திருக்கும். பலர் தமது துறவி மாடங்களுக்குரிய காவி உடையை அணிகின்றார்கள். ஆனால் அவர்களது தெய்வீக அடைவு, தெய்வீக மனோபாவம் என்பவற்றுக்காகவே மக்கள் மரியாதை செலுத்துகின்றார்கள். அனைத்து நடவடிக்கைகளிலும், அனைத்துக் காலங்களிலும் தெய்வீகம் சிறப்பு மக்களால் வணங்கப்பட்டு வந்துள்ளது. மிகவும் தூர இடங்களில் இருந்து கூட தொடர்புடைய ஆன்மாக்கள் ஒருவரை ஒருவர் அணுகி, பொதுவான ஆவிக்கு விசுவாசமாக ஒன்றிணைகின்றன.

நீங்கள் ஒரு பாம்பை வீட்டின் செல்லப் பிராணியாக வளர்த்து அதற்கு அன்புடன் பாலைக் கொடுத்தாலும் அது தனக்குரிய நஞ்சுக் கடியை விட்டுவிடப் போவதில்லை. ஒரு குறுகிய மனங்கொண்ட மனிதனிடத்து அன்போடு பழகிய போதும் அவன் தீங்கு தரும் பழக்கத்தை கைவிடப் போவதில்லை. கீழ்நிலையிலிருக்கின்றவர்களிடத்துள்ள நஞ்சுக் குணங்களை ஒழிப்பதற்கு அவர்களது உள்ளத்திலே கடவுளின் நாமத்தைத் பதித்துச் செயற்பட வைத்தல் வேண்டும்.

## சாயியினுடைய இலட்சியங்களை முன்னெடுத்துச் செல்வோம்

தொல்சீர் அறிவுசார் எழுத்தாக்கங்களில் ஆசிரியர் மாணவர் ஆகியோருக்கிடையேயுள்ள இணைப்புக்களும் அவற்றிலிருந்து திரண்டெழும் ஞானமும் விபரித்துக் கூறப்பட்டுள்ளன. அவற்றில் சமயம் சாராத கல்வியறிவுடன் தெய்வீகக் கல்வியின் முக்கியத்துவம் அழுத்திக் கூறப்பட்டுள்ளது. இந்த அறிவுசார் எழுத்தாக்கங்களில் ஒருவரது வாழ்க்கையில் இடம் பெற வேண்டிய ஒழுக்க நெறிகள் பற்றிய முக்கியமான போதனைக் கருத்துக்களும் இடம் பெற்றுள்ளன. முடிவில்லாத அவாவினையும், கருத்தற்ற ஆவல்களையும் கொண்டு அழுந்திய நிலையிலுள்ள மானுடர்க்கு தொல்சீர் அறிவுசார் எழுத்தாக்கங்கள் கலங்கரை விளக்கங்களாகவுள்ளன. அவற்றிலே கூறப்பெற்ற கருத்துக்களாவன, சத்தியத்தைப் பேசுக, தர்மத்தைப் பின்பற்றுக, உற்சாகத்துடன் அறிவைத் தேடுக, விஷமத்தனமான செய்கைகளைக் கைவிடுக, மேன்மையான செயல்களைச் செய்க, சமுதாயத்திலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் ஒழுக்கமாக வாழ்வதற்கென வகுக்கப்பட்ட விதிகளுக்கு மிகுந்த விநயத்துடன் மதிப்புத் தருக. உங்களது ஆற்றலுக்குத் தகுந்த வகையில் இல்லப் பொறுப்பாளராக இருந்து ஈகை செய்க, முதியோருக்குக் கீழ்ப்படிதலும் மதிப்பளித்தும் மேற்கொள்க. உறவினர் கள் தொடர்பாகவும், சகமனிதர்கள் தொடர்பாகவும் உங்களது கடமைகளையும் உறவுகளையும் மிகுந்த விழிப்புணர்ச்சியுடன் செயற்படுத்துக.

இவற்றைப் போதித்து முடிந்ததும் தொல்சீர் எழுத்தாக்கங்கள் மனிதருக்குரிய நித்தியமான ஒழுக்க நெறிகளை வலியுறுத்தும் கட்டளைகள் கற்பித்தலை முன் வைத்துள்ளன. மாணவர்கள் மிகவும் உன்னதமானவர்களாகவும் எடுத்துக் காட்டாளர்களாகவும் இந்தக் கட்டளைகளின் வழியாக உருவாக வேண்டும் என்பதும் இங்கு கற்பிக்கப்படுகின்றது.

துரதிஷ்டவசமாக இன்றைய மாணவரது உள்ளத்திலே இவ்வ கையான சிந்தனைகளையும் உணர்வுகளையும் காண முடியாதிருக்கின்றது. இன்றைய கல்வி முறையானது கற்றவனை சுயநலமுள்ளவனாக்கி விடுகின்றது. அது அவனை புலன்களுக்கு அடிமையாயாக்கி விடுவதன் விளைவாக தனக்குரிய இறைசார் பண்புகளை மறந்து விடுகின்றான். துன்பமுறும் மக்களுக்குச் சேவை செய்வதற்குக் கற்ற மனிதர் தயாராகவில்லை.

## உரிமைகளும் கடமைகளும்

இந்த அவல நிலைக்குக் கற்றவர்களை மட்டும் பொறுப்பாக்கி விட முடியாது. இந்த நல்லெண்ணங்களை மக்களிடத்து உற்சாகப்படுத்தாத அரசின் மீதும் குற்றம் சுமத்த வேண்டியுள்ளது. தமது சுயகால்களில் நம்பியிருக்கத்தக்க வகையிலும், தம்மைப் பராமரிக்கத் தக்க வகையிலும், மாணவர்கள் கற்பிக்கப்படவில்லை. உயர்ந்த பட்டங்களை வைத்திருந்த போதும் கூட, படித்த மனிதன் சுயமாகத் தொழில் மேற் கொள்வதைத் தேடாது, சம்பளம் தரும் உத்தியோகங்களையே நாடுகின்றான். தான் செய்ய வேண்டிய கடமைகளைப் பற்றிய கருத்தின்றி கற்ற மனிதன் உரிமைகளுக்காகப் போராடுகின்றான். தனது கடமைகளைப் புறக்கணிக்கும் ஒரு மனிதன் தனது உரிமைகளையும் இழப்பான். கடமைகளும் உரிமைகளும் பகுக்க முடியாது ஒன்றிணைந்தவை. அவை இரண்டையும் அன்பு ஒன்றிணைக்கின்றது. ஆன்மிகப் புலத்திலே அசையாத நம்பிக்கை கொண்ட ஒருவன் எவ்வாறு கிடைக்கின்றதென்று அறியாமலே மகிழ்ச்சியையும் சாந்தியையும், சுகத்தையும் வேண்டிக் கொள்ளுகின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனை வேண்டாம் என்று சொல்லிக் கொண்டு பக்தியை வளர்க்க முடியாது. ஆனால் சாந்தியையும் ஆனந்தத்தையும் இறைவன் சொரிய வேண்டும் என்ற தேவையுடையோராய் நாம் இருக்கின்றோம். சாந்தி வேண்டுமாயின் சாந்தியைத் தரும் மார்க்கத்தில் எமது வாழ்க்கையை நடத்திச் செல்லல் வேண்டும். கெட்டதும், அதர்மமான வழியிலும், செல்லும் ஒரு மனிதன் எங்ஙனம் சாந்தியையும் சத்தியத்தையும், ஆனந்தத்தையும் பெறமுடியும்? மாம்பழத்தைச் சாப்பிடுவதன் வாயிலாக பூசினிக்காயின் சுவையைப் பெறமுடியுமா? செய்கை எவ்வாறு அமைகின்றதோ அவ்வாறே பலனும் அமையும் எமது இலக்குகளுக்கேற்பவே இறைவன் தரும் பரிசுகளும் அமையும். ஆகவே எமது இலக்குகள் மேலானவையாகவும் செய்கைகள் தருமமான வழியிலும் அமைய வேண்டும்.

தங்களிடத்து மறைந்துள்ள சக்திகளை மாணவர்கள் விருத்தி செய்தல் வேண்டும். இன்றைய கற்ற மனிதர்கள் நாவல்களிலும், பத்திரிகைகளிலும், தாம் வாசிப்பவைவற்றையும், திரைப்படங்களில் தாம் பார்ப்பவற்றையுமே நம்புகிறார்கள். வழிப்போக்கர்களது விசித்திரமான சொற்களைக் கூட நம்புகிறார்கள். ஆனால் அவர்களுக்குக் கடவுள் நம்பிக்கையில்லை. இது பெரிய துரதிஷ்டமானதாகும். இன்றைய கற்ற மனிதர்கள் கடவுள் சார்ந்த வலுவினூடாகவும் ஆன்மிக அறிவினூடாகவும் கிடைக்கின்ற ஞானத்திலே நம்பிக்கை கொள்ளாது குறுகிய உலகியல் சார்ந்த செயற்பாடுகளை மட்டும் விருத்தி செய்து தமது வாணாளை வீணாக்குகின்றார்கள்.

## இலட்சியக் குடிமக்களை உருவாக்குதல்

உண்மையான சிறப்புமிக்க இலட்சியப் பாங்கான கல்வியை வழங்கவும், நாட்டுக்குச் சேவை செய்யத் தக்க இலட்சிய வடிவான குடிமக்களை உருவாக்கவும் சத்தியசாயி கல்வி நிறுவகம் அமைக்கப்பட்டுள்ளது. எமது நிறுவகத்தில் உள்ள மாணவர்கள் கிரியைகளைச் செய்வதற்கும் பஜனைகளையும் பிற ஆன்மிகச் செயற்பாடுகளையும் செய்வதற்குமே தகுதியானவர்கள் என்று கருதுகின்றார்கள். இது முற்றிலும் தவறானது. எமது மாணவர்கள், ஒழுக்கவியல், நிர்வாகம், அரசியல், வர்த்தகவியல், மற்றும் பல்வேறு வாண்மைசார் உயர் தொழில்களைப் பொறுப்பேற்பதற்குத் தயார் நிலையிலுள்ளார்கள். எமது மாணவர்கள் நடனம், நாடகம், இசை, இலக்கியம் மட்டுமல்ல கலைத்துறை, பௌதிக பண்பாட்டுத்துறை எவற்றிலுமே சிறப்பு எய்துகின்றார்கள். எமது மாணவர்கள் மேற்கொள்ளும் உடலியல் சார்ந்த சாகசங்கள் அவர்களின் ஆற்றலைப் புலப்படுத்தப் போதிய சான்றாதாரங்களாகவுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் வெளிப்பகட்டுக்களைக் காட்டாது அடக்கமானவர்களாயும் பணிவுள்ளவர்களாயும் இருந்தலினால் நீங்கள் அவர்களது திறன்களை குறைவாகவும் ஆற்றல்களைத் தாழ்வானதாகவும் மதிப்பிட முனையலாம். ஆடம்பரங்களையும் பகட்டுக்களையும் எமது மாணவர்கள் தள்ளுபடி செய்தும் புறக்கணித்தும் வருகின்றார்கள். ஆடம்பரங்களையும் பகட்டுகளையும் விரும்பும் மாணவர்கள் என்றுமே மாணவர்களாக இருக்க முடியாது. அனைத்து அவலங்களுக்கும் தனி மனிதச் சுயநல அகமே காரணம் என்பது எமது மாணவர்க்குத் தெரியும்.

ஒருவர் எதனையும் படிக்கலாம் அல்லது படிக்காமல் விடலாம். மனிதராகப் பிறந்தவர்கள் ஆத்மாவைப் பற்றிப் படித்திருத்தல் வேண்டும். அது வொன்றே பேரானந்தமும் இறவாமையும் தரும்.

தூய மனத்தினராகிய குழந்தைகளுக்கு அனைத்தையும் தியாகம் செய்வோமென இன்றே உறுதி பூணுங்கள் அவர்கள் வழிகாட்டலுக்கு உங்கள் மீதே தங்கியுள்ளனர். பணம் ஒன்றுக்கே நீங்கள் அடிமைப்பட்டிருப்பீராயின், அதுவே உங்களை மகிழ்ச்சியடையச் செய்யும் என்று எண்ணுவீராயின் நீங்கள் எதுவித முன்னேற்றமுமின்றி அப்படியே இருப்பீர்கள். ஆனால் தன்னலமற்ற சேவை செய்ய என்று தீர்மானிக்கின்றீர்களோ அன்றே மகிழ்ச்சியைப் பெறுவீர்கள். எவற்றால் சுகபோகங்களைப் பெறலாம் அல்லது எவற்றால் சுகபோகங்களைப் பெற முடியாது என்ற எண்ணங்களை விடுத்து உங்கள் ஆத்மாவை உணர்வதற்குரிய வழி வகைகளை விருத்தி செய்யுங்கள்.

## மனித மேம்பாட்டு விழுமியத்திற் கல்வி

நாட்டின் எதிர்காலத்தை உருவாக்குவதில் ஆசிரியர் மிகப் பெரிய பாத்திரத்தை வகிக்க வேண்டியுள்ளது. எல்லா வாண்மைகளிலும் ஆசிரிய வாண்மையே உன்னதமானது. மிகவும் கடினமானது, மிகமுக்கியமானது மாணவருக்கு ஆசிரியர் முன் மாதிரியாக இருத்தல் வேண்டும். ஓர் ஆசிரியர் துர்க்குணமுள்ளவராக இருந்தால் ஆயிரக்கணக்கான மாணவர்கள் மாசுபடுத்தப்படுவார்கள். அவர் தம்மை அர்ப்பணிப்பவராகவும், தூய்மையானவராகவும் இருந்தால் ஆயிரக்கணக்கான மாணவர்கள் மேன்மையடைவதுடன், நற்பண்பு கொண்ட கற்ற ஆண், பெண் ஆகியோரால் நாடும் நன்மை அடையும்.

முரண்பாடானதும் குழப்பம் மிக்கதுமான இணைப்புக்களால் கல்வித்துறை நீண்ட காலமாக பாதிக்கப்பட்டு வந்துள்ளது. பல்வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞர்கள் இந்தப் பிரச்சினை தொடர்பாக ஆழ்ந்து சிந்தித்தார் களாயினும் கற்ற மனிதர்களை உபயோகமானவர்களாயும் ஆக்குவ தற்குரிய தீர்வை அடைய முடியாமலிருக்கின்றது. இதற்கிடையில் இன்றைய கல்விச் செயலமைப்பானது வீழ்ச்சியின் ஆழத்தை நோக்கிச் செல்கின்றது. சுதந்திரம் என்பது வரம்பு மீறலுக்குச் சென்று விட்டது. எல்லாவித தொடர்புகளும் மரியாதையை இழக்க செய்து விட்டன கல்வித் தெய்வத்தை வழிபாடு செய்வதற்கு உங்களுடைய இதயங்களை அன்பினால் நிறைக்க வேண்டுமென நான் வாழ்த்துகின்றேன். அத்தோடு மனித மேம்பாட்டுக்கான பாதையிலும் இலட்சிய வழியிலும் உங்களுடைய பொறுப்பில் பிள்ளை களை அழைத்துச் செல்லுங்கள். ஒவ்வொரு கணத்திலும் வினைத் திறனுடன் பயன்படுத்துவதற்காகவே உடல் தந்தருளப்பட்டுள்ளது. மிகுந்த விரிவுடன் வேலைகள் நோக்கப்படல் வேண்டும். அப்பொழுது தான் ஒப்படைக்கப்பட்ட ஒவ்வொரு கணத்தையும் பிரயோசனமான வழியிலே செலவிட்டு, செயற்றிட்டத்திலே தரப்பட்ட பணிகளை சுயநலமின்றி நிறைவேற்றி வைக்கலாம் நல்ல செயற்பாடுகளைச் செய்வதற்காகவே மனித வாழ்க்கை எங்களுக்குத் தரப்பட்டுள்ளது.

ஒரு மனிதன் மகிழ்ச்சியுடனும் சுகத்துடனும் இருக்க விரும்பினால் முதற்கண் அவன் கெட்ட எண்ணங்களையும் பழக்கவழக்கங்களையும் அகற்றி விடுதல் வேண்டும். அடுத்த நடவடிக்கை என்ன ? நாங்கள் எண்ணங்கள் நல்ல உணர்வுகள் நல்ல பழக்கவழக்கங்களை வரவேற்க வேண்டும். இந்தப் பயிற்சியை குழந்தை நிலையிலிருந்தே தொடக்க லாம். தீயனவற்றை அகற்றுதலும் நல்லவற்றைப் பிரதியிடாகக் கொடுத்தலும், ஆசிரியர் என்ற வகையில் நீங்கள் மேற் கொள்ளல் வேண்டும். நீதியீனம், வன்முறை, அறக் கேடுகள், பொய்யுரை போன்ற தீமைகள் சிறுவர்களைத் தாக்காதவாறு விழிப்புடன் பாதுகாத்தல் ஆசிரியர் என்ற வகையில் எங்களுக்குத் தரப்பட்ட கடமையாகும்.

தூய்மை, முழுமை, சுதந்திரம் என்பவற்றை உள்ளடக்கிய தெய்வீக பண்பு கொண்டவர்களாக வருமாறு நீங்கள் கல்வியைக் கற்க வேண்டும். வழங்கவும் வேண்டும்.

முட்டாள் ஒருவர் அனைத்து அறிவிலும் பாண்டித்தியம் பெற் றார் புகழ்மிக்க ஓர் அறிஞர் தாம் எனப் பெருமிதம் அடைந் தார் ஆனால் அவர் தாம் யாரென்பது பற்றிய அறிவற்றவராக இருந்தார் அது பற்றி ஒரு சொல்லையும் அவரால் உதிர்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியவில்லை. அவருடைய புகழ் குழப்பத்திலிருந்து வந்தது. அவருடைய புலமை துளைகளால் வெளியேறிக் கொண்டிருந்தது. படித்தார் படித்தார் இறக்கும் வரை ஆனால் இறவாதிருப்பது எப்படியென்று அவருக்கு இன்னமும் தெரியாதிருந்தது.

மனத்திலிருந்து எழும் சிந்தனையும், நாவிலிருந்து எழும் சொல்லும், கைகளால் இயற்றப்படும் செயல்களும் என்ற இவை அனைத்தும் ஓரே செயல் முறையினூடாக ஒன்றிணைதல் மனிதப்பண்பைச் சுட்டிக் காட்டுவதாக அமையும். இன்று மனிதன் மனிதவடிவிலே காட்சி தருகின்றான். ஆனால் மனிதப்பண்புகளை இழந்து விட்டான். ஒன்றை நினைத்து வேறொன்றைச் சொல்லிப் பிறிதொன்றைச் செயற்படுத்துதல் இதற்கு ஒரு காரணமாகும். நீங்கள் நினைப்பதைச் சொல்லுங்கள். நீங்கள் சொல்பவற்றைச் செய்யுங்கள். அதுவே உண்மையான மனிதப் பண்பின் குறிகாட்டியாக அமையும். எனவே உங்களுடைய ஆலோசனைக் கேற்ப முதலில் செயற்படுங்கள். உங்கள் சிந்தனைக்கும், சொல்லுக்கும் செயலுக்குமிடையே ஒத்திசையை ஏற்படுத்துங்கள் அதன் பின்பு மாணவருக்கு வழிகாட்டுங்கள். அல்லாவிடில் நீங்கள் அவர்களுக்குப் பங்களிப்பு செய்ய முடியாது.

ஒரு சிறிய வீட்டுக்கும் அத்திவாரம் அவசியம் மரம் வளர்வதற்கு வேர்கள் உறுதியாயிருத்தல் வேண்டும். வேரில்லாவிடில் மரம் சிறிய காற்றுக்கும் பாறி விழுந்து விடும். அத்திவாரம் இல்லாத வீடும் அவ்வாறே விழுந்து விடும். அவ்வாறே மாணவரும் வாழ்க்கையிலே திருப்திகரமான முன்னேற்றத்தைப் பெற உறுதியான அத்திவாரத்தை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். உறுதியான அத்திவாரம் என்றால் என்ன? அறம், ஒழுக்கம், தெய்வீகம், ஆகிவவை சார்ந்த அறிவும் அனுபவமுமே மிகச் சிறந்த அத்திவாரமாகும்.

ஆனால் அத்திவாரம் பற்றி வெறுமனே பேசிக் கொண்டிருப்பதிற் பயனில்லை. அதன் மீது நாம் எதனைக் கட்டியெழுப்பப் போகின்றோம்? திட்டம் போடுவதிலே தான் நாம் நேரத்தைக் கழிக்கின்றோம். ஆரம்பக் கல்வி தொடர்பான இப்போதைய இயக்கம் ஓர் அத்திவாரமாகும். உயர் நிலைப் பாடசாலைகள் அதன் சுவர்களாகும். கல்லூரிகள் அதன் கூரை ஆகும். மூன்றையும் ஒரே நேரத்திலே திட்டமிட வேண்டும். அவை மூன்றும் ஒன்றுக்கொன்று அனுசரணையானவை. இன்று நாங்கள் வெறுமனே அத்திவாரத்தை இடுகின்றோம். இது முடிவல்ல கட்டடம் அமைக்கப்படல் வேண்டும். நாற்று நடப்பட்டு விட்டது. அது மட்டும் போதாது. அதற்கு நீர் இறைத்தல் வேண்டும். வளமாக்கிகள் இட்டு கவனமாக வளர்த்தெடுத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவதற்கு அவர்களை அறம், ஒழுக்கம், தெய்வீகம், சார்ந்த பாதைகளில் அழைத்துச் செல்லுதல் வேண்டும். நீங்களும் பண்டைய ரிஷிகளின் வாரிசுகளாக இருக்கின்றீர்கள். ஏனெனில் இவ்வாறான கற்பித்தல் பணியை நீங்கள் ஏற்றுள்ளீர்கள்.

ஒவ்வொரு சமயமும் தருமவழியை மனிதனுக்குக் கற்பிக்கின்றன
அதனை அறிந்து அதன் வழி செல்க
தரிசனம் நேராயின் பிரிவினை என்செயும்?
ஓ! பாரதத்தின் புதல்வர்களே இந்த உண்மையைக் கேட்க

சமய விஷயங்களில் ஐயப்பாட்டுக்கோ விவாதங்களுக்கோ நீங்கள் இடமளிக்கலாகாது. வேறுபாடின்றி அனைத்துச் சமயங்களையும் ஒன்றென மதிக்கும் உண்மையை நீங்கள் அங்கீகரித்தாக வேண்டும். இந்த உண்மையை மாணவருக்குக் கற்பித்து, ஆண், பெண் இரு பாலரதும் பிஞ்சு உள்ளங்களிலே அன்பையும் ஒத்திசைவையும் ஆழ்ந்து பதித்துவையுங்கள். மாணவர்கள் தங்களுடைய ஒழுங்கமைந்த வளர்ச்சிக்கும், மலர்ச்சிக்கும் உங்கள் மீது தங்கியிருக்கும் இனிய கொடிகள் போன்று இருக்கின்றார்கள்.

முதன் மந்திரியாலும், கல்வி மந்திரியாலும், இந்தப் புனிதமான கடமை தொடக்கப்பட்டிருக்கின்றது இதற்குரிய இளம்மரக்கன்று அவர்களால் நடப்பட்டு விட்டது. அந்த மரத்தை பயன்தரு விருட் சமாக்கி, மலரும் கனியும் தரும் வகையில் வளர்க்கும் பணி ஆசிரிய ராகிய உங்களிடம் தரப்பட்டுள்ளது. சாந்தி என்ற மலர்களையும் தெய்வீகம் என்ற பழங்களையும் உருவாக்கி அனைத்து மனித குலத் துக்கும் வழங்குதற்கு நீங்கள் துணை புரிதல் வேண்டும். உண்மையில் உங்கள் பாடசாலையில் நீங்கள் கற்பிக்கவில்லை. மனிதகுலத்துக்கே ஆசிரியராக இருக்கின்றீர்கள்.

ஆகவே உங்கள் உள்ளத்தில் தியாக உணர்வு, கொடைப்பண்பு, கடவுள் பற்றிய பிரக்ஞை முதலியவற்றை வளர்த்தெடுத்தல் வேண்டும். அப்பொழுது தான் பிள்ளைகளது உள்ளத்திலே இவற்றை வளர்ப் பதற்குத் தகுதியானவர்களாவீர்கள் ஆனால் துரதிஷ்டவசமாக இந்தக் கோட்பாடுகள் இன்றைய பள்ளிக்கூடங்களிற் காணப்பட வில்லை. இந்நிலையில் கல்விச் செயலமைப்புக்கு மறுவடிவம் கொடுக்க நீங்கள் பிரயத்தனம் எடுத்தல் வேண்டும். ஆனால் தொடக்க நிலையில் இந்தப் பணி கடினமானதாகவும், உங்களைக் களைப்படையச் செய்வ தாகவும் இருக்கலாம். ஆனால் தொடர்ந்து முன்னேறிச் செல்லும் பொழுது உங்களுடைய பணி மேலும் இலகுவாக இருப்பதை உணர்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய மாணவரிடையே அறம், ஆன்மிகம் சார்ந்த உணர்வும், சரி எது, பிழை எது என்று தீர்மானிக்கும் ஆற்றலும் மிகச் சிறிதளவே உள்ளன. பொருளாதார சுகபோகங்களைத் தேடி மாணவர் தமது வாழ்க்கையை வீணாக்கி விடலாகாது. சேவையும் தியாகமும் நிரம்பிய வாழ்க்கையை அவர்கள் மேற்கொள்ளல் வேண்டும். இத்தகைய திசையில் மாணவரை நெறிப்படுத்த நாங்கள் திடசங்கர்ப்பம் பூண வேண்டும்.

பாடசாலைகளில் வரலாறு அல்லது புவியியல் அல்லது கணிதம் முதலியவற்றைக் கற்பிக்கும் ஆசிரியர்களை வைத்திருக்கின்றோம். புவியியல் ஆசிரியர் ஒரு தேசப்படத்தைத் திறந்து சில நாடுகளைக் காட்டி அங்கு எவ்வாறு மக்கள் வாழுகின்றார்கள் என்பதை விளக்குகின்றார். 3 + 3 + 3 = 9 என்று கணித ஆசிரியர்களும் கரும் பலகையிலே எழுதுகின்றார். வரலாற்று ஆசிரியர் ஓர் ஆட்சியாளரின் கதையைத் தொடர்பு படுத்துகின்றார். ஆனால் உடற்பயிற்சி ஆசிரியர் வரிசையாக நிற்கும் மாணவர் முன் வந்து ''ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்று சொல்லித் தாமும் பயிற்சியைச் செய்து காட்டுகின்றார். ஒவ்வோர் ஆசிரியரும் தாம் செய்வதைப் பார்த்து மாணவரும் செய்ய வேண்டுமென எண்ணுகின்றனர். ஆனால் ஆசிரியர்கள் தமது சொந்த வாழ்க்கையில் சத்தியத்தைச் கடைப்பிடித்துக்காட்டல் வேண்டும். மாணவர் எவற்றைச் செய்யவேண்டுமென்று கேட்கப்படுகின்றார்களோ அதற்குரிய தகுதியும் ஆசிரியரால் வழங்கப்படல் வேண்டும். உதாரணமாக புகைப்பதற்காகத் தண்டிக்கும் ஓர் ஆசிரியர் தாமே புகைத்தலுக்கு அடிமையாக இருக்கும் பட்சத்தில் பிறர்க்கு ஆலோசனை கூற அவருக்கு என்ன தகுதி உண்டு? இவ்வகையான கபடத்தன்மையால் மாணவர்களிடத்து ஆசிரியருக்குரிய மரியாதை இழக்கப்படுகின்றது ஆசிரியர்கள் ஒழுங்கான வழியில் நடந்து சட்டங்களை அனுசரித்து நடக்கும் பொழுது ஆசிரியரது ஆலோசனைகளை மாணவர் மதித்து நடப்பர். இந்த நிலையை நீங்கள் எப்போது அடைவீர்கள்? மனித தன்மையைத் தம்முள்ளே பொதிந்துகொள்ளும் பொழுதும், மனிதப் பண்புகளுக்கு அங்கீகாரம் அளிக்கும் பொழுதும் இந்த நிலையை ஆசிரியரால் அடைய முடியும்.

இன்று கல்வியானது மனத்தை நிலை மாற்றம் செய்யவில்லை காதுகளாற் கேட்கும் செயல் முறைகளுடன் அது நின்று விடுகின்றது. காதுகளின் ஊடாக எவை வந்தனவோ அவை உள்ளத்துக்குத் தெளிவற்றும் இருக்கலாம். அது மனத்தை மலினமான ஒரு முறையில் மட்டும் அடைந்திருக்கலாம். ஆகவே மனத்தைச் தெளிவாகச் சென்றடையும் வண்ணம் கல்வி கற்பிக்கப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நோக்கத்தை அடைவதற்கு அது சிந்தையினூடாகவே பரப்பப்படல் வேண்டும். நாவும், தலையும் தூய்மையானதாயிருக்க வேண்டும். களங்க மற்றதாயிருத்தல் வேண்டும், அப்பொழுது தான் கற்றல் தெளிவானதாக இருக்கும். ஞானம் ஒளி வீசுவதாயிருக்கும்.

## ஆசிரியரின் பங்கு

ஒவ்வொரு நாட்டிலும் ஆசிரியரது வாண்மை என்பது மிக்க பொறுப்பு வாய்ந்தது. ஆசிரியர் சத்திய வழியிலே செல்லாது விடுவாராயின் முழுச்சமுதாயமுமே அல்லலுறும். ஆகவே வாழ்க்கையைச் செம்மைப்பட நடத்துவதற்கு ஆசிரியராகிய நீங்கள் ஒவ்வொரு முயற்சியையும் எடுத்தல் வேண்டும். பிள்ளைகள் உலகு பற்றியும் அதன் வழி முறைகள் பற்றியும் அறியாத அப்பாவிகளாயிருக்கின்றனர். அவர்கள் உங்களுடைய பொறுப்பில் உங்கள் வழிகாட்டலில் விடப்பட்டுள்ளார்கள். ஆசிரியர் தாம் ஒழுக்கமுள்ளவர்களாகவும் நல்ல பழக்கங்களைப் பின்பற்றுபவராகவும் இருக்கும் பட்சத்தில் அவரது மாணவர்களும் இலட்சிய மனிதர்களாயும், பிரஜைகளாயும் தம்மை ஆக்கிக் கொள்ள முடியும். ஆசிரியர்கள் கெட்ட பழக்கங்களில் வீழ்ந்தால் கெட்டசகவாசம், கெட்ட நடத்தை முதலியவற்றைக் கொண்டிருந்தால் மாணவரும் இயற்கையாக கெட்ட வழிகளுக்கு இழுக்கப்படுவர். மாணவர்களுக்கு முன்பாக ஆசிரியர் ஒரு கெட்ட எடுத்துக் காட்டை முன்வைத்தால், மாணவரும் ஆசிரியருக்கு எதிராகத் திரும்புவார்கள். ஆசிரியரிடமிருந்து கற்றதை அவருக்கு எதிராகப் பிரயோகிப்பார்கள். ஆகவே உலகை உய்வித்து மேம்படுத்துதல் அல்லது அழிவை உண்டாக்குதல் என்பவற்றுக்கிடையே பொறுப்பை ஏற்றல் ஆசிரியருக்குரியது. எப்படி இருப்பினும் இன்று சில ஆசிரியர்கள் பண்டைய இலட்சியங்களைப் பின்பற்றி வரும் நற்பணியையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

உங்களுடைய பாடசாலைகளில் உள்ள பிள்ளைகளை இலட்சிய மாணவராக்கும் பணி உங்களுக்குத் தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு கிராமப் பாடசாலையும் குருகுலமாக மாற்றப்படல் வேண்டும். ஒவ்வொரு ஆசிரியரும் ஒரு ரிஷியாக மாற்றப்படல்வேண்டும். மாணவர்கள் இலட்சிய பிரஜைகளாக நாளாந்த வாழ்க்கைக்குரிய சிறப்பார்ந்த இயல்புகளையும் கொண்டிருக்க முடியும். வித்யா இவற்றை மனித முன்னேற்றத்துக்குரிய வகையில் இதயத்திலே ஆழ வேரூன்ற வைக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வித்யா என்ற உண்மைக் கல்வி**

உண்மைக்கல்வி என்பது மனிதனது உள்ளத்துக்கும், அறிவாற்றலுக்கும் ஆலோசனை, நெறிப்படுத்தல் வழங்கித் தூய (சத்விக) இன்பத்தை ஈட்டுவதற்கு அழைத்துச் செல்வதாகும். முழுவேகமான முயற்சியினால் மட்டுமே இதனை அடைய முடியும். ''மகிழ்ச்சியால் மகிழ்ச்சியைத் திரட்டிக் கொள்ள முடியாது'' என்று இறை எழுத்தாக்கங்கள் பிரகடனப்படுத்துகின்றன. துன்பத்தினூடாகச் செல்வதன் வழியாக மட்டுமே இன்பத்தைப் பெற முடியும். வித்யா அல்லது உண்மைக்கல்வி வழியாக இந்த உண்மையை மனத்திலே ஆழப் பதித்தல் வேண்டும்.

பலகோடி துறைகளில் நீங்கள் ஆற்றல் பெற்றிருக்கலாம். ஆனால் நீங்கள் பற்றற்ற மனோ பாவத்தை வளர்த்தெடுக்க வேண்டும் பிறரோடு பகிர்ந்து கொள்வது, பிறருக்குச் சேவை செய்வது என்பவை வித்யாவின் பிரதான நோக்கங்களாகும். இதுவே உண்மையான வெளிப்பாடுமாகும். கல்வியால் வழங்கப்படும் சேவை அளவிடமுடியாததாயிருக்கும் பட்சத்தில் அது பெருமை வாய்ந்த பணியைச் செய்தது என்று கருதப்பட்டது. குறுகிய சுயநலப் பெறுகைகள் சிறிதுமின்றிச் சேவையை வழங்குதல் வேண்டும். அதுமட்டும் போதாது சேவைக்குப் பதிலாக யாதாயினும் பெற்றுக் கொள்ளலாம் என்ற வகையில் சேவைக்குரிய சிந்தனை இருத்தலாகாது. மரங்கள் தங்களது பழங்களைத் தாங்களே சாப்பிடாது பிறருக்கு வழங்குகின்றன இது துறவு நிலை மனோ பாவத்தை வெளிப்படுத்தும். நதிகளும் அவ்வாறே தாம் கொண்டு செல்லும் நீரைப் பருகாது. பிறருக்குத் தாகசாந்தி செய்கின்றன. கொடிய வெப்பத்தினால் பிறர் வாடுவதைத் தணித்துக் குளிர் தருகின்றது. தமது கன்றுகளுக்கென்றே தயார் படுத்திய பாலை பசுக்கள் பிறருக்குத் தருகின்றன. துறவின் விளைவாக எழுந்த தாராண்மை மனப்பக்குவம் பிறருக்குப் பகிர்ந்தளித்தலை ஏற்படுத்துகின்றது. அவ்வாறே ஞானத்தைப் பெற்றவர்கள் சுயநல விருப்பத்தைக் கொள்ளாது சேவை என்ற ஒழுங்கான நோக்கிலே பிறருக்கு வழங்குதல் வேண்டும்.

அந்த ஆற்றலானது செல்வச் செழிப்பை வழங்குகின்றது. செல்வச் செழிப்பை அடைந்த ஒருவர் அறக்கொடையிலும் தருமத்திலும் ஈடுபடும் ஆற்றலைக் கொண்டிருப்பார். தர்மம் இப்போதும் இனிமேலும் மகிழ்ச்சியை வழங்கும்.

**புத்தக் அறிவ மட்டுமல்ல**

ஒருவர் வாழ்க்கை முழுவதையும் புத்தகங்கள் கற்பதில் ஈடுபடுத்தியதன் வாயிலாக நுண்மதித் திறன் கொண்டவராக வந்தாலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாவை விருத்தி செய்வதில் சிறிதளவேனும் முன்னேற்றம் பெற முடியாது. நுண்மதியில் ஒருவர் உச்சநிலையை அடைந்து விட்டால் தெய்வீகத் துறையின் உச்சியை அவர் அடைந்து விட முடியும் என்று கருதுவது உத்தரவாதமற்ற வேண்டுதலாகும். காரணம், விளைவு என்பவற்றுக்கிடையே தொடர்பு இருத்தல் போன்று புலமைக்கும் பண்பட்ட நெறிக்குமிடையே தொடர்பு இருக்க மாட்டாது. எவ்வாறாயினும் உலக அறிவைக் கற்ற ஒருவரது உள்ளம் பண்படுத்தப்படாவிடில் அவரது கல்வியானது பயனற்று விடும் கல்வி அமைப்பானது பண்படும் உள்ளத்தைக் கற்பித்து, அறிவைத் தூய்மைப்படுத்தவும் வளப்படுத்தவும் வல்ல ஆற்றலைத் தருமாயின் அது சிறந்ததாகவும் பயனுள்ளதாகவும் இருக்கும்.

புத்தக அறிவால் அல்லது சமய உணர்வு சாராத அறிவால் ஒருவரது நுண்மதியாற்றல், விரிவாக்கவும் கூராக்கவும் படலாம் தெய்விகப் பாடங்களில் வியத்தகு உரையாடலை வெளிப்படுத்தலாம். ஆனால் அந்த அளவுக்கு அவரது தெய்விக வாழ்க்கை முன்னேறி விட மாட்டாது. கற்பிக்கும் பாடம் உள்ளத்தைச் சென்றடையாமலும் நிலை மாற்றத்தை உண்டாக்காமலும் விடலாம். இதனால் தான் தெய்வீகச் செறிவுடன் வளம் செய்யாத கல்வி பயனற்றதாகிவிடும்.

## அன்புக்குரிய விதி

இந்த உலகத்தை ஒரே ஒரு விதியே வழிப்படுத்தியும், பாதுகாத்தும் வருகின்றது. அதுவே அன்புக்குரிய விதி. இந்தச் செயல் முறையிலிருந்தே ஒவ்வொரு தேசமும், சமுதாயமும் இன்பத்தை அல்லது துர்கத்தை, நல்ல வாழ்க்கையை அல்லது கெட்ட வாழ்க்கையைப் பெற்றுக் கொள்கின்றன. ''கெட்டது'' என்பது ''நல்லது'' என்பதன் மறுதலையானதாகும். எவற்றைத் தவிர்க்க வேண்டும் என அது எங்களுக்குக் கற்பிக்கின்றது. எல்லா நேரமும் கெட்டதாக அமையமாட்டாது. அது எப்பொழுதும் குறுகியதாக இருக்கும். முற்றிலும் விடுபட முடியாத நிலையில் ''கெட்டது'' அல்லது ''நல்லது', இருப்பதில்லை. மனிதரது மனத்தின் நல்ல உணர்வு கெட்ட உணர்வு என்பவற்றின் தாக்கங்களின் விளைவாகவே நல்லதும் கெட்டதும் உண்டாவதை உண்மையான கல்வி தெளிவுபடுத்தும்.

## ஒழுக்கம் அத்தியாவசியமானது

மனிதன் மிகவும் நன்மைதரக் கூடிய வழியில் இந்த உலகில் எவ்வாறு வாழலாம்? இதற்கு விடையாக அமைவது நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட ஒழுக்கமான வாழ்க்கையாகும். உண்மையான கல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த எல்லைகளுக்குட்பட்டதாக அமைதல் வேண்டும். உலக அறிவை திறனுடன் கற்றுக் கொள்வதற்காக நாங்கள் அதிக முயற்சி எடுத்துள்ளோம். துன்பமும் அடைந்துள்ளோம். உள்ளத்து ஆற்றலை வளர்க்க மிகவும் கட்டுப்பாடான கவனத்தையும், கிரமமான செயல்களையும் பின்பற்றியுள்ளோம். எத்தகைய ஒரு இலக்காக இருப்பினும் யாம் அதனை அடைவதற்குப் பொருத்தமான ஒழுக்கக் கோவைக்குக் கட்டுப்படுகின்றோம்.

அவ்வாறு ஒழுங்கு முறையில் அமைந்த சிந்தனைக்கும் ஒழுக்கத்துக்கும் கிடைத்த நன்மை என்ன? சட்டமும் ஒழுங்கு முறைகளும் முதற்கண் அடிப்படையாக விளங்குகின்றன. ஒருவரது மனத்தையும் கடந்த ஆளுகைகள் பற்றி அவை தெரியப்படுத்த உதவுகின்றன மனிதனிடத்தே பொதிந்துள்ள உடல் ஆற்றலானது அடையப்பட முடியாத எல்லைகளுக்குச் செல்வதற்கான திறன்களை தருகின்றது. இறுதியில் ஒருவர் சத்தியத்தின் சத்தியத்தை அறியவும் அனுபவிக்கவும் முடிகின்றது. அது எதுவென்று சொல்லப் போனால், அதுவே எல்லோரிடத்தும் உடனடியாகக் காணப்படுவதும் அனைத்துப் பிரபஞ்சங்களிலும் காணப்படும் பரம் பொருளாகும். இந்த நம்பிக்கையிலும் உணர்விலும் ஒருவர் ஈடுபடும் பொழுது அவர் மிக மேலான இன்பத்தில் நிறைந்திருக்க முடியும். இதுவே ''வித்யா'' அதாவது உண்மைக் கல்வியைப் பெறுதலும், கல்விச்செயல்முறையின் திரட்டுதலுமாகும் இந்தச் செயல் முறையினூடாக சமூகத்தை அர்த்தமாக வழி நடத்தவும், மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையே விரும்பத்தக்க ஒன்றிணைப்பை ஏற்படுத்தவும் முடியும். மேலும் மக்களிடையேயும் இனங்களுக்கிடையேயும் நாடுகளுக்கிடையேயும், சமுதாயங்களுக்கிடையேயும் மிகுந்த நன்மையைப் பெற முடியும்.

## நலக்குறைவுக்குக் கல்வியே காரணமாகும்

இன்றைய கல்வி முறை அதிக பணச் செலவு உடையதாயும், விரிவானதாயும் இருக்கின்ற வேளை, போதனையில் அறவொழுக்கங்களைப் புறக்கணித்து விடுகின்றது. பண்டைக்காலத்துக் குருகுலக் கல்வி நிலையங்கள் தர்மம், நன்னடத்தை ஆகியவற்றிலே போதனைகளை வழங்கின. அற்றை நாளில் மாணவர் பணிவுடன் வாழவும் புலக்கட்டுப்பாடு, நேர்மை, நல்லொழுக்கம் முதலியவற்றைக் கடைப்பிடிக்கவும் பயிற்சியளிக்கப்பட்டார்கள். இன்று இத்தகைய பண்புகளை மாணவரிடத்துக் கண்டறிய முடியாதுள்ளது. புலன் கட்டுப்பாடு தொடர்பான கருத்தையோ வழி முறைகளையோ அவர்கள் அறியாதிருக்கின்றனர். குழந்தை நிலையிலிருந்தே ஒவ்வொரு கேளிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்புக்களிலும் விருப்பம் காட்டுகின்றனர். புலன்கள் தழுவிய சுயாதீனமான விளையாட்டுக்களிலே மகிழ்ச்சியடைகின்றனர். அத்துடன் பொருள் முதல் வாதத்தில் நம்பிக்கை கொள்ளுகின்றனர். கல்லூரி நிலவரங்களை ஒருவர் இன்று ஆழ்ந்து நோக்கும்பொழுது எச்சரிக்கைகொள்ள வேண்டியுள்ளது, கல்கத்தா பல்கலைக்கழகத்திலுள்ள ஒவ்வொரு 100 மாணவர்களிலும் 80 பேர் மிகவும் குறைந்த உடல் நலம் உள்ளவர்களென நலவியல் துறைத்தலைவர் கண்டறிந்துள்ளார். பம்பாய் பிரதேசத்தில் இந்நிலை மேலும் மோசமாக இருக்கின்றது. இங்கு ஒவ்வொரு 100 பேருக்கும் 90 பேர் மிகவும் குறைந்த உடல் நலமுள்ளோராயிருக்கின்றனர், கட்டுப்படுத்த முடியாது பின் தொடர்ந்து செல்லும் புலன்சார் மகிழ்ச்சிலும் கெட்ட பழக்கங்களிலும் மாணவர் ஈடுபடுகின்றனர். கல்வியின் நன்மைகள் என்று இவற்றைக் கூறமுடியுமா? அல்லது மூர்க்கத்தனமான அறியாமையின் வழியாகத் திரண்டெழுந்த ''செல்வம்'' என்று கூறுவதா?

ஒருவரது புலன் உணர்வுகளைக் கட்டுப்படுத்தாது வாழ்ந்த வாழ்க்கை உயர்வாகக் கருதப்படமாட்டாது. மனிதன் பல்வேறு ஆற்றல்களை அறக்கொடையாகப் பெற்றுள்ளான். அவற்றைப் பயன்படுத்தித் தனது புலன்களைக் கட்டுப்படுத்தவும் உரிய முறையில் நெறிப்படுத்தவும் முனையாவிட்டால் அவன் உயிருடன் வாழும் காலப்பகுதி வீணடிக்கப்பட்டதாவே கருதப்படும். ''வித்யா'' அல்லது பெறுமதிமிக்க கல்வி இந்தச் செயல் முறையில் வெற்றியைப் பெற உதவும், கல்வி, பணிவை முன்னேற்றம் பெறச் செய்கின்றது. பணிவின் ஊடாக ஒரு தொழிலில் ஈடுபடும் உரிமையை ஒருவர் பெற்றுக்கொள்ளுகின்றார்,

## நல்லொழுக்கத்தை வளர்த்தல்

கல்வி நிலையங்கள் தெய்வீக நோக்கை மாணவரிடையே வளர்த்தல் வேண்டும். மாணவர்கள் தெய்வீக விழுமியங்களைப் பெற்றுக் கொள்ளும்பொழுது, அவர்களுடைய இயல்புகளுக்கேற்றவாறு மனித மேம்பாட்டுக்கான விழுமியங்கள் வளர்ச்சியடையும். மனித மேம்பாட்டுக்கான விழுமியங்களை வெளியிலிருந்து ஒருவரின் உள்ளத்திலே வளர்க்கமுடியாது, அவை தனிமனிதருள்ளே இருக்கின்றன. உள்ளிருந்தே அவற்றை வெளித்துலக்க வேண்டும்.

மனித மேம்பாட்டுக்கான விழுமியங்கள் எல்லாரிட மிருக்கின்றன மனிதனில் உள்ளேயிருக்கும் விழுமியங்களை வெளிக்கொண்டு வருவதற்கான தூண்டிகளையும் உற்சாகத்தையும் வழங்கக்கூடியவர்களே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய நிலையில் தேவைப்படுகிறார்கள். ஒவ்வொருவரிடத்தும் உட்பொதிந்துள்ள இறையருள் ஒன்றாகவும் அனைவருக்கும் பொது வானதாகவும் இருக்கின்றது என்று உணரப்படுவதால் அனைவரிடத் தும் அதனை முன்னேற்றம் பெறச் செய்யலாம். அனைத்து மேம் பாட்டுக்கான விழுமியங்களும் ஒவ்வொரிடத்தும் இயல்பாகவே தளிர் விடும். மிகவுயர்ந்த ஆனந்தத்தை அனுபவிப்பதற்கு ஆன்மீக ஒரு மைப்பாடு பற்றிய உணர்வு அறிவுறுத்துகின்றது.

சத்தியத்தைக் கடைப்பிடிக்குமாறும் கடமைகளைத் தெய்வீக சேவையாகச் செய்யுமாறும் கல்வி நிறுவனங்கள் மாணவர்களுக்குக் கற்பித்தல் வேண்டும். தமது மனத்தைத் தகாத வழியில் இழுத்துச் செல்லக் கூடியவாறு வெற்றி அல்லது தோல்வியை மாணவரிடம் அனுமதிக்கலாகாது. உற்சாகமும் சுயநம்பிக்கையும் நிலை நிறுத்தப் படல் வேண்டும்.

''சிறு கிளையை வளைத்து மரத்தை வளையுங்கள்'' என்று முதுமொழி கூறுகின்றது. மிகவும் குழந்தை நிலையிருந்தே பிள்ளை களிடத்து ஒழுக்கத்தை உருவாக்கி வரத் தொடங்கல் வேண்டும். ஆரம்பப் பாடசாலையிலிருந்தே மனித மேம்பாட்டுக்கான விழுமியங் களை வளர்க்கத் தொடங்க வேண்டும், 'சமயம் சாராத அரசியல் வாழ்தல்'' என்பது பற்றிச் சிலர் எண்ணத் தொடங்குகின்றார்கள் ''சமயம் சாராமை'' என்பது அனைத்துச் சமயங்களுக்கும் நம்பிக் கைகளுக்கும் சமமான மரியாதை கொடுத்தலைக் கருத்தாகக் கொள் கின்றது எந்த ஒரு நம்பிக்கை மீதும் கசப்புணர்வு கொள்ளலா காது, வேறு சமயங்கள், நம்பிக்கைகள் ஆகியனவற்றைப் பாராட் டவோ ஏளனம் பண்ணவோ கூடாது.

## அறிவைத் தேடுபவர்கள்

கல்வியின் இறுதி இலக்கு ஒழுக்கம் அறிவின் இறுதி இலக்கு அன்பு. கல்வி என்பது வெறுமனே புத்தகத்திலுள்ள அறிவைத் தமக் குரியதாகப் பெற்றுக்கொள்வதன்று. நடைமுறைச் செயற்பாடுகளை இழந்து வெறும் புத்தக அறிவில் கவனம் செலுத்துவோமாயின் கல் விக்குரிய பெயரைக் கெடுத்துவிடுவோம். கல்வி என்பது பணிவுக்கு இட்டுச் செல்லல் வேண்டும். அது ஒருவருக்கு அனைத்துத் தகுதிக ளையும் வழங்கும். இந்தத் தகுதியானது ஒருவருக்கு பொருள்சார் செல்வத்தைக் கொடுக்கும். அந்தச் செல்வத்தைப் பயன்படுத்தி ஒரு வர் அறக் கொடைகளை மேற்கொள்ளலாம். அறக்கொடையானது உலகிலும் உலகம் கடந்த உயர் நிலைகளிலும் மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நாங்கள் எமது உரிமைகள் பற்றியும் பொறுப்புக்கள் பற்றியும் சிந்திக்கின்றோம். ஒரு புறம் தனியாள் சுதந்திரமும், அடிப் படை உரிமைகளும் இருக்கின்றன. மறுபுறம் எமக்குரிய பொறுப்புக் களும் நாம் செய்ய வேண்டிய கடமைகளும் இருக்கின்றன. எமக்குரிய தனியாள் சுதந்திரம் அதிகாரம் என்பவை பற்றி அதிக ஆவலாய் இருக்கின்றோம் என்பதில் சந்தேகமில்லை அத்தகைய ஒரு விகித அளவில் எமக்குரிய கடமைகளை எண்ணுவதில்லை. எமக்குரிய சமூகக் கடமைகளுக்கு நாம் முழுமையான நியாயப்பாடு வழங்கல் வேண்டும். அதன் வாயிலாக எமது நாட்டுக்கும் பண்பாட்டுக்கும் உரிய கீர்த்தியை நிலை நாட்டல் வேண்டும் பண்பாட்டு இயல்புகளுக்கு எமது கல்லூா ரிகள் போதிய அக்கறை காட்டுவதில்லை. இதன் காரணமாக உலகெங்கிலும் ஆயிரக்கணக்கான கல்லூரிகள் இருந்த போதும் சிறப்பார்ந்த இலக்குகள் கொண்ட சத்தியசாயி கல்லூரிகளை அமைத்தல் இன்றைய நிலையில் அவசியமாகின்றது.

பட்டங்கள் பெறுபவர்கள் தங்களுடைய பட்டங்களைப் பிச்சைப் பாத்திரங்கள்போன்று ஏந்திச் சென்று தொழில் பெறுவதற்காக, வாயி லுக்குவாயில் செல்லும் பட்டதாரிகளை உருவாக்கும் நோக்கத்தை சத்தியசாயி கல்லூரி கொண்டிருக்கவில்லை. சுய நம்பிக்கையாற்றலை வளர்த்தல், சமூகத்துக்கும், மனித சமுதாயப் பெருப்பகுதிக்கும் சேவை செய்யும் உணர்வை வளர்த்தல் ஆகியவற்றை முன்னெடுக்கும் நோக்குடன் இந்தக் கல்லூரிகள் அமைக்கப்பட்டுள்ளன. தண்ணீர் மீதுள்ள துளி போன்று மனிதன் தனித்து வாழ முடியாது. அவன் சமூகத்தினால் உருவாக்கப்பட்டவன். அவன் சமூகத்தில் வாழ வேண்டும். சமூகத்தோடு வாழ வேண்டும். சமூகத்துக்காகச் சேவை செய்யவும் வேண்டும்.

இந்தக் கல்வி முறையின் வழியாக உருவாக்கப்படுபவர்கள் எதுவித மேம்பாட்டு விழுமியங்களுமின்றி நாட்டின் நிர்வாகம், அதிகாரம் சார்ந்த பதவிகளுக்கு சென்று மிக வேகமாக உயர்ச்சி பெற்று விடுகின்றார்கள். உலகம் அழிவின் விளிம்புக்கு வந்துவிட்டது.

தனக்குரிய பயிற்சியைப் பெற்று முடிந்ததும் ஒரு மாணவன் ஒவ்வொரு அலுவலகக் கதவையும் தட்டித் திறந்து தான் பெற்ற சான்றிதழைக்காட்டி ஒரு பிச்சைக்காரன் போன்று தொழிற் பிச்சை கேட்டும் நிலையில் அதனை ஒரு வெற்றி என்று எவ்வாறு கூற முடியும் ? இவ்வாறு வெறுக்கத்தக்க ஒரு பாத்திரத்தையே கல்வி அவனுக்கு வழங்கியுள்ளது. இந்நிலையில் கல்வி தனக்கு உரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமைகளைச் செய்து விட்டது என்று கூற முடியுமா? இல்லை. கற்ற மனிதர்கள் இனிமையுடனும், பிரயாசையுடனும் மக்களுக்குச் சேவை செய்தல் வேண்டும். பிறருக்காகச் சேவை செய்யவும், தியாகம் செய்யவும், உதவி செய்யவும் கல்வி இளைஞர்களுக்கு உற்சாக மளித்தல் வேண்டும். பணம் சேகரிப்பதை இலக்காகவும், மேலும் மேலும் உழைப்பதற்குப் பிரயாணம் செய்வதையும் இளைஞர்களி டத்து நாம் தூண்டலாகாது. பணத்தைச் சேகரிக்க அது கர்வத்தை மேலும் மேலும் கொண்டு வருவதுடன், வேறு துர்க்குணங்களையும் தொடரச் செய்யும்.

இன்றைய கல்வி நிறுவனங்கள் இவ்வாறான முறைகளிலே மாணவர்களுக்குக் கற்பிக்காது, நல்ல இலக்குகளை அடைவதற்குத் தூண்ட வேண்டும். பொருள் சார்ந்ததும், ஆன்மிகம் சாராததுமான கற்பித்தலைக் கல்வி வலுப்படுத்தல் ஆகாது. இத்தகைய ஒரு நிலை ஏற்படுத்தும் பொழுது தான் ஒருவன் தனக்குரிய யதார்தமாகிய கடவுளாக பரிணமிப்பான்.

## அன்பே ஒன்றிணைக்கின்றது

கல்வி பணிவை ஒருவருக்கு வழங்குகின்றது. அது ஒருவருக்குக் கட்டுப்படுத்தும் ஆற்றலை அறக்கொடையாக தருகின்றது. அது செல்வாக்கை ஏற்படுத்துகின்றது. இந்தச் செல்வாக்கின் உதவியுடன் தருமம், இரக்கம், என்பவற்றை நிறைவு படுத்தலாம் இந்த வழியி னூடாக இவ்வையகத்தில் முதலில் மகிழ்ச்சியையும் பின்னர் சாந்தி யையும் வென்றெடுக்க முடியும். மனித குலத்துக்குரிய மிகப்பெரிய நிர்மாண வலுவாகக் கல்வி அமைகின்றது. ஆனால் கல்வியைச் சீர் திருத்தியமைத்தோரும் புனர்நிர்மாணம் செய்தோரும் கல்விச் செய லமைப்பிலே தெய்வீகப் பண்பைக் கருத்திற் கொண்டிலர். கல்விச் செயலமைப்பின் வினைத்திறனும் அது வழங்கும் ஆசீர்வாதமும் புறக்கணிக்கப்பட்டு, புறவுலகின் தகவல்களைத் திரட்டுவதற்கான கலை என்ற பெயரை இன்று பெற்று விட்டது. இவை எல்லாவற் றுக்கும் மேலாக மனித இயல்பைத் தெய்வநிலைக்கு மாற்றும் பிரதான பணியை கல்வி இன்று கைவிட்டு விட்டது.

பண்டைய கல்வி இலக்குகளுக்கும் நவீனகல்வி நடைமுறைக் குமிடையே வேறுபாடுகள் பயங்கரமானவையாயுள்ளன. கல்வி பெற ஆர்வமுடையோனுக்கு இன்று கல்வி வழங்கல் மறுக்கப்படுகின்றது ஒரு மாணவன் கட்டணத்தைக் கொடுக்கத் தவறினால், தான் கற்பிக்க வேண்டிய கடமை இல்லை என்று ஆசிரியர் எண்ணுகின்றார். சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயங்களில் அவருக்குச் சம்பளமும் கொடுக்கப்படுவதில்லை கற்பதற்குரிய பணத்தையே மாணவர் கொடுக்கின்றனர். தாம் கற்பித்ததற்குரிய கட்டணத்தையே ஆசிரியர் பெறுகின்றார். பணம் தான் இங்கு எதைக் கற்பிப்பது, எவ்வாறு கற்பது என்பதைத் தீர்மானிக்கின்றது. ''கொடு, பெறு, கொடுத்திருப்பதைப் பெறு'' இதுவே ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையே உள்ள இணைப்பு இந்தக் கொடுக்கல் வாங்கலில் அன்பு, மரியாதை, பாசம் என்பவற்றுக்கு இடமில்லை. அவ்வாறாயின் கல்வி எவ்வாறு பயனுடையதாயிருக்கும். ஆசிரியர் மாணவர் மீது அன்பு செலுத்தும் போது, ஆசிரியரைச் சூழவுள்ள மாணவரும் அவர் மீது அன்பை வெகுமதியாய் வழங்குவார். ஆனால் இதற்கு மாறான நிலை உண்டு. மாணவர் கொண்டுவரும் பணத்துக்காக ஆசிரியர் அன்பு வழங்குதலால் அந்தத் தொடர்பு வெறும் செயற்கையானதாகவும், பணம் உள்ளத்திலே ஆழ வேரூன்றியதாகவும் காணப்படுகின்றது. வெகுமதியின்றி அன்பால் ஆசிரியரும் மாணவரும் பிணைக்கப்பட்டிருக்கும் பொழுது மட்டுமே அவர்களால் மகிழ்ச்சியில் ஆழ்ந்திருக்க முடியும். பணஇலாபமே குறிக்கோளாகக் கொள்ளப்படுமாயின், மகிழ்ச்சியானது பொருள்சார் மகிழ்ச்சியாக இருக்குமேயன்றி உள்ளத்துக்கு உற்சாகமூட்டும் மகிழ்ச்சியாக இருக்க மாட்டாது. பொருள்சார் மகிழ்ச்சி தூய்மையானதாயிராது, உண்மையானதாயுமிராது.

## நிலை மாற்றம் தராத கல்வி

பல்வேறு அறிவுத்துறைகளில் நாங்கள் அதீத முன்னேற்றத்தை அடைந்துள்ளோம். கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல் விஞ்ஞானம் என்று முன்னேற்றமடைந்த துறைகளைக் குறிப்பிடலாம். எமது அறிவு சடப்பொருள், தாவரங்கள், வாழும் உயிரினங்கள் என்பவற்றைக் கற்பதுடன் முடிவடைந்து விடுகின்றது. கல்வி இவற்றையும் கடந்து இறைவனைப் பற்றிய விளக்கத்தைப் பெறும் வகையிலே செல்லல் வேண்டும். இதுவே உண்மைக்கல்வி மனிதனை இலட்சியப் பாங்கானவனாகவும், எடுத்துக்காட்டாளனாகவும் ஆக்கும் பணி கல்விக்குரியது. வியத்தகு கண்டுபிடிப்புகள் பல காலமாக ஏற்பட்டுள்ளன. மிகப் பெரும் விஞ்ஞானிகள் உருவாக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் மனித மேம்பாட்டுக்கான விழுமியங்கள் எவ்வளவு தூரம் வளர்த்தெடுக்கப்பட்டுள்ளன. மனித குலத்தில் என்ன நிலை மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது? இந்தக் கேள்விகளுக்கு விடை இல்லை.

கல்விச் செயல் முறையின் ஒன்றிணைந்த பகுதியாக மனித மேம்பாட்டுக்கான விழுமியங்களை முன்னெடுத்தல் வேண்டும். மனித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேம்பாட்டுக்கான விழுமியங்களைக் கற்காத மாணவர்கள் இன்று துர் நடத்தைகளில் ஈடுபடுகின்றார்கள்.

## விஞ்ஞானமும் தெய்வீகப்பண்பும்

இன்று கல்வி நிறுவனங்கள் எண்ணிக்கையில் வளர்ச்சியடைந்து வருகின்றன. ஆனால் கற்றவர்களிடையே பரந்த நோக்கு இல்லை. கல்வி மக்களின் தரிசனத்தை விசாலிக்கவும், விரிவாக்கவும் உதவுதல் வேண்டும். நாட்டின் நல்வியல்போடு தமது நலனும் பின்னிப் பிணைந் துள்ளமை ஒவ்வொருவராலும் அறியப்படல் வேண்டும். தமது பண் பாடு பற்றியும் தெய்வீகச் செல்வம் பற்றியும் ஒவ்வொருவரும் பெருமைப்படல் வேண்டும். தெய்வீக அறிவும் விஞ்ஞான அறிவும், ஒன்றிணைந்து செல்லல் வேண்டும். விஞ்ஞானத்துக்கும் தெய்வீகத் திற்குமிடையே இருமைப்படத் தக்க பிளவு இருத்தலாகாது. விஞ்ஞா னத்தையும் தெய்வீகத்தையும் ஒன்றிணைக்கும் பொழுது தான் உண்மைமான ஆனந்தம் அனுபவிக்கப்படும். கெட்ட எண்ணங்கள், கெட்ட விருப்பங்கள் ஆகியவற்றிலிருந்து மக்கள் விடுபடுவதற்கு விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவற்றின் வளர்ச்சி மட்டும் உதவமாட்டா. ஏனெனில் வாழ்க்கையை மேம் படுத்துவதற்கு விஞ்ஞானம் மட்டும் போதுமானதன்று. தெய்வீகம் மட்டுமே அறவிழுமியங்கள், விட்டுக் கொடுக்கும் பொறுமை, சமநிலையான மனப்போக்கு முதலியவற்றை வழங்கும்.

## அடிப்படையான தூண்

இன்றைய உலகில் நிலவும் முரண்பாடுகள் குழப்பங்கள் எங்பவற் றுக்கு அடிப்படையாகயுள்ள காரணி யாது? கல்வியை வழங்கும் நிறுவனங்கள் வியத்தகு திறன்களை வழங்குதலிலே வெற்றி கண்டுள்ளன. அணு எந்திரவியல் மற்றும் விண்வெளி ஆய்வும் கண்டுபிடிப்பும் போன்ற துறைகளைப் பாருங்கள். மனிதன் வியத்தகு சாதனைகளை நிலை நாட்டி விட்டான். ஆனால் நிஜமான நாளாந்த வாழ்க்கையில் இந்தச் சாதனைகள் அமைதி, மகிழ்ச்சி, ஒத்திசைவு ஆகியவற்றை ஏற்படுத்தவில்லை. சாதி, இன, வகுப்பு என்பவற்றுக்கிடையே ஒருவரை ஒருவர் வெறுக்கும் சண்டைகள் நிகழுகின்றன. மாணவர்களும், இளைஞர்களும் கூட இந்தப் பயங்கரமான செயல்களில் ஈடுபடுகின் றார்கள். இந் நிலையானது, எமது கட்டுப்பாடுகளுக்கு அப்பாற் பட்டதாக விரைந்து செல்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக் கூடங்களிலும் கல்லூரிகளிலுமுள்ள மாணவர் எண்ணிக்கை விரைந்து அதிகரிக்கின்றது நீண்டகாலமாக வாய்ப்பு வசதிகள் கொண்ட புத்தி ஜீவிகளுக்கும், செல்வந்தர்களுடைய பிள்ளைகளாகவிருக்கும், ஒரு சிலருக்காகவும் இருந்த முறைக் கல்வியானது இன்று ஒவ்வொருவருக்கும் கிடைக்கின்றது என நாங்கள் பிரகடனம் செய்கின்றோம். ஆனால் கல்விக்குரிய வசதிகளை விரிவாக்கியவர்கள் கல்வியின் இலக்குகள் எவ்வாறு அடையப்பட்டுள்ளன என்பதை பரிசீலித்தல் வேண்டும்.

உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டிலும் பாடசாலைகளும், கல்லூரிகளும் மேலும் மேலும் அதிகரித்து வருவதையிட்டு மகிழ்ச்சி கொள்ளும் வேளை, அவற்றினூடாக சமுதாய நோய் மேலும் மோசமடைந்து வருதலை உணர்ந்து கொள்வதில்லை. பொருத்தமற்றதும், பூரணத்துவமற்றதுமான கல்வியினால் அமைதியின்மை, பயம், பதகளிப்பு போன்றவை அதிகரித்த வண்ணம் உள்ளன. தொழில் நுட்பத்திறன், புறநிலைத் தகவல்கள், என்பவற்றுடன் அளக்கருத்துக்கள் தர்மம், ஆன்மிக தரிசனம் முதலியவற்றை மாணவர்களிடத்து வளர்க்கும் பொழுதுதான் கல்வி சாந்தியையும், சுபீட்சத்தையும் தரும். விழுமியங்களை இன்றைய கல்வி முறை உள்ளடக்கவில்லை. இந்த விழுமியங்களுக்கு எதிராகவும் கல்வி தொழிற்படுகின்றது. தர்மமான வழியில் வாழ்வதற்கு இது விருப்பமற்றதாக இருக்கின்றது. அறங்களை இது வலியுறுத்தவில்லை.

ஒன்றிணைந்த கல்விச் செயலமைப்பே குழந்தைகளுக்கு வேண்டப்படுகின்றது. இன்றைய கல்வியமைப்பானது சமூக, பொருளாதார அரசியல் துறைகளிலே திருப்தியின்மை, கிளர்ச்சி, முதலியவற்றை ஏற்படுத்துகின்றது. மாணவர் அமைதியின்மையின் எழுச்சியானது கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அண்மித்து விட்டது. இவ்வாறான கல்விச் செயல் முறைக்கூடாகச் செல்லும் மாணவரின் எண்ணிக்கை கட்டுக்கடங்காது பெருகுகின்றது. கிராமங்களில் ஆரம்ப பாடசாலைகளை நாங்கள் திறக்கின்றோம். இடைநிலைப் பாடசாலைகள், உயர்நிலைப் பாடசாலைகள், கல்லூரிகள் முதலியவை எல்லா இடங்களிலும் எழுப்பப்படுகின்றன. இவை முன்னேற்றமானதென்றும் அதிக மகிழ்ச்சி தருவதென்றும் நாங்கள் நம்புகின்றோம். கல்வியாற் பயன் பெறும் சந்தர்ப்பம் கடந்த காலத்தில் ஒரு சிலருக்கே உரியதாக இருந்தது. ஆனால் இன்று மிகவும் அபரிமிதமாக அனைவருக்கும் கல்வி வழங்கப்பட்டுள்ளது.

இனம், மதம், சாதி, நிறம், குலம் என்ற வேறுபாடின்றி ஒவ்வொரு மனிதனுக்கும் கல்வி கற்பிக்கப்படல் வேண்டும். நோயினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல் வீங்கும் ஒரு குழந்தையைக் கண்டு அதன் தாயார் தனது குழந்தை பலம் பெறுகின்றது என எண்ணும் நிலை போன்று நாங்களும் அளவிலும் எண்ணிக்கையிலும் ஏற்படும் அதிகரிப்பைக் கண்டு அது ஆரோக்கியமான ஒரு வளர்ச்சி என்று தவறாக எண்ணுகின்றோம். ஆனால் உண்மையில் நாங்கள் ஒரு நோயையே காணுகின்றோம். இது பலவீனம், பேராசை, பகைமை, பொறாமை முதலியவற்றை உண்டாக்குகின்றது.

இந்த நிறுவனங்கள் வழியாகக் கற்பிக்கப்படுவோர், அதிகாரமும் செல்வாக்குமுள்ள உத்தியோகங்களைப் பெற்றுக் கொள்கின்றார்கள். இதனால் உலகின் நிலமைகள் எவ்வாறு நன்றாக வரும்?

## பெறுதல் அல்லது கொடுத்தல்

சமிபாடு அடையாத உணவு உடலுக்கு நோயைக் கொண்டு வருகின்றது. அவ்வாறே இன்றைய கல்விச் செயலமைப்பால் வழங்கப்படுகின்ற சமிபாடு அடையாத அறிவு சமூக உறுப்பிலும், அரசியல் என்ற உடலிலும், பல்வேறு நோய்களை ஏற்படுத்துகின்றது. அந்த நோய் பரஸ்பர முரண்பாடுகளை வெளிப்படுத்தும் நேர்மாறான உணர்வுகளை வளர்க்கின்றது. கற்றவர்கள் உத்தியோகம் பெற்றவர்கள் மீது ஆத்திரமான மனவெழுச்சியை எதிர்த்தாக்கமாகக் காட்டுகின்றார்கள். தங்களுக்கு தொழில் கிடைக்காத விடத்து தொழில் பெற்றவர்கள் உறவினர்களின் சலுகையால் தொழில் பெற்றதாகக் குற்றம் சுமத்துகின்றார்கள். அதன் காரணமாக அவர்கள் ஆத்திரம், கோபம், வெறுப்பு, முதலியவற்றை வளர்க்கின்றார்கள். கல்விச் செயல் முறையே இன்று நிலவும் மனக்குறை ஆத்திரம் முதலியவற்றுக்கு அடிப்படைக் காரணமாகவுள்ளது.

மனித குலம் விஞ்ஞானம் தொழில் நுட்பம் ஆகிய துறைகளில் அளவிட முடியா முன்னேற்றத்தை அடைந்திருந்தாலும் மனிதரின் மனம் இன்னமும் அவா, பொறாமை முற்றும் முழுதான சுயநலம் என்பவற்றால் அசுத்தமாக்கப்பட்டு உள்ளது, சுயநல அகத்தின் இயல்புகள் மனித உள்ளங்களிலே ஆய்ந்து வேர் பாய்ச்சியுள்ளன. அவை கொடிய தேவதை போன்ற வடிவில் வளர்ந்துள்ளன. ஒவ்வொரு இழுவைக்கும் அசைகின்ற பொம்மையாக மனிதன் மாறிவிட்டான். தனக்கு நுகர்ச்சி இன்பம் தருகின்ற அனைத்துப் பொருள்களையும் செய்கின்றான். தனது புலன் வலுவுக்குத் திருப்தி தரத்தக்க பொருள்களை அவன் சேகரிக்கின்றான். ஒவ்வொரு பொருளையும் தனது சுயநலமான கண்ணோட்டத்தில் பரிசீலிக்கின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் காரணமாக அவன் பொறாமை, வரட்டுக்கௌரவம், பயம், சார்பு எண்ணம், என்ற கொடிய ஐந்துக்களுக்கு அடிமையாகி விடுகின்றான். உண்மை அறிவே மனித குலத்தை பாழ்பட்ட வீழ்ச்சியிலிருந்து மீட்டெடுக்க வல்லது.

## உயர்ந்த விழுமியங்களைக் கற்றல்

மிகவும் பரந்த விரிந்ததாகக் கல்வி இன்று வியாபித்துள்ளது. ஆனால் அதன் இருதயத்துள்ள மகிமை' இழக்கப்பட்டு விட்டது. அனைவருக்குமாக வாழ்தல் மிகவும் பெரிய சுமையாகிவிட்டது. ஆடம்பரம் என்ற பகட்டு மாணவர் உலகத்தில் மோஸ்தராக மேலோங்கியுள்ளது.

கல்வி என்பது உண்மையாக என்ன ? கல்விச் செயல் முறையின் வழியாக எதனை நாங்கள் கற்கவிருக்கின்றோம் ? கல்வியாளர்கள் என்ன இலக்கை வைத்துள்ளனர் ? இன்று கண்டறியப்பட்டுள்ள கல்வி முறையினூடாக யாம் என்ன பயன் பெற்றுள்ளோம் ? இந்த நான்கு பண்புகளிலும் முதற்கண் கவனஞ் செலுத்துதல் வேண்டும். ஒருவனது வாழ்க்கை அவன் மனத்தை வளர்த்தெடுத்த முறையின் மீது தங்கியதாக அமையும். இன்றைய பண்பாடு என்பது எந்தச் சிறப்பார்ந்த நிலை மாற்றத்தையும் கொண்டிருக்கவில்லை. அது ஒருவரது பழக்கவழக்கங்கள், மனோ பாவங்கள், என்பவற்றைக் கட்டுப்படுத்தி கடவுளின் பாதைக்கு அர்ப்பணிப்பதாக அமைய வேண்டும்.

சொற்களின் கருத்துக்களைக் கற்பதால் மட்டும் கல்வி முடிவடைந்து விடுவதில்லை. மனத்தின் கதவுகளைத் திறத்தல் வேண்டும். அதன் பொருள் யாதெனில் உணர்வு, உள்ளம், அகம், புலன்கள், காரணங் காணல் என்ற உள்ளார்ந்த கருவிகளைத் தூய்மைப்படுத்தலாகும். துரதிஷ்டவசமாக ஒருவனை வாழச்செய்வதற்கு வருமானம் தரும் ஒரு தொழிலைப் பெறுவதற்குரிய மட்டுப்படுத்தப்பட்ட சேவையையே கல்வி செய்கின்றது. உண்மைக் கல்வி சுயநலத்தின் அனைத்துக் கூறுகளையும் ஒழித்தல் வேண்டும், ஆனால் இன்று உண்மையாக நிகழ்வது யாதெனில் அன்பு (பிரேமை) அகற்றப்படுகின்றது. அதன் வழியாகக் கற்றவர்களது மனத்தில் மகிழ்ச்சி ( ஆனந்தம்) கிளம்புகின்றது என்பது போலியான ஆச்சரியச் செயல். கற்றவர்களிடத்தே பொறாமையின் சுவாலைகள் வளர்க்கப்படுகின்றன. மனிதனிடத்தே தெய்வீக ஒளி மூடி வைக்கப்படுகின்றது. புதிய கல்வியானது ஒழுக்கம், பணிவு ஆகிய உன்னதங்களை நிராகரிக்கின்றது. பெறுமானங்களற்ற விஞ்ஞானம், விருப்பமின்மையால் வழிநடத்தப்படும் செயல், திருப்தி தராத புலமை, மனிதர் மீது ஈடுபாடு கொள்ளாத மானுடம், இனிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவை பயக்காத சங்கீதம் ஆகிய இவை சுவாரஸ்யமற்றதும் துன்பமானவையுமாகும். அவை மனிதருக்கு நயப்பையும் மரியாதையையும் தூண்ட மாட்டா. ஆகவே நீங்கள் சுயநல விருப்புக்களைக் கைவிடல் வேண்டும்.

புலன்களின் இயக்கப்பாடுகளின் வழியாக அடையப்படாதிருக்கும் மனத்தை வெளிப்படுத்தும் உங்கள் உண்மையைத் துலக்கும் கடவுளை வெளிப்படுத்தும் சத்தியத்தை நீங்கள் வரவேற்க வேண்டும்.

ஒருவரது சுயமான பலத்திலே தங்கியிருத்தலுக்கான உற்சாக வழியைக் காட்டும் சுயநம்பிக்கையைக் கல்வி தருதல் வேண்டும். இன்று கல்விச் செயல் முறையின் வழியாக உருவாக்கப்படுபவர்கள் வலியமனம் கொண்டவர்களாக முகிழ்த்தெழுகின்றார்கள். குறைந்த அதிஷ்டத்துடன் பிறர் மீது அனுதாபம் காட்டலை மேம்படுத்தும் இலக்கினைக் கல்வி வைத்திருத்தல் வேண்டும். ஆனால் ஒருவரால் சம்பாதிக்கப்பட்ட அறிவும், திறன்களும் சுயநல முடிவுகளை நோக்கியே திசை திருப்பப்படுகின்றன. நித்திரையின்றித் தான் ஏன் இரவுகளைக் கழித்தார் என்பது பற்றி ஈன்ஸ்ரின் தமது நண்பர் ஒருவருக்கு விளக்கினார். காந்தியும் அதே காரணத்தை ஒரு வினாவின் பொழுது சொன்னார். ''கல்வியினூடாக உருவாக்கப்பட்ட கடினமான இதயம்'' என நண்பர் ஈன்ஸ்ரினுக்குக் கூறினார். ''ஆனால் அதே கல்வியின் பெறுபேறாகத் தானே நீங்கள் உருவாகி வந்தீர்கள்'' என்றார் நண்பர். அதற்கு ஈன்ஸ்ரின் கூறினார் ''நான் எவ்வாறு இருக்க வேண்டுமோ நான் அவ்வாறில்லை'' சுய முன்மையைப் பெறுவதற்கும் கர்வத்தை மேலோங்கச் செய்வதற்கும் வழியமைப்பதாகக் கல்வி மாறிவிட்டது.

மேலைத் தேயக் கல்வி முறை ஆழ்ந்து பதிந்துள்ளது. பண்பாடு என்பது கீழ் அமிழ்ந்தி விட்டது. குடும்ப உறவுகள் பெரிதும் நொய்ந்து விட்டன அரிய செல்வங்கள் வியர்த்தமாயின பகட்டான பேச்சும் உடையும் வசீகரமாயின. தாய்மொழியிலே பேசுதல் தவறானதென்று அவர்கள் எண்ணுகின்றார்கள். பாரம் பரியமான பாதையிலே செல்லுதல் நிதானமாக அடியொற்றிச் செல்லுதல் பேதமை என்று எண்ணுகிறார்கள், குருவுக்கு மரியாதை வழங்குதல் மலினமானது என்று எண்ணுகின்றார்கள்.

இந்த ஆபத்தான வளர்ச்சி பற்றி நாங்கள் எச்சரிக்கையாக இருப்பதுடன் எதிர் வரும் ஆண்டுகளில் எங்கள் நாட்டின் பெருஞ் சிறப்பை மீண்டும் நிலை நிறுத்துவதற்கு இளைய தலைமுறையினரைத் தயாரித்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய கல்வியானது துறவு நிலை, பற்றற்ற அன்பு, இரக்கம் முதலிய நற்குணங்களை மாணவருக்குக் கற்பிக்கவில்லை பணவருவாயே கல்வியின் நோக்கமாக இருத்தலாகாது.. பிறர்மீது தங்கியிருத்தலை விலக்கிக் கொள்ளல் வேண்டும். தன்மீது தங்கியிருத்தலே மிகப் பெரிய பேறாகும். தன்னுடைய நாட்டின் எதிர்காலம் பற்றிய நோக்கு ஒருவருக்கு இருத்தலுடன், பிறருக்கு ஓர் எடுத்துக் காட்டாக ஒருவன் தன்னை உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

சாயி வகுத்த நான்கு இலக்குகளாக சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை ஆகியவை அமைகின்றன. மனித குலம் இந்த நான்கு இலக்குகளினதும் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்ளல் வேண்டும். அவற்றை ஏற்று, அவற்றை வணங்கி நாளாந்த வாழ்க்கையிலே பின்பற்றல் வேண்டும். அப்பொழுது தான் மனிதனிடத்து மறைந்துள்ள தெய்வீகம் மகிமையுடன் வெளிவரும்.

கல்விச் செயல் முறையானது இந்த நான்கு கோட்பாடுகளையும் அடிப்படையாகக் கொள்ளல் வேண்டும். ஆனால் இது இன்னமும் ஏற்படவில்லை. அதன் காரணமாக பிரச்சினைகளுடன் கூடிய சுமையைக் காணுகின்றோம். இவற்றிடையே முரண்பாடுகளும், குழப்பங்களும் காணப்படுகின்றன. கற்ற மனிதர்களிடையே பணிவு, தாழ்மை, பகுத்துணரும் தன்மை, பிறருக்குச் சேவை செய்யும் விருப்பு, பயபக்தி, துறவு, ஆகிய சீரிய பண்புகள் இல்லை. விட்டுக் கொடுப்பதற்கு எவரும் தயார் நிலையில் இல்லை. பற்றிப் பிடிப்பதற்கே ஒவ்வொருவரும் அவாவுறுகின்றனர்.

மலர்கள், நூல், ஊசி என்பவை எம்மிடம் இருந்தால் மட்டுமே மாலை செய்யலாம். நுண்மதி (மலர்கள்) பயபக்தி (நூல்) துறவுக்கும் சேவைக்குமான ஊக்கல் (ஊசி) ஆகியவை இருந்தால் மட்டுமே கல்வி பயன் தருவதாய் அமையும்.

கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும் என்று கூறும் பொழுது, நீதிநெறி, அறம், ஆன்மிகத் தரம், என்பவற்றை உயர்த்துதலும் அதன் பொருளாகின்றது. அப்பொழுது தான் மனித மேம்பாடு. சமூக ஒத்திசைவு, ஆகியவற்றைக் கல்வி முன்னெடுத்துச் செல்ல முடியும்.

உறவு முறைகளைக் கண்டறிந்து அங்கீகரிக்கும் திறனை வழங்குதல் வேண்டும். ஆனால் மறுபுறத்தில் புலமையும், பண்டிதத்தனமும் பல்வேறு அதிசயங்களை உருவாக்குவதுடன் சாமர்த்தியத்தையும், சாகசங்களையும் தருவிக்கின்றன. இவ்வாறான விநோத சுழற்சிக்குள் கற்றவர்கள் வீழ்ந்து விடுகின்றார்கள். உண்மை அழகு உண்மைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியிடத்தே அமைந்துள்ளது. அத்தகைய ஒரு கல்வியே மறைந்த நிலையிலுள்ள பெருநிதியாகும்.

நாங்கள் வேற்று நாட்டில் இருக்கும் பொழுது கூட கல்வி எம்மோடு நெருங்கிய உறவினரைப் போன்று முன்னால், பின்னால், அருகே நின்று எம்மைப் பாதுகாக்கின்றது.

இந்தியாவில் இன்று நிலவும் கல்விச் செயல் முறையானது மக்களின் முன்னேற்றத்துக்கு எதிரியாகவுள்ளது. இந்த முறையானது மாணவரை நிலத்திற் கைகளைத் தோய விடாது வாழ்தலைக் கற்பிக்கின்றது. இந்தச் செயல் முறையானது மனிதப் பண்புக் கூறுகளைப் புறக்கணித்து விடுகின்றது அவ்வாறு செய்தல் சரியானதன்று. கல்வி என்பது இதயத்தை விரிவடையச் செய்வதையும் மனிதனது உள்ளார்ந்த நுண்மதி, திறன்கள் ஆகியவற்றை விழித்தெழச் செய்வதாகவும் உடலுழைப்பையும் களைத்து வேலை செய்வதையும் ஊக்கப்படுத்துவதாகவும் அமைதல் வேண்டும்.

இந்த இலட்சியங்களை அடையாவிடில் எவ்வாறு மனிதரிடத்து ஒளி வீச முடியும்? ''ஒழுக்கப் பண்புகளை வலியுறுத்தாத கல்வி ஆபத்தான ஒரு தீங்கு'' என்று காந்தி ஒரு சமயம் குறிப்பிட்டார். இன்று அறிவு காணப்படுகின்றது. ஆனால் ஒழுக்கத்தைக் காண்பது அரிதாகவுள்ளது. நடைமுறையானது வித்யாவை மேலோங்கச் செய்கிறது அனுபவமே ஆசான் (குரு). ஆனால் கட்டுலனாவதில்லை கற்பித்தல் பாடசாலையோடு முடிவடைகின்றது. ஆனால் கற்றல் என்பது வாழ்க்கை முடிவடையும் போது மட்டுமே நிறைவுறும். வித்யா என்பது பாடசாலைக்கோ, கல்விக்கோ வெறுமனே செல்வத்தைக் குறிப்பிடாது. வெறுமனே புத்தகத்தையோ, சில பாடங்களைக் கற்பதையோ குறிப்பிடாது.

கல்வியின் இலக்கு உணவுக்காக வாழ்வதன்று இலட்சியத்துக்காக வாழ்தலாகும். மனித ஆளுமையானது உற்சாகத்துடன் வேலை செய்யும் வளர்ச்சியுடன் மலர்ச்சி கொள்ளல் வேண்டும். சமுகத்தை மேல் நிலைக்கு உயர்த்தும் அவாவைத் தூண்டுதல் வேண்டும். ஒழுக்கமில்லாது விட்டால் மனிதன் அசையும் ஒவ்வொரு காற்றுக்கும் சலனப்படும் பொருளாகி விடுவான். கயிறறுந்த பட்டமாகி விடுவான். அல்லது ஒருவருக்கும் பயன்படாது சுற்றிச் சுழலும் போலியான நாணயமாகி விடுவான்.

யாதாயினும் அறிவுத்துறையில் ஒருவரது விருப்பம் ஆழப்பதியும் பொழுது அதிலே கவனம் வலுவடையும் மனத்தின்கண் நினைவுகள் வைக்கப்படும். பாழான மோஸ்தர்களுக்குப் பலியானவர்களாகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய மாணவர்கள் திரைப்பட நடிகர்களின் வாழ்க்கை தொடர்பான அற்ப விபரங்களை நினைவில் வைத்திருக்கின்றார்கள். மேலான அறிவுச் செல்வத்திற் பாண்டித்தியம் பெற உஷார் நிலையில் உள்ள விருப்பு அவசியமாகும்.

இன்றைய கல்வியானது ஒரு சிறந்த வாழ்க்கையை மேற்கொள்வதைக் காட்டிலும் ஒரு வாழ்க்கைக்கு உழைப்பதற்கே கூடிய அழுத்தத்தைக் கொடுக்கின்றது. ஒரு பட்டத்தைப் பெற்றவுடன் உடனடியாகப் பணத்துக்கு ஆசைப்பட்டு பிறநாடுகளுக்கு ஓடுகின்றனர். தூய்மையான எளிய வாழ்க்கையை நடத்துவதற்குரிய நல்லொழுக்கத்தை அடையச் செய்வதற்குரியவாறு கல்வி வடிவமைக்கப் படல் வேண்டும். ஆறுகள் வழிமறித்து அணைகட்டப்படுகின்றது. வெள்ளம் அணையிலே சேகரிக்கப்படுகின்றது. அங்கு நீர் சேகரிக்கப்படுவதால் நிலப்பயன் என்ன? அவை வயல்களுக்கு வாய்க்கால்கள் வழியாக எடுத்துச் செல்லப்பட்டுப் பயிர்களுக்கு வழங்கப்பட்டு இலட்சக்கணக்கான மக்களின் பசி சாந்தப்படுகின்றது. அவ்வாறே நூல்நிலையத்திலிருந்து பெறப்படும் அறிவை எமது தலை என்ற நீர்த்தேக்கத்திலே சேமித்து வைக்கின்றோம். ஆனால் அது போதுமானதா? அவற்றைச் சேவைகள் என்ற வாய்க்கால்கள் வழியாகப் பாய்ச்சி சமூகத்தில் உள்ள சகமனிதனது மனத்தை வளம்படுத்தி அவர்களை மேலும் நுண்ணறிவுள்ளவர்களாக்கவும், மேலும் திறன்களுள்ளவர்களாக்கவும், மேலும் அன்பு செலுத்துபவர்களாக்கவும் வேண்டும் அவ்வாறு செய்யும் பொழுது நாடு மேலும் வளமுள்ளதாகவும், மகிழ்ச்சியுள்ளதாகவும் மாறும்.

வித்யா அல்லது கல்வி என்பது ஒரு நோன்பு போன்றது. ஆனால் அது அலுப்புத் தரும் ஒரே சுழற்சியான செயலாகிவிட்டது. ஒரு நாட்டின் செல்வத்தையும் வறுமையையும் ஆசிரியரே தீர்மானிக்கின்றனர். அவர்களது தொழில் அதிக பொறுப்பு வாய்ந்தது. இந்தியா சுதந்திரம் அடைந்ததும், சுதந்திர இந்தியாவின் பிரதம மந்திரியாக இருப்பதிலும் பார்க்க ஓர் உயர் பாடசாலையின் ஆசிரியராக இருக்க விரும்புவதாக திலகர் பிரகடனம் செய்தார். மக்களுக்குரிய தலைவர்களைச் செதுக்கும் பணி ஆசிரியர்களுக்குரியது. ஆசிரியர்களின் அந்தஸ்து மிகவுயர்ந்தது. அவர்கள் அரசியலுக்குக் கீழ் இறங்கலாகாது. தூய்மையான, கள்ளங்கபடமற்ற பிஞ்சு உள்ளங் கொண்ட குழந்தைகளுக்கு அவர்கள் சேவை செய்தல் வேண்டும். அரசியல் சுயநலத்தை உற்பத்தி செய்கின்றது. ஆசிரியரின் பணி சுயநலமின்றி வாழ்தலும் இளைஞர்களிடத்து சுயநல மற்ற உணர்வை வளர்த்தலுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒழுக்கப் பயிற்சி**

கல்வி என்பது சொல்சார்ந்த திறன்களைப் பெறுதல் என்ற செயற்பாட்டோடு குழப்பப்பட்டு விட்டது. இது பிழையானது. உள்ளத்தின் கதவுகளைக் கல்வி திறந்து விடுதல் வேண்டும். விஞ்ஞானக் கல்வியைப் பெற்றுக்கொள்ளல் மிக்க வலிமை தரும் ஒரு செயல் என்று பலர் கூறுகின்றார்கள். ஆனால் மனித குலத்தின் முன்னர் மிகப் பெரிய சந்தர்ப்பத்தை விஞ்ஞானக்கல்வி வழங்கியுள்ளது அது மட்டும் தான் வியந்துரைக்கக் கூடியது. கற்பனை செய்து பார்க்குமளவுக்கு அது மிகப் பெரிய சக்தியைக் கொண்டிருக்கவில்லை. அது நற்குணவியல்புகளைக் கொண்டிருக்காதவிடத்து அநர்த்தங்களையே ஏற்படுத்தும். அந்நிலையில் அவை கெடுதல்களையும் தீய விளைவுகளையுமே ஏற்படுத்தும். கெட்டிக்காரக் கள்வர்களிடத்து அதியுயர்ந்த நுண்மதியாற்றல் காணப்படுகின்றது. அத்தகையவாறே விஞ்ஞான அறியும் அழிவு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப் பட்டுள்ளது.

மோட்சத்திலே பிரவேசிப்பதற்கு கள்ளங்கபடமற்ற குழந்தை போன்று மனிதர் தம்மை நிலை மாற்றிக் கொள்ளுதல் வேண்டும். இதுவே சுவர்க்கத்திலே பிரவேசிப்பதற்கு மனிதன் தன்னை சுயநலமற்ற பணிவுள்ள அறிவு தேடுவோனாக ஆக்கிக் கொள்ளல் வேண்டும். இது முன்னைய கருத்தைப் போன்று உண்மையானது. மனித வர்க்கம் சுயநல அகம், சுகத்தைத்தேடி அலைதல், பொறாமை என்ற சக்தியிலே சிக்குண்டுள்ளது. இவற்றின் விளைவாக துர்த்தேவதைகளின் களத்திலே அலைந்து திரிகின்றது. கல்வி என்பது வெறுமனே விஞ்ஞான அறிவைத் திரட்டுதல் மட்டுமன்று. மனித செயலிலே உயர்வுகளை கொடையாக வழங்குதல் வேண்டும். எப்படியும் எவ்வாறும் ஒரு செயலைச் செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தைச் செய்வதற்குப் போதனை வழங்குதல் வேண்டும். தனக்கும் பிறருக்குமிடையே நிலவும் எதிர்காலத்தில் இலாபகரமானதாயும் உள்ள அனுபவங்களை வழங்கி வழி காட்டல் வேண்டும். புத்தகங்களில் இருந்து பெற்ற அறிவை அனுபவங்களால் உறுதிப்படுத்திப் பார்ப்பதுடன் இந்தச் செயல் முறையின் வழியாக மேலும் மேலும் மானுடப்பண்புகளை வளர்த்து இறையருள் சுவாலிக்கும் நிலையை ஏற்படுத்தல் வேண்டும்.

நியாயமான எல்லைகளுக்கு அப்பாற்பட்ட செல்வமானது அவலத்தில் முடிவடையும். அவ்வாறே வரையறுக்கப்பட்ட எல்லையைத் தாண்டும் வெறும் புலமையானது பெருமிதத்தையும் போட்டி அவலங்களையும் தரும். அறிவுசார் தகவல் குறித்த அளவிலும் பண்பிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டப்பட்டாலும், அதற்குச் சமாந்தரமான முறையில் அற ஒழுக்கங்களையும் சுய உணர்வையும் விருத்தி செய்யாதுவிடும்பொழுது அந்தப் புலமையானது பாரமானதாயும், ஆபத்தானதாயும், அமைந்து விடுகின்றது. சமூக உணர்வுகளை வளர்த்தெடுத்தல் மிக முக்கிய மானது. ஒரு நீர்த்தடாகத்தில் விழுகின்ற கழிவு எண்ணெயைப் போன்று ஒருவர் வாழக் கற்றுக் கொள்ளக் கூடாது. அந்த எண்ணெய் நீர் மேல் முழுவதுமாகப் படர்ந்து எதையும் மிச்சமாக விட மாட்டாது. பொதுப்பணி ஒன்றில் சேரும் பொழுது ஆற்றல்களும் திறனும் ஒன்றிணைந்து ஒரு கூட்டாகத் திரள்கின்றது. ஒரு சிறிய நூல் எறும்பு போன்று வளைந்து நெளியமாட்டாது ஆனால் நூற்றுக் கணக்கான நூல்களை ஒன்றிணைத்து ஒரு கயிறாகத் திரித்தால் ஒரு யானையைக் கூடக் கட்டமுடியும். இதுவே கூட்டு நடவடிக்கையின் வினையாற்றலாகும். பொது இலக்குக்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்படும் பண்பு விரும்பத்தக்கதாகும். ஆனால் இன்று மக்கள் ஒடுக்கு முறையில் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

நீங்கள் சான்றிதழ்களைப் பெற்ற பின்னர் அவை உங்களிடத்து தன்னிச்சையான அகத்தையும் வளர்ப்பதுடன் உங்களுக்கும் பிறருக் குமுள்ள தூரத்தை அதிகரிப்பதால் மூளைக்கோளாறு தரும் இந்த நடவடிக்கையைக் கைவிடல் வேண்டும். பிறருக்கு சேவை செய்யும் விருப்பினை விருத்தி செய்யுங்கள். அவர்களுக்கு மேலும் சிறப்பாக சேவை செய்வதற்குரிய திறன்களை கல்வியினூடாகப் பெற்று உங்களை நிறைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

இந்தியப் பண்பாட்டினதும் ஆன்மிகச் சிறப்பினதும் விலை மதிக்க முடியாத செல்வத்தை இளைஞர்கள் அறிந்து கொள்வதற்கும், அவர் களிடத்திலுள்ள உள்ளார்ந்த சக்திகளை அருட்டி மேலோங்கச் செய்வதற்கும் கல்வி உற்சாக மளித்தல் வேண்டும். அவர்களுக்குள்ளே வலிமையான நித்திய அருவியாய் விளங்கும் சக்தியுள்ளது. ஆயினும் அவை — பலவீனம் ஆன தொடர்புகளாகவும் அறியாததாகவும் காணப்படுகின்றன. பொறுமை, விட்டுக்கொடுத்தல், சாந்தி, அடக்கம், அமைதி முதலியவை உள்ளத்திலே நாட்டப்படல் வேண்டும். சத்தியம், தர்மம், நல்வாழ்க்கைநெறி, பிரேமை, அகிம்சை ஆகிய பெரும் பேறுகள் ஒன்றெனத் திரளுதல் வேண்டும்.

கல்வி என்பது பணிவையும் ஒழுக்க நெறியையும் வளர்த்தல் வேண்டும். ஆனால் இன்று அது பெருமையையும், பொறாமையையும் உற்பத்தியாக்கித் தருகின்றது. வித்யா என்பதிலுள்ள ''வித்'' என்பது ஒளியாகும். ''யா'' என்பது தருதலைக் குறிக்கும். ஆகவே கல்வி அல்லது வித்யா என்பது மனத்திலும் நுண்மதிப்பரப்பிலுமுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரும்புள்ளிகள் மீது வெளிச்சத்தைப் பாய்ச்சி ஒளிரச் செய்தல் வேண்டும். புத்தக அறிவைமட்டும் இது குறிப்பிடுவதன்று. மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள உறவுமுறைகளுக்கு விளக்கமளிக்க வேண்டும். அவனுக்கும் இயற்கைக்குமுள்ள நெருங்கிய பிணைப்பையும் தெளிவுபடுத்துதல் வேண்டும். மனிதரது முன்னைய அனுபவங்களுக்குமிடையே அது ஒத்திசைவை ஏற்படுத்துவதுடன் சேவை செய்வதற்கும் சேவை மீது அனுதாபங் கொள்வதற்குமுரிய உந்தலை அவர்கள் புறக்கணித்து விடுகின்றார்கள். கல்வியானது ஞானம், நல்லொழுக்கம் என்பவற்றை உருவாக்கித் தரும் வகையில் பெறுபேறுகளைக் கொண்டிருத்தல் வேண்டும். கடின வாழ்க்கையை மேற் கொள்வதாலும் உறக்கமின்றி பலகாலம் கடின உழைப்பை மேற் கொள்வதாலும் மட்டுமே இதனைப் பெறமுடியும்.

இன்றைய கல்வியானது கற்றுச்செல்வோரை அவர்களது புலன்களுக்கு வெறுமனே அடிமைப்படுத்தி விடுகின்றது. அவ்வாறான அடிமைத்தனத்தை விலக்கிக் கொள்ள அவர்கள் அறியாதிருக்கின்றனர். கற்றவர்கள் பொறாமை, அவா, தன்னிச்சையான அகம், ஆகியவற்றைக் கொண்டுள்ளனர். கௌரவமான உழைப்புக்கு எடுத்துக்காட்டாளராகவும், ஒவ்வோர் இல்லத்திலும் அறிவுத் தீபத்தை ஏற்றி வைப்பவராகவும் இருத்தல் வேண்டும். இதுவே கற்றவர்களிடமிருந்து நாடு எதிர்பார்ப்பதும் வேண்டி நிற்பதுமாகும்.

இதனை யதார்த்தமாகப் பகுத்தாராயும் பொழுது, நீங்கள் குழப்பத்தையும், நிச்சயமற்ற தன்மையையும், தீர்மானிக்க முடியா அவலத்தையும் கல்விச் செயலமைப்பின் ஒவ்வொரு துறையிலும் கண்டு பிடிப்பீர்கள். இந்த மகிழ்ச்சி தராத நிலைக்குப் பரிகாரம் எமது பாரம்பரியமான கல்வி இலக்குகளையும் நடைமுறைகளையும் காலம், சூழல் மாற்றமடைந்த இன்றைய காலகட்டத்துக்குப் பொருந்தும் வண்ணம் சிறிது மாற்றியமைத்தல் வேண்டும். அந்த இலக்குகளும் நடைமுறைகளும் நித்தியமானதும் அவசியம் என்று கருதத்தக்கதுமான மேம்பாட்டு விழுமியங்களைக் கொண்டுள்ளன.

இன்றைய நிலையில் மனங்களின் ஐக்கியப்பாடு, இயற்கை அன்பு, கூட்டுறவு ஆகிய பண்புகளை நாங்கள் வளர்த்தெடுத்தல் வேண்டும். கல்வி என்பது பல்கலைக்கழகப் பட்டங்களைப் பெறுவதற்காக என்ற நிலை இருத்தலாகாது. மக்களை இலட்சியப் பாங்கானவர்களாக உருவாக்குவதற்கு உதவும் வகையிலே இலட்சிய மாணவர்களை ஆயிரக் கணக்கில் உருவாக்கும் அனைத்து முயற்சிகளையும் எமது கல்வி நிறுவகங்கள் மேற்கொள்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாயி சகாப்தத்திற் கல்வி

கல்வி என்பது இருள், ஒளி, என்பவற்றுக்கிடையே வேறுபாடு காணும் ஆற்றலை வழங்குதல் வேண்டும். ஆன்மிகம், அறம்சார்வலு என்ற உன்னதமான செல்வங்களை அது பாதுகாக்கவும் வளர்க்கவும் வேண்டும். உள்ளார்ந்த உந்தல்களைத் தூய்மைப்படுத்தவும் ஆன்மிக வெற்றியை ஏற்படுத்தவும் வேண்டும். வெறுமனே புத்தக அறிவு மட்டும் ''கற்றவன்'' என்று ஒருவனைச் சுட்டுவதற்குக் அமையாது உள்ளார்ந்த மனவெழுச்சிக் கருவிகளைப் பற்றிய உயர் அறிவு இல்லாது எந்த மனிதனையும் கற்றவன் என்ற மகுடத்திலே பேறுள்ளவனாக கூற முடியாது. உள்ளார்ந்த புனிதத்தை ஏற்படுத்தும் பொழுது தான் தெளிவு மேலோங்கும். புத்தகங்களிற் கற்றவற்றை ஏற்றுக் கொள்வதற்கும் சீர் தூக்கிப் பார்ப்பதற்கும் அனுபவம் அவசியம். இன்றைய கல்விச் செயலமைப்பில் இதற்கு உரிய அடையாளங்கள் எவற்றையும் யாம் கண்டிலோம். மனிதரிடத்துள்ள இறையை விழித்தெழச் செய்வதற்குரிய முயற்சிகள் இல்லை. உள்ளத்தின் மட்டத்தை உயர்த்துவதற்குரிய விழிப்புணர்ச்சி இயல்புகள் இல்லாதிருக்கின்றன.

இன்றைய கல்வி நிறுவனங்கலில் மாணவர் முன் வைக்கப்பட்டுள்ள இலட்சியங்களைப் பார்ப்போம். அவை ஆண்களையும் பெண்களையும் இயந்திரப்பாங்கான செயல் முறையினூடாக உருவாக்கி வெளியேற்றிக் கொண்டிருப்பதுடன் அந்த மண்ணில் கைகளால் வேலை செய்வதை மிகவும் வெறுக்கச் செய்யும் வகையிலே நடை உடை பாவனைகளும் அமைந்து விடுகின்றன. எதிலும் இலாப மீட்ட வேண்டும் என்ற அகவிருப்பத்தையே அவர்கள் புதைத்து வைத்திருக்கின்றார்கள்.

வானத்திலே ஒன்று இரண்டு செறிந்துள்ள முகிற் கூட்டங்களிடையே மின்னற் கீறுகள் தோன்றுகின்றன. அவ்வாறே அறிவு என்ற முகிற் கூட்டத்திற்கு ஒளிதர ஞானம் கட்டாயமாக வேண்டும். கற்ற ஒரு மனிதனது வாழ்க்கையானது மனித குலத்துக்குச் செய்தி தரும் ஒளியாக அமைதல் வேண்டும். இந்த உயர்ந்த இலட்சியத்தை நிறைவேற்றும் வகையில் வலிமையின் ஒவ்வொரு துணிக்கைகளும் வாழ்க்கையின் ஒவ்வொரு கணப்பொழுதும், நற்குணத்தின் ஒவ்வொரு வெளிப்பாடும், நுண்மதியின் ஒவ்வொரு வெளித்தோற்றமும் திசை திருப்பப்படல் வேண்டும்.

ஒரு மருந்தின் பெயரைச் சொன்னால் மட்டும் நோய் தீர்ந்து விடுமா? டொலர் அல்லது ரூபா என்று உச்சரிப்பதால் வறுமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்ந்து விடுமா ? உணவு அட்டவணையின் பெயரை வாசிப்பதால் பசி தீர்ந்து விடுமா ? ஒரு பரீட்சையில் பெறும் சித்தி ஒரு மனிதனை மேலும் பயனுள்ளவனாக்கவோ, அல்லது மேலும் புத்திசாலியாக்கவோ மாட்டாது. கற்பித்தற் பீடத்திலுள்ள விரிவுரையாளர்களும், பேராசிரியர்களும் ஒரு நீர்த்தாங்கி போலவும், மாணவர்கள் திறந்து விடப்படும் ''குழாய்கள்'' போலவும் உள்ளனர். நீர்த்தாங்கி நீரினால் நிறைக்கப்படும் பொழுது, குழாய் வழியாக நீர் பெறக்கூடியதாக இருப்பதுடன் மக்கள் தாகத்தையும் தீர்த்துக் கொள்ளலாம். மாணவரைத் திருத்துதலும் ஆலோசனை வழங்கலும் ஆசிரியரது கடமையாகும் அத்துடன் மாணவரை உற்சாகப்படுத்தி ஊக்கம் வழங்குதலுடன் அவர்களது சோம்பேறித் தனத்தையும் சஞ்சலத்தையும் நீக்குதல் வேண்டும். இதுவே வகுப்பறைகளினதும், கலைத்திட்டத்தினதும் உள்ளார்ந்த இலக்காக இருத்தல் வேண்டும். குறுகிய நோக்கங்களை ஒழித்துச் சொல்லிலும் செயலிலும் அகன்ற உள்ளார்ந்த சிந்தனைகளை வளர்த்தல் வேண்டும். அனைத்துக்கும் ஒன்றான பொருளின் மீது நம்பிக்கை ஆழ்ந்து பதியச் செய்தல் வேண்டும். 'அனைத்தும் இறைவனால் சூழப்பட்டுள்ளன'' என்று உபநிடதம் பிரகடனப்படுத்தியுள்ளது ''அனைத்தும் இறைவனே'' என்றும் இறைவன் அனைத்து உயிர்களிலும் நிறைந்துள்ளான் என்றும் கீதை பிரகடனம் செய்கிறது. ஒவ்வொரு மாணவனையும் உங்கள் பிள்ளைகளாகக் கருதுங்கள். அவர்கள் கற்றலில் மிச்ச விருப்புடையார்கள் நீங்கள் கற்பிக்கும் ஒவ்வொரு பாடத்தையும் இறைவன் மீது நம்பிக்கையை நிலைபெறச் செய்வதற்கான வழிமுறையாகக் கொள்ளுங்கள். நீங்கள் பௌதிகவியலைக் கற்பிக்கும் பொழுது மெய்யியலிற் காணப்படும் அதியுன்னதமான மர்மங்களுக்கு மாணவரை அழைத்துச் செல்லுங்கள். தாவர வியலைக் கற்பிக்கும் பொழுது மரத்தில் உள்ளடங்கிய இரகசியங்களுக்கும் அவற்றை அதனுள்ளே வைத்த சிருஷ்டிகர்த்தாவுக்கும் வழிகாட்டுங்கள். வாழ்க்கை என்பது ஒரு மரத்தைப் போன்றது அதன் கிளைகள் கணுக்கள் இலைகள் வளர்ந்து சிறத்தல் மனித வாழ்க்கைத் தொடர்பினை விளக்கும் குறியீடாகவுள்ளது. உள்ளத்தில் எழும் சிந்தனைகள் பூக்களாக மலர்கின்றன. ஆனந்தம் என்பது பழங்கள். பரிசுத்தமான குணங்கள் அந்தப் பழத்திலுள்ள இனிய சாறாகவுள்ளன. மரத்தின் வேர்கள் நம்பிக்கை, சுயதிடம் என்பனவற்றைக் குறியீடாகச் சுட்டுகின்றன

இன்று கல்வித்துறையிலிருந்து நல்லொழுக்கம் முற்றாக மறைந்து விட்டது சொல்லுவது ஒன்றாகவும் செய்வது வேறொன்றாகவும் இருத்தல் அனைவருக்குமுரிய பொதுக் குரலாக உள்ளது. சத்தியம், பிரேமை, பக்தி ஆகியவற்றை விருத்தி செய்வதற்குரிய சூழலை அமைத்துக் கொடுக்கும் பொழுது மட்டுமே ஒரு தேசம் முன்னேற்றமும் மகிழ்ச்சியும் அடையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பிப்பதற்கென அமைக்கப்பட்ட நிறுவனங்கள் இன்று செல்வத்தை வழிபடுவதற்குரிய கோயில்களாகி விட்டன. நயத்தலும் பாராட்டும் நல்லறம், நல்லொழுக்கம் ஆகியவற்றுக்குத் தரப் படாது, பணத்துக்கும் பணக்குவிப்புக்கும் தரப்படுகின்றன. மனித நடத்தைகளிலும், மனிதத் தொடர்புகளிலும், அறவொழுக்கம், கொடை, நீதி, நேர்மை முதலியவை தென்படவில்லை. இந்நிலையானது மானுட எதிர்காலத்துக்குப் பல வழிகளிலும் பயங்கரம் நிறைந்ததாகவுள்ளது. இன்றைய வாழ்க்கை, பயம், நம்பிக்கையின்மை, சந்தேகம் முதலிய புதிர்களாற் சூழ்ந்துள்ளன. எதுவித ஓய்வோ, சாந்தியோ அற்ற நிலையில் தொந்தரவுள்ள தளத்திலே உழலும் தென்னம் பூச்சி போன்ற நிலையில் மனிதன் உள்ளான்.

மிகப் பெரிய புகையிரதப் பயணத்தில் அசைவது போன்று மனிதர் சென்று கொண்டிருக்கின்றனர். அடுத்த தரிப்பில் பலர் இறங்கி விடுவர். இரண்டாம் அல்லது மூன்றும் நிலையங்களில் பலர் தடுத்து வைக்கப்படுவர் அவர்கள் மிகப் பெரும் பதகளம், அமைதியீனம், துன்பம் முதலியவற்றை அனுபவிக்கின்றனர். ஆனால் அந்தத் துன்பம் சிறிது நேரம் மட்டுமே இருக்கும். இளம் மனிதர்கள், இளம் பெண்கள், மாணவர்கள் எவ்வாறாயினும் அதிக தூரம் செல்ல வேண்டியிருக்கும். இவர்கள் பொறுமையாகவும் அனைத்தும் உள்ளடங்கிய ஆற்றலுடனும் இருத்தல் வேண்டும். அத்துடன் தாம் சென்று இறங்க வேண்டிய இடம் பற்றிய தெளிவும் உறுதியும் உள்ளவர்களாயிருத்தல் அவசியம். அத்துடன் அவர்கள் மேலும் எல்லைகளை அறிந்தோராகவும் மிக்க அறிவுடையோராகவும் இருத்தல் வேண்டும்.

நித்திரை கொள்பவனைச் சிறிதளவு பிரயத்தனத்துடன் எழுப்ப முடியும். விழித்திருப்பவனை எழுப்புவதற்கு முயற்சி வேண்டியதில்லை நித்திரை செய்பவன் போன்று விடாப்பிடியாய் இருப்பவனை எவ்வாறு எழுப்ப முடியும்? அறிவற்றவராயும் மூடமாயும் அல்லது மந்தமாயும் உள்ள ஒருவரைச் சீர்திருத்தி அமைக்க முடியும் உள்நோயால் அவதியுறும் ஒருவருக்குச் சிகிச்சையளித்து அவரைச் சீர்திருத்த முடியும். ஆனால் சுயதிருப்தியடைந்து, தனக்குரிய தவறான அபிப்பிராயங்களால் வலிந்து கட்டி நிற்கும் ஒருவரைத் திருத்த முடியாது. இதுவே இன்றைய கடினமான கல்விப் பிரச்சினையாகவுள்ளது.

கோழைத்தனம், அற்பமனப்போக்கு, அவா, வெறுப்பு, குறுகிய மனப் பான்மை, நான் என்ற சுயமுனைப்பு எல்லை முதலிய தளைகளில் இருந்து கல்வியை விடுவித்தல் வேண்டும். இந்த யுகத்தில் கல்வி மிக அதிகமாகவும் பரந்த அளவிலும் கிடைக்கின்றது பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், கற்பிப்பதற்

குரிய நிறுவகங்கள் முதலியவை பல்கிப் பெருகியுள்ளன. இவை இருந்த போதிலும் அமைதியில்லை, சகோரத்துவம் இல்லை, மக்களிடமோ அல்லது இவ்வாறான ஆதிக்க வரம்பு கொண்ட நிறுவகங்களிடமோ அன்புப் பாய்ச்சலைக் காண முடியாது உள்ளது.

இவ்வாறான சோகம் ததும்பிய தோற்றப்பாட்டுக்குரிய காரணம் பழக்க வழக்கங்களையும் நாளாந்த நடத்தைகளையும், மக்களிடையேயான தொடர்புகளையும் மேம்படுத்தல், கல்வியிடத்துக் காணப்படாதிருத்தலாகும். எமது புனித எழுத்தாக்கங்கள் ''வித்யா'' அல்லது கல்வி என்பது தியாக வாழ்வின் மேன்மை எனப்பிரகடனம் செய்தன. வித்யா என்பதற்கு இரட்டைக் கருத்துக்கள் உள்ளன. முதலாவதாக அது உலகியல் சார்ந்த கல்வியைக் குறிப்பிடுகின்றது அதாவது திறன்கள் ஆற்றல்கள் என்பவற்றைக் கற்பித்தல். ஒருவர் வாழ்க்கைக்குரிய தொழில்களை மேற் கொள்வதற்கும் கௌரவமாக வாழ்வதற்குமுரிய தகவல்களை வழங்குவதற்குமான கல்வி. இரண்டாவது அறம், தெய்வீகம் சார்ந்த கல்வி. சாந்தம், பொறுமை, புலக்கட்டுப்பாடு, நன்றியுணர்வு, கடவுள்பக்தி, மெஞ்ஞான உணர்வுக்கான அர்ப்பணிப்பு முதலியவற்றைக் கொண்டதாக இது விளங்கும்.

நாட்டின் எதிர்காலத்தை உருவாக்குவதில் ஆசிரியருக்குப் பாரிய பங்கு உண்டு. எல்லா வாண்மைகளிலும் ஆசிரிய வாண்மையே உன்னதமானது. மிகவும் கடினமானது. மிக முக்கியமானது. பணிவு, இரக்கம், அன்பார்ந்த சேவை ஊக்கல் முதலியவற்றை மற்றைய வாண்மைகளிலும் பார்க்க கூடுதலாக ஆசிரியர் வளர்த்தல் வேண்டும். தனது மாணாக்கருக்கு முன் மாதிரியாகவும், இலட்சிய புருஷராகவும் இருத்தல் வேண்டும். ஒரு மாணவனுக்குத் துர்க்குணம் இருந்தால் அதன்பொருட்டு அவனே கஷ்டமடைவான். ஆனால் ஆசியருக்கு துர்க்குணம் இருந்தால் ஆயிரக் கணக்கானோர் மாசடைவர். ஆசிரியர் என்ற கலங்கரை விளக்கம் வழி காட்டுவதாகவும், முன்னெடுத்துச் செல்வதாகவும் இருத்தல் வேண்டும். அந்த ஒளி வீசாவிடில் அதிகமானோர் பாறைகளில் மோதிவிடுவர்.

பாடசாலை என்பது கற்றலையும் கற்பித்தலையும் மேற் கொள்வதற்கென வடிவமைக்கப்பட்ட ஒரு பொதுவான இடமென்று கொள்ளப்பட முடியாது. பாடசாலையிலேதான் உள்உணர்வுகள் ஒளியூட்டப்பட்டுத் தூண்டப்பட்டு, தூய்மை யாக்கப்பட்டு, வலுவூட்டப்படுகின்றன. இங்கு தான் ஒழுக்கம், கடமை, பக்தி என்ற விதைகள் விதைக்கப்பட்டு பயன் தருமாறு வளர்த்தெடுக்கப்படுகின்றன. பாடசாலைகள் விஞ்ஞானம் தொழில் நுட்பம் என்பவற்றை மிகவுயர்ந்த நிலைக்கு வளர்ந்து விட்டன என்று சொல்லப்படுகின்றது. மனிதன் அண்ட வெளியில் பல இலட்சம் மைல்கள் கண்டு பிடித்து விட்டான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் தனது உள்ளார்ந்த வெளியில் ஓரங்குலத்தைத் தானும் கண்டு பிடிக்கும் திறனைப் பெறவில்லை. சந்திரனுடைய மேற்பரப்பிலுள்ள மேடு பள்ளங்களை அவன் கண்டறிந்து விட்டான். ஆனால் அயல் வீட்டிலுள்ள இன்ப துன்பங்களை அறிந்து கொள்வதற்கு அவன் முயலவில்லை. விஞ்ஞானிகளும் தொழில் நுட்ப வல்லுனர்களும் ஒரு கருத்தரங்கிலிருந்து மறு கருத்தரங்கினுக்குக் கெந்திப் பாய்கின்றனர். பல மாநாடுகளிலும் குழுக்களிலும் ஒன்று கூடுகின்றனர். பணக் குவியல்களையும், ஆயிரக்கணக்கான மணித்தியாலங்களையும் செலவு செய்கின்றனர். அவற்றினால் உலகம் பெறும் நன்மையோ மிக சொற்பம். அவற்றின் முடிவுகள் ஆழ்ந்து பரப்பப்படுகின்றன. மானிடத்தின் உண்மையான நல்வாழ்வுக்காக அவை பிரயோகிக்கப் படுவதில்லை. மேடைகளில் பெரும் தலைவர்களாக இருப்போர் நடைமுறை வாழ்விலே பூச்சியமாகி விடுகின்றனர்.

சிறுவர்களுக்குக் கற்பிக்கும் பொழுது, நல்லொழுக்கம், நற்பேச்சு, நல்ல சிந்தனை முதலியவற்றை வளர்ப்பதில் அதிக கவனம் எடுத்தல் வேண்டும். ஆசிரியர், பெற்றோர், மாணவர், ஆகியோரின் நிலையை உயர்த்துதல் வணக்கத்துக்குரிய ஒரு நூல் தருதல், மாணவர்க்கு கதைகள் அடங்கிய ஒரு நூல் தருதல், ஆசிரியர்களுக்கு வழிகாட்டல் களை வழங்குதல், ஆகிய பணிகள் இன்று வந்தவை. அவற்றை மூளையில் கட்டி வைப்பது நல்லதன்று!. அவை உள்உணர்வுகளோடு ஒன்றிணைக்கப்படல் வேண்டும் அவற்றை தயவுடன் வெளியிடவும் பயனுள்ள செயல்களிலே பயன்படுத்தவும் வேண்டும். உங்களுக்குத் தரப்பட்ட பயிற்சியைப் பயன்படுத்தி மற்றைய ஆசிரியர்களிடத்து நல்லெண்ணங்களைப் பதியச் செய்யுமாறு தூண்டுங்கள். அவற்றி னூடாக மாணவரிடத்து அடிப்படையான மனித மேம்பாட்டு விழுமியங்களைப் பதித்து வைக்கச் செய்யுங்கள். மாணவர் செய்வது போன்று புத்தகங்களைப் பாடமாக்காதீர்கள். சோதனை நேரத்தில் அவ்வாறு பாடமாக்கியவற்றை விடைத் தாள்களிலே கொட்டிவிடாதீர் கள். உங்கள் இதயங்களிலே செய்தியையும், முறைகளையும் பதித்து வையுங்கள். ஒரு பிரதியை மட்டும் எடுக்கக் கூடிய அமைப்புப் போன்றிராது, வேண்டிய நேரங்களிலே பயனுள்ள பல பிரதிகளை ஆக்கக் கூடியவாறு உங்கள் இதயத்திலே பதித்து வையுங்கள். இந்தப் பெரும் பணியை வெற்றிகரமாகச் செய்வதற்கு வேறு ஆசிரியர் களுக்கு நீங்கள் பயிற்சியும் உற்சாகமும் கொடுத்தல் வேண்டும்.

தூய்மையானதும் சுதந்திரமானதுமான சிறுவர்களின் உள்ளங்களை பக்தி நிரம்பிய வணக்கமான நிலை கொண்டதாக வளர செய்தல் வேண்டும். அவர்கள் முன்னால் நிகழும் எந்த ஒரு செயலுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லதான அல்லது கெட்டதான எதிர்த்தாக்கம் உண்டு. எந்த ஓர் ஒலியும் மீள ஒலிக்கும். எந்த உருவமும் பிரதி பலிக்கும். ஆகவே ஆசிரியர் விழிப்புடனும் புத்தி பூர்வமாகவும் செயற்படல் வேண்டும். ஒன்று பலவாதலும், அது நிலை கொண்டிருத்தலும் அதுவே உங்களை எப்பொழுதும் தூண்டுதலுமான அறிவுணர்வு வேண்டும். ''எல்லாரும் ஒருவரே. எனது பிள்ளைகளே. எல்லோர் போலவும் இருக்க முனையுங்கள்'' என்று யேசுநாதர் குறிப்பிட்டார். ஒவ்வொருவரிலும் நிறைந்துள்ள இறைவனே உண்மையானவர்.

கல்விச் செயற்பாட்டினூடாக மனித மேம்பாட்டு விழுமியங்களை அழுத்தவும் ஆசிரியர்களுக்குப் புத்தூக்கப்பயிற்சி தரவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒரு குவளையில் இருந்து இன்னொரு குவளைக்கு எண்ணெயை வார்க்கும் பொழுது, வார்ப்பவர் கைகளும், பெறுபவர் கைகளும் வெகு நிதானமாகவும், உறுதியாகவும் இருத்தல் வேண்டும். அவர்கள் அசையலாகாது.

கற்பவர்களும் கற்பிப்பவர்களும், சாந்தம், மன ஒன்றிணைப்பு, கவனச்சிதைவின்மை முதலியவற்றில் ஆழ்ந்திருத்தல் வேண்டும். யாராயினும் கோபம், பதகளம், கிளர்ச்சி முதலியவற்றின் எதிர்பாராத தாக்கங்களுக்கு உள்ளாகக் கூடாது. தமக்கெனத் தரப்பட்ட கடமைகளை ஏற்கும் பொழுதும் செயற்படுத்தும் பொழுதும் ஆசிரியர்கள் சமூகம், நாடு, உலகம், என்பவற்றின் முன்னேற்றத்துக்கு உதவுகின்றனர். இது மிகக் கடினமான பணி. ஆனால் கஷ்டங்களிலிருந்தே மகிழ்ச்சி வரும். கடினம் மட்டுமே மகிழ்ச்சிக்கு வழி கோலும்.

## குழந்தைக்குச் சேவை செய்யுங்கள்

ஆகவே ஆசிரியர் மாணவரது இதயங்களிலே நல்லொழுக்க இயல்புகளை வளர்த்தலை முதலாவது பணியாகக் கொள்ளல் வேண்டும். கற்றலை முன்னேற்றுவதிலும் ஒழுக்கமே மிக முக்கியமானது.

இன்றைய கல்விச் செயலமைப்பானது ஒழுக்கங்களை அல்லது தெய்வீக விழுமியங்களை வளர்க்கவோ அல்லது அங்கீகரிக்கவோ முயலவில்லை. இதனால் மாணவர் சமுதாயம் சமூக ஆபத்தான மூலகமாக கீழிறங்கிய வண்ணமுள்ளது. மாணவர்கள் சமூக நலனை ஏற்படுத்துவதிற் குறைந்தளவு கவனம் செலுத்துவதுடன் மற்றவர்கள் மீது தாம் செலுத்த வேண்டிய கடமைகளையும் நிராகரித்து விடுகின்றார்கள். சமூகக் கடமைப்பாடு பற்றிய விளக்கமற்றவர்களாயும் அவர்கள் இருக்கின்றார்கள். சேவையை ஒரு மேன்மையாகக் கருதாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்சத்திலும், சேவை செய்வதற்குரிய திறன்களை வளர்க்காத விடத்தும் சமுதாயத்துக்கு மாணவர்கள் ஒரு சுமையாகிவிடுவர். அவர்கள் ஒட்டுண்ணிகளாகவும், சுரண்டற்காரர்களாயும் மாறி விடுவர்.

மனம் நல்லியல்புகளுடன் விரிவடைய சாந்தியும், மகிழ்ச்சியும் விரிவடையும். சிறிய அறிவு மனத்தைச் சுருக்கி விடும். பிறர் மீதான அக்கறையை கட்டுப்படுத்தி விடும். அது சுயநல அகத்தை விரிவடையச் செய்து, சுயவிருப்புக்களை வளர்க்கும். இருளில் இருந்து வரும் மகிழ்ச்சியை இது மனிதரிடத்தே மறக்கச் செய்து விடும். அவ்வாறான மாணவர்கள் தேசத்தின் வளத்தையோ சமூகத்தின் முன்னேற்றத்தையோ மேம்படுத்த முடியாதிருப்பர். சுயநல அகம் (EGO) என்ற வலிய திரை பார்வையை மழுங்கடித்து அவர்களது ஊனையும், கௌரவத்தையும் இரக்கத்திற்குள்ளாக்கிவிடும். தமது முன்னோரளித்த செல்வப் பாரம்பரியங்களை உணர்வதற்கு மாணவர் அதிக முயற்சியெடுத்தல் வேண்டும் அதீத ஈடுபாடு அல்லது அதீத விடுபாடு என்பனவற்றிலிருந்து மனம் விடுதலை பெறுதல் வேண்டும். பொய்மை கலவாத பேச்சு வேண்டும். பாவங்களால் உடல் மாசுபடுத்தப் படாதிருத்தல் அவசியம். இவையே மாணவர் முயற்சித்துப் பெற வேண்டிய பண்புகளாகும். மாணவரிடத்துக் காணப்படுகின்ற செயலில் நேர்மையீனம், அவர்கள் வாக்கில் தொய்ம்மை முதலியவற்றை அகற்றுவதற்கு விழிப்புடன் செயலாற்ற ஆசிரியர்கள் உற்சாகப்படுத்தப் படல் வேண்டும். சுயநலம், பொறாமை, சுக அகப் பெருமை என்ற மூன்று இயல்புகளும் மனோபாபங்களும், இளம் உள்ளங்களிலே வேர் கொள்ளாதிருத்தல் வேண்டும். பிறருக்குத் தாமாகவே சேவை செய்தலில் ஈடுபடல் அவசியம். மரங்களைப் பாருங்கள். அவை தம்மைப் பற்றிய சிந்தனையின்றி பிறருக்கு நிழல் தந்து சேவை புரிகின்றன. பிரதியீடு கேட்காது ஆறுகள் அனைவருக்கும் சேவை செய்கின்றன. பசுவானது மனிதனுக்கு வழங்கும் சேவை பற்றி மாணவருக்குக் கூறுங்கள்.

மரம், ஆறு, பசு ஆகிய மூன்றினதும் உதவி மறுக்கப்படும் பட்சத்தில் மனித வாழ்க்கை அபாயகரமாகி விடும் பிற படைப்புக்கள் வழங்கும் சுயநலம் அற்ற நடத்தைகளிலே தங்கியிருக்கும் மனிதன் தான் சுயநலத்துடன் வாழ்வது எத்துணை வெட்கக் கேடானது என்ன தகவல்களை அல்லது தூண்டல்களை மனிதன் பெறுகின்றானோ அல்லது எத்தகைய செல்வம், சம்பாதிப்பு, பொருள் முதலியவற்றை உழைக்கின்றானோ அவற்றை அவன் சுயநலமின்றிப் பிறருடன் பகிர்ந்து கொள்ளல் வேண்டும் இதுவே பிரதான கடமையாகும். மாணவரின் உள்ளங்களிலே இந்த இலட்சியங்களை பதிய வைப்பதற்குரிய சந்தர்ப்பங்களை ஆசிரியர் எதிர்நோக்கியிருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களிடத்துப் புத்தூக்கத்தை ஏற்படுத்தக் கூடியவராக ஆசிரியர் இருத்தல் வேண்டும். சொல்வதைச் செய்து காட்டல் வேண்டும். ஆசிரியர் எவ்வழி மாணவர் அவ்வழி தாங்கியில் நீர் இருந்தால் மட்டுமே குழாயைத் திறக்க தண்ணீர் பாயும். தாங்கியில் உள்ள நீரின் இயல்பைப் போன்றே குழாயில் வரும் நீரும் இருக்கும். ஆசிரியருடைய உள்ளம் நல்லியல்புகள், சுயநலமின்மை, அன்பு என்பவற்றால் நிறைந்திருக்குமாயின், மாணவர்கள் தங்களுடைய செயல்கள் மூலமாக அருளை வெளியிடுவர்.

எல்லாவற்றிற்கும் மேலாக உங்கள் உள்ளத்தைக் கடவுளால் நிரப்புங்கள். குழந்தைகளிடத்துக் கடவுளைப் பரப்புங்கள். வெகுமதியோ, பணப் பிரதியுபகாரமோ இன்றி மாணவர் முகத்திலே புன்னகையை மாத்திரம் எதிர் பார்த்துச் செயற்படுங்கள் இன்று ஆசிரியர்கள் தமது கடமையிலும் பார்க்க பணத்தோடு பெரிதாக ஒட்டியிருக்கின்றார்கள். தமக்குரிய புனிதமான பணியிலும் பார்க்க, தமது சொந்த வாழ்க்கையை மேலாக எண்ணுகின்றார்கள். பட்டங்கள் பெறும் முட்டாள் தனமான ஓட்டத்தைக் கைவிடுங்கள். பிறருக்குச் சேவை செய்யும் சந்தர்ப்பங்களை மேற்கொண்டு நாட்டினது செல்வத்தை மேலோங்கச் செய்யுங்கள்.

## உணர்தலும், செயற்படுதலும் ஒன்றாகச் செல்லல் வேண்டும்

சுறாமீன் நிறைந்த ஓர் அருவியின் மீது மலர்ந்துள்ள "ஞானம்" என்ற தாமரை மலர்களைப் பிடுங்குவதற்காக நீச்சலடிப்பதைப் போன்றதே வாழ்க்கை. வாழ்க்கை என்பது வேகமாக உருகும் பனிக்கட்டி போன்றது. அது உருகி முடிவதற்குள் ஒருவருடைய திறனையும் அறிவையும் எத்தனை பேருக்குக் கூடுதலாக வழங்க முடியுமோ அத்தனை பேருக்கும் கொடுத்தல் வேண்டும். சமூகத்துடன் பகிர்ந்து கொள்வதற்கு பெறுமதி கொண்டதான பெறுமானமுள்ள கருத்துக்கள், இலட்சியங்கள் முதலியவற்றை ஒருவர் திரட்டிக் கொள்ளல் வேண்டும். செயற்படுத்தல், பிரதிபலித்தல் என்ற தவிர்க்க முடியாத இயல்புகளின் மீதான நம்பிக்கையை உங்களிடத்தில் பதித்துக் கொள்ளுங்கள்.

சூழலாலும் தொடர்ச்சியான முயற்சியாலுமே பெருமளவில் தனிமனிதன் உருவாக்கப்படுகின்றான். தனிமனிதன் முடிவிலியாகிய பெருக்கமே கடவுள். அவ்வாறே மனத்தை முடிவிலியால் பெருக்கும் பொழுது பிரபஞ்ச உள்ளுணர்வாகும். பிரபஞ்ச மனம் என்பது எங்கும் பிரசன்னமாயிருக்கும் சித்தம். ஆகவே தெரிந்ததை தெரியாதவற்றுடன் ஒன்றிணைப்பதற்குரிய பாலமாகத் தனிமனிதன் விளங்குகின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றான். மனிதன் தன்னைப் பற்றி அறிந்ததிலும் பார்க்க மேலும் உயர்ந்த பெறுமானம் கொண்டவன். தான் ஈட்டிய செல்வம், பெற்ற அறிவு, தன்னிடமுள்ள ஆற்றல், பலம், என்பவற்றைக் கொண்டே மனிதன் தன்னை அளவிடுகின்றான். மேற்கூறிய ஒன்றையோ அல்லது அனைத்தையுமோ விட மனிதன் மிக்க பெறுமதியுடையவன் ஏனெனில் அவன் இறை அன்பு என்ற ஒளியை தன்னுள்ளே விரிவாக்கி, அனைத்து உயிர்களையும் அன்பால் அரவணைக்க முடியும்.

இந்த உயர்ந்த பெறுமானப் பண்பை மாணவரை உயர்த்தவும், வளர்க்கவும் பொறுப்பேற்றுள்ள நீங்கள், உணர்ந்து அதனைச் செயலில் வெளிப்படுத்த வேண்டும். குழந்தை விரைவாகவோ, சரியாகவோ துலங்கல் தராதவிடத்து நீங்கள் கோபப்படவோ நிலை குலையவோ வேண்டாம். போதனையை மீண்டும் மீண்டும் செய்யுங்கள். மாணவர் முன்பு உங்களது பலவீனத்தையும், தோல்வியையும் காட்டாதீர்கள். மாணவர்களுக்கு முன்னர் பிறரைப்பழி சுமத்தாதீர்கள். அல்லது உங்களுக்கு பிறர் மீதுள்ள குரோதத்தை வெளிப்படுத்தாதீர்கள். அத்தகைய குறைபாடுகளை மறைத்து விடுங்கள். அதுவே கோபம், வெறுப்பு, அகம்பாவம், பொறாமை முதலியவற்றை ஒழிப்பதற்குரிய சாதனை (ஆன்மிக நடைமுறை) யாகும் இந்த செயல்கள் அனைத்தும் மனத்தைத் தூய்மைப்படுத்தல் என்ற ஒரே நோக்கத்துக்குச் சேவை புரிவதாக அமையும்.

குழந்தைகளுக்குச் சேவை செய்வது குழந்தைகளின் நலனுக்காக என்று எண்ணாதீர்கள். அது உங்களுடைய நலனுக்கும் சமமாக இருக்கும். மற்றவர்களுக்காக நீங்கள் உண்பதில்லை. உங்களுடைய நலனுக்கு நீங்கள் சாப்பிடுதல் போன்றதே இந்தச் சேவை. இது ஆத்மீக உண்மை. இதனை நீங்கள் கற்பித்தலில் பயன்படுத்துகையில் அல்லது எந்த ஒரு கருமத்திலும் முயன்று வெற்றி பெறுகையில் அது உங்களுக்கு நன்மையானதாகவே இருக்கும்.

நீங்கள் அனைவரும் கல்வியில் ஈடுபட்டுள்ளீர்கள். உங்கள் பணியில் வெற்றி ஓர் அடைவில் மட்டுமே தங்கியுள்ளது. அதாவது மாணவரது உள்ளத்தை ஒளிபெறச் செய்வதற்கும், உண்மைப் பேறினை உணர்த்துவதற்கான கதவுகளைத் திறந்து விடுதலுமாகும். ''என்னிலும் பார்க்க உயர்ந்தது எதுவுமேயில்லை'' இதுவே உண்மை. செல்வம், புலமை, கௌரவம், அதிகாரம். ஆட்சி வல்லமை ஆகிய அனைத்தும் எனது ஆளுமையின் ஒரு பகுதியில் அமைந்த விளைவுகளாகும். அந்த அகக் காட்சியை வளருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் இருந்து பெற்ற சிறிய கௌரவங்களைப் பெரிதென மதித்துப் பிரகடனம் செய்யாதீர்கள். நீங்கள் வழங்கிய பேருரைகளின் எண்ணிக்கையைப் பெருமையுடன் அறிவிக்காதீர்கள். அது பெருமைக்கு அடையாளம் அன்று. மனித மேம்பாட்டுக்கான விழுமியங்களை வரையறுக்கும் பொழுது, அறுபது வெவ்வேறு குறிப்புக்களைக் கணக்கிடல் வேண்டும். அந்த அறுபதும் பின்வரும் ஆறில் உள்ளடங்கியிருக்கும். அவையாவன, தயவு, கொடுமைகளுக்கான பயம். பொறுமை, சாந்தம், அடக்கமுடமை. ஒட்டியிருக்காமை என்பவை.

ஆய்வறிவாளர் பற்றி இன்று அனேகம் கேள்விப்படுகின்றோம், இவர்களால்தான் இன்று இந்த உலகம் பல்வேறு திசைகளிலே சீரழிந்துள்ளது. ஆய்வறிவாளர் அல்லாதரிடத்து ஒழுக்கம், நடத்தை பற்றி உலகம் கற்றுக்கொள்வதற்கு பல பாடங்கள் உள்ளன, ஆய்வறிவாளர்கள் தாழ்நிலையிலிருப்பதால், பொது உண்மைகள் மீது அவர்கள் கவனம் செலுத்துவதில்லை. உயர்ந்த உண்மைகளையும் அவர்களால் கிரகிக்க முடியாமலிருக்கும். ஏனெனில் சந்தேகங்கள் அவர்களைக் குழப்பிக் கொண்டிருக்கும்.

உங்கள் மனவெழுச்சிகளையும் புலன்களையும் கட்டுப்படுத்தக் கற்றுக் கொள்ளுங்கள். வீடு தீப்பற்றிக் கொள்ளும்பொழுது நீங்கள் ஓடித் தப்பித்துக் கொள்வீர்கள். ஆனால் உங்கள் புலன்கள் தீப்பற்றிக் கொள்ளும்பொழுது ஒருவர் தம்மைப் பாதுகாக்க என்ன செய்ய முடியும்? எத்தகைய ஒரு நிலையிலும் நீங்கள் அமைதியாயிருங்கள். எமது புலங்களுக்கு நாங்கள் அடிமையாயிருக்கும் பொழுது எமது மாணவர்களை நாம் எவ்வாறு சரியான பாதையில் அழைத்துச் செல்ல முடியும், எமது கல்விச் செயல்முறையிலுள்ள அத்தனை பிரச்சனைகளுக்கும் இதுவே காரணமாக அமைகின்றது. இதனை நாம் கூறுவது மாணவருக்காக அல்ல. உமது நன்மைக்காகவே. மாணவர்கள் கற்கின்றார்கள். நீங்கள் கற்பிக்கின்றீர்கள். என்ற அதிகாரவியல்பு கொண்டவராக எண்ணாதீர்கள் வீண்பெருமையை வளர்க்காதீர்கள். மாணவர்களுக்குச் சேவை தேவையென்று எண்ணுங்கள். அவர்கள் எவ்வளவிற்கு உங்களுக்குத் தேவைப்படுகிறார்களோ அந்த அளவு நீங்கள் அவர்களுக்குத் தேவைப்படுகின்றீர்கள். உங்கள் வாழ்நாளில் எப்பொழுதும் கற்பவராக இருங்கள். ஒருவர் சத்தியத்திலே தன்னை ஆழப்பதித்திருக்கும் பொழுது பயத்திலிருந்து விடுவிக்கப்படுகின்றார். சத்தியமே முடிவில் வெல்லும். அது மெதுவாக முன்னேறிச் சென்றாலும் வெற்றியை நோக்கி உறுதியாகச் செல்லும். ஒரு பழமொழி உண்டு. ''சத்தியம் ஏறுநடையிட தனக்குப் பாதணிகளைப் போடுவதற்கு முன்னரே, பொய் உலகை விட்டோடி விடும்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்க்குக் கற்பித்தல் தொடர்பான அனைத்துச் சத்தியங்களின் நடைமுறைகளையும் ஒன்று திரட்டுங்கள். பிறரை உபயோகமானவர்களாக உருவாக்குதற்குரிய ஆற்றல் உள்ளவாறு மாணவர்க்குக் கற்பித்தல் தொடர்பான இலட்சியங்களிலும் ஆன்மீக நடைமுறைகளிலும் முழுமையான அறிவை ஆழப்பதித்துக் கொள்ளுங்கள்.

## மிகவுயர்ந்த சாதனை

தமது அன்புக்குரிய குழந்தைகளுக்குப் பாடசாலைகளில் கல்வியளிக்கும் ஆசிரியர்கள் மீது பெற்றோர் நம்பிக்கை வைக்கின்றார்கள். பிற்காலத்தில் அவர்கள் உலகின் கஷ்டங்கள், பிரச்சினைகள் என்பனவற்றுக்கு எதிராக உறுதியாக நிற்கக் கூடியவாறு திறன்களையும், பழக்கவழக்கங்களையும் ஆசிரியர் மாணவரிடத்துப் பதியவைத்து அவர்களை வழிநடத்துவார்கள் என்று பெற்றோர் நம்புகின்றனர். ஆகவே ஆசிரியர்களுக்கு மிகுந்த பொறுப்புச் சுமை உண்டு. தமக்கு ஓர் உதவி வேண்டப்படுமிடத்து குழந்தை தாயிடம் செல்கின்றது. குழந்தைக்கு அறிவு, ஒழுக்கப்பலம் என்பன வழங்குவதற்குத் தன்னை வளமாக்கிக் கொள்வதற்குத் தாய் ஆசிரியரிடம் செல்கின்றார். ஆகவே குழந்தைக்குத் தாயிலும் மேலான ஓர் இடத்தை ஆசிரியர் வகிக்கின்றார். இந்நிலையில் மாணவரது உடல், உள்ளம், அறம் சார் நலம், முதலியவை பற்றிய ஆவலும் விழிப்பான கவனமும், தாயிலும் பார்க்க ஆசிரியருடையதே கூடிய அறிவுடையதாகவும், தொடர்ச்சியானதாயுமிருக்கும்.

ஒருவரோடு ஒருவர் அன்புசார்ந்த சொற்களையே ஆசிரியர் பேச வேண்டும். ஒருவரோடு ஒருவர் அடாத்தான செயல்களில் ஈடுபடலாகாது. ஆசிரியர்களிடத்து ஒரு சிறிய அளவில் வெறுப்புக் காணப்படுமாயின் அது சுற்றாடலை மாசுபடச் செய்வதுடன் குழந்தைகளின் பிஞ்சு மனத்தையும் மாசுபடுத்திவிடும். குழந்தையை மிகுந்த அன்புடன் வீட்டில் இருந்து பாடசாலைக்கு அழைத்து வரும் பணிப்பெண்ணுக்குக் கேட்கக் கூடியவாறு தகாத சொற்கள் எதனையும் பேசலாகாது. பணிப்பெண் அல்லது வேறு உதவியாளர் அல்லது சமையற்காரர் தோட்ட வேலையில் ஈடுபடுவோர் முதலியோர் மீது ஆசிரியர் அவமரியாதையாக நடந்து கொள்வார்களாயின் குழந்தைகள் அந்த ஆசிரியர்கள் மீது எதிர்ப்பு உணர்வு கொள்வார்கள்.

அதிகார வர்க்கத்தின் ஒரு பகுதியாக குழந்தைகள் முன் அணிவகுத்து நிற்காதீர்கள். ஒவ்வொருவருடைய ஆற்றலுக்கும் ஏற்றவாறு அவர்களுக்குக் கடமைகள் தரப்பட்டுள்ளன. யாதாயினும் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமை மேலானதோ அல்லது கீழானதோ அன்று. இந்தப் பாடம் மாணவரது உள்ளுணர்வுடன் தோய்ந்த அனுபவமாகக் கலக்க வேண்டும்.

எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருங்கள். கடவுள் பணியில் ஈடுபட்டுள்ளீர்கள் என்ற உண்மையை எப்பொழுதும் மனதில் வைத்திருங்கள். குழந்தைகளின் உள்ளத்திலே தூய்மை - தெய்வபக்தி, என்ற இதழ்களை விரியச் செய்யுங்கள். உங்கள் மீது பொழியப்பட்டுள்ள அபூர்வமான நற்செல்வம் உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும் என நம்புகின்றேன். உங்கள் மகிழ்ச்சிக்கு யாதும் தடை வராது அது பாதுகாக்கும் உங்களுக்கு முன்புள்ள அறியாமைப் பெருக்கை அகற்றுங்கள். துன்பம் உங்களது உள்ளத்தை விட்டு நீங்கி ஓடி விடும்.

ஆரம்பப் பாடசாலையிலுள்ளவர்கள் கூட ஒருவர்க்கு ஒருவர் சொந்தம் என்ற உணர்வைப் பெற்றுக் கொள்ள வேண்டும் மாணவரைச் சீராட்டல், அவர்களுக்கு கவனிப்பு வழங்கல் முதலியவற்றோடு தொடர்புடையவர்களோடு ஒவ்வொருவராகக் கலந்தாலோசியுங்கள். காரியாலயம், வகுப்பறைகள், மாணவர் விடுதிகள், உணவு பரிமாறும் இடம், விளையாட்டுத் திடல், முதலியவற்றில் ஒத்திசைவு காணப்படல் வேண்டும். ஒருவர் ஒரு செயலைச் செய்யும்படி வேண்டினாலோ அல்லது செய்யாது விடும்படி கூறினாலோ அவர் கூறுவது எத்துணை முக்கியமானதும் பொருத்தமானதும் என்று அவரிடம் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். ஒரு தகாத நடத்தைக்காக அல்லது நெறி பிறழ்வுக்காக திடீரென்று ஒரு பிள்ளையைக் கொடுமைப் படுத்தும் வண்ணம் ஏசாதீர்கள். அதற்குப் பதிலாகப் பின்வருமாறு கூறுங்கள். ''வேறொரு பிள்ளை இவ்வாறு செய்தால் அல்லது உங்களது உடைமைகளைக் களவு எடுத்தால் அல்லது உங்களை அடித்தால் உங்களுக்கு அது துன்பத்தை ஏற்படுத்த மாட்டாதா? பிறர் உங்களுக்குத் துன்பத்தை ஏற்படுத்துவதை நீங்கள் எவ்வாறு விரும்பவில்லையோ அவ்வாறே நீங்களும் பிறருக்குத் துன்பம் செய்யாதிருத்தல் வேண்டும். இப்படிக் கூறும் பொழுது பிள்ளைகள் இலகுவில் விளக்கம் பெறுவார்கள். தமது செயலுக்காக வருந்திக் கொள்ளுவார்கள் தவறான செயல்களை அல்லது சொற்களை அவர்கள் மீண்டும் வழங்க முயல மாட்டார்கள் உங்களது ஆலோசனைகளுக்கு அவர்கள் அன்புடன் கீழ்ப்படிய வேண்டும்.

ஐந்து வயதிலிருந்து மாணவரை ஆரம்பப் பள்ளிக்கூடத்துக்கு அங்கீகரித்தல், மனித குல முன்னேற்றத்துக்கான அடித்தளமாகவும் அமைகின்றது. ஆகவே இந்தப் பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் மிகவுயர்ந்த தெய்வீக செயலை (சாதனை) புரிகின்றார்கள். இது அவர்களுக்கும், குழந்தைகளுக்கும், சமூகத்துக்கும் நன்மை தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூய்மை என்ற உண்மையான விழுமியம்

ஆசிரியர்கள் நாட்டை உருவாக்குகின்றார்கள். மாணவர் அதனை ஆரோக்கியமாகவும் வலிமையாகவும் கட்டியெழுப்புகின்றார்கள். ஆனால் ஒரு சில மாணவர்களே நாட்டை உன்னதமான பாதையிலே எடுத்துச் செல்லும் நோக்குடையோராயிருக்கின்றனர். அவ்வாறே ஒரு சில ஆசிரியர்களே மக்களுக்கு அன்பும், சேவையும் வழங்கும் உயர்ந்த இலட்சியம் கொண்டவர்களாயிருக்கின்றனர்.

ஆசிரியர் வாழ்க்கை முழுவதும் மாணவராயிருத்தல் வேண்டும். அதாவது வெறுமனே கற்றலில் மட்டும் ஈடுபடாது சாதனைகளிலும் ஆழ்ந்திருத்தல் வேண்டும். ஒளி வீசும் ஒரு விளக்கிலிருந்து மட்டுமே ஏனைய விளக்குகளைக் கொழுத்த முடியும் ஒளி வீசாத வெறும் திரியிலிருந்து ஏனைய திரிகளுக்கு ஒளி கொடுக்க முடியாது. ஆனால் பல ஆசிரியர்கள் இன்று சோர்வடைந்து விட்டனர். அவர்களுடைய உற்சாகம் குன்றி விட்டது. வேண்டாத ஆசைகளின் பெருக்கத்தின் விளைவாகவே இது தோன்றி உள்ளது. ஆசிரியர்களின் மிகப் பெரிய சேவையும், அவர்களுக்குரிய கடப்பாடும் இன்று புறக்கணிக்கப் பட்டுள்ளது.

தனக்காக மட்டும் ஒருவன் வாழ்வதில்லை. அவன் பெற்றார், உற்றார் நண்பர், பகைவர், சமூகம், நாட்டு மக்கள் என்ற பலருடன் தொடர்பு கொண்டு வாழ வேண்டி உள்ளது. இவ்வாறாக ஒருவர் தொடர்பு கொள்ளும் மக்கட் பரப்பளவு தொடர்ந்து அகன்ற வண்ணமுள்ளது. பௌத்தர்கள் கூறுகின்றார்கள். ''நான் புத்தத்தில் சரணடைகின்றேன். நான் சங்கத்தில் சரணடைகின்றேன் நான் தர்மத்தில் சரணடைகின்றேன்'' இங்கு தனது சுயம் என்ற யதார்த் தத்தில் ஈடுபடுவதே முதலாவதாக அமைகின்றது ஒருவர் தாம் தமக்குரிய உள்ளார்ந்த மானுட யதார்த்தத்தின் படி வாழ்கின்றாரா என்பதைப் பரிசீலித்தல் வேண்டும். தனது மனம் மாசுபடும் சிந் தனைகளாலும், எண்ணங்களாலும் தாக்கப்படாதிருக்கின்றதா என் பதைப் பரிசீலிக்க வேண்டும். விழிப்படைந்த உள்ளத்தின் குறியீடாகப் புத்தர் விளங்குகின்றார். உள்ளம் சரியான வேறுபடுத்தலைச் செய்யக் கூடியவாறு கூர் முனைப்பாகவுள்ளதா ? இதுவே ஒருவர் தனக்குத் தான்கேட்க வேண்டிய கேள்வியாகவுள்ளது. புத்தி பலம் குறைந்த ஒருவர் கூட தனக்குப் பசியெடுக்கும் பொழுது உணவு கேட்கிறார். சில வரையறுக்கப்பட்ட தேவைகளை வெளிப்படுத்தக் கூடிய தயார் நிலையில் அவரது உள்ளம் இருக்கின்றது. ஆனால் அது மிக உயர்ந்த நிலையில் மனிதனுக்குப் பயன்படுவதாயிருத்தல் வேண்டும். இரண் டாவது நிலையானது நான் சங்கத்தில் சரணடைகின்றேன் என்பதாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் பொருள் தேடுதல் தனக்குரிய நலன்கள் மகிழ்ச்சி என்பவற்றைத் தேடுதல் ஆகிய பணிகளிலே தனக்காக ஈடுபடுதல் போன்று தான் சார்ந்துள்ள சங்கத்துக்காக (சமூகத்துக்காகவும்) ஈடுபடல் வேண்டும். ஒருவனைப் பாதுகாத்து வழிப்படுத்தும் சமூகம் இன்றி தனிமனிதன் இழக்கப்பட்டு விடுவான். ஒருவனுடைய நலன் அவன் வாழும் சமூக நலன் மீது தங்கியுள்ளது. குறித்த ஒரு சமூகத்தின் நலன் அந்த நாட்டின் நலன் மீது தங்கியுள்ளது. மூன்றாவது கட்டமாக அமைவது ''நான் தர்மத்தில் சரணடைகின்றேன்'' என்பதாகும். தர்மம் என்பது இந்தப் பிரபஞ்சத்தின் அருள். அதற்குரிய இயல்பின் அடிப்படையில் அது பிரேமை அல்லது தெய்வீக அன்பு எனப்படும். ஒருவர் அன்பில் சரணடைந்து அதனைப் போஷித்து வளர்க்கும் பொழுது தனி மனிதன், சமூகம், உலகம், என்பவை முப்பொருளிலும் முனைப்பாக உள்ளடங்கும்.

எது மிகவும் பெறுமதியுள்ள பொருள் என்று கேட்டால் ஒவ்வொருவரும் ''மாணிக்கம் அல்லது தங்கம்'' என்று விடை தருவார்கள், அவை மிக்க பெறுமானம் உள்ளவை தான். ஆனால் அவற்றுக்கு உயர்ந்த பெறுமதியைக் கொடுத்தவர் யார்? மாணிக்கத்துக்குப் பட்டை தீட்டி மெருகேற்றியவர் யார்? நிலத்தின் ஆழத்திலுள்ள தங்கப்படுக்கைகளைக் கண்டறிந்து அவற்றை வெளிக் கொண்டுவர முயற்சியெடுத்தவர் யார்? அவ்வாறு அகழ்ந்து தூய்மையாக்கப் படும் தங்கம் சர்வதேச விற்பனைப் பொருளாக்கப்பட்டுள்ளது. மாணிக்கக் கல்லும் தங்கமும் இரண்டு சடப்பொருள்கள். அவற்றை மனிதனே பெறுமதியுடையதாக்கினான். ஆனால் மனிதனே உலகில் உண்மையாக மிகவும் பெறுமதி கூடியவன். தனது தனித்தன்மையையும் முக்கியத்துவத்தையும் மனிதன் அங்கீகரித்துவிட்டான் இந்த உணர்வு இருந்த பொழுதும், அற்பமான மகிழ்ச்சியிலே தன்னை ஈடுபடுத்தி தனக்குரிய புனிதத்தைக் கெடுத்து விடுகின்றான். சிந்தனை, சொல், செயல், ஆகியவற்றிலே தூய்மையை ஏற்படுத்தும் ஆற்றலிலே தான் மனிதனுக்குரிய பெறுமானம் தங்கியுள்ளது. மனம், நா, கைகள் ஆகிய மூன்று கருவிகளையும் தூய்மையாக்கி மிகவுயர்ந்த நிலையை அடைவதற்குப் பயன்படுத்தல் வேண்டும். பேசும் சொல்லானது சிறியதாகவும் வெறும் ஒலி போன்று இருந்தாலும் அது அணுக்குண்டைப் போன்ற சக்தியுடையது. நம்பிக்கையின்மையில் ஆழ்ந்து கொண்டிருக்கும் ஒருவருக்கு மகிழ்ச்சியான ஒரு சொல்லைச் சொல்லும் பொழுது, அவருக்கு யானைக்குரிய பலம் ஏற்படுகின்றது. மாறாக மிக்க வலிமையாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கும் ஒருவருக்கு நம்பிக்கையிழக்கும் சொல்லைக் கூறும் பொழுது, அவர் துன்பத்தில் ஆழ்ந்து உழல நேரிடுகிறது. சொற்கள் தைரியத்தை வழங்கலாம் அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றலைச் செயலிழக்கச் செய்யலாம். சொற்கள் நண்பர்களைச் சம்பாதிக்கலாம். அவர்களை எதிரிகளாகவும் மாற்றியமைக்கலாம். தனிமனிதனை அவை உயர்த்தலாம். அல்லது வீழ்த்தலாம். தான் சொல்லும் சொற்களை இனிமையாக, மென்மையாக, மகிழ்ச்சியாக பேசும் பழக்கத்தை ஒருவர் கற்றுக் கொள்ளல் வேண்டும். ஒருவர் பேசும் சொற்களைக் கொண்டே அவர் மதிக்கப்படுவார். சொற்கள் வேறுவிதத்திலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. நாங்கள் பிறர் மீது மரியாதையின்றி அல்லது தூஷித்து அல்லது கேலியாக அல்லது கோபித்துப் பேசினால் அந்தப் பேச்சின் பிரதி எங்கள் மனதிலே பதிந்து விடும். ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்யப்பட்ட ஒலியானது ஒருவர் மறைந்த பின்னரும் நிலைத்து நிற்கும். அவ்வாறே ஒருவர் மறைந்த பின்னரும் அவர் வெளியிட்ட கெட்ட எண்ணங்கள், கெட்ட சொற்கள், துன்புறுத்தும் வார்த்தைகள் துன்மார்க்கச் கருத்துக்கள் முதலியவை நிலைத்து நிற்கும். ஆகவே கெட்ட, துன்மார்க்கமுள்ள, துன்புறுத்தும் சொற்களைப் பயன் படுத்தவோ, கேட்கவோ கூடாது. அவதூறு மிக்க பாவமானதாகும். பண்டைய சாதுக்கள் இதன் காரணமாக மௌனமாக இருப்பதை ஆன்மிக சாதனையாகக் கொண்டார்கள். ஆகவே ஆசிரியரும் மாணவரும் குறைந்தளவு சொற்களை பயன்படுத்த வேண்டும். மகிழ்ச்சி ஒத்திசைவு ஆகியவற்றை முன்னெடுக்கும் சொற்களை மட்டுமே பயன்படுத்தல் வேண்டும்.

மனித மேம்பாட்டுக்கான விழுமியங்கள் ஐம்பது, அறுபது, எழுபது அல்லது எண்பது என்றவாறு பட்டியலிடப்படலாம். அவற்றை மூன்று தலையங்களிலே பகுத்துக் கூறலாம். அவை தூயசிந்தனை, தூய செயல்கள் தூயசொற்கள் என்பனவாகும். சிந்தனை, சொற்கள், செயல் ஆகியவை ஒன்றுடன் ஒன்று இணைந்தவை. நீங்கள் அசுத்தமானவற்றை வாசிக்கும் பொழுது உங்கள் மனமும் அசுத்த மாகும். உங்களுக்குரிய யதார்த்தம் மூடப்படும். இற்றை நாட்களில் மக்கள் ''கடவுள்'', ''ஆத்மா'' போன்ற சொற்களை உச்சரிப்பதற்கு வெட்கப்படுகின்றார்கள். பொருத்தமற்றதும், மரியாதையற்றதுமான தலையங்களில் உரத்தும் நீண்ட நேரமும் பேசுகின்றார்கள். ஏன் அவர்கள் கடவுளின் நாமத்தை உச்சரிக்கப் பயப்படுகின்றார்கள் என்பது விளங்க முடியாமலிருக்கின்றது. உண்மையிலிருந்து விலகிப் பொய் உரைத்தலைச் சுதந்திரமாக மேற் கொள்கின்றார்கள். ஆசிரியருக்கும், மாணவருக்கும் கடவுளில் நம்பிக்கையிருத்தல் வேண்டும். இறைவனைத் துணிகரமாகப் பற்றிப்பிடித்துத் தொழ வேண்டும். இறை வழிபாடு இல்லையெனில் அனைத்தும் பேயாட்டமாகவே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்தவர்களுக்கு - புத்திஜீவிகளுக்குரிய இன்னொரு பண்பு அவர்களின் அகங்காரம் என்ற கிரீடத்தை அணிந்த வண்ணம் அவர்கள் உலாவி வருகின்றனர். உண்மையைப் பொய்யிலிருந்து பிரித்து வைக்கும் சுவரை அகங்காரம் மறைத்து வைக்கின்றது. இந்தத் தடையை நீக்குதல் வேண்டும். அப்பொழுது தான் இறை வெளிப்படுத்தப்படும். இறைவனுடனான ஒருங்கிணைப்பு உணரப்படும். அடிப்படைக்கும் மேலோட்டமானத்துக்கு மிடையேயுள்ள வேறுபாட்டை அறியக் கூடிய விழுமியத்தை மனத்திலே பதித்தல் வேண்டும். அவ்வாறே விலை மதிப்புள்ள பொருளுக்கும் அற்பமான பொருளுக்குமிடையேயுள்ள வேறுபாட்டை மனத்தின் வளர்க்கும் விழுமியத்தை அறிதல் வேண்டும் உலகம் ஒரு மாயை என்று மாணவர்களுக்குச் சொல்ல வேண்டாம். நாங்கள் இருக்கும் வரை உலகம் என்பது உண்மையானது. ஆற்றலுடன் கூடிய உண்மையானது இந்த வாழ்க்கைச் செயல் முறையில் மிருந்த ஈடுபாட்டுடன் மக்கள் வாழட்டும். சிறிது நேரத்திலே நாங்கள் உணவைச் சுவைத்து முடிந்துவிடுகின்றோம். ஆனால் அதனை மகிழ்ச்சியான அனுபவமாக்குவதற்கு அதிக பிரயத்தனம் மேற்கொண்டு சமைக்கின்றோம். அப்படியானால் எமது பல்லாண்டுகால வாழ்க்கையைச் சுவைபட ஆக்குவதற்கு நாங்கள் நீண்ட முயற்சி எடுக்கவேண்டாமா? வாழ்வைச் சுவையாக்குவதில் எவை பங்கெடுக்கின்றன? நல்ல சிந்தனைகள், தூயபழக்கவழக்கங்கள், நற்குணங்கள், நற்செயல்கள் - இவையே வாழ்க்கைக்குச் சுவையையும் மகிழ்ச்சியையும் தருகின்றன. நீங்கள் ''ஆசிரியர்'' அல்லது ''மாணவர்'' என்ற அகங்காரத்தைத் தலையிலே சுமந்து கொண்டு வீட்டுக்குச் சென்று ஓய்வுக் கதிரையில் இருந்து அங்கலாய்க்காதீர். உங்கள் தாய் அல்லது தந்தை செய்யும் வேலைகளில் மகிழ்ச்சியுடன் பங்கெடுங்கள். அது வாழ்க்கையைச் சுவையுடையதாக்கும்.

எதுவித தடையுமின்றி ஆசிரியர்கள் உபயோகமான வேலைகளிலே தம்மை ஈடுபடுத்திக்கொள்ளல் வேண்டும். வீணாயிருக்கும்பொழுது உள்ளம் கெடுதியான சிந்தனையின் ஆளுகைக்குச செல்கின்றது. ஆசிரியர்கள் மாதம் ஒரு முறையேனும் கட்டாயமாக பெற்றோரைச் சந்திக்க வேண்டும். பிள்ளைகள் மீது தேவைக்கு அதிகமான விருப்பம் காட்டுதலின் தீய விளைவுகள் பற்றி அவர்களுக்கு எச்சரித்தல் வேண்டும். தாய்நாட்டை நேசிக்கும் வண்ணம் உங்கள் மாணவரைத் தூண்டவும். சமூகசேவை செய்யவும், எளிமையான வாழ்க்கையில் விருப்பம் வைக்கவும் அவர்களைத் தூண்டவும், ஆசிரியராகவும் மாணவராகவும் உங்கள் கடமைகளை அர்ப்பணிப்புடனும், அன்புடனும் சேவை மனப்பாங்குடனும் செய்யுங்கள். நாட்டுக்கும், உலகத்துக்கும் சிறந்த உதாரணங்களாக எழுந்து நில்லுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கற்பித்தல் என்ற சேவை

நற்பண்புகளை நீங்கள் வளர்ப்பதுடன் வேறுபண்புகளை ஒழித்தல் வேண்டும் இதனை நீங்கள் செய்யும் பொழுது சேவை செய்வதற்குரிய இலக்குடன் செய்தல் வேண்டும் பிறருக்குச் சேவை செய்வதற் காகவே இந்த உலகில் அவதரித்தீர்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் உங்களுக்குச் சில ஆலோசனைகள் தருவதற்கு நான் எண்ணியுள் ளேன். கற்பித்தல் என்பது சேவை செய்யும் செயலை அடிப்படை யாகக் கொண்டது. நீங்கள் சிறிதளவாயினும் துறவை மேற் கொள்ளல் வேண்டும் நீங்கள் பாடசாலைக்கு மீண்டும் செல்லும் பொழுது முன்னரிலும் கூடிய பணத்தை நீங்கள் எதிர்பார்ப்பீர்கள். அப்படிச் செய்வது தவறானதுமல்ல. எதனையாவது நீங்கள் கேட் கலாம் அல்லது கேட்காமல் விடலாம். நிர்வாகிகள் எதனையும் தரலாம் அல்லது தராமல் விடலாம் இந்தப் பணியை நீங்கள் சேவை உணர்வுடன் செய்தல் வேண்டும். சேவை செய்து வளர்ந்த ஒரு தலைவன் என்ற அந்தஸ்த்தைச் சம்பாதியுங்கள் ஒரு நல்ல வேலை யாளே ஒரு பெரிய எஜமானாக வரமுடியும்.

விரும்பியோ விரும்பாமலோ சில கெட்ட பழக்கங்களுக்கு இரையாகி விடலாம். அவை உங்களது நலத்துக்கு தீங்கு செய்யும். நான்கு பெரும் அருள் கொடைகளையோ, அல்லது அவற்றுள் ஒன் றையோ உணர்ந்து கொள்வதற்கு உடல் நலம் முன் நிபந்தனையாக விளங்குகின்றது. கெட்ட குணங்கள் உங்களைப் பலவீனப் படுத்தும். சமூகத்தில் உங்களுக்கிருக்கும் மேன்மையான அந்தஸ்தைக் கெட்ட குணங்கள் பறித்து விடும். கெட்ட குணங்களுக்கு நீங்கள் அடிமைப் பட்டிருக்கும் பொழுது உங்கள் கடமைகளை நீங்கள் சரிவரச் செய்ய முடியாது. உங்கள் மனைவி, பிள்ளைகள் முதலியோர் உங்களது நிராகரிப்பினால் அல்லலுறுவார்கள். உங்களுடைய வாழ்க்கை நலமுடையதாக இருந்தால் மட்டுமே நாம் மேற் கொள்ளும் இந்தக் கல்வி முயற்சி வெற்றியளிக்கும். அரசாங்கத்தின் திட்டங்களும், செயற் திட்டங்களும் எவற்றை அடைந்திருக்கின்றன? மலர்களின்றி நீங்கள் மாலையை எவ்வாறு செய்வீர்கள் ? ஒரு மலர் மட்டும் மாலை யாகாது. எல்லாரும் இசைவுடன் ஒன்று சேரும் பொழுது தான் அரசாங்கம் என்ற மாலையை உருவாக்க முடியும். ஆகவே நீங்கள் உறுதியான உடற்பலத்தை வைத்திருங்கள். தூய்மையான இலட் சியங்களையும் சுயநலமற்ற நோக்கங்களையும் வைத்திருங்கள். உங்கள் நாட்டுக்குச் சேவை செய்வதற்கு இவை இன்றியமையாதவை எந்த இலட்சியத்தையும் ஆசிரியரால் அடைய முடியும். ஆனால் அவர்கள் கூட்டுறவுடனும், நல்ல ஒழுக்கமுடனும் ஈடுபடல் வேண்டும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவையிலும் தியாகத்திலும் ஆழ்ந்து இலட்சியத்தை அடையும் திடசங்கற்பத்துடனும் இருத்தல் வேண்டும். அப்பொழுது தான் அரசாங்கத்தை உங்களால் உரிய முறையிலே வழிநடத்த முடியும்

**எடுத்துக் காட்டும் உள்விளக்கம் பெறலும்**

நீங்கள் வளரும் குழந்தைகளின் ஆசிரியர்களாக, வழிகாட்டியாக, எடுத்துக் காட்டாளர்களாக விளங்கும் பணிகளை ஏற்றுள்ளீர்கள். இந்தப் பாத்திரங்களை ஏற்றுச் செயற்படுத்துவதற்கு உங்களை வளப் படுத்திக் கொள்ளல் வேண்டும். அதாவது மனிதருக்கே உரித்தான விழுமியங்கள் உயர்ந்து செழிக்க நீங்கள் வாழ வேண்டும். உங்களிடத்து உயர்ந்த விழுமியங்களை நிலை நிறுத்தி, அவற்றின் வழி ஒழுகிப் பேரானந்தம் பெற்றுக் கொள்ளுங்கள், அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி என்று பழமொழி கூறும். இலட்சியங்களின் படி வாழ்ந்து, மாணவரை நல்வழிக்கு அழைத்துச் செல்லுங்கள். சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை, ஆகிய உந்தல்களை மாணவர்களது உள்ளங்களிலே மலரச்செய்யுங்கள். இந்த ஆன்மிகச் செல்வங்கள் மட்டுமே மகிழ்ச்சியையும் பேரானந்தத்தையும் வழங்கும்.

இந்த உண்மையான மனித விழுமியங்களைப் புத்தகங்களில் இருந்து கற்க முடியாது. அல்லது ஆசிரியர் தரும் பாடங்களில் இருந்து அறிய முடியாது. அல்லது முதியோர் வழியாகப் பெற்றுக் கொள்ள முடியாது. அனுபவங்கள் வழியாகவும், உதாரணங்கள் வழியாகவும் அவற்றைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். மாணவர்கள் அனுபவிக் கத்தக்க முன்னுதாரணங்களாக நீங்கள் விளங்க வேண்டும். உங்களது எல்லாத் தொழிற்பாடுகளும் சரியாக இருந்தால், ஒருவரது மனத்திலே அமைதி நிலவும், வன்முறைகளின் கவட்டிலிருந்து மனம் விடுவிக் கப்படும். அன்பே மிகுதியாகக் கூறப்பட்ட ஏனைய நான்கு விழுமி யங்களையும் பராமரிக்கக் கூடியது.

அன்பு சிந்தனையில் சத்தியமாகும்.
அன்பு செயலில் தர்மமாகும்.
அன்பு உணர்வில் சாந்தியாகும்.
அன்பு விளக்கத்தில் அகிம்சையாகும்.

இந்த நான்கு அடிப்படை விழுமியங்களையும் நீங்கள் பாடசாலை பாடசாலையாக, ஊர், ஊராக செயற்படுத்தும் பொழுதும், வற் புறுத்தும் பொழுதும், மட்டுமே மனிதன் தெய்வீக நிலைக்கு உயர்த் தப் படுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெய்வீகக் கணிதம்

நீங்கள் பாடசாலையிற் கற்பிக்கும் பாடங்கள் வேறுபடலாம். ஆனால் ஒவ்வொரு பாடத்தினூடாகவும் மனித மேம்பாட்டுக்கான விழுமியங்களை வலியுறுத்தலாம். மனித உடல் செயற்பாடு கொண்டதும் நன்கு ஒழுங்கமைக்கப்பட்டதுமான ஓர் ஆய்வுகூடமாகும் நீங்கள் ஒரு மேசைக்கு அறையும் பொழுது அந்த மேசையும் சமமான வலுவுடன் உங்களுக்கு அறைகின்றது. ஒவ்வொரு செயலுக்கும் ஓர் எதிர்த்தாக்கம் உண்டு. கணிதத்தைக் கற்பிக்கும் பொழுது, நேர், மறை என்பவற்றின் இயல்புகளை வாழ்க்கையுடனும் மனிதனுடைய விதியுடனும் தொடர்புபடுத்தலாம் எண்கணிதப்படி மூன்றில் ஒன்று போனால் மிகுதி இரண்டு. ஆனால் தெய்வீக கணிதத்தில் மூன்றில் ஒன்று போனால் மிகுதி ஒன்று. கடவுள் இயற்கையிலே மனிதனாகிய பிம்பத்தையும் மனிதனையும் காட்டுகின்றார். இங்கு மூன்று பொருள்கள் காட்டப்படுகின்றன. பிரதி பிம்பத்தை நீக்கும் பொழுது, கடவுள் என்ற ஒரு பொருள் மாத்திரமே எஞ்சி நிற்கிறது.

## ஆசிரியருடைய பணி

ஆத்மாவைச் சரியாக வேறுபிரித்துக் கண்டறிந்து அதில் உறுதியான நம்பிக்கையை ஆசிரியர்கள் வைத்திருத்தல் வேண்டும் விதை எப்படியிருக்கின்றதோ அவ்வாறே செடியும் இருக்கும். இவ்வகையான நல்ல அறிவு விதையை விதைத்தாலன்றி மேம்பாட்டுக்கான விழுமிய ஆக்கம் நிகழமாட்டாது. "நான் யார்" என்பது கேள்வி. இதற்கான விடை தெரிந்து கொள்ளவும் அனுபவிக்கப்படவும் வேண்டும். நான் என்பதற்குரிய சமஸ்கிருதச் சொல் "அக" என்பதாகும். எமது சிந்தனைகள் வெளிப்பாடுகள் அனைத்தும் எமக்குள்ளேயே இருக்கின்றன. இதற்கு வெளியில் எதுவுமில்லை.

நான் என்பது அனைத்துப்பணிகளுக்கும் கடமைகளுக்கும் மத்தியாக இருக்கின்றது. தமக்குக் கிடைக்க வேண்டிய மதிப்புத் தரப்படவில்லை என்று ஆசிரியர்கள் குறை கூறுகின்றனர் அவர்கள் கடமைகளைச் செய்தால் கட்டாயமாக அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய மதிப்புக் கிடைக்கும். ஆசிரியரும் மாணவரும் தமது கடமைகளைச் செய்யும் நோக்குடையவர்களாயிருத்தல் வேண்டும். கெட்ட பழக்கங்களுக்கும் சிந்தனைகளுக்கும் எதிரான விழிப்புடன் அவர்கள் இருத்தல் வேண்டும். கெட்டபழக்கங்களும் சிந்தனைகளும் மனத்தின் உள்ளே தங்கியிருந்து, கறையான்கள் உள்ளீடுகளை உண்பது போல, மனிதனைச் சீரழித்து விடுகின்றன. ஆசிரியரும் மாணவரும் ஆக்கபூர்வமான நட்புறவுகளை வளர்த்தல் வேண்டும். மாணவரின் இன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தையும், துன்பத்தையும் தங்களுடையவை போன்று ஆசிரியர்கள் பகிர்ந்து கொள்ளல் வேண்டும். பாலில் தேநீர் கலத்தல் போன்று ஆசிரியர் மாணவரோடு இணங்கி ஒன்றித்தல் வேண்டும். சூடேற்றப் படும் பொழுது பாலில் உள்ள நீர் வெளியேற பால் பொங்குகின்றது. நெருப்புக்குள் அது பொங்கி விழ முனைகிறது. அப்பொழுது நீரைப் பாலுடன் கலக்க மீண்டும் சட்டியிலுள்ள பால் சாந்தமடைகின்றது.

மனிதனுக்குள்ளே சூரிய ஒளிபோன்ற ஞானம் இருந்த பொழுதும் அவன் இருட்டறைக்குள்ளே வாழ்வதுபோன்று நடந்து கொள்ளுகின்றான் இதுவே ''மிகப்பெரிய மாயைத் தோற்றம்'' என்று கூறப்படும். ஆகவே ஒளியேற்ற வேண்டிய பணியை ஏற்றுள்ள ஆசிரியர்கள் மாணவர்களது பிஞ்சு உள்ளங்களில் பொதிந்துள்ள ஒளியை உணர்த்தல் வேண்டும். அப்பொழுது தான் ஆசிரியர் மாணவரைத் தனது அரவணைப்பிலே புத்தூக்கப்படுத்த முடியும்.

**சாயி கல்லூரிகள் எதற்காக**

நன்றியுணர்வு, தயவு, பொறுமை முதலியவற்றை மாணவர்கள் மேம்பாடு கொண்ட முறையில் வளர்த்தல் வேண்டும் சாயி கல்லூரிகளில் மாணவர் துறவு என்ற கலையைப் பயில்வதுடன் நல்லொழுக்கத்தையும் கற்றுக் கொள்வர். இலட்சிய வாழ்க்கையை மேற்கொள்கின்ற ஒரு மாணவர் பரம்பரையை உருவாக்குதலே சாயி கல்லூரிகளின் இலட்சியமாகும்.

எமது வாழ்க்கையின் பெரும்பகுதி சமூகப்புலத்திலே செலவு செய்யப்படுகின்றது. எமது பிறப்பு, இறப்பு, மறைவு ஆகிய அனைத்தும் சமூக நிபந்தனைகளுக்கு உள்ளாகின்றன. மானுட சமுதாயமின்றி மனிதனால் உயிர்வாழ முடியாது. இது சத்தியம். இதுவே மனிதனுக்குரிய மிக நல்ல செல்வம்.

நீண்ட சொண்டுகளைக் கொண்ட கொக்கு தான் உண்ணும் ஜந்துக்களின் துயரமான விதியை எண்ணிக் கலங்குவதில்லை. மாணவரும் தம்மைப் பாதுகாக்கும் சமூகத்தைப் பற்றியோ சமூகம் எதிர்பார்க்கும் நன்றிக் கடன்கள் பற்றியோ கவலையற்று இருக்கின்றனர். ஒவ்வொரு மனிதரும் வேறு பத்துப் பேர்களிடத்து மகிழ்ச்சியை ஏற்படுத்துவதற்குத் தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். தமது வாழ்வைப் பராமரித்தல் போன்று சமூகத்தைப் பராமரிப்பதற்கும் மாணவர் தீர்மானம் எடுத்தல் வேண்டும். இது தவ வாழ்வின் பண்பினை யொத்ததாக, ஓர் உன்னத அபிமானம் படைத்ததாக, இருத்தல் வேண்டும். இந்த வகையான மனோபாவம் மட்டுமே வாழ்க்கையைப் புனிதமுள்ளதாக ஆக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நட்பு

மாணவர்கள் நண்பர்களைப் பற்றியும் நட்பைப்பற்றியும் பேசுகின்றார்கள். ஆனால் அவர்கள் உண்மையில் இதுபற்றிக் கருதுவது என்ன? அதை அவர்கள் மிக இலகுவானதாகவும் - விஷமத்தனமுள்ளதாகவும் கருதுகிறார்கள். தெய்வீக மனோபாவங்களையும், புனிதமான பாதையையும் கைக்கொள்வதற்கு இது உற்சாக மளிக்கவில்லை' நட்பு என்பது கண்களைப் பாதுகாக்கும் கவசமாகவும், கால்களைப் பாதுகாக்கும் பாதகணியாகவும் உதவுதல் வேண்டும். நண்பன் என்பவன் ''என்னைப் போன்ற வேறொருவன்'' என்றிருத்தல் வேண்டும். மற்றவர்களின் மகிழ்ச்சியையும் துன்பத்தையும் எவ்வாறு அனுபவிக்கின்றார்களோ அத்தகைய ஆழத்துடன் அனுபவித்தல் வேண்டும்.

உங்களுடைய நண்பர்கள் நீங்கள் வைத்திருக்கும் பணத்துக்காகவும், உங்களுடைய தந்தையாரது அன்பினால் கிடைக்கப் பெறும் அனுகூலங்களுக்காகவும் உங்களுடன் தம்மை இணைத்துக் கொள்ளுகின்றார்கள். உங்களுடைய பணப்பை காலியாகும் பொழுது, உங்களுடைய தந்தையார் அதிகாரத்தில் இல்லை என்று ஆகும் பொழுது உங்களை விட்டு அகன்று விடுவர். கெட்ட பழக்கங்களுக்கும் தீய நடத்தைகளுக்கும் இழுத்துச் செல்லும் நண்பர்கள், பாதிக்கப்படுவோரைத் தேடிக் கள்ளத்தனமாகச் சுற்றித் திரிவர் பொய்மை விரைவாகப் பரவும். கெட்ட நண்பர்கள் விரைவாக ஒட்டிக் கொள்வர். நிராகரிப்பு, சந்தேகப்பாடுகள் என்ற மூடுதிரைகளின் மத்தியில் சத்தியம் என்பது மிக மெதுவாகவே மீள் நோக்கப்படும்.

## நன்றியுணர்வு

மாணவர்கள் நன்றியுணர்வு, தயவு, பொறுமை, முதலியவற்றை வளர்த்தல் வேண்டும். மனம் நொந்திருப்போர் மீது அனுதாபம் கொள்ளுதல் அடிப்படையான ஒரு மானுடக் குணவியல்பு ஆகும். அவர்கள் நன்றியுணர்வை வளர்த்தல் வேண்டும். நாங்கள் பசியாயிருக்கும் பொழுது யாராயினும் உணவு தந்தால் நாம் அவர்கள் மீது நன்றி செலுத்துவோம். எமது நோயைக் குணமாக்கும் வைத்தியர் மீதும் ஒரு நெருக்கடியிலிருந்து விடுவிக்கும் நண்பன் மீதும் ஒரு தொழிலுக்காக நாம் அலைந்து திரியும் பொழுது தொழில் தரும் உத்தியோகத்தர் மீதும் நாங்கள் நன்றியுணர்வு கொள்வோம். ஆனால் எங்களுக்கு இந்த அற்புதமான சரீரத்தையும் ஆற்றல்களையும் திறன்களையும் அருட்கொடையாக வழங்கிய இறைவன்மீது யார் நன்றியுடையவர்களாயிருக்கின்றனர்? தனக்குரிய சரீரம் கிடைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமைக்கு அலெக்சாந்தர் தமது தாயாருக்கு நன்றி செலுத்தினார். அதே வேளை இந்தப் பேற்றினைத் தனது தாயாருக்கு வழங்கிய கடவுளுக்கு மேலாக நன்றி செலுத்த வேண்டுமென்றும் கூறினார்.

பிழையான ஒரு சிறிய திருப்பமும் பெரிய அவலத்தை ஏற்படுத்தக் கூடிய பருவமே இளமைப்பருவம். சிந்தனையே பிற்காலத்தைய தொழிலுக்கு வழிகாட்டும் நீங்கள் அதிகபணம் சம்பாதிக்கத் திட்டமிடுகின்றீர்கள். ஏனெனில் பணக்காரர்கள் மிகக் மகிழ்ச்சியுடன் இருப்பதாகக் கற்பனை செய்கின்றீர்கள். செல்வந்தர்கள் உண்பதற்கு அதிக உணவு உண்டு. ஆனால் அவர்களுக்கு உண்ணும் விருப்பமில்லை. மற்றவர்களுக்கு மேலான அதிகாரத்தைச் செல்வந்தர்கள் வைத்திருக்கின்றார்கள் ஆனால் அவர்களை நோய் வீழ்த்தி விடுகின்றது. செல்வந்தர்களுக்கு அதிக எடுபிடியாட்கள் உள்ளனர். ஆனால் செல்வந்தர்கள் சாந்தியில் வாழ முடியாதுள்ளது. ஆகவே, உயர்ந்த நற்குணநலனுக்கும் தியானத்துக்கும், அற்பணிப்புக்கும், நல்ல நிகழ்ச்சிகளுக்குமாகத் திட்டமிடுங்கள். இறைமை கொண்ட ஒழுக்கத்திலே செல்வந்தராகுங்கள். ஒழுக்கம் என்றால் என்ன ? உண்மையோடு ஒன்றித்தல், துறவு, உண்மை அன்பு, சுயநலமற்ற சேவை, ஆகியவையே ஒழுக்கத்தின் அடிப்படைக் கூறுகள். உமது உள்ளுணர்வைப் பின்பற்றிச் செல்லுங்கள். நீங்கள் தவறு செய்ய மாட்டீர்கள்.

### தெய்வீகமற்றகல்வி

புத்தகங்களைப் படித்தலே போதுமானது என்று மாணவர் இன்று கருதுகின்றனர். இதிலிருந்து பெறும் விளைவு என்ன ? புலமைக்குரிய பரீட்சிப்பு ஆக மென்மையான இனிய சொற்கள் கருதப்படுகின்றன. நல்ல சொற்கள் திட்டமிட்டு வெளிப்படுத்தப்படுகின்றன. புலமையாளர்கள் சமூகத்துக்குச் சேவை செய்வதில் ஈடுபடுகின்றனரா ? பிறருக்குத் தீங்கு தரும் செயல்களை செய்யாதிருக்கின்றார்களா ? தமது மகிழ்ச்சியை மேம்படுத்தியவர்கள் மீது நன்றியுணர்வு கொண்டிருக்கின்றார்களா ? இவற்றின் வழியாகவே அவர்களைப் பரீட்சித்தல் வேண்டும். மாறாக அவர்கள் எத்தனை புத்தகங்களை வாசித்துள்ளார்கள். எத்தனை பட்டங்களை வைத்திருக்கின்றார்கள் என்பது முக்கியமன்று. படித்த புலமையாளரைப் பாருங்கள். அவர்கள், அவா, சந்தேகம், பொறாமை, பிரிவுமனோபாவம், என்பவற்றுக்குக் கொத்தடிமைகளாகிவிட்டனர். அவர்கள் திடநம்பிக்கை அற்று இருக்கின்றனர். அவர்களால் நித்திரை செய்ய முடியாதுள்ளது. உணவை ஆசையோடு உண்ண முடியாதிருக்கின்றது. ஒருவர் மீது ஒருவர் ஐயப்படுகின்றனர். இந்தச் சோக நிலைமைக்குக் காரணம் தெய்வீக நோக்கும், அனுபவமும், இல்லாமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் கூட நம்பிக்கையீனம் என்ற தீய சக்திகளினாற் சூழப்பட்டுள்ளோம். நாங்கள் கடமைகளைச் செய்கின்றோம். ஆனால் அவற்றுக்குரிய பயன் கிடைக்குமோவென்று சந்தேகப்படுகின்றோம். இது பலவீனத்தின் அறிகுறி. வெகுமதி கிடைப்பது உறுதி. தயக்கம் ஏன்? உங்களது கடமைகளைச் சரிவரச் செய்த திருப்தியை அடையுங்கள். கடமையைச் செய்யத் தவறாதீர்கள். சட்டங்களை மீறித் தீய வழியிலே நடப்பவர்கள், நன்மைகள் பாதிக்கப்படும் பொழுது சட்டப் பாதுகாப்பைத் தேடுகின்றனர். இது மிகவும் துன்பமான நிலையாகும்.

## இலட்சிய மாணவர்கள்

எல்லா நாடுகளிலும் இந்த வளர்ச்சி ஏற்பட்டு வருவதை சாயி கண்டறிந்துள்ளார். இவற்றை முடிவுக்குக் கொண்டு வரவே இந்தக் கல்லூரிகளை நிறுவியுள்ளார். இங்கு இளைஞர்கள் துறவு பற்றிய நுண்திறன்களைக் கற்றுக் கொள்வார்கள். அவர்கள் நல்லொழுக்கத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும். இவை இரண்டுமே வாழ்க்கையைப் பாதுகாப்பாகக் கொண்டு செலுத்துவதற்குரிய கண்கள். துறவு என்பது விடுதலைக்கான தங்கத்திறவுகோல். சொத்துக்களையும் பொருள்களையும் திரட்டிக் குவித்துச் சேர்ப்பதில் கற்றவர்கள் ஈடுபடலாகாது. உங்களுக்காகவும் உங்களுக்கு உயர்ந்த வழியைக் காட்டுவதற்காகவும் சாயி எல்லாவற்றையுமே செய்வார். ஆனாலும் இவற்றை விளங்கிக் கொள்வதற்கான உங்களுடைய அறிவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால் பிழையான வழிகளில் நீங்கள் வீழ்ந்து விடுவீர்கள் தன்னை முனைப்பாக்குவதற்காக சாயி இந்தக் கல்லூரிகளையும் விடுதிகளையும் கட்டவில்லை. உலகத்தில் பல இலட்சம் கணக்கான கல்லூரிகள் உள்ளன ஆனால் சாயி கல்லூரிகளின் நோக்கம் இலட்சிய வாழ்வு வாழக் கூடிய மாணவர் பரம்பரையை உருவாக்குதலாகும். நல்ல இலட்சிய உணர்வுடன் சமூக சேவையை ஆன்மிகக் கடமையாகக் கொண்டு மாணவர்கள் செல்லும் பொழுது மனிதவியல்பு மேம்பாடு கொண்டதாக அமைகிறது. மனிதவியல்பை உங்களிடத்து நிலை நிறுத்தக் கூடிய நல்லியல்பு உங்களிடம் காணப்படுகின்றதா? பணிவுடைமை, சேவை செய்வதற்குரிய தயார் நிலை, பிறர் துன்பத்தில் பங்கேற்றல், ஆகியனவே மனிதப் பண்புகள். இவை உங்களுக்கு எடுத்துக் காட்டுகளாகவும் அமையும்.

ஆசிரியர் கொடுக்கின்றார், மாணவர் பெறுகின்றனர். ஆசிரியர் வழங்குதற்கு அதிக அறிவை வைத்திருத்தல் வேண்டும். அதற்கு அமைந்த கற்றல் தேவையை ஆசிரியர் உணர வேண்டும். குழாய்கள் வழியாக நீர் வருவதற்கு போதிய நீர் தாங்கியில் இருத்தல் வேண்டும். காளிதாசன் என்ற பெருங் கவிஞரது நினைவுகள் இங்கு பொருத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமானதாக அமையும். போஜா பேரரசரைப்பற்றி இரு பெரும் கவிஞர்கள் வாதிட்டுக் கொண்டிருந்தனர். போட்டி தொடர்ந்து கொண்டிருந்தது. யார் வெற்றி பெறுவார்கள் என்பதைக் கண்டறிய முடியாமல் இருந்தது. இருவரிலும் யார் மேலானவர் என்பதைக் கண்டறிய காளிதாசர் ஓர் உபாயத்தை முன்மொழிந்தார். இரு பண்டிதர்களினதும் மாணவரைச் சொற்போர் புரிய வைத்து, யார் வெல்லுகின்றார்களோ அவர்களுக்கே வெற்றி என்று கூறினார் மாணவரும் வாதாட்டத்தில் இறங்கினர்.

உயர்ந்த ஆசிரியரே உயர்ந்த மாணவரை உருவாக்க முடியும் என்பது இதனாற் பெறப்படுகின்றது. இன்றைய ஆசிரியரும் மாண வரும் சோம்பேறித் தனத்துக்கு அடிமையாகிவிட்டனர். உற்சா கத்துடன் அவர்கள் வேலையை மேற்கொள்ளுகின்றார்கள் இல்லை ஒரு சிறிய வேலைக்கு அவர்கள் பெருமளவு பணத்தைக் கேட்கின் றனர். அவர்கள் சொகுசாக இருந்து கொண்டு பெருமளவு மாதாந்த சம்பளத்தைப் பெறுகின்றார்கள். இதிலும் கெடுதலான வாழ்க்கை வேறு உண்டா ? இப்படிப்பட்டவர்கள் நாட்டைச் சீரழிக் கின்றார்கள். கைகளால் வேலை செய்யாது கைகள் நிறைந்த பணத்தை வேண்டுகின்றார்கள். நீங்கள் பெற்ற கல்வியைக் கொண்டு மக்களைச் சூறையாடிவிடக் கூடாது. மாணவர்களே ! இவ்வாறான கெட்ட எண்ணங்களுக்கு இடமளியாதீர்கள். சீரழிந்த பாதையிலே செல்லா தீர்கள். கடினமாக உழைத்துப் பணத்தைச் சம்பாதியுங்கள், அப் பொழுது தான் நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் சுகமாகவும் மகிழ்ச்சியிலும் இருப்பீர்கள்.

## அன்பு மழை

மேலும் ஒரு கருத்து உண்டு. சாயி உங்கள் மீது சொரியும் அன்பை நீங்கள் எல்லோரும் நன்கு அறிந்திருப்பீர்கள். பச்சிளம் பாலகரைப் பராமரிப்பது போன்று உங்களை சாயி பாதுகாக்கின்றார். இந்த மாமண்டபங்களை அவர் கட்டியதுடன் உங்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்துள்ளார். ''நான் செய்யும் கடமை களுக்காக உங்களிடமிருந்து நன்றியை எதிர்பார்க்கவில்லை. ஆனால் நீங்கள் மிகவுன்னதமான பாதையாகிய சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை முதலியவற்றை விட்டு மாறான திருப்பத்தை எடுக்கும் பொழுது நான் கவலையடைகின்றேன். உங்களது வாழ்க்கையின் மிக்க பெறுமதியுடைய காலத்தை நீங்கள் வீணடிப்பதைக்கண்டு நான் துன்பமடைகின்றேன். உங்களுக்காக உங்கள் எதிர்காலம் பற்றி மிக்க ஆவலுடையவனாக நான் இருக்கின்றேன். நீங்கள் நல்ல வாழ்க் கையை அனுபவிக்கும் பொழுது நான் பாராட்டப்படுவதில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது நீங்கள் தவறான வழியில் செல்லும் பொழுது நான் குற்றம் சாட்டப்படுவதில்லை. இரண்டைப்பற்றியும் நான் கவலைப்படப் போவதில்லை. இந்தக் கல்லூரியின் மேன்மையை உங்கள் மனத்திலே பதியுங்கள். உங்களிடமிருந்து உலகம் எதிர்பார்க்கும் நற்பண்புகளை உங்கள் மனத்திலே பதியுங்கள். துறவு நல்லொழுக்கம் ஆகிய இரு நற்பண்புகளிலும் உங்களை நிலை நிறுத்துங்கள்.''

## ஓர் இலட்சியப் பல்கலைக்கழகம்

கல்வியில் அல்லது அறிவில் நாம் பின்னடையும் பொழுது பெற்றார் துன்ப மடைகின்றார்கள். அறத்திலும், தெய்விக அருளிலும் நாங்கள் கீழடையும் பொழுது எமது தாய்நாடு மிகுந்த துயரம் அடைகின்றது. பௌதிகத் தாய், பண்பாட்டுத்தாய் ஆகிய இருவரதும் துயரத்தைத் தணித்து தாய் நாட்டில் சாந்தி, சுபீட்சம் ஆகியவற்றை மேம்படுத்தல் வேண்டும் இந்தப் பணிக்குரிய உற்சாசமும் திறனும் மாணவரிடத்து உண்டு. தெய்வீகச் செல்வங்கள் மேலோங்கிய இந்த நாட்டில் தர்மம் நாளுக்கு நாள் வீழ்ச்சியடைகின்றது. அதர்மம், நீதியீனம், வன்முறை, சமூகவிரோதச் செயல்கள், பொய்ம்மை ஆகியவை வளர்ந்துள்ளன. எதுவித தங்குதடையுமின்றி இவற்றின் ஆட்டம் நிகழ்கின்றது. இந்தக் கலியுகத்திலே மாணவர்கள் கழகங்களை அமைத்து சாந்தி, தர்மம் ஆகியவற்றை தனி மனிதரிலும் சமூகத்திலும், தேசிய வாழ்விலும் ஏற்படுத்த வேண்டும்.

மாணவர்களே! இன்றைய தலைவர்கள், நாம் மதிக்கும் அதிகாரத்திலுள்ளவர்கள், நாங்கள் வணங்கும் முதியோர் ஆகியோர், சில காலங்களுக்கு முன்னர் மாணவராக இருந்தனர் என்பதை நினைவிற் கொள்ளுங்கள். இன்னும் சில காலங்களுக்குப் பின்னர் இதே பதவிகளை நீங்கள் ஏற்பீர்கள். உங்களுக்குரிய இந்தப் பொறுப்பை நீங்கள் மறந்து விடாதீர்கள்.

எமது தாய்நாடு வெறுமனே மண்ணினால் செய்யப்பட்டதன்று. இதன் முன்னேற்றத்திலே கவனம் செலுத்தும் நாங்கள் இங்கு அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கும் மக்களின் முன்னேற்றத்தை முன்னெடுக்க வேண்டும். மனிதர்களை மறுசீரமைத்து சீர்திருத்தும் திறன் மாணவர்களிடத்தே உண்டு. சீர்திருத்தும் செயல் முறையானது கெட்ட நடத்தைகள், கெட்ட பழக்கங்கள், ஆகியவற்றை நாளாந்த வாழ்க்கையிலே கைவிடுதலும், நல்ல நடத்தைகள் நல்ல பழக்கங்கள் ஆகியவற்றை பின்பற்றுதலுமாகும். ஒரு மனிதனுடைய பெறுமானம் அவன் தன்னைச் சீர்திருத்தும் ஆற்றலால் மதிப்பிடத்தக்கது. இன்று அரசாங்கம் மக்களைத் திருத்துவதற்குரிய வல்லமை கொண்டிருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவில்லை. அவ்வாறே அரசாங்கத்தை திருத்துவதற்குரிய வல்லமை மக்களுக்கு இல்லை.

நாட்டின் அடிப்படையாக அமைபவர்கள் மாணவர்கள். அடிப்படை உறுதியாக இருந்தால், கட்டடமும் உறுதியாக இருக்கும். அடிப்படையை வலிமையாக்க வேண்டுமானால் மக்கள், ஆட்சியாளர், பெற்றோர், மாணவர், ஆகிய அனைவரும் தமது திட்டங்களையும் முயற்சிகளையும் ஒன்றிணைத்தல் வேண்டும். இந்த ஐந்து சாராரும், இந்த ஐந்து வலிய சக்திகளும் இலட்சிய முடிவை நோக்கி ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

இந்தப் பிரச்சினைக்குரிய தீர்வு ஒன்றே தான். கல்வியிலே சத்திய ஒளியை ஏற்றுதலும். பாதுகாத்தலுமாகும். மாணவர்கள் பிரிவினை கொண்ட ஒழுங்கற்ற பாதையிலே சென்றுகொண்டிருக்கின்றார்கள். மாணவர்கள் இயல்பிலே கெட்டவர்கள் அல்லர். தேசிய அடிப்படையிலும் சமூக அடிப்படையிலும் எழுகின்ற எல்லாத்துறைகளிலும் ஏற்பட்டுள்ள மாசுபாடான நிலமைகளால் அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே கல்வித்துறையைச் சீர்திருத்துவதனால் மட்டும் நாடு முன்னேற முடியாது.

கல்விச் செயல் முறையானது அடிப்படையில் புனிதமானது. அதனை முன்னேற்றுவதற்கு நாம் கற்க வேண்டும், பல கடமைகளை நிறைவேற்ற வேண்டும். பலபல விஷயங்களைத் தொகுத்து நொக்க வேண்டும். அற்றை நாளில் அறமேம்பாடே கல்விச் செயற்பாட்டின் உன்னத இலக்காக அமைந்தது. இந்த இலக்கை அடைந்ததும் மாணவர்கள் பயமின்றி காட்டிலுள்ள சிங்கம் போன்று சுதந்திரமாக உலா வரலாம் அவர்கள் தம்மைக் கீழிறங்கிக் கொள்ளக் கூடாது. கபடம் செய்தல், ஏமாற்றுதல் முதலியவற்றையுடைய நரிகள் அல்லது ஓநாய்களின் நிலைக்கு மாணவர் தம்மைக் கீழிறக்கக கூடாது. இன்றைய கல்வி நிலையங்களிலே சிங்கங்களைக் காண முடியாது. ஆனால் ஓநாய்களையும் தான் அதிகமாகக்காண முடிகின்றது.

புத்தகங்களின் உள்ளடக்கத்தைத் தேடிக் குவிப்பதால் மட்டும் ஒருவன் கற்றவனாகி விட முடியாது. எங்கு மாணவர்கள் இருக்கின்றார்களோ அங்கு சாந்தி பாதுகாப்பு ஆகியவற்றின் ஒளி வீச வேண்டும். தூய்மை அங்கிருந்து துலங்க வேண்டும். இன்றைய எமது கல்வி வளாகங்களில் சாந்தியும் பாதுகாப்பும் நிலவுகின்றதா? இல்லை. கல்வியானது மற்றவர்களை முன்னேற்றும் உளப்பாங்கிலிருந்தே மதிப்பிடப்பட வேண்டும். மக்களின் பாதுகாவலாகர்களாக மாணவர்கள் வளரவேண்டும் எதிர்காலத் தலைவர்களும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகிகளும் மாணவர்களாக இருத்தலினால் அவர்கள் தேசிய சேவைக்குத் தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும். தேசத்தை மேன்மையுள்ளதாக்கும் பொறுப்பு மாணவர் மீது விடப்பட்டுள்ளது. இந்த நாட்டின் எதிர்காலத்தை ஒளிபெறச் செய்தலை மாணவர் நிறைவேற்றி வைக்க வேண்டுமாயின் கல்விச் செயலமைப்பு மறுசீர மைக்கப்படல் வேண்டும்.

புத்தகங்களைப் படித்துப் பட்டங்கள் பெற்றதனால் பலர் தலைவீங்கித் திரிகின்றனர். கடவுளைக் கைதொழாமல் இந்தப் பட்டங்களை வைத்திருப்பதால் என்ன பிரயோசனம்? பணிவே புலமையின் அடையாளமாக இருத்தல் வேண்டும். இந்த அடையாளம் இல்லா விடில் புலமை அறியாமையாகிவிடும். தெய்விகக் கல்வியின் விளைவே பணிவு ஆகும். ஆனாலும் உலகியற்கல்வி முக்கியமானது. இதனைப் புறக்கணிக்கவும் முடியாது. ஆனால் ஒருவரது ஆத்ம உள்ளீட்டைப் படிப்பது மிகவும் முக்கியமானது. அடுத்ததாக அமைவது ஐம்பூதங்கள் பற்றிய கல்வி. இதுவே உலகை உருவாக்குகின்றது. இயற்கையைக் கையாண்டு சொகுசாக வாழ்வதற்கு இவை பற்றிய அறிவு பெறப் படுகின்றது. உலகம் எவ்வாறு சுழல்கின்றது? ஏன் சுழல்கின்றது? சூரியக் கதிர்கள் எவ்வளவு தூரம் செல்லுகின்றன? ஒரு நிமிடத்தில் அவை எவ்வளவு தூரம் செல்லுகின்றன? இவற்றைப் படிப்பதால் மனிதன் எவ்வளவு தூரம் நன்மை அடையலாம்? மிகவும் முக்கியமா கப் படிக்கவும் உற்றுநோக்கப்பட வேண்டியவையாகவும் பின்வருபவை அமைகின்றன. உங்கள் இதயம் எத்துணை விசாலமானது? உங்களிடம் இருந்து சமூகம் பெற்ற நன்மைகள் யாவை? உங்களை மேன்மைப்படுத்தக் கூடிய ஆன்மிகப் பயிற்சிகள் யாவை? உங்கள் உள்ளார்ந்த இயல்புகள் பற்றி எவ்வளவு தூரம் அறிந்துள்ளீர்? உங்களுடைய இருப்பின் நோக்கமும் இலக்கும் யாவை?

கல்வி வளர வளர ஒருவர் பிறர் மீது செலுத்துகின்ற அன்பு உந்தல்கள் இழக்கப்படுகின்றன. சுற்றத்தவர்களது பிரச்சனைகள், பதகளிப்புகள் முதலியவற்றிலே பங்கெடுத்தல் துன்பமென நினைக் கின்றனர். மேலும் மேலும் சுயநல அகமுள்ளவர்களாக கற்றவர் மாறுகின்றனர்.

படித்தவர்களிடம் இன்று சுயநலம் பரவியுள்ளது. காரணம் ஏன்? சுயநல நோயால் அவர்கள் மிகவும் அவலப்படுகின்றார்கள். தங்கள் பெற்றோர்களுடைய கஷ்டங்களிற் கூட கவனம் செலுத்த முடியா திருக்கின்றனர். இந்த நிலை கல்விக்கு அழகானதன்று. கல்வி இதயத்தை விரிவாக்குதல் வேண்டும் ஒருவரது அன்பை விரிவாக் குதல் வேண்டும். பொறுமையும், சாந்தமும், மனிதனுள்ளே பொதிந்

திருக்கும் யாதார்த்தத்துக்குரியவை. ஒவ்வொரு செயலிலும் மனிதன் இவற்றை மீள நோக்கல் வேண்டும். செலுத்தப்படும் அன்புக்கு நன்றி பாராட்டல் வேண்டும். வாழ்க்கையில் உதவியோரை மக்கள் மறந்து விடுகின்றனர். அன்புக்குப் பிரதியுபகாரமாக துன்பத்தை வழங்கு கின்றனர். மாணவரது கல்வி முன்னேற்றத்துக்காக உழைத்த ஆசிரி யர்கள் அதே மாணவர்களால் தாக்கப்பட்டுள்ளனர். ஆசிரியரிடம் தவறு இருக்கலாம். ஆனால் மாணவர்கள் ஆசிரியரிடமுள்ள தவறைக் கண்டு பிடிக்கவோ, வெளிப்படுத்தவோ, பழிவாங்கவோ, எதுவித யோக்கியத்தையும் அற்றவர்கள்.

புள்ளிகளைப் பெறுவதற்கு எத்தனையோ வழிகளில் மாணவர் பாடுபடுகின்றனர். உன்னத நிலையான நற்குணங்களைப் பெற அவர்கள் அரும்பாடுபடுவதில்லை. நற்குண அருளைப் பெற அவர் கள் சிறிதளவேனும் முயற்சிக்கவில்லை. அவர்கள் புள்ளிகளைப் பெறவே அவாவுறுகின்றனர். புள்ளிகளை விட்டு நல்ல கௌரவத் தைப் பெற முயற்சிக்கின்றார்கள் இல்லை. நல்வாழ்க்கை நல்லொழுக் கம், நல்ல சிந்தனை, நல்ல சந்தர்ப்பங்கள் ஆகியவற்றைப் பெற அயராது உழையுங்கள்.

## கல்வியின் நோக்கம்

குருகுலத்தில் மாணவர் தாம் கற்க வேண்டிய அறிவுத் துறைகளைக் கற்று வெளியேறுகின்றனர். தமது புனிதமான ஆச்சிரமத்தை விட்டு வெளியேறும் பொழுது அவர்களுக்கு ஞானம் வழங்கிய ஆசான் நல்லாசி கூறுவார். அவ்வாறு நல்லாசி கூறும் பொழுது வாழ்க்கையிலே கடைப்பிடிக்க வேண்டிய இலட்சியங்கள், நடைமுறைகள், மனோபாவங்கள் முதலியவற்றை விளக்குவார். ஆனால் இன்று பரீட்சையில் சித்தியடைந்து பட்டங்கள் வழங்கப் படுகின்ற பட்ட மளிப்பு விழா உரையில் இதற்கு மாறுபாடான நிலை காணப்படுகின்றது.

அன்று வழங்கப்பட்ட செய்திகள் மாணவரை மேம்படுத்துவதாக விளங்கின நாளாந்த வாழ்க்கையிலே பயன்படுத்தக்கூடிய நடைமு றைப் பண்புகளைக் கொண்டிருந்தன. அவ்வாறு கிடைத்த ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மையானது அமிழ்தம் போன்ற உள்ளடக்கத்தைக் கொண்டிருந்தது. அங்கு வழங்கப்பட்ட ஒவ்வோர் ஆலோசனையும் ஊக்கமளிப்பதாக அமைந்தது. அந்த பெரும் பேறான அறிவுரைகள் காலவெள்ளத்தால் அழிந்து விட்டன. அவை மறந்த கனவுகளாகி விட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி என்பது வேறு பிரித்தறிதல், தெய்வீகம் என்பவற்றால் ஒளியூட்டப்படல் வேண்டும். இதற்கு மாறாக இன்றைய கல்வி பேராசை, அவா, சுயநலம் முதலியவற்றை வளர்க்கின்றது. சமூக சேவை பயன் தரக் கூடிய பங்கேற்றல், முதலியவற்றை நிராகரித்து விடுகின்றது

ஒருவரிடத்துள்ள அருளின் முக்கிய கூறுகளாக பற்றுகளைக் கைவிடுதல், தியாகம், முதலியவை விளங்குகின்றன. மாணவரிடத்துள்ள தெய்வீகப் பண்பு துலங்க வேண்டுமாயின் நல்லவற்றுடன் இணைந்தும் நல்லவர்களுடன் சேர்ந்தும் செயற்பட வேண்டும் என்று நான் வலியுறுத்தியுள்ளேன். கல்லூரிகளிலும் விடுதிகளிலும் இருக்கும் பொழுது பலர் அமைதியானவர்களாயும் ஒழுக்கமுள்ளவர்களாயும் இருக்கின்றார்கள். அவர்கள் உலகத்துக்கு வெளிச் செல்லும் பொழுது, பழைய பல்லவிக்குச் சென்று தம்மைப் பாழாக்கி விடுகின்றனர். இவ்வாறு நடத்தல் கூடாது. அங்கீகரிக்கப்பட்ட சத்தியத்தை நடைமுறைப்படுத்த ஒருவர் வாழ்க்கை முழுவதையும் தியாகம் செய்தல் வேண்டும். அப்படி நடக்காவிடில் பறவை, மிருகம் என்பவற்றிலும் மனிதன் கீழ் நிலைக்கு வந்து விடுவான்.

''சத்தியத்தைப் பேசுங்கள், தர்மத்தைக் கடைப்பிடியுங்கள். உங்கள் தாய் தந்தையரைக் கடவுளாகக் கொள்ளுங்கள் உங்கள் ஆசிரியரைக் கடவுளாகக் கொள்ளுங்கள்''. இதுவே மாணவருக்குத் தரப்பட்ட கடமைகள். குழந்தை பிறக்கின்றது. தாய் பாலூட்டி வளர்க்கின்றார். தந்தை பாதுகாத்து வளர்க்கின்றார். ஆசிரியர் கல்வி கற்பித்து நெறிப்படுத்துகின்றார். அவர்கள் வளர்த்ததும் விருந்தினர்களுக்கு சேவை செய்யும் சந்தர்ப்பந் தரப்படுகின்றது. தாய், தந்தை ஆசிரியர் விருந்தினர் என்ற நால்வராலும் மனிதர் உருவாக்கவும், ஒளிவீசவும் செய்யப்படுகின்றனர். விருந்தினரைக் கௌரவிக்கவோ, ஆசிரியரைக் கடவுளாக எண்ணவோ மாணவர் இன்று தவறி விடுகின்றனர். அவர்கள் தமது தாய் தந்தை ஆகியோரைக் கௌரவிக்கத் தவறி விடுவது மிக்க பரிதாபகரமாகயுள்ளது.

இன்றைய உலகைப் பீடித்துள்ள பதகளிப்பு, துன்பம், கொடுரங்கள் முதலியவற்றை ஒழிப்பதற்குரிய ஆற்றல் உள்ள வழிவகைகளை மாணவர் அறிந்திருத்தல் வேண்டும். கடவுளை உணர்ந்து கொண்டு உயர்ந்த இலட்சியப் பண்புடைய கல்வியை நாம் திரும்பிப் பார்க்க வேண்டும். நித்திய சத்தியத்தைக் கண்டறிதல் வேண்டும். கால வோட்டத்திலே கண்டறிந்து பின்பற்றப்பட்ட மேம்பாட்டுக்கான விழுமியங்களை அறிய வேண்டும். தீரச் செயல்களின் தலைவர்களாகுங்கள். இன்றைய உலகம் உலகளாவிய அன்பு கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்களை வேண்டி நிற்கின்றது. சேவை செய்யும் உற்சாகம் மிக்க ஒழுங்கமைந்த மனவெழுச்சிகளைக் கொண்ட இளைஞர்களை உலகம் நாடி நிற்கின்றது.

மிகவும் விரிவான நல்லுணர்வுகளை மாணவர் வளர்க்க வேண்டும். அகன்ற தொடுவானத்தை அவர்கள் தரிசித்தல் வேண்டும்.

உங்களை உருவாக்கிய கல்வி நிறுவனங்களுக்கு நன்றியுள்ளவர்களாயிருங்கள். உங்கள் தாய் போன்று சாயி உங்கள் மீது அன்பு வைத்திருக்கின்றார். தந்தையைப் போன்று உங்களைப் பாதுகாக்கின்றார். ஆசிரியர் போன்று ஆலோசனை தருகின்றார். கடவுள் போன்று உங்களைக் காப்பாற்றுகின்றார். அவரை என்றும் உங்கள் நினைவில் வைத்திருங்கள். இங்கு சொல்லப்பட்ட இலட்சியங்களின்படி வாழுங்கள் எப்படியாக எதிர்காலம் இருப்பினும் இந்த இலட்சியங்களின்படியே வாழுங்கள். கெட்ட பழக்க வழக்கங்களைப் பின்பற்றும் மோகத்தில் வீழ்ந்து விடாதீர்கள்.

ஒருங்கிசைவு, நற்பண்பு, சுயநம்பிக்கை கொண்ட மாணவர்களை உருவாக்கும் உயர்ந்த பணியைக் கல்வி நிறுவகங்கள் கொண்டிருத்தல் வேண்டும். அறிவை வளர்த்தல் இரண்டாம் பட்சமானது. பேச்சு, நோக்கு, கற்றல், நடைமுறை ஆகியவற்றிலே தூய்மையைக் கடைப்பிடியுங்கள். தாழ்வான குணமும் தீய பழக்கமும் கொண்ட ஒருவருக்கு ஒரு பட்டச் சான்றிதழை வழங்குதல் பாவமான செயல் ஆகும். நல்ல உதாரணமாகவும், உயர்ந்த நோக்குடனும் வாழும் ஒருவருக்குப் பட்டச் சான்றிதழைக் கொடுத்தலே நியாயமானதாகும்.

மாணவர்களே! உங்கள் நன்மைக்காக, உங்கள் மகிழ்ச்சிக்காக, உங்கள் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்க நான் மிக்க பிரயத்துடன் பேசுகின்றேன். உங்களை வெறுப்பதற்காகப் பேசவில்லை. உங்கள் ஒவ்வொருவருக்கும் தாயார் உள்ளனர். சாயி கொண்ட அன்பு ஆயிரம் தாயாரின் அன்பைப் போன்றது. எனது அன்பின் ஆழ்ந்த செறிவை விளங்கிக் கொள்ளும் திறன் உங்களுக்கு இல்லாதிருக்கலாம். இந்த அன்புக்கு வெளியே உங்களை வைத்துக் கொள்வீர்களாயின், எல்லா மனிதர்களது அன்புக்கும் வெளியே உங்களைத் தனிமைப்படுத்திக் கொள்வீர்கள். எனது அன்பு தூய்மையானது கட்டற்றது, சுயநலமற்றது, நிபந்தனையற்றது. இந்த அன்பைப்பெறுவது மிகவுயர்ந்த அருட்கொடையாகும்.

மனிதனிடத்தே பொதிந்துள்ள விலைமதிக்கமுடியாத இறைமேன்மையை வீணாக்கிக் கொள்ளாதீர்கள். தங்கம் ஒருவரை உண்மையான மானுடனாக்கி விட மாட்டாது. மாணிக்கமும் அவ்வாறே உங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலட்சியத்தை அடைய உதவ மாட்டாது. உங்களுடைய உண்மை யான முயற்சியினாலும், கடின உழைப்பினாலும் இறைமேன்மையை அடைய முடியும்.

## மாணவர்க்கு மாணவ வழிகாட்டிகள்

இன்றைய கல்வி முறையையும், பண்டைய இந்தியக் கல்வி முறையையும் ஒப்பிடலாம். கோட்பாட்டு நடைமுறை என்பவற்றின் அடிப்படையாக அவற்றை ஒப்பிடும் பொழுது ஏற்படும் வேறுபாடு களைக் கண்டு நீங்கள் அதிர்ச்சி யடைவீர்கள். பண்டைய இந்தியப் பாடசாலைகள் சுயஅறிவை முதலிலும் அதற்கு இணைந்ததாகப் புறவுலக அறிவை இரண்டாவதாகவும் வழங்கின. உண்மையாக அதுவே கற்ற மனிதருக்குரிய குறியீடாகும். அதாவது தனது அகயதார்த் தத்தை ஒருவன் அறிந்திருத்தல் முக்கியமானதாகும். தன்னிடத்தேயும், புறவுலகிலுமுள்ள உண்மையான யதார்த்தத்தையும், சார்பு நிலை யான யதார்த்தத்தையும், காணத் தெரியாதவிடத்து ஒருவரைக் கற்றறிந்தவர் என்று எவ்வாறு கூற முடியும்?

கற்றவர்களிடத்துச் சுயஅறிவின் அடையாளங்களைக் காணமுடி யாதுள்ளது. அல்லது அவர்களிடம் தயவு, இரக்கம், முதலிய பண் புகளைக் காண முடியாதுள்ளது. கற்றவர்களிலும் பார்க்க கல் லாதவர்களிடத்து இந்தப் பண்புகள் கூடுதலாகக் காணப்படுகின்றன. கல்வியானது மனத்தை வைரமாக்கிவிடுகின்றது. தயவு என்பதை அவர் களிடமிருந்து பிரித்து எடுத்து விடுகின்றது. பல்வேறு இனங்களைச் சேர்ந்த விலங்குகள் தமது பழக்கங்களில் மென்மையாகவும் இதமாகவும் இருக்கின்றன. முயல், யானை, பசு, குதிரை, முதலியவை சுத்தமான உணவை உண்கின்றன. நல்ல முறையிலே நடக்கின்றன. அவற்றுக்கு மேன்மை வழங்கப்படுகின்றது. வணங்கவும்படுகின்றது. சிங்கம், கரடி முதலியனவும் வேறு காட்டு விலங்குகளும் மனிதருக்குப் பயத் தைத் தருகின்றன. அவற்றை மனிதர் காடுகளுக்கு விரட்டியடிக் கின்றனர். ஆனால் இந்த விலங்குகளின் கொடூரமான பண்புகளை மனிதர் விருத்தி செய்தும் வெளியிட்டும் வருகின்றனர். படைப்புக் கள் எல்லாவற்றிலும் மேலானவன். என்று மனிதன் பெருமை கொள்கிறான். தன்னுள்ளே இறைவனின் ஒளி உண்டென்று அவன் பிரகடனம் செய்கின்றான். ஆனால் அதனை அவன் புறக்கணித்து அல்லது அடக்கி வைத்து, காட்டிலுள்ள கொடிய விலங்குகள் போன்று நடக்க முயல்கின்றான்.

பசுக்கள் உள்ள பண்ணையிலே சிங்கம் நுழைந்தால் எப்படியிருக் கும்? தாக்குதலிலே பசுக்கள் தப்புமா? அவ்வாறே மனித மனத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலுள்ள சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை ஆகிய பசுக்கள் இருக்கின்றன. அங்கே அவா, கோபம், தற்பெருமை முதலிய கொடிய விலங்குகள் நுழையும் போது பசுக்கள் தப்பிப் பிழைக்கமாட்டா. கற்றவர்களது இதயம், இன்று கெட்ட விருப்புக்களினதும் குரூரமான பழக்கங்களினதும் நிலைக்களனாகி விட்டது.

பிறருடைய வேதனையைக் குருடர் காணமாட்டார். பிறருடைய முனைகலை செவிடர் உணரமாட்டார். கஷ்டமான காட்சிகள் மனதை இளகச் செய்கின்றன. மனத்துயரமுள்ள ஒருவரைக் காப்பாற்றச் சொல்லப்படும் கதைகள் உள்ளன. ஆனால் இன்றைய கல்வியானது, பிறர்துயரங்களை உணரச் செய்யாத குருடர்களாயும், செவிடர்களாயும், கற்றவர்களை ஆக்கிவிட்டது. இன்றைய பாடசாலைகளிலும் கற்போர் துன்பங்களை உண்டாக்குகின்றார்கள். நஷ்டத்தை ஏற்படுத்துகிறார்கள். வன்முறைகளில் ஈடுபடுகின்றார்கள். இந்த நியமங்களைப் பார்க்கும் பொழுது இவர்கள் மனிதர்களா அல்லது மனிதத் தோல் படைத்த விலங்குகளா என்று சந்தேகம் கொள்ள வேண்டியுள்ளது.

இன்றைய கல்விப்புலத்திலே கெட்ட பண்புகள் வளர்ந்துள்ளன. இவற்றை விமர்சித்தல் வேண்டும். சமூகத்துக்குச் சேவை செய்யும் இலட்சியங்கள், பண்பாட்டுக்கு மதிப்பளித்தல், பாரம்பரியங்களைப் பாதுகாத்தல், முதலியவற்றைப் பராமரிக்கும் நிலையங்களாகக் கல்வி நிறுவனங்கள் விளங்க வேண்டியுள்ளன. முன்னைய தலைமுறையினரின் அனுபவங்களைக் கொண்டு அவை மாணவருக்குப் பயிற்சியளிக்கின்றன. அவற்றை உதவியாகக் கொண்டு உலகை அறிந்து தெளியும் வெற்றி நடை மேற்கொள்ளப்படுகின்றது.

ஆகவே, கல்லூரிகளில் இருக்கும் நாட்களில் அதன் பூரணமான பலன்களை இளைஞர்கள் பெற்று பண்பாட்டைக் கற்கவும், நடைமுறைப்படுத்தவும் வேண்டும். பிறருக்கு நஷ்டமும், துன்பமும் ஏற்படுத்தக் கூடிய கெட்ட நடவடிக்கைகளிலும் பயனற்ற செயல்களிலும் இந்த முக்கியமான காலப்பகுதியில் ஈடுபடலாகாது. இன்றைய மாணவர்கள் நாளைய ஆசிரியர்கள். அவர்கள் இந்த உலகின் தலைவிதியைத் தமது புலன்காட்சி கொள்ளலாலும், உதாரணத்தாலும், உருவாக்குதல் வேண்டும். என்றும் நீங்கள் இளமையாக இருக்க முடியாது உங்கள் இல்லச் சுமை, நாட்டை வழி நடத்தல் சுமை, என்பவற்றைப் பொறுப்பேற்கும் பொழுது நீங்கள் முதிர்ச்சியை நோக்கிச் சென்றுகொண்டிருப்பீர்கள். இன்று நீங்கள் இழப்புக்கள், சொத்து நாசங்களால் ஏற்படும் துன்பங்களைக் காண விருப்ப முடையவர்

களாக இருந்தால், பிற்காலத்தில் இந்தப் பண்புகள் இளைஞர்களிடத்துக் காணப்படுகின்றது என்று, பிரச்சினைக்கு முகம் கொடுக்கும் காலப்பகுதியில், நீங்கள் குற்றம் சாட்ட முடியாது.

உள்ளார்ந்த மனத்தின் ஒளிவீசலாக ஞானம் தோன்றும். இதனை ஒருவர் பராமரித்து வளர்த்தல் வேண்டும். அதுவே கற்றவருக்குரிய அடையாளம். பல விஷயங்களைக் கற்றுப் பாண்டித்தியம் அடைதல் உங்களைப் புத்திசாலியாக்கி விட மாட்டாது. பணிவு நிலவும் பொழுதே ஞானம் தோன்றும் மனிதன் கெட்ட செயல்கள், பாவம் என்பவற்றுக்குப் பயந்து கடவுளுடன் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் பொழுது ஞானம் வளரும்.

இதனை ஒரு சிறிய உதாரணத்தால் விளக்கலாம். நூறுக்கு முப்பது புள்ளிகளை ஒருவர் பெறும் பொழுது அவர் பட்டம் பெறுவதற்குரிய சட்டதிட்டங்களைப் பல்கலைக்கழகம் வரையறை செய்கின்றது நீங்கள் எழுபது பிழைகளை விட்டாலும் ஒரு கற்றவனாக வரமுடியும். இவ்வாறு பட்டம் பெற்ற ஒருவன் ஒரு தொழிலுக்குச் செல்லும் பொழுது, நூறு பணிகளுக்கு நூறு பிழைகள் விடும் வாய்ப்பு சூழலால் ஏற்பட முடியும். இவ்வாறான கல்வி முறையால் நாடும் மக்களும் துன்படைகின்றனர். தொடராக நிகழும் வேலை நிறுத்தம், தொழிலாளர் துன்புறுத்தப்படல், மற்றும் குறுக்கீடுகள் முதலியவற்றால் இன்றைய கல்வி முறை மிக இக்கட்டான நிலைக்கு வந்துள்ளது. தமது பிரதான கடமையாகிய கற்றலை மிக அருமையாகவே மாணவர் நிறைவேற்றுகின்றனர். பின்னர் அவர்கள் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களாக இருக்கும் பொழுது தங்களுக்கு முதன்மையாகத் தரப்பட்ட பணிகளை இலகுவாகப் புறக்கணித்து விடுகின்றனர்.

மாணவராக நீங்கள் இருக்கும் பொழுது கற்றலே உங்களுக்குரிய தலையாய கடமை என்பதை உணருங்கள். வகுப்பறைக்கு வெளியே என்ன நிகழ்கின்றது என்பதைப் பார்வையாளராக இருந்து பாருங்கள். வெளியில் சென்று உங்கள் கவனத்தைக் கலைத்து விடாதீர்கள். முக்கியமான கருமத்தைத் தெரிவு செய்யுங்கள். உடல், உள்ளம், ஆன்மா என்பவற்றைப் பலமுள்ளதாக ஆக்குங்கள். முன்னைய தலைமுறையினரால் திரட்டப்பட்ட ஞானத்தை இயன்றவரை உட்கொள்ளுங்கள். சமூகத்துக்குச் சேவை செய்வதற்குரிய திறன்களை வளருங்கள். உங்களது உள்ளத்தைத் தயவு நிறைந்ததாக்குங்கள். அதுவே கடவுள் அருளை உங்களிடத்து நிச்சயமாக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இலட்சியங்களை நீங்கள் மறந்து அவா, வெறுப்பு, வஞ்சகம், முதலியவற்றை உங்கள் உள்ளங்களிலே வேர் கொள்ளச் செய்ய வைத்தால், உங்களை நீங்கள் விலங்குகளின் நிலைக்குத் தாழ்த்தி விடுவீர்கள். உங்களது கல்வி முன்னேற்றத்தில் நீங்கள் முதற்படியாகச் செய்ய வேண்டியது உங்களது பெற்றாருக்கு மதிப்பளித்தலும், அவர்கள் மீது அன்பும் நன்றியுணர்வும் செலுத்துதலும். அவர்களாலேயே நீங்கள் இவ்வுலகில் வாழும் அற்புதமான சந்தர்ப்பத்தைப் பெற்றீர்கள். அவர்களே பண்பாட்டின் பாதுகாவலர்கள். அவர்களே உங்களிடத்து அருளை உட்பொதிய வைத்த முன்னோடி ஆசிரியர்கள்.

நீங்கள் எங்கிருந்தாலும் எமது பண்டைய இலட்சியங்களாகிய சத்தியம், தர்மம், சாந்தி, அன்பு ஆகியவற்றுக்கு உதாரணமாகவும், அவற்றை முன்னெடுத்துச் செல்பவர்களாகவும் இருக்க வேண்டுமென நான் ஆசீர்வதிக்கின்றேன் கற்காதிருப்போரும், நோய்வாய்ப்படுவோரும், துன்பப்படுவோருமாகிய உங்கள் சகோதர சகோதரிகளிடத்து நீங்கள் தயவு காட்டுங்கள். அவர்களது கண்களைத் திறக்க நோயைக் குணமாக்க, துன்பத்தைத் துடைக்க உங்களால் இயன்றதைச் செய்யுங்கள்.

**உயர்நிலைக்கற்றல்**

இராணுவத்துக்கு ஆடசேர்பு நடத்துகின்றார்கள். சமையல்காரர் சிகை அலங்கரிப்பவர், துணிகழுவுதல் செய்பவர், காவற்காரர், ஓட்டுநர் என்றவாறு இராணுவத்துக்கு ஆட்கள் சேர்க்கப்பட்டால் அவர்கள் எல்லாரும் சில பொதுவான வேலைகளைச் செய்தல் வேண்டும். அதாவது அணிநடைக்குச் செல்ல வேண்டும். உடற்பயிற்சி செய்ய வேண்டும் துவக்கோடு பரிச்சியம் இருத்தல் வேண்டும். இவை இல்லாவிடில் ஒருவர் இராணுவத்திலே சேவை செய்யமுடியாது. அதுபோல நீங்களும் இரசாயனவியல், பௌதிகவியல், தாவரவியல், கணிதம், வரலாறு, போன்ற துறைகளில் யாதாயினும் ஒன்றில் மாணவராயிருக்கலாம் ஆனால் ஒவ்வொருவரும் தெய்வீக சாதனையில் தேர்ச்சியுடையவரா யிருத்தல் வேண்டும். இந்தச் சான்றிதழ் இன்றி இந்த நிறுவனத்தின் உறுப்பினராக யாரும் இருக்க முடியாது. படைப்புக்களின் மகுடமாக மனிதன் இருக்கின்றான். என்றால் அந்த மகுடத்தின் ஒளிவீசும் மாணிக்கக் கல்லாக தெய்விக சாதனை விளங்குகின்றது.

மாணவர்களே! ஆடை நலுங்காது, கைகளிலே தூசி படாது, சுழலும் காற்றாடியின்கீழ் வசதியான நாற்காலியிலிருந்து செய்யும் உத்தியோகங்களின் பின் செல்லாதீர்கள். தெலுங்கில் பழமொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு. ''இறகுகள் செயல் ஊக்கமுள்ளதாக இருந்தால் பறவைகளுக்கு உணவு கிடைக்கும்''. ''எலும்பு நோகும் வரை நீங்கள் வேலை செய்தால் உங்கள் பல் உடையும்வரை உண்ணலாம்'' என்பது இன்னொரு பழமொழி.

பள்ளிக்கூடத்தோடும் கல்லூரியோடும் கல்வி முடிவடைந்து விட்டதாக எண்ணாதீர்கள். எங்கிருந்தாலும் நீங்கள் கல்வித்திறன்கள், மனோபாவங்கள், முதலியவற்றைக் கற்றுக் கொள்ளுங்கள். தெரு, சந்தை, தோட்டம், வேலைத்தலம் எங்கிருந்தாலும் தொடர்ந்து கற்றுக் கொள்ளுங்கள். கற்றல் செயல் முறைக்கு முற்றுப்புள்ளி வைத்து விடாதீர்கள். இறக்கும் பொழுது தான் அதற்கு முடிவு வரும். உயர்ந்த நிலையான அறிவு, திறன்கள், அகக்காட்சி பெறும் திறன்கள் முதலியவற்றைப் பெற கல்விச் செயல் முறையானது அரும்பாடுபட்டு வருகின்றது. இருபது அல்லது இருபத்தைந்து வயது வரை நீங்கள் கற்பீர்கள். அதன் பின்னர் கற்றவற்றை நடைமுறைப் படுத்தி அதிலிருந்து மகிழ்ச்சியைப் பெறுங்கள்.

மாணவர்களே! பணத்துக்காகவும், செலவு செய்வதனால் பெறும் மகிழ்ச்சிக்காகவும், கற்கின்றீர்கள் என்ற எண்ணத்தைக் கைவிடுங்கள். பணத்துக்கு நீங்கள் அடிமைப்படாதீர்கள். நல்லொழுக்கம், அருள் என்பவற்றைக் கற்றுக் கொள்ளுங்கள். பிறருக்கு அதிக அளவு கொடுப்பதற்காகப் படியுங்கள். பிறரிடமிருந்தும் பெற்றுக் கொள்வதற்காக படிக்காதீர்கள். திரட்டுவதைக் கற்றுக் கொள்ளாதீர்கள். துறவைக் கற்றுக் கொள்ளுங்கள். ஆழம் குறைந்த பகுதியில் சமுத்திரம் பரவியிருக்கும். அது வாங்கும் நிலையில் இருக்கின்றது. கொடுக்கும் நிலையில் இல்லை. ஆனால் முகில்களோ கொடுப்பதிலே மகிழ்ச்சியடைகின்றன. அவை மிகவுயரத்திலே நின்று முழக்கத்தினால் தம்மை அறிவிக்கின்றன. நீங்கள் தேடியவற்றை நான்கு ஐந்து பேருக்குப் பங்கிடும் ஆர்வமுள்ளவர்களாயிருங்கள். கிணற்றிலுள்ள நீரை இறைத்து விட்டால் அதன் கீழுள்ள ஊற்றுக்கள் மீண்டும் நீரைக் கிணற்றுக்குத் தருகின்றன. அது போல் உங்கள் அறிவைப் பிறருக்கு வழங்குங்கள். உங்கள் அறிவு மேலும் வளரும்.

மாணவர்களே! பிறருக்கு உதவும் செயற்பாடுகளில் மிக்க ஆர்வத்துடன் ஈடுபடுங்கள். உங்களுக்கு உதவுவதிலும் பார்க்க பிறருக்குக் கூடுதலாக உதவும் செயற்பாடுகளில் ஈடுபடுங்கள் இறைவன் பாராட்டும் செயல்களில் ஈடுபடுங்கள் இறைவன் ஒவ்வொருவரிலும் இருக்கின்றான். இறைவன் மகிழ்ச்சியடைந்தால் எல்லாரும் மகிழ்ச்சியடைவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றவர்கள் இன்று பிறநாட்டுப் பண்பாடுகளின் நிழல் போன்று இருக்கின்றார்கள். இரவல் உடையில் பிரகாசிக்க எண்ணாதீர்கள். உங்கள் இதயத்தின் உந்தல்களைப் பின்பற்றுங்கள். வெறும் புலன் இன்பங்களைத் துரத்திச் செல்லாதீர்கள். பணத்துக்கு வசீகரம் கொள்ளாதீர்கள். பணத்தைத் திரட்டுவதில் உங்கள் முழு ஆற்றல் களையும் பயன்படுத்தி அவலப்படாதீர்கள்.

உங்கள் எல்லாருக்கும் ஆசிரியர் மீது உறுதியான நம்பிக்கை இருத்தல் வேண்டும். நீங்கள் கற்கும் பாடநெறி, கல்விச் செயற் திட்டங்கள், உங்களைப் பராமரிக்கும் கல்வி நிலையங்கள் முதலியவற் றில் நம்பிக்கை வையுங்கள். இங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஒழுக்கவிதிகள் உங்களைச் சரியான வழியில் வழி நடத்துவதற்காக அமைக்கப்பட்டனவேயன்றி எமக்காக மேற்கொள்ளப்படவில்லை. ஆரம்பத்தில் இவை உங்களுக்கு கடினமானதாக இருக்கலாம். ஆனால் காலக் கிரமத்தில் இதன் நன்மையை நீங்கள் அனுபவிப்பீர்கள். இந்தக் கல்வி நிலையத்தை விட்டு வெளியேறியதும், உங்கள் நடத்தையால் உங்களை மேன்மைப்படுத்துங்கள். சாயி பாபா வழங்கிய சிந்த னைகளை அடியொற்றிய உங்கள் செயற்பாடுகளை வெளிப்படுத் துங்கள். அதன் வாயிலாக உலக இளைஞர்களுக்கு ஒளி வீசும் உதாரணங்களாக விளங்குங்கள்.

## மாணவரும் சேவையும்

கல்விச் செயல் முறையானது தற்கட்டுப்பாட்டுச் செயல் முறை களோடு ஒன்றிணைந்தது. தன்னிச்சைப்படி ஒருவராலும் சுதந் திரமாக வாழ முடியாது. உந்தல்கள் வெளிப்படையாகத் தெரியாத வையாயும் முன்னைய பிறவியின் தொடர்ச்சியாகவும் இருந்து எமது சமூக, பொருளாதார, பண்பாட்டு வாழ்க்கையிலே தாக்கங்களை விளைவிக்கலாம். எமது செயற்பாடுகளுக்குரிய உந்தலும் எமது செயற் பாடுகளின் இயல்புகளும் பல்வேறு மறைந்துள்ள காரணிகளால் தீர்மானிக்கப்படும். இந்நிலையில் தனக்கு ஒன்று கிடைத்து விட்டது என்று ஒருவன் பெருமை கொள்ளும் பொழுது அவன் தனது தற் புகழ்ச்சியையும், அறியாமையையும் வெளிப்படுத்துகின்றான். பல் வேறு கட்டுத்தளைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்ட மனிதன் பண்பாட்டுக் குணவியல்புகள், மிகவுயர்ந்த சித்தம் என்பவற்றின் பின்னணியிலே சுதந்திரமாகச் செயல் ஆற்ற முடியாது.

உயர்ந்த நிலையிலே சரணடையக் கூடிய விருப்பைக் கல்வி அறக் கொடையாகத் தருதல் வேண்டும். கல்லாத ஒருவரே தனது விருப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவ வேண்டும் என்றும், தன்னைத்தானே திருத்த வேண்டும் என்றும் தனது எதிர்காலத்தைத் தானே உருவாக்க வேண்டும் என்றும் வற்புறுத்துவார். ஆனால் கற்றவரோ அடக்கமாகவும் கடவுளின் சித்தத்தைப் பின் தொடர்ந்து செல்ல வேண்டும் என்றும் விரும்புவார். ஒரு செயலில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் போதும், தனது சகமனிதருக்குச் செய்யும் பொழுதும் மேற்கூறிய நற்குணங்கள் கண்டறியப்படும். இந்தச் செயல் முறைகள் அவனுக்கு அனுகூலமாக அமைவதுடன் அவன் தன்னைத் திருத்திக் கொள்ளவும் தெய்விக முன்னேற்றம் பெறவும் வாய்ப்புத் தருகின்றன.

எல்லாவிதமான செயல்களிலும் மிகச் சிறந்தது சேவை மனப்பாங்கு. சேவை வேண்டுவோரைக் கண்டறிந்து அவர்கள் மீது சேவையன்புவைக்கும் நுண்மதி வேண்டும். உடலே கடவுளின் ஆலயம். கடவுள் அங்கு உறைகின்றார் நுண்மதி, மனம் புலன்கள் முதலியயாவும் அவனுடையதே. இந்த உடல் என்ற கோயில் கடவுளுடையதாக இருத்தலினால் நாங்கள் நினைத்தவாறு இதனைக் கையாளக் கூடாது. உடல் ஆற்றல்கள் இறைவனது கருவிகளாகும். இறைவனுக்காகவே அவற்றைப் பயன்படுத்தல் வேண்டும். குருகுலங்களில் எமது பண்டைக்கால நல்லாசான்கள் இந்தச் செய்தியை மாணவர்க்கு வழங்கியதுடன் அவர்களது உள்ளங்களிலே ஆழப் பதியச் செய்தார்கள்.

சமூக சேவை தெய்விகப் பயிற்சி ஆகியவை உங்களது அறிவு, திறன்கள், அருள் முதலியவற்றைச் செயற்படுத்தும் ஆற்றலை வளர்க்கின்றது. செல்வம், புலமை அதிகாரம், செல்வாக்கு முதலியவை அறநோக்கிலே நெறிப்படுத்தப்படா விடில், வெறுக்கத்தக்கனவாய் மாறிவிடும்.

மாணவர்கள மட்டுமே மாணவர்களிடத்து நிலை மாற்றத்தை ஏற்படுத்துவார்கள. பட்டதாரிகளும், பட்டபின் கல்வியைப் பெற்றோரும், காக்கிச் சட்டைகளைத் தரித்து கிராமத்தைச் சுத்தம் செய்து, கிராம மக்களின் தேவைகளை நிறைவேற்றி, செயலூக்கமுள்ளவர்களாக இருந்தால் ஏனைய இளைஞருக்கும் அது புத்தூக்கம் தரும். இளைஞர்களை அழைத்து வந்து அவர்களை ஒரு குழுவாகச் செயற்பட வையுங்கள். முதியோர்களது வழிகாட்டலில் நீங்கள செய்த வேலையை மேலும் விசாலிக்கச் செயலாம். மக்களது தேவையைக் கண்டறியுங்கள. அப்பொழுது தான் அவற்றிலே கவனம் செலுத்த முடியும். உதாரணமாக முதியோருக்கும்' வறியோருக்கும், அவர்கள் மீது தங்கியிருப்போருக்கும் கூழ் தயாரிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமையற் கூடத்தைத் திறக்கலாம். அவர்களுடைய இதயத்தை நீங்கள் வென்றெடுத்தல் வேண்டும்.

**பட்டங்கள் மட்டும் போதுமானவை அன்று**

மாணவர்களே! நீங்கள் பட்டங்கள் பெறுவது மட்டும் போது மானதல்ல. அதனோடு நீங்கள் பொது அறிவையும், பொது நிகழ்வுகளையும் அறிந்திருத்தல் வேண்டும். நீங்கள் கற்பதற்கும், உங்கள் பண்பாட்டுக்குமிடையே மிகப் பெரிய இடைவெளி உண்டு. பண்பாடு இல்லாத புலமை பெறுமதியற்றது. இரண்டும் ஒன்றிணைந்து செல்லல் வேண்டும்.

தந்தை, தாய், ஆசிரியர் விருந்தினர் ஆகியோரைக் கடவுளா மதிக்கும் படி எமது பண்டைய நூல்கள் மாணவர்களுக்கு வலியுறுத்துகின்றன. இன்றைய மாணவர்கள் பெற்றார்களுக்கோ, கடவுளுக்கோ போதிய மதிப்பளிக்கிறார்கள இல்லை. தங்கள் மீதும் அவர்களுக்கு நம்பிக்கையில்லை. சுயநம்பிக்கை அற்றோர் எவ்வாறு சுயதிருப்தியைப் பெறமுடியும்?

வெறுமனே வாழ்வதற்கு மட்டும் கல்வி என்றிருக்கக் கூடாது, ஒருவர் ஓர் எடுத்துக்காட்டாளராய் வாழ்வதற்குக் கல்வி அவரை முன்னெடுத்தல் வேண்டும். இன்று எமக்கு ஒரு புதிய நம்பிக்கையோ. புதிய கல்வி முறையோ தேவையில்லை. புதிய சமூகம் ஒன்றை ஆக்க வேண்டிய தேவையும் இல்லை எங்களுக்கு இன்று தேவை தூய உள்ளமும் அன்பும் கொண்ட ஆண்களும் பெண்களுமாவர் நுண்மதியின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளம் கொண்டுவரப்படல் வேண்டும். பிரமைகளுக்கும், ஆடம்பர விநோதங்களுக்கும் பின்னால் உள்ளம் செல்லாதிருத்தல் வேண்டும்.

நீங்கள் இலட்சிய பிரஜைகளாக வருதல் வேண்டும் முதியோருக்கு மதிப்பளியுங்கள். ஒவ்வொருவருக்கும் மரியாதையளியுங்கள். உதாரண வாழ்க்கை வாழுங்கள். சுயநலம், சுய்விருப்பு ஆகியவற்றைத் தூர விலக்குங்கள். சமூகத்தின் நல்லியல்புகளோடு உங்களை ஒன்றிணையுங்கள. சமூக சேவைக்கு உங்களை அர்ப்பணம் செய்யுங்கள. இவ்வாறான உயர்ந்த இலட்சியங்களை மாணவர்கள் விருத்தி செய்தல் வேண்டும். உதவியோர் மீது நன்றியுடையவர்களாயிருத்தல் வேண்டும். சரியான உபயோகத்துக்குப் பயன்படாத அறிவானது அறிவின்மையை ஒக்கும் என்பதை நீங்கள் உணர வேண்டும். பழமொழி பின்வருமாறு கூறுகின்றது. ''நீங்கள் ஏறி இருந்து ஓடுகின்ற சுலபமாகப் பழகக் கூடிய கழுதை கட்டுப்படுத்த முடியாத காட்டுக் குதிரையாகவே இருக்க விரும்புகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவனிடத்து நல்ல பண்புகள் இல்லாதவிடத்து எல்லாப் பட்டங்களும், புலமையும், பாண்டித்தியமும் பயனற்று விடுகின்றன. நல்ல அறப்பண்புகளை வளருங்கள்.

## சுத்தம் கடவுளுக்கு அண்மையில் அமைகின்றது

ஒவ்வொரு மாணவரும், புத்தி பூர்வமான சிந்தனையின் பின்னர் சில முடிவுகளை எடுக்க வேண்டியுள்ளது. அதாவது ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் இலக்கை முதன்மையாகக் கொள்ளலும், இலக்கை உணரும் வகையில் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தலும், சிறப்புற அமையும் வகையிலே தன்னை வழி நடத்திக் கொள்ளல் வேண்டும். இலக்கும் செயற்பாடும் சமூகத்தின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன் சமூகத்தின் முன்னேற்றத்தை வழிநடத்துவதாகவும் இருத்தல் வேண்டும். நீதியீனம் வன்செயல், ஒழுக்கக் கேடு என்பவற்றில் மக்கள் ஈடுபடலாகாது. மக்கள் தமது சுயஇலாபத்தை முதன்மையாகக் கொள்ளவும் கூடாது.

மாணவர்கள் இன்னொரு முக்கியமான பண்பிலும் கவனம் செலுத்துதல் வேண்டும். அதாவது சுத்தம் அல்லது தூய்மை அகச்சுத்தம், புறச் சுத்தம் என்ற இரண்டையும் உள்ளடக்கும். அவை இல்லாவிடில் மனிதன் எந்தப்பணிக்கும் பயனற்றுப் போவான். அவனது ஆடை, அவன் படிக்கும் புத்தகம் அவனது சூழல் என்ற அனைத்தும் சுத்தமாயிருத்தல் வேண்டும், இவை புறச்சுத்தம் எனப்படும். அதாவது வாழ்க்கைக்குப் பயன்படும் ஒவ்வொரு பொருளும் சுத்தமாயிருத்தல் வேண்டும் பற்கள், கண்கள், உணவு, பானம் என்ற அனைத்தும் சுத்தமாயிருத்தல் வேண்டும். இவற்றின் விளைவாக ஒருவர் உடல் நலமுள்ளவராக இருக்கலாம் உடல் ஒவ்வொரு நாளும் கழுவிச் சுத்தமாக்கப்படல் வேண்டும். அல்லாவிடில் உடலின் மேற்படியும் அழுக்கினால் சொறி உண்டாகும் புண் உண்டாகும் அது பிறருக்குத் தொற்றும் இயல்பினதாகவும் மாறும். இது மிகப் பெரிய அவலத்தை உண்டாக்கும். ஒருவர் ஓரிரு ஆடைகளை வைத்திருக்கலாம். ஆனால் அணிவதற்கு முன்னர் அவற்றைக் கழுவிச் சுத்தம் செய்தல் வேண்டும். அவற்றிலே அழுக்கு இருத்தல் ஆகாது.

படிக்கும் புத்தகங்களை விரும்பியவாறு வீசி எறிந்து விடக்கூடாது புத்தகங்களின் பக்கங்களிலே கிறுக்கலாகாது. கடதாசி அழகாகவும் புள்ளி விழாமலும் இருக்குமாறு பாதுகாத்தல் வேண்டும். அவற்றைப் பார்ப்பவர்கள் மாணவர். அழகாக வைத்திருப்பதற்கு எடுத்த கவனத்தைப் பாராட்ட வேண்டும். தங்கும் அறை துர்நாற்றம் வீசாதிருத்தல் வேண்டும். பிறர் மீதான அன்பை மாணவர் தம்பால் ஈர்த்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். மாணவர் தங்கும் அறையும், சூழவுள்ள பகுதியும் சுத்தமாக இருத்தல் வேண்டும். அறையின் உட்சுவர்களிலே ஆபாச மான படங்கள் இருத்தலாகாது. உயர்ந்த சிந்தனைகளையும், மேலான இலட்சியங்களையும் தூண்டும் படங்களே கண்களுக்கு விருந்தாக இருத்தல் வேண்டும்.

எவ்வளவு செல்வம் இருந்தாலும் ஆரோக்கியமின்றிச் சந்தோஷ மாக இருக்க முடியாது. உணவு இன்மை அவரைக் களைக்கச் செய்து விடும். உணவு இல்லாவிடில் அவர் பலமிழந்து விடுவார் ஆகவே அவர் மகிழ்ச்சியின்றியே இருப்பார். ஆகவே புறச்சுத்தம். உடல் நலத்தையும் மகிழ்ச்சியையும் தரும்.

அடுத்ததாக அகச்சுத்தத்தைப் பார்ப்போம். அதாவது உள் ளத்தையும் சிந்தனையையும் அழுக்கிலிருந்து பாதுகாத்தல் வேண் டும். சிந்தனையும் உணர்வுகளும் தூய்மை அற்றதாக இருந்தால் ஒருவர் சாந்தமாகவும் மகிழ்ச்சியுடனும் இருக்க முடியாது. மனம் தூய்மையற்றிருந்தால் செயலும் தூய்மையற்றிருக்கும். மனத்தை சுத்தமாக வைத்திருக்க வேண்டுமாயின் பிறருடன் சம்பந் தப்படும் நிகழ்ச்சிகளையும், அவர்களின் செயற்பாடுகளையும் அனுதா பத்துடன் பகுத்தாராய வேண்டும் அதன் பின்னர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதைத் தீர்மானித்தல் வேண்டும். அவசரப் பட்டு முடிவுகளை எடுத்தலாகாது. ஆறுதலாகச் சிந்தித்து வேறுபடுத் திப் பகுத்தாராய்ந்த பின்னரே செயலில் இறங்குதல் வேண்டும். ''எங்களுடையவர்கள் என்போர் சில செயல் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர். ஆகவே அந்தச் செயலை நாங்களும் பின்தொடர் வோம்'' என்பது கருத்தற்ற முடிவு இது பலவீனத்தின் அறிகுறி. இது அடிப்படை அறியாமையின் விளைவு. மந்தைகள்தான் பக்கச் சாய்ந்தபடி செல்லும்.

மனிதராகப் பிறந்து, படித்தவர்களாகத் திரிவோர் மந்தைகள் போன்று நடக்கக் கூடாது. பிறரது வாயிலிருந்து வரும் சொற்களைப் பொறுக்கியெடுத்து மனத்தை அசுத்தமாக்கும் செயலைக் கைவிடல் வேண்டும்.

மற்றவர்களுடைய கருத்துக்களும், சொற்களும் அவர்களுக்கே உரிய சொந்தக் கருத்துக்கள். அவை மக்களுக்கிடையே கசப்பு உணர் வுகளைத் தூண்டலாம் அவற்றை ஏன் நாங்கள் எங்களுடையதாக ஏற்றல் வேண்டும். அதன்படி எங்களது உணர்வுகளை ஏன் உரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்குதல் வேண்டும். எமது உள்ளார்ந்த புனித அனுபவங்களையும், நம்பிக்கைகளையும் துறந்த வேறுவிதமான அனுபவக் கோலங்களை அமைத்தல் தகாதது.

எமது நம்பிக்கைக்குரிய காரணம் பற்றி எங்களுக்கு எப்பொழுதும் விளங்காமல் இருக்கலாம். எமக்குரிய வலுவான உணர்வுகளுக்கேற்ப எமது சொந்த விருப்பு, வெறுப்புக்களுக்கேற்ப நம்பிக்கைகள் உருவாக்கப்பட்டும் வடிவமைக்கப்பட்டும் வருகின்றன ஆனால், கோபம், வெறுப்பு, பொறாமை, கெட்ட செயல்கள் முதலியவை எம்மை வழிநடத்தி எம்மை இலக்குப் பொருளாக்க அனுமதித்தலாகாது. ஒரு மாணவன் பரந்த, விரிவான உணர்வுகளை வளர்த்தல் வேண்டும். அப்பொழுது தான் உயர்கல்விக்கு அவன் தகுதி பெறுவான்.

## ஒரு மாணவனின் கடமை

தமது பெற்றாரை விளங்கிக் கொள்ளுதலும் மதிப்பளித்தலும் ஒவ்வொருவரதும் கடமையாகும். அவ்வாறே ஒவ்வொரு நாட்டு மக்களதும் கடமை. அந்த நாட்டின் வரலாற்றுப் பின்புலம், பண்பாட்டுப் பின்புலம் என்பவற்றை நயப்புற்று அவ்விரண்டையும் தாய் தந்தையராகக் கொள்ளல் வேண்டும். உண்மையில் தனது நாட்டின் வரலாற்றுச் செல்வங்களையும், பண்பாட்டுச் செல்வங்களையும் அறியாதவன் தனது தாய் தந்தையரை அறியாத மூடனுக்குச் சமனாவான் ஆகவே பொதுவாக இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் முன்னேற்றத்துக்கு ஏற்றவகையில் கல்வியிலும் முன்னேற்ற வழி முறைகளை ஏற்படுத்தல் வேண்டும் பரஸ்பர மரியாதையையும் ஒத்திசைவையும் வளர்க்கும் ஊக்கத்துடன் மாணவர்கள் தமது பணிகளை ஆரம்பித்தல் வேண்டும். இது நல்ல நடத்தைக்கு இட்டுச் செல்லும். ஒரு கல்வி நிலையத்திலுள்ள மாணவர் இந்த வகையிலே முன்னேறும் பொழுது, ஏனைய உலகத்தினருக்கு அவர்கள் முன்மாதிரியாக இருப்பார்கள். குறுகிய, பிற்போக்குத்தனமான உணர்வுகளை மாணவர்கள் கைவிட்டு, சமூகத்துக்கும், உலகத்துக்கும் சேவை செய்யத் தயாராக வேண்டும் இங்குள்ள கல்விமான்களும், உபவேந்தர்களும் இந்தக் கல்வி அரங்கில் என்ன முடிவுக்கு வந்தாலும், மாணவராகிய நீங்களே இந்த முடிவுகளை உலகத்துக்குப் பரப்பும் தூதுவர்களாக இருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சிய மாதர் இயல்பு

## கலங்கரை விளக்காக ஒளிவீசுதல்

மாணவர்களே ! இன்றைய உலகைப் பற்றிப்பிடித்துள்ள குழப்பம், நீதியீனம், பொய்மை, ஒழுங்கீனம், ஆகியவற்றுக்கான அடிப்படைக் காரணங்களை ஆழ்ந்து நோக்க வேண்டும். கடந்த காலத்திலே பழமைகள் மூடி மறைக்கப்பட்டு அடைகாக்கப்படும் நிலைக்கு வந்துள்ளன. ''மிகச் சிறந்த பழமைக்காலம்'' என்று முதியோர் கடந்த காலத்தை வருணிக்கின்றனர். இளைஞர்கள் தமது எதிர் காலம், உத்தியோகம், திருமணம், குடும்பம், முதலிய வற்றைத் திட்டமிடுவதிலே கருத்தூான்றியவர்களாக இருக்கின்றார்கள். முதியோரும் இளைஞரும் தற்காலத்துக்குரிய தமது கடமைகளைப் புறக்கணிக்கின்றனர். நிகழ்காலம் என்பது கடந்த காலத்தின் விளை பொருள் என்பதையும், எதிர்காலத்துக்குரிய விதையாக இது அமைவதையும் அவர்கள் விளங்கிக் கொள்வதில்லை. நிகழ்காலத்தை நாங்கள் நல்ல முறையிலே கட்டியெழுப்பினால், எதிர்காலம் நல்லதாக அமையும் ஆகவே நிகழ்காலத்தில் நீங்கள் செய்யும் கடமைகளைத் தீர்மானியுங்கள். இது எதிர்காலத்துக்குரிய உன்னத பாதையை அமைத்துக் கொடுக்கும். கடமையே கடவுள். வேலையே வணக்கம். இவற்றை உங்கள் எதிர்காலத்துக்கு இலட்சியமாக்குங்கள், இவற்றிற்குரிய உறுதி எதிர்காலத்தில் வரும் என்பதற்கு என்ன உத்தரவாதம் ? எதிர்காலத்துக்கு நன்றிக்கடன்களை ஒத்திப் போடுதல் பகுத்தறிவற்றது. நிகழ்காலத்திலே நன்கு வாழுங்கள். உடனடிக் கடமைகளைச் செய்ய உடனடியாகத் தயாராகுங்கள்.

உங்களைப் பெற்று வளர்த்த தாய் தந்தையர்க்கும், உங்கள் ஆசிரியர்க்கும் உங்கள் குடும்பத்தவர்களுக்கும் உங்கள் நன்றியறிதலைக் காட்டுங்கள். இதுவே மனிதப்பண்பின் அடிப்படை அடையாளமாகும். இன்று நன்றியுணர்வுக்குப் பதிலாக கொடூர மனப்பாங்கு எங்களிடத்திலே காணப்படுகின்றது. தங்களுக்கு நல்லவை செய்தவர்களுக்குக் கூட கெடுதல் செய்வதற்கு மக்கள் தயங்குவதில்லை. இது மனிதப் பண்பு அற்ற செயல். தீங்கு செய்தார்க்கும் நன்றி செய்வதுக்குப் பதிலாக தீங்கு செய்தல் எத்துணை துஷ்டமானது ?

## பிரிவினையை விலக்குங்கள்

நீங்கள் அனைவரும் ஒரே மனித குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்வை வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும். மொழி, சாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலம் என்ற அடிப்படையில் பிரிவினை உணர்வுகள் இருத்தலாகாது. உங்களது நாட்டின் பெருமையை நீங்கள் கருத்திலே கொள்ளாது விட்டால், உங்கள் கல்வியின் பெறுமானம் யாது ? புத்தக அறிவால் சிறிதளவே பயன் உண்டு. புத்தகப்படிப்பினால் விரிவடைந்த அறிவு பின்னர் ஓர் 'அலர்ஜி' யாக மாறிவிடும். தூய்மையானதும், புனிதம் கொண்டதுமான இலட்சியங்களை வளர்த்தலே மிகவும் முக்கியமானது. பட்டங்கள் பெறுதலும், தொழில் பிச்சை தேடுவதும், பரிதாபகரமான நிலையாகும். சுயநம்பிக்கையை வளர்த்து கடவுள் நம்பிக்கையுடன் உங்கள் வாழ்க்கையைக் கட்டியெழுப்புங்கள்.

பொருள்தேடி வாழ்வதற்காக கற்பது அரைநோக்கம் மட்டுந்தான். மிகுதி அரைப்பகுதியும் பொருண்மையும் சிறப்பும் கொண்டதாக ஆக்கப்படல் வேண்டும். சக்தி வீணடிக்கப்படும் பல்வேறு வழிகள் பற்றிய கவனம் மாணவர்க்கு இருத்தல் வேண்டும். தீயவற்றைக் காணல், தீயவற்றைக் கேட்டல், கெட்ட பேச்சு, கெட்ட சிந்தனை, கெட்ட செயல், என்ற ஐந்து வழிகளில் சக்தி வீணடிக்கப்படுகின்றது பார்க்கும் சக்தி மிகவுன்னதமான கொடை. நீங்கள் பார்க்கும் பொழுது இறைவன் தந்த இந்தக் கொடையான சக்தியின் சிலபகுதி வீணாகின்றது. குருடர்களுக்கு இவ்வாறு சக்தி வெளியேறாமையால் அவர்களிடத்து கணிசமான சக்தி இருப்பதுண்டு. குருடர்களிடையே மிகவும் சிறந்த நுண்மதியாளர் இருக்கின்றனர். கண்பார்வையுள்ளவர்கள் மிகவும் துரிதமாக பகலில் நடப்பார்கள். ஆனால் இருளில் தடுமாறுவார்கள். செவிடரும், குருடரும் கணிசமான அளவு சக்தியைச் சேமித்து வைக்கின்றார்கள். ஏனெனில் பேசியும், கேட்டும் அவர்கள் தமது சக்தியை இழப்பதில்லை.

நவீன இளைஞர்கள் ஒட்டகச்சிவிங்கி போன்று வளர்கின்றார்கள். அதாவது தலை எங்கோ இருக்கின்றது. இருதயம் வேறெங்கோ இருக்கின்றது. ஒட்டகச் சிவிங்கிக்கு கழுத்து நீளமாக இருப்பதனால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் அத்தகைய ஒரு நிலை மனிதர்களுக்கு இல்லை. மனிதர்கள் சிந்தனை, சொல் செயல் என்பவற்றில் ஒருங்கிணைப்பைக் காண வேண்டும்.

### அறவொழுக்கங்களை மீட்டெடுத்தல்

நல்ல நடத்தை அதிக முக்கியம் வாய்ந்தது. அறவொழுக்கம் அற்ற ஒரு மனிதன் மரித்து விடுவான். அறவொழுக்கங்களில் ஏற்பட்ட வீழ்ச்சியே நாட்டின் இன்றைய பிரச்சனைகளுக்குக் காரணமாகும். அறவொழுக்கங்களை மீட்டெடுத்தலே இன்றைய முதன்மையான தேவை. அறவொழுக்கங்களை நூல்களில் இருந்து பெற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட முடியாது. அல்லது அங்காடியிலிருந்து வாங்கி விட முடியாது. அது இதயத்திலிருந்து வர வேண்டும். பன்னிரண்டாம் தரத்தை நிறைவேற்றிய பின்னரே மாணவர்கள் பொறியியல், மருத்துவம் போன்ற வாண்மைக் கற்கை நெறிகளுக்குச் செல்கின்றனர் அவ்வாறான கற்கை நெறிகளுக்குச் செல்லப் போதிய முதிர்ச்சியற்ற நிலையில் மாணவர் இருக்கின்றனர். அவர்கள் சிறிதளவு தொழில் நுட்ப அறிவைப் பெறலாம். ஆனால் உலகின் இயல்பு பற்றிய உணர்வும் பொது அறிவும் போதாமல் இருக்கின்றது. அவர்களுக்குரிய மொழி ஆளுகையும் போதாமல் உள்ளது வாண்மைக் கற்கை நெறிகளுக்குச் செல்வதற்கு முன்னர் மாணவர்கள் ஒரு பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

கல்லூரியில் நீங்கள் கற்பதற்கும், பின்னர் வாழ்க்கையில் முகம் கொடுப்பதற்கும் இடையே மிகப் பெரிய இடைவெளி உண்டு. உங்கள் படிப்பை முடித்துக் கொண்டதும் திருமணம் செய்வீர்கள். உங்களது மாமன், மாமி, உறவினர்களின் பழக்கவழக்கங்கள் மனோபாவங் களுக்கேற்ப நீங்கள் நடந்து கொள்வீர்கள். வேலைக்குச் செல்லா தவர்களும் உங்களில் இருப்பீர்கள். அப்படியானால் இங்கு பெற்ற அறிவு என்னவாகும்? இங்கு கற்றவை பிற்காலத்தில் நீங்கள் மேற் கொள்ளும் வாழ்க்கை இயல்புகளுக்குப் பயன்படுவதாயிருத்தல் வேண் டும். சமூகத்தில் எவ்வாறு இயங்குவது சமூகத்துக்கு எவ்வாறு பயன்பெற வாழ்வது என்பவற்றை நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். எல்லாம் உங்களுக்காகவே. நீங்கள் சமூகத்துக்கு உரியவர்கள். சமூகத்துக்கு நீங்கள் சேவை செய்வதன் வாயிலாக உங்கள் நன்றி யுணர்வைக் காட்டுங்கள்.

உங்களுக்குரிய முதற்கடமை உங்கள் பெற்றோருக்கு மகிழ்ச் சியையும், திருப்தியையும் தருதலாகும். உங்கள் சுகபோகங்களையும் உங்கள் மகிழ்ச்சியையும் ஏற்கனவே உங்கள் மனத்திலே பதித் துவிடாதீர்கள். இங்கே கற்றவற்றைப் பயன்படுத்தி உலகத்துக்கு நீங்கள் முன்மாதிரியைக் காட்டல் வேண்டும்.

## பெண்களின் பாத்திரம்

உலகில் பெண்கள் மிக முக்கிய பாத்திரத்தை வகித்தல் வேண்டும் என்பதை நினைவிலே வைத்திருங்கள். நம்முன்னோர்கள் பெண்களின் முதன்மையை அங்கீகரித்ததுடன் ஒவ்வொரு நிலையிலும் பொருத்த மான அந்தஸ்தை வழங்கினர். உண்மை அறிவின் சின்னமாகிய பணிவை உங்களிடத்தே வளர்த்துக் கொள்ளுங்கள். சுயநம்பிக்கையை வளருங் கள். சுயநம்பிக்கையின்றி வாழ்க்கையில் உபயோகமானது எதனையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதிக்க முடியாது. எல்லாவற்றுக்கும் மேலாக, கடவுள்மீது உறுதியான நம்பிக்கை வையுங்கள். பஞ்சாங்கத்தில் சுட்டிக்காட்டப் பெற்ற புனித நாட்களிலே நீங்கள் எல்லாவிதமான சடங்குகளையும் செய்கின்றீர்கள் ஆனால் அனைத்துக்கும் அடிப்படையான நித்தியப் பரம் பொருளாகிய இறைவன் மீது உறுதியான நம்பிக்கை வைக்கின்றீர்கள் இல்லை.

எங்களுடைய நிறுவகத்திலே வழங்கப்படும் கல்வியானது எடுத்துக்காட்டான மாணவர்களாக வருவதற்குரிய சந்தர்ப்பத்தை உங்களுக்குத் தருவதாக அமைகிறது. வர்த்தக அல்லது உலகியல் நோக்கங்கள் இங்கு முற்றாக இல்லை. இங்கிருந்து வெளியேறும் பொழுது பெண்மையின் மிகச்சிறந்த பிரதிநிதிகளாக உங்களை வளர்த்துக் கொண்டு செல்ல வேண்டும் என நான் ஆசீர்வதிக்கின்றேன். தர்மம், சத்தியம் அன்பு, அழகு, ஆகியவை மேம்படும் வாழ்க்கையின் பொருட்டுப் படியுங்கள். உலகின் கலங்கரை விளக்கங்களாக வாருங்கள்.

## ஒரு பல்கலைக் கழகத்தின் விதைகள்

ஒருவரின் மோசமான நிலையை எந்த அளவிலும் முன்னேற்றுவதற்குக் கல்வி உதவியாகத் தெரியவில்லை. ஒரு காலத்திலே கலைவாணியின் கோவில்களாகக் கருதப்பட்டு, சுய உணர்வின் உன்னத நிலையை அடைவதற்குக் கருதப்பட்ட பாடசாலைகளும், கல்லூரிகளும் இன்று தமது பண்பிலிருந்து கீழிறங்கி, பணத்தைப் பூஜிக்கும் ஆலயங்களாகி விட்டன. பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் அனுமதி பெறுவதற்கு பணம் கேட்கப்படுகிறது. பணம் செலுத்திய பின்னரே குறித்த வகுப்புக்குரிய வரவு உறுதி செய்யப்படுகின்றது. பணத்தைக் கொண்டு ஒரு வகுப்புக்குரிய சித்தியும் கையாளப்படுகின்றது. இவற்றின் விளைவாக அறம் வீழ்ச்சியடைகின்றது. ஒழுக்கம் சீரழிகின்றது. நற்பழக்கங்கள் நலிவடைகின்றன. கல்விச் செயல் முறையானது வர்த்தக மயமாகிவிட்டது.

பட்டங்களும், பட்டச்சான்றிதழ்களும் உங்களுக்கு உத்தியோகங்களை வழங்கத்துணை புரிவதால் அவை உபயோகமானவை. அவை தொழில் நிலையங்களின் வாயிலிலே நீங்கள் தாங்கிச் செல்கின்ற பிச்சைப் பாத்திரங்களாக இருக்கின்றன. வேலை பெறாதிருக்கும் சில பெண் பட்டதாரிகள் அவர்களது சகோதரர்களோடு ஒப்பிடும் பொழுது அனுதாபத்துக்குரியவராக உள்ளனர். இந்த நிலைக்குக் காரணம் பொருண்மை கொண்ட கல்வியை வழங்காமையாகும். உள்ளத்திலே பொதிந்துள்ள மகிழ்ச்சி, அன்பு, ஆனந்தம் முதலிய ஊற்றுக்களைக் கல்வி வலுப்படுத்தல் வேண்டும். கற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் இந்த ஊற்றுக்கள் அடைக்கப்படலாகாது. நித்திய இன்பம், சாந்தி, அன்பு, பயபக்தி, ஆகிய ஊற்றுக்களுக்குரிய நிலைக்களனாக மனிதன் விளங்குகின்றான். கற்கும் காலங்களில் இவற்றை வளருங்கள். இவற்றைச் சரியாக விளக்குங்கள். இவற்றுக்கு உதாரணமாக இருங்கள். இவற்றைச் செயற்படுத்துங்கள். அப்பொழுது தான் வாழ் நாள் முழுவதும் கற்றவர்கள் பாதுகாப்பையும் இன்பத்தையும் பெறுவர்.

வாழ்வதற்காக உழைக்கத்தான் வேண்டும். அவ்வாறு உழைக்க முற்படுவதனால் கணவனும் மனைவியும் வீட்டுக்கு வெளியில் சென்று பணிபுரிய நேரிடுகின்றது. இதனால் குழந்தைகள் வீட்டு வேலையாட்களினால் வளர்த்தெடுக்கப்படுகின்றார்கள். அவர்களுடைய மொழியையும் பழக்க வழக்கங்களையும் பழகுகின்றார்கள். தந்தையும் தாயும் அந்நியர் போன்று வீட்டுக்கு வருகின்றனர். குழந்தைக்குரிய உணவு அவர்களுக்கு அன்பானவர்களால் தயாரிக்கப்படுவதில்லை. அன்போடும் புன்சிரிப்போடும் உணவு பரிமாறப்படுவதில்லை. சுவை மறைந்து விடுகின்றது. குரல் அற்பமானதாக ஒலிக்கின்றது. ஆசிரியராக இருக்கும் தாயானவள் தனது பிள்ளைகளுக்கு ஆசிரியராக விராது தனது இயற்கையான கடமைகளைக் கைநழுவ விடுகின்றாள். இது மிகவும் துன்பமானது. அப்படியான பெற்றோர்கள் வாழுகின்ற இல்லம் குழந்தைகளின் மனத்திலே பசுமையான நினைவுகளை ஏற்படுத்த மாட்டா. கல்வியின் உண்மையான நோக்கை மூறியடிக் கக் கூடியவாறு உத்தியோக நோக்கு மேலோங்குவதை அனுமதிக்க முடியாது. தியாகம், விடுவிப்பு, போன்ற நற்குணங்களைப் பெண்கள் வளர்க்க வேண்டும். அருள், பரந்த நோக்கு என்பவற்றை வளர்த்தல் வேண்டும். அப்படியிருந்தால் தான் அவர்கள் தமது துணைவரையும் குழந்தைகளையும் வெற்றிப்பாதையைத் தேடுவோராய் அன்புடன் வளர்க்க முடியும் இன்றைய நிலையிலே கல்லூரிகள் அவா, கலக்கம், திருப்தியின்மை, துர்நடத்தை, பொருத்தமின்மை, பயனின்மை, முதலியவற்றின் இருப்பிடமாகியுள்ளன. கற்றலுக்குரிய ஆலயங்கள் என்ற அந்தஸ்தை அவை இழந்து விட்டன. உண்மையான கற்றல் ஆலயங்கள் சுயநம்பிக்கை, சுயமாகத் தொழிற்படக்கூடிய தலைமைப் பண்பு முதலியவற்றை வளர்க்கும் இந்த அந்தஸ்து இன்று இழக்கப்பட்டு விட்டது.

எமது புனித நூல்களிலே குறிப்பிட்டவாறு பெண்கள் உன்னத இலட்சியங்களிலே ஆழ்ந்த நம்பிக்கையும் ஆழ்ந்த அருளும் உடையோராய் இந்தக் கல்லூரியிலிருந்து வளர்ச்சி பெறல் வேண்டும். அப்பொழுது தான் அவர்கள் தமது குழந்தைகளை ஒளியுள்ளவர்களாக, அருள் உள்ளவர்களாக, உலகின் உறுதி உள்ள பிரஜைகளாக உருவாக்க முடியும். அடக்கப்பட்டுக் கொதிக்கும் உணர்ச்சியோடிருக்கும் உலகின் பொல்லாப்பிலிருந்து விடுபட இது ஒரே வழியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் பாடசாலைகளிலும், மகளிர் கல்லூரிகளிலும் இன்று வழங்கப்படும் கல்வியானது அவர்களை விரும்பத்தக்க மனைவிகள் ஆக்குகின்றதேயன்றி விரும்பத்தக்க தாய்மார்களாக்குவதில்லை. தாய் என்ற பாத்திரம் இயற்கையானது. தப்ப முடியாது. அந்தப் பாத்திரம் புறக்கணிக்கப்படுகின்றது. அதற்கு ஈடிணையற்ற வேறு சிறு இயல்புகளே இன்று முதன்மை பெற்றுள்ளன.

## பட்டங்களுக்கு அப்பால் — கடவுளின் அன்பு

இந்தப் பிரபஞ்சம் ஒரு பெரிய பல்கலைக்கழகம். பல்வேறு கற்கை நெறிகளைக் கற்பதன் வாயிலாக அறிவு திரட்டப்படுகின்றது. கற்கை நெறிகள், இலக்கியம், விஞ்ஞானம், அரசியல், பொருளியல் என்றவாறு அமையும். இவற்றை நாங்கள் கற்கலாம். ஆனால் மனதிலே சாந்தி வராது அற்ப விருப்புக்களுக்கு மக்கள் இரையாகி விட்டதனால் அவர்கள் சாந்தியை இழந்து விட்டார்கள். கருத்தற்ற வாழ்க்கை வாழுகின்றார்கள். புலமைப் பயிற்சியோடு தெய்வீக ஒழுக்கங்களையும் பின்பற்றுதல் முக்கியம் வாய்ந்ததாகும்.

ஒரு துறையில் சிறப்புக்கல்வி பெறுதல் வாழ்க்கை பற்றிய உள்ளார்ந்த பூரணமான காட்சியையும் அதன் பிரச்சினைகள் பற்றியும் அறிய உதவி செய்ய மாட்டாது. கல்வியானது பரந்த நோக்கையும், வாழ்க்கை பற்றிய அனைத்தும் தழுவிய நோக்கையும் வளர்க்க உதவுதல் வேண்டும். பட்டங்கள் பெறுதல் மட்டும் போதாது. இறைவனின் அருளைப் பெற நீங்கள் கற்ற வேண்டும் இறைவன் அருளைப் பெறும் வழிகளாவன வழிபாடு, எம்மை அர்ப்பணித்தல், அறவொழுக்கம், தீவிர விசாரணை செய்தல், மனவுறுதி கொள்ளல் முதலியனவாகும். இந்தப் பரீட்சைகளிலே வெற்றியடைந்தால் இறைவனின் அருளை நீங்கள் அனுபவிப்பீர்கள்.

சரியானது, தவறானது, நல்லது, கெட்டது என்பவற்றுக்கிடையே வேறுபாடு காணும் ஆற்றலைக் கல்வி வளர்த்தல் வேண்டும். இவ்வாறு வேறுபாடு காண முடியாவிட்டால் மனிதர்கள் விலங்கிலும் மோசமானவர்களாகி விடுவர்.

மகிழ்ச்சி - துன்பம், வெற்றி - தோல்வி, எழுச்சி - வீழ்ச்சி போன்ற வாழ்க்கைச் சவால்களுக்கு முகம் கொடுக்க நீங்கள் உறுதி பூண்டித்தல் வேண்டும். இவற்றுக்கு முகம் கொடுக்கும் பொழுது கடவுள் நம்பிக்கையும் வேண்டும். ஒரு பொருளில் இருந்து இன்னொன்றுக்கு மனம் தடுமாறிப் பாய்வதற்கு இடமளித்தலாகாது. உறுதியான மனமே உண்மையாகக் கற்ற ஒருவனுக்கு அடையாளம். வாழ்க்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது திட்டவட்டமான ஒழுங்குகளின் ஆட்சிக்கு உட்பட்டது. தர்ம வழியிலே வாழ்வதற்குச் சுயகட்டுப்பாடு அவசியம்.

ஒரு பரீட்சையில் உயர்ந்த புள்ளிகள் பெறாதவிடத்து பல மாணவர் மனம்உடையும் நிலைக்கு இலகுவில் ஆளாகின்றனர். இதனை அவர்கள் ஒரு சவாலாக எடுத்து எதிர்காலத்தில் நன்றாகச் செய்ய முயற்சித்தல் வேண்டும். உற்சாகம், சுயகட்டுப்பாடு, உறுதி என்பவற்றை மாணவர் விருத்தி செய்தல் வேண்டும். அப்பொழுது தான் வாழ்க்கையில் எந்தவொரு நெருக்கடிக்கும் முகம் கொடுக்கலாம். இதுவே தெய்வீக ஒழுக்கத்தையும் புலமைக் கற்றலையும் ஒன்றிணைப்பதற்குரிய காரணம். உமது கற்கை நெறியை முடித்ததும் நீங்கள் இலட்சிய தாய்மாராக வர வேண்டும், குழந்தையின் வாழ்க்கையிலே அதி முக்கியத்துவம் கொண்ட காரணியாக அமைபவர் தாயானவளே ஒரு குழந்தையின் எதிர்கால தாயால் உருவாக்கப்படுகின்றது.

உங்களை உருவாக்குவதற்கு முற்றும் முழுதான பொறுப்பாக இருந்த தாய் தந்தையரிடத்து அன்பாயிருக்க வேண்டிய கடமைப்பாடு உங்களுக்கு உண்டு. அவர்களுக்கு மகிழ்ச்சியையும் திருப்தியும் கொடுங்கள். அப்படிச் செய்யும் பொழுது எதிர்காலத்தில் உங்களது பிள்ளைகளிடமிருந்து உங்களுக்கு மகிழ்ச்சியும், திருப்தியும் கிடைத்தல் உறுதியாகும்.

வாழ்க்கையில் உயர்ந்த நோக்கங்களை வைத்திருங்கள். உலகிலும், உங்கள் நாட்டிலும், வரலாற்றிலே சிறப்புப் பெற்ற மிகப்பெரும் மனிதர்களை உங்களுக்கு முன்னுதாரணமாகக் கொள்ளுங்கள் அவர்களது தியாகம் உன்னத தலைமைத்துவம் தொடர்பான வாழ்க்கை வரலாற்றிலிருந்து ஒரு பாடத்தை எடுங்கள். நீங்கள் எங்கு சென்றாலும் எத்தகைய வாழ்க்கையைத் தெரிவு செய்தாலும், சத்தியசாயி நிறுவகத்தினுடைய மாண்பையும், அதன் சிறப்பையும் மனதிலே நிலை நிறுத்திக் கொள்ளுங்கள். உங்களின் செயற்பாடுகளினால் நீங்கள் படித்த இத்தக் கல்வி நிறுவகத்தின் பயனுள்ள வழித்தோன்றல்கள் என்பதை நிரூபியுங்கள். முதியோர், உறவினர் என்போரின் முன்பு பயனுள்ளவர்களாக நடந்து அவர்களிட மிருந்து அன்பையும் கணிப்பையும் பெறுங்கள். நீங்கள் பிறந்த குடும்பத்துக்குச் சிறப்பைத் தாருங்கள். உங்கள் திருமணத்துக்குப் பின்னர் நீங்கள் வாழப்போகும் குடும்பத்துக்கும் சிறப்பை தாருங்கள்.

### சாயி பெண் கல்லூரிகள் ஏன் ?

இன்று இந்தக் கல்லூரிகளிலே பயிலும் இளம் பெண்கள் நாளைய தாய்மார்கள். ஆகையினால் அவர்கள் தமது எதிர்கால வாழ்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைக்குத் தேவைப்படும் கற்றல், ஞானம் என்பவற்றால் தம்மை நிறைவுபடுத்திக் கொள்ளல் வேண்டும். இங்கு கற்கும் பெண்கள் இலட்சிய இந்தியப் பெண்களாக வாழ்வதற்குரிய பயிற்சியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது அதி முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஒரு பெண் தனது இல்லத்தைப் பராமரித்தல் அவசியம். அவள் இல்லத்துக்குரிய பெண்ணாக இருத்தல் வேண்டும். நாட்டின் தனிச்சிறப்பானது பெண்களின் மீதே தங்கியுள்ளது. அதனால் தான் இது எமது ''தாய்நாடு'' என்கிறோம்.

பெண்களுக்கு இந்த நாட்டிலே கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவத்தை நிலை நிறுத்துவதற்கும், அந்த வழியிலே இளம் பெண்களுக்குப் பயிற்சியளிப்பதற்கும் இவ்வாறான கல்லூரிகளைத் திறக்கும் பணியை ஏற்றுள்ளோம். இங்கு கற்கும் இளம் பெண்கள் தங்களுடைய சொந்த இல்லங்களுக்கும், திருமணத்தின் பின்னர் செல்லவிருக்கும் இல்லங்களுக்கும், புகழைத் தேடிக் கொடுப்பதற்குரிய நற்பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டுமென நான் எதிர்பார்க்கின்றேன். இன்றுள்ள இளம் பெண்களிடத்துக் காணப்படும் குரூரமான பழக்கங்களும் ஆபாசமான நடத்தைகளும் இந்தக் கல்லூரிகளில் படிக்கும் பெண்களிடம் காணமுடியாது.

சத்தியசாயி கல்லூரியிலுள்ள பெண்கள் நிறுவகத்தின் இலட்சியங்களைப் பராமரித்தல் வேண்டும். தங்களது இல்லங்கள் தமது சமூகம், தமது பண்பாடு ஆகியவற்றின் அருமை பெருமைகளைப் பராமரித்தல் வேண்டும். அப்பொழுது தான் இந்தக் கல்லூரி நிறுவப்பெற்றமைக்கான நோக்கம் பூரணத்துவம் பெறும்.

## சிறுவர்களுக்கு அறிவுரை

உங்களுக்குப் பயம், பணிவு, நம்பிக்கை ஆகியவை இருக்க வேண்டும். எதற்குப் பயம்? தவறு செய்வதற்கும், பொய்மையில் வீழ்வதற்கும் பயம் வேண்டும். யார் முன்னால் பணிவு இருத்தல் வேண்டும்? மூத்தோர், ஆசிரியர், பெற்றார், முன்பு பணிவு இருத்தல் வேண்டும். எதில் நம்பிக்கை இருத்தல் வேண்டும்? கடவுளில், உங்கள் சுயபலத்தில், உங்கள் சுயவெற்றியில் நம்பிக்கை இருத்தல் வேண்டும்.

நீங்கள் ஒவ்வொருவரும் உறுதியானவர்களாக, தயார் நிலையில் உள்ளவர்களாக, நேரியவர்களாக வளர வேண்டும். தீயவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் கண்கள் பார்த்தலாகாது. உங்கள் காதுகள் கெட்ட கதைகளைக் கேட்டலாகாது. உங்கள் கைகள் தீய செயல்களைச் செய்யலாகாது உங்கள் மனம் தீயவற்றைச் சிந்திக்கலாகாது தூய்மையாயிருங்கள். அன்பு நிறைந்தவர்களாயிருங்கள் மிகவும் துர்ப்பாக்கிய நிலையிலுள்ளோர்க்கு உதவுங்கள். உங்கள் உதவி வேண்டப்படுவோருக்கு உதவுங்கள். அப்பொழுது தான் சத்திய சாயி தெய்வீக கல்வியின் பெறுமதி மிக்க உறுப்பினராவீர்கள்.

மற்றைய பையன்கள் பெண்கள் ஆகியோருக்கு நீங்கள் உன்னத உதாரணங்களாக மிளிருங்கள் நீங்கள் வீட்டிலிருக்கும் பொழுது உங்களது தந்தையாரின் நண்பர்கள் வந்தால் உங்கள் இருக்கையை விட்டு எழுங்கள். அன்பாகவும் தெளிவாகவும் அவர்களுடன் பேசுங்கள், அன்பாக வரவேற்புச் செய்யுங்கள். அவர்களோடு இதமாக இருங்கள்.

தொலை பேசியில் பேச வேண்டியிருந்தால் ''ஹலோ'', ஹலோ'' என்று உரத்துச் சத்தமிடாதீர்கள். வயது முதிர்ந்தோரை அவ்வாறு எளிமையாக அழைக்கக் கூடாது. ''ஹலோ, ஹலோ'' என்பது பணிவான வார்த்தையன்று. சிநேகிதர்களோடு மாத்திரமே இதனைப் பயன்படுத்தலாம். நீங்கள் ''ஓம்'' என்று கூற வேண்டுமென்றே நான் விரும்புகின்றேன். அப்பொழுது தான் உங்கள் பெற்றாரும் முதியோரும் உங்களிடமிருந்து ''ஓம்'' என்று சொல்வதைக் கற்றுக் கொள்வார்கள்.

## கதை அறிவிக்கும் நாக்கு

நீங்கள் எல்லாரும் பாடசாலையில் இருக்கின்றீர்கள். நூல்களை வாசிக்கின்றீர்கள். வகுப்புக்களுக்குச் செல்லுகின்றீர்கள். ''நாங்கள் மாணவர்கள்'' என்று சொல்கின்றீர்கள். பல பாடங்களைப் படிக்கின்றீர்கள். இவ்வாறான கற்றல் நீங்கள் வளர்ந்த பின்னர் சில வேலைகளச் செய்வதற்கும் சில உத்தியோகங்களைப் பெறுவதற்கும் உதவி செய்யும். உடல்நலவியல் வழிகளைக் கற்றறியுங்கள். உங்கள் உடலை உறுதியாக வைத்திருப்பதற்கு நீங்கள் விளையாடிப் பயிற்சி செய்யுங்கள். இது மிகவும் நல்லது. இவற்றை நீங்கள் கற்க வேண்டும். ஆனால் வேறு பணிகளும் உங்களுக்கு இருக்கின்றன. அவற்றை நீங்கள் அறிந்து செய்தல் வேண்டும். அவற்றை யான் சொல்லுகின்றேன்.

நீங்கள் எல்லோரிடத்தும் மென்மையாகவும், இனிமையாகவும் பேசுதல் வேண்டும். காகத்தின் குரலை நீங்கள் விரும்புவீர்களா ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. காகம் கத்தத் தொடங்கியதும் நீங்கள் விரட்டி விடுகிறீர்கள் அதன் ஒலி கடினமாக இருக்கும். உங்கள் செவிகள் தாங்க முடியாத ஒலியாக அது இருக்கும். நீங்கள் குயிலைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இல்லையா ? அது காகத்தைப் போன்றே இருக்கும். அது குஞ்சுக் காகங்களுடன் கூட்டிலேயே வளர்ந்து வரும். தாய்க்காகமே அதற்கும் உணவூட்டும். ஆனால் குயில்பாடும் பொழுது யாரும் கல்லெறிய மாட்டார்கள். ஏனெனில் அதன் குரல் மிக்க இனிமையாக இருக்கும் இதமாகப் பேசுங்கள். இனிமையாகப் பேசுங்கள். அப்பொழுது தான் உங்களை ஒவ்வொருவரும் விரும்புவார்கள்.

கண்கள் பார்க்கின்றன. காது கேட்கிறது. மூக்கு முகர்கின்றது. பொருள்கள் கடினமானதா, மென்மையானதா என்று தோல் கூறுகின்றது. நா சுவைக்கின்றது. இந்த ஐந்தும் புலன்கள் எனப்படும். இவை ஒவ்வொன்றும் தமக்கே உரிய தொழிலைச் செய்யும் கண் கேட்கவோ, முகரவோ, சுவைக்கவோ மாட்டாது. செவியானது பார்க்க மாட்டாது, முகரமாட்டாது. சுவைக்க மாட்டாது ஒரு பண்டம் கடினமானதா மென்மையானதா என்று கூறமாட்டாது வாயைப் பொறுத்த வரை இக்கருத்து உண்மையானதன்று. அது ஒரு வேலையை மட்டும் செய்வதில்லை. இரண்டு வேலைகளைச் செய்யும்.

கடவுள் நாவுக்குக் கொடுத்த இரண்டு வேலைகளும் முக்கியமானவை. சுவைத்தல் என்ற முதலாவது வேலையை ஒரு முறை யோசியுங்கள். சுவை கூடாததாக இருப்பின் நீங்கள் விரும்பமாட்டீர்கள். நீங்கள் நோய்வாய்ப்பட்டிருந்தால் சுவை இல்லையென்று கருதினாலும் மருந்தை உண்பீர்கள். ஆகவே சுவையற்ற எதனையும் நீங்கள் துப்பி வெளியேற்றி விடுவதில்லை ஏனெனில் அவற்றுட் சில உங்கள் நோயைக் குணமாக்கி விடுகின்றன. இன்னொரு கருத்தை நினைவிற் கொள்ளுங்கள். நாவுக்குச் சுவையாக இருப்பது உங்கள் உடல் நலத்துக்குக் கெடுதலாக இருக்கலாம். நீங்கள் சுவைப்பது கசப்பானதா, சுவையானதா என்பதை நாக்கு கூறும். ஆனால் சுவைக்கும் பொருள் உங்கள் உடலுக்கு நல்லதா அல்லது கூடாததா என்பதை நா கூறமாட்டாது. அதிக அளவில் சாப்பிட்டு உங்கள் ஆரோக்கியத்தைக் கெடுத்து விடாதீர்கள். உடல் நோய்வாய்ப்பட்டிருந்தால், மனமும் பலம் குன்றும், மூளையும் நன்கு வேலை செய்யமாட்டாது.

நாக்குச் செய்யும் இரண்டாவது வேலை பேசுதல் ஆகும். உங்கள் சிந்தனைக்கு பேச்சு வடிவம் கொடுக்கும் ஓர் உபகரணமாக நாக்கு விளங்குகின்றது. உங்கள் கருத்துக்கள், உணர்ச்சிகள், விருப்பங்கள், தவம், இன்பம், துன்பம் என்ற அனைத்துக்கும் பேச்சு வடிவம் கொடுக்கும் கருவியாக நா அமைகின்றது. கோபம் வரும் பொழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடினமான சொற்களை உரத்துப் பேசுகின்றீர்கள். மகிழ்ச்சியாயிருக்கும் பொழுது மெதுவாக இதமாகப் பேசுகின்றீர்கள் நல்லதற்காகவும், மற்றவர்களுக்கு நன்மை தரும் வகையில் நாக்கைப் பயன்படுத்தும் வண்ணம் உங்களை வேண்டுகின்றேன். பிறரிடத்துக் கோபத்துடன் பேசினால் அவரும் உரத்துக் கோபத்துடன் பேசுவார். கோபமான சொற்கள் மேலும் கோபமான சொற்களைக் கொண்டு வரும். ஆனால் பிறர் கோபமாயிருக்கும் பொழுது நீங்கள் இதமாகப் பேசினால் அவர் சாந்தமடைவார். தாம் பேசிய வன்சொல்லுக்காக வருத்தமடைவார். உரத்துக் கத்தாதீர்கள். தேவைக்கு அதிகமாகப் பேசாதீர்கள், பேசத் தேவையற்றிருக்கும் பொழுது பேசாதீர்கள் எந்தக் குழுக்களுக்கு மத்தியிலோ பேசும் பொழுது தேவைக்கு ஏற்ற அளவுக்கே சத்தத்தைப் பயன்படுத்துங்கள் தேவைக்குக் கூடுதலாக உரத்துச் சத்தமிடாதீர்கள். அவ்வாறு செய்து நீங்கள் ஏன் உங்கள் சக்தியை வீணடித்தல் வேண்டும்?

பிறருக்கு எதிராக தவறான சொற்களைப் பயன்படுத்தாதீர்கள். அவ்வாறான சொற்கள் உங்கள் நாவிலே எழக்கூடாது பிறரின் காதுகளிலே அது நுழையவும் கூடாது. உங்கள் இதயத்திலும் எல்லாரது இதயத்திலும் கடவுள் இருக்கின்றார் என்பதை நினைவிலே கொள்ளுங்கள். எல்லாவற்றையும் அவர் கேட்கிறார், பார்க்கிறார். எனது தலை, எனது கைகள், எனது கண்கள், எனது மனம் என்று சொல்லும் பொழுது, நான் யார் என்ற கேள்வி எழுகின்றது. நான் என்பது உங்களிடமுள்ள கடவுளின் ஒளிக்கீறல். இந்த ஒளிக்கீறல் எல்லாரிடத்தும் உண்டு. நீங்கள் கொடூரமான, கோபமான, தவறான சொற்களைப் பயன் படுத்தும்பொழுது, உங்களிடமும் பிறரிடமும் உள்ள இறைவன் நோவடையச் செய்யப்படும். நா என்பது ஒரு கருவி என்று கூறினேன். அதைப் பயன்படுத்தி நீங்கள் துன்பம் விளைவிக்கின்றீர்கள். ஆகவே எச்சரிக்கையாயிருங்கள் உங்கள் நன்மைக்காகவும் பிறரது நன்மைக்காகவும் அதனைப் பயன்படுத்துங்கள். நீங்கள் இன் சொல்லைப் பயன்படுத்த விரும்பினால், இறைவன் நாமத்தைச் சொல்லுங்கள், இறைவனைப் பாடுங்கள். அப்பொழுது தான் நாவை நீங்கள் நல்ல வழியிலே பயன்படுத்த முடியும்.

நாவைப்பற்றி மேலும் சில கூறமுடியும். நாவை உற்று நோக்குவதால் நீங்கள் மேலும் கற்றுக் கொள்ள முடியும். அது தனது இருப்பிடத்துக்குள்ளேயே இருக்கின்றது. மிக அரிதாகவே வாய்க்கு வெளியே வருகின்றது. வெளியில் வந்து ஏன் அலைய வேண்டும். இது நீங்கள் படிக்க வேண்டிய ஒரு பாடம். நீங்கள் உங்கள் வீடுகளில் இருந்து தாய்தந்தையருக்குச் சேவை செய்யுங்கள். உங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதர சகோதரிகளுக்குச் சேவை செய்யுங்கள். நோக்கமின்றி வெளியே வந்து அலைந்து திரியாதீர்கள். மற்றவர்களது வீட்டுக்குச் சென்று அவர்களைக் குழப்பாதீர்கள். நா என்பது பிறரது வாய்க்குள் செல்வதில்லை ஆகவே தேவையற்ற முறையில் உங்கள் வீடுகளுக்கு வெளியே வந்து வீண் பொழுது போக்காதீர்கள். நல்ல பெயரைச் சம்பாதியுங்கள். வீட்டிலும் பாடசாலையிலும் ஒழுங்கான முறையில் நடந்து நல்ல பெயரை நிலை நாட்டுங்கள்.

நாக்கு உங்களுக்கு இன்னொரு பாடத்தையும் புகட்டுகின்றது. நீங்கள் உரத்து வாசிக்கும் பொழுது அல்லது பேசும் பொழுது அது இலாவகமாக அசைகின்றது. நாங்கள் வேண்டிய ஒலியை எழுப் பக்கூடியவாறு அது இயங்குகின்றது உணவருந்தும் பொழுதும் அது இசைவாக இயங்குகின்றது. பற்களுக்கிடையில் அது அகப்பட்டுக் கொள்வதில்லை நாவைச் சூழ்ந்துள்ள முப்பத்து இரண்டு பற்களும் கூரிய வாள்முனைப்புக்களோடு நிற்கின்றன அவற்றினால் தாக்கப் படாது, அது செயலாற்றுகின்றது. அவ்வாறே நீங்களும் சுற்று முற் றும் பார்த்து ஆபத்துக்களில் இருந்து தப்பித்துக் கொள்ளுங்கள். கெட்ட கூட்டத்துடன் சேராதீர்கள். கெட்ட பழக்கங்களைப் பழகாதீர்கள். உங்கள் தாய் தந்தையருக்கும் பாடசாலைக்கும் கெட்ட பெயரைக் கொண்டு வராதீர்கள்.

**இளம் மரக்கன்றுகள்**

இளம் நிலையிலே மரக்கன்றை நேராக வளரச் செய்ய உதவ லாம். ஆனால் அது மரமாக வளர்ந்த பின்னர் அவ்வாறு உதவி செய்ய முடியாது. குழந்தைப்பருவத்தில் எது சரி எது தவறு என்று அறியாது, நீங்கள் வழி தவறிச் செல்ல முடியும். அந்நிலையில் உங் களுக்கு நல்ல வழிகாட்ட யாரும் இலர். ஒருவரும் எச்சரிக்காததால் நீங்கள் கெட்ட கூட்டத்தில் சேர்ந்தீர்கள். ஒருவரும் கடவுளின் பாதையை உங்களுக்குக் காட்டவில்லை. அவ்வாறு வழிகாட்டியிருந் தால் நீங்கள் நல்ல பாதையைத் தெரிவு செய்திருப்பீர்கள். இளமையில் கெட்டதைப் பதித்தல் போன்று நல்லவற்றைப் பதிக்கும் திறனும் உண்டு. உங்களைச் சூழவுள்ள எவருக்கும் உள்ளார்ந்த இறை பற்றிய நம்பிக்கையற்றிருக்கின்றனர் அல்லது உங்களைத் தீமைகளில் இருந்து காப்பாற்றுவதற்கும் நல்ல வழிகாட்டுவதற்கும் ஆற்றல் இல்லா திருக்கின்றார்கள்.

இந்தக் கணத்திலிருந்தே நல்லவர்களாகவும் அன்பு பாராட்டக் கூடியவர்களாகவும் மாறத் தீர்மானம் எடுங்கள். உங்கள் கடமைகளை மகிழ்ச்சியுடனும் நன்றாகவும் செய்யுங்கள். உங்கள் மீது நலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வோர் திருப்திப்படும் படியாகச் செய்யுங்கள் நீங்கள் செய்த தவறுக்காக வருந்தினால் அதுவொன்றே கடவுளைத் திருப்திப்படுத் துவதாக அமையும். அவர் உங்களை மன்னிப்பார். நீங்கள் நல்லவர் களாகத் திசை திரும்பி நடக்கும் பொழுது, உங்கள் மீது கடவுள் அருளைச் சொரிவார். இங்கு உங்களுக்குக் கல்வியும் பாதுகாப்பும் தரப்படுகிறது. இந்தப் பெருமை பெற்ற நாட்டினது பயனுள்ள பிள்ளைகளாக வருவதற்குக் கற்கும் சந்தர்ப்பம் தரப்படுகின்றது. பிறருக்குத் துன்பம் தருதல், பிறர் பொருளை அபகரித்தல், பிறரைத் துன்புறுத்தும் சொற்களைப் பயன்படுத்தல் என்ற எண்ணங்கள் மனத்திலே நுழையும் பொழுது இறைவனை நாடுங்கள் இறைவனிடம் உங்களுக்குப் பலத்தைக் கேளுங்கள். இந்த எண்ணங்கள் பயம், கோழைத்தனம் என்ற பண்புகளால் எழுகின்றன. அவை பலவீனத் தின் வெளிப்பாடுகள்.

## ஒரு குழந்தை நிலையின் உண்மையான இயல்புகள்

தீவிரவாதமோ, பணமோ, சந்ததியோ, ஒருவருக்குத் தெய்விகத் தைத் தருவதில்லை. துறவே தெய்விகத்தைத் தரும் துறவை மேற் கொள்ளுங்கள் உங்களைக் கட்டுத்தளைகளுக்குள்ளே அகப்படுத்திக் கொள்ளாதீர்கள். எடுத்துக் காட்டுகளாலும், சொந்த நடைமுறைக ளாலும் பங்கு கொள்வதால் ஏற்படும் மகிழ்ச்சிக்கு ஈடிணை இல்லை என்பதை உணர்த்துங்கள். பங்கிடுதல், கொடுத்தல் என்பவை மிக்க மகிழ்ச்சியை உண்டாக்கும்.

குழந்தைகளின் நடத்தைகளைப் பார்க்கும் பொழுது நீங்கள் இதனை நன்கு விளங்கிக் கொள்வீர்கள். அவர்கள் தெய்விகத்தை நன்குணர்ந்தவர்களாக, பற்றுக்களில் இருந்து விடுபட்டவர்களாக இருப்பார்கள். மனிதனை ஆளும் மூன்று ஊக்கங்கள் உள்ளன. அவை, புறவுலகோடு தொடர்பு கொள்ளும் விருப்பம். பொருள்களை வைத் திருக்கும் விருப்பம், இயற்கையின் இரகசியத்தை உணரும் போது எழும் மேலான இன்பம் என்பனவாம் குழந்தையின் சட்டைப் பையுள் இருப்பதைப் பரிசோதித்துப் பாருங்கள். சிறிய கற்கள், கண்ணாடித் துண்டு, நூல் அல்லது இருக்கும். வளர்ந்தோர் ஒரு காசுக்கட் டிலிருந்து பெறும் இன்பத்திலும் கூடுதலான அளவை குழந்தை இந்தப் பொருள்களிலிருந்து பெறுகின்றது. பிறருக்குக் கொடுக்க மறுத்து தாம் வைத்திருப்பதிலும் குழந்தைகளுக்கு கவனமில்லை. தொடர்ந்து வரும் நாட்களுக்காச் சேமித்து திரட்டிவைத்திருக்கும் பழக்கமும் குழந்தைக்கு இல்லை. குழந்தையின் உடல் அசுத்தமாக இருக்கலாம். ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளம் அசுத்தப்படுவதில்லை. வளர்ந்தோர்கள் உடற்சுத்தத்தை நாடினாலும், அவர்களுடைய மனம் விருப்பு, பிறரை வெறுத்தல், பொறாமை, முதலியன சிக்கலான சக்தியின் இருப்பிடமாகவுள்ளது.

## நேர காலத்தோடு தொடங்குங்கள், மெதுவாகச் செலுத்துங்கள், பாதுகாப்பாகச் சென்றடையுங்கள்

தெய்விக விஷயங்கள் சிறுவர்களுக்குக் கற்பிக்கப்படலாகாது என்று சில சிற்றறிவாளர் கூறுகின்றனர். சிறுவர்கள் மிக இளமை நிலையிலும் அனுபவம் போதாமலும் இருக்கின்றமையாலும் போதனையால பயன் பெறாதிருப்பர். என்று அவர்கள் கருதுகிறார்கள். ஆனால் ஒரு செயலைச் செய்ய வேண்டும் என்று நாங்கள் எண்ணினால் உடனடியாகவே அதைத் தொடங்கி விடல் வேண்டும். இதனையே ''நேர காலத்தோடு தொடங்குங்கள், மெதுவாகச் செலுத்துங்கள், பாதுகாப்பாகச் சென்றடையுங்கள்'' என்ற சுலோகம் விளக்கும். இது பொதுவான பயணங்களுக்கு மட்டுமல்ல உண்மையை நோக்கிய பயணத்துக்கும் பொருந்தும். இருளில் இருந்து ஒளியை நோக்கிய பயணத்துக்கும் பொருந்தும். சிறப்பிலிருந்து நித்திய ஜீவனை நோக்கிய பயணத்துக்கும் பொருந்தும். இன்றைய உலகை பதகளம், பயம், வெறுப்பு முதலிய வேதனைகள் வாட்டுகின்றன. இதற்குக் காரணம் குழந்தை நிலையிலிருந்தே அவர்களது ஒழுக்கத்தை வழிப்படுத்தி அதன் வழியாக மனித மனவெழுச்சிகளை ஒழுங்குபடுத்தாமையாகும். ஆகவே குழந்தைகளுக்கான இந்தக் கற்பித்தல் பணியை ஒத்தி வைத்தல் ஆபத்தானதாகும். சிறுவர்களிடத்து சமநிலை, அமைதி, ஒத்திசைவு, சாந்தம் முதலிய ஒழுக்கங்களை வளர்த்து விட்டால், அவர்கள் வீணானதும், பாழானதுமான நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டார்கள். உங்களது பாடவிதானத்திலுள்ள தகவல் திரட்டும் பாடங்களுடன் தெய்வீக ஒழுக்கங்களையும் நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.

## இளம் உள்ளங்கள்

இளம் சிறுவர்களது உள்ளங்கள் சுலபமாக எவற்றையும் உள்வாங்கக் கூடியன வாகவும், புலன்சார் உணர்ச்சிமிக்கனவாகவும் இருக்கின்றன. எத்தகைய மனப் பதிவுகளாக இருப்பினும் அவை அவர்களது உள்ளத்திலே ஆழமாக நிலை கொள்ளும் அவர்களது முழு நடத்தைகளிலும், பழக்க வழக்கங்களிலும் அது தாக்கத்தை எற்படுத்தும். குருடர்களான பெற்றோர்கள் மீது ஆழ்ந்த அன்பும் பெருமதிப்பும் கொண்டு சேவையாற்றிய சரவணகுமார் என்ற சிறுவனின் கதையை ஓர் இளம் மாணவன் கேட்டான். அவனது உள்ளத்திலே அந்தக் கதையின் சோகம் ஆழ்ந்து பதிந்தது. சரவணகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோரின் மீது வைத்த அன்பு இந்த மாணவனது வாழ்க்கையிலும் முன் உதாரணமாக அமைந்தது. சரவணகுமார் செய்தது போன்று தானும் தன்னலமற்ற அன்பைத் தனது பெற்றோருக்கு வழங்க வேண்டுமென்று பையன் முடிவு செய்தான். மற்றொரு பையன் சத்திய அரிச்சந்திரா நாடகத்தை பார்த்தான். என்ன தான் கஷ்டங்கள் வந்தாலும் சத்தியத்தை வழுவாது கடைப்பிடிக்க வேண்டுமென்ற கருத்து அவனது உள்ளத்திலே ஆழப்பதிந்தது. பெற்றோருக்குத் தொண்டு செய்தல், சத்தியத்தை வழுவாது கடைப்பிடித்தல், என்ற இரண்டும் ஒரு பறவையின் இரண்டு இறகுகள் போன்றவை — ஒரு தேரின் இரு சக்கரங்கள் போன்றவை. இந்த இரண்டையும் முழுமுதலாகக் கொண்டு அந்தப் பையன் பூரணத்துவத்தை அடைய முடிந்தது. சாதாரணமாக மோகனதாஸ் காந்தி என்று அழைக்கப்பட்ட அந்தப் பையன் ''மகாத்மா காந்தி'' யாகப் பரிணமித்தான். ஆனால் துரதிஷ்டவசமாக இன்றைய மாணவர்கள் சரவணகுமாரின் கதையைக் கேட்டறியார்கள். சத்திய அரிச்சந்திராவின் நாடகத்தை உணர்வு பூர்வமாகப் பார்த்தறியார்கள் இன்றைய சிறுவர்கள் படிக்கும் கதைகளும், பார்க்கும் படங்களும் அவர்களின் மனத்தை மாசுபட வைக்கின்றன.

## பெற்றோரின் வழிகாட்டல்

சிறுவர்களின் மனங்கள் புனிதமானவை. தூய்மையானவை. ஒவ்வொரு குழந்தையும் வெள்ளை நிறப்பளிங்குக் கல் போன்றது. அதில் ஆசிரியரும் பெற்றோரும் அழகான தெய்வச்சிலையைச் செதுக்கியெடுத்தல் வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் அழகிய மொட்டுக்கள் போன்றவை. கடவுளுக்கு அர்ப்பணம் செய்யக் கூடிய நறுமலர்களாக அவர்களை விரிவடையச் செய்தல் வேண்டும்.

பிள்ளைகளின் நடத்தை ஒழுக்கம் ஆகியவற்றைச் சீர் கெடுத்தல் தொடர்பான தொண்ணூறு சதவீதமான குற்றச் சாட்டுக்கும் பெற்றோரே பொறுப்பாளிகளாவர். அவர்கள் நுண்மதி ஆற்றல் இல்லாத அன்பையும், பிரித்தறியமுடியாத சுதந்திரத்தையும் சிறுவர்களுக்கு வழங்குகின்றார்கள். வீடுகளே குழந்தைகளுக்குரிய முதலாவது பாடசாலை. அங்கு அவர்களுக்கு பிரார்த்தனை, பணிவு, பிறருக்குச் சேவை செய்தல் முதலிய விழுமியங்களை மனத்திலே பதியச் செய்தல் வேண்டும். உலக சமய ஒழுக்கம் என்ற அடிப்படை உண்மைகள் மீது ஆசிரியர்கள் நம்பிக்கை வைத்தல் வேண்டும். அவர்கள் குடும்பப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசையறையில் வணக்கம் செய்யக் காணப்படல் வேண்டும் அமைதியாக தியானத்தில் ஈடுபட வேண்டும். பிறரின் தவறுகளை மன்னித்தல் வேண்டும். பிறரின் துன்பத்திலும் சோகத்திலும் அனுதாபம் காட்டல் வேண்டும். துன்பம் ஆதரவின்மை, திருப்தியின்மை, சோகம் தழுவியவர்களுடன் இணைய அனுமதியாதீர். அவர்கள் பற்றிய பிடிப்பதற்குப் பற்றுக் கோடற்றவர்களாயும், உள்ளார்ந்த பலம் அற்றவர்களாயும், மீண்டு வர முடியாதவர்களாயும் இருக்கின்றார்கள்.

## பெற்ருேரின் கடமை

அதிகாலையில் நித்திரை விட்டெழும் பழக்கத்தை மாணவர் வளர்த்துக் கொள்ளல் வேண்டும். காகம் கரையும் பொழுது அவர்கள் விழித்தெழல் வேண்டும். அதைத் தொடர்ந்து பிரார்த்தனையும், குளிப்பும், உணவும் வீட்டு வேலை செய்தலும், பாடசாலை செல்லலும், இடம் பெற வேண்டும். படிப்பில் நன்றாக இருத்தல் வேண்டும். நல்ல பழக்கவழக்கங்களைப் பழகுதல் வேண்டும். ஆனால் துரதிஷ்ட வசமாக இன்று பெற்றோர்கள் காலை ஒன்பது மணிக்கு முன்னர் நித்திரை விட்டு எழுவதில்லை. ஆபாச திரைப்படங்களிலும், வீண் பொழுது போக்குகளிலும், ஈடுபட்டு இரவைக் கழிக்கின்றனர். அது பற்றிச் சிலர் வீண் பெருமையும் அடைகின்றனர். அது தான் நவநாகரீகம் என்று எண்ணுகின்றனர்.

சிறுவர்கள் பிறருடன் புரிந்துணர்வுடனும், சகோதர உணர்வுடனும் வளர வேண்டும். செல்வக்குடும்பத்திலுள்ள பிள்ளைகள் ஆடம்பரச் செலவுகளில் ஈடுபட்டு தமது சுயநல அகத்தை வெளிப்படுத்துகின்றனர். அவர்களுக்குத் தேவைக்கு அதிகமான பணத்தைப் பெற்ருேர் கொடுக்கின்றனர். அதனால் ஏழைப் பிள்ளைகளிடத்தே தாழ்வுச் சிக்கல் வளருகின்றது. அத்தோடு தமது வகுப்பிலுள்ள செல்வந்தப் பிள்ளைகள் மீது பொருமையும் கொள்கின்றார்கள்.

## பெற்ருேர்கள் மீதே குற்றம் சுமத்த வேண்டும்

நாட்டின் எதிர்காலத்தை ஆசிரியர்கள் மட்டும் உருவாக்குவதில்லை. இன்று நாம் கவலைப்படும் அளவுக்கு உருவாக்கப்பட்டுள்ள மாணவரின் இயல்புக்கு ஆசிரியர்கள் மீது குற்றம் சுமத்திவிட முடியாது. ஒரு நாட்டின் சாந்தியும் சுபீட்சமும் ஆசிரியர்கள் பொலிஸ்காரர் ஆகியோரில் தங்கியுள்ளதென்று சொல்லப்படுகின்றது. இவர்களுடன் பெற்றோர்களையும் சேர்க்க வேண்டும் பிள்ளைகளுக்கு அளவுக்கு அதிகமான போகங்களும், சுதந்திரமும் வழங்குதற்கு பெற்ருேரே பெருமளவு பொறுப்பானவர்களாவர் நேர்மை, புலக்கட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுப்பாடு, ஒழுக்கம் போன்றவற்றுக்கு அவர்கள் எடுத்துக் காட்டாளர் களாக இருக்கவில்லை. நீங்கள் புடலங்காய்த் தோட்டத்திலுள்ள பந்தரைப் பார்த்திருக்கலாம் புடலங்காய் நேராக வளர்வதற்காகத் தோட்டக்காரன் ஒரு கல்லைக் கட்டித் தொங்க விடுவான். காய் வளர வளர பாரமான கல்லை அவன் பயன்படுத்துவான். அவ்வாறே குழந்தைகள் வளர வளர அவர்களது படி நிலைகளுக்கேற்றவாறு வலிமையாக ஒழுக்கக் கட்டுப்பாடுகளை வலியுறுத்தவேண்டும் அப் பொழுது தான் அவர்கள் நேரானவர்களாக, பலம் பொருந்தியவர் களாக வளர்வார்கள்.

சிலர் கல்விக்கோட்பாடுகளைப் பற்றிப் பேசுவார்கள். குழந் தைகளுக்கு முற்றான சுதந்திரம் தரவேண்டும் என்று கூறுகிறார்கள். குழந்தைகள் தாமாகவே வளர அனுமதிக்கவேண்டும் என்று கூறுகின் றார்கள். பெற்றோர்கள் கட்டுப்பாடு விதித்தலையும் அவர்கள் அனுமதிப்பதில்லை. கட்டாயமாகக் குழந்தைகளைத் தன்னிச்சையாக வளரச்செய்யும் நடவடிக்கையாக இது அமையும். அவ்வாறான சிறுவர்கள் தமக்குச் சுமையாகவும், சமூகத்துக்குப் பிரச்சினையாகவும் இருப்பர். பெற்றார்கள் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புகின் றார்கள். ஆனால் பிள்ளைகள் என்ன செய்கின்றார்கள் என்று பரிசோதிப்பதில்லை. பாடசாலையிலிருந்து பிள்ளைகள் நேரடியாக வீட்டுக்கு வருவதில்லை. நேரத்துக்கு வீட்டுக்கு வருவதைப் பெற்றார் வலியுறுத்துவதில்லை. இது தொடரும்பொழுது பிள்ளையின் எதிர் காலம் பாழடையும். மிக உயர்நிலையிலுள்ள பெற்றோரின் குழந் தைகளே இவ்வாறான இடம்பெயர்ந்த அன்பினால் கெட்டுவிடுதல் பரிதாபகரமானது. அறிவு ஆசிரியரால் கொடுக்கப்படுகின்றது. ஒழுக்கம், புலன்கள் தொடர்பான வலிய கட்டுப்பாடு முதலியவை பெற்றோரால் மேற்கொள்ளப்படல் வேண்டும். அப்பொழுதுதான் பிள்ளைகள் புனித ஆன்மாவாக உருவெடுப்பர். மிகவும் இளமை நிலையில் அவர்களது மனம் இருக்கும்பொழுதே சிறுவர்கள் சிந்தனை யிலும், சொல்லிலும், செயலிலும் தூய்மையானவர்களாவும், இனியவர்களாயும் வரும்வண்ணம் பயிற்சியளித்தல் வேண்டும்.

## தாயாரின் புனிதமான பணி

தமது குழந்தைகளுக்கு உச்சநிலையான சுதந்திரத்தைக் கொடுக் கும் வேளை அவர்களைக் கட்டுப்படுத்தும்பொழுது தவறான முன் மாதிரியாக இருத்தலாகாது. வீட்டிலுள்ள முதியோருக்கு மதிப் பளிக்கும் நடத்தைகளை முன்னெடுத்தல் வேண்டும். குழந்தைகளுக்கு முன்னர் தாம் எவ்வாறு நடக்கவேண்டும் என்பதில் தாய்மார் எச் சரிக்கையாயிருத்தல் வேண்டும். பெரியோர்கள் செய்வதைப் பார்த்துச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களும் பெருமளவிலே கற்க முனைவார்கள். விளக்கம், புரிந்துணர்வு, முதலிய உணர்வுகள் இல்லத்திலே நிலை கொள்ளல் வேண்டும்.

வெறுப்பு, பொறாமை, அவா, வன்மம், கபடம் முதலியவற்றின் தாக்கங்களில் இருந்து விடுபட்டு இல்லம் புனிதமானதாக இருத்தல் வேண்டும். குழந்தை உண்ணும் உணவு புனிதமாய் இருத்தல் அவசியம். இரண்டு வயதிலிருந்து ஐந்து வயதுவரை குழந்தைகள் பெற்றாரைப் பின்பற்றுவதால் தாயாரின் நடத்தை மிக ஒழுங்கானதாக இருத்தல் வேண்டும்.

இன்றைய பெண்கள் ஆண்களிலும் கூடுதலாக உத்தியோகங்களை நாடிச் செல்கின்றனர். தாயாரின் பிரதம கடமையாகவும் புனிதமான பணியாகவும் அமைகின்ற குழந்தை வளர்ப்பிலே கவனம் செலுத்தாதுவிடுதல் தவறானது. ஆசிரியர்களாக இருக்கும் சில தாய்மார்கள், மற்றைய பிள்ளைகளைப் பார்க்கின்றார்கள. ஆனால் தமது சொந்தப் பிள்ளைகளைப் பார்க்க அவர்களுக்கு நேரமில்லை அவ்வாறு நிராகரிக்கப்படுவதால் அவர்களது சொந்தப் பிள்ளைகள் கற்றலிலும் ஒழுக்க நெறியிலும் கெட்டுப் போகின்றார்கள். மற்றையவர்களது பிள்ளைகளைப் பார்ப்பதற்கு முன்னர். தமது சொந்தப் பிள்ளைகள் சரியான வழியிலே செல்வதற்கு உதவுதல் வேண்டும் அவர்களது பிள்ளைகள மற்றையவர்களது பிள்ளைகளுக்கு எடுத்துக்காட்டாளர்களாக முதலில் கொண்டு வரப்படல் வேண்டும்.

முற்காலத்தில் எமது பண்பாட்டுப் பாரம்பரியத்தில் பெண்கள் கர்ப்பவதிகளாக இருக்கும்பொழுது அவர்கள் புனித நூல்களை வாசித்தலும், புனிதமான சிந்தனை உணர்வுகள் ஆகியவற்றைத் திரட்டி நிறைவு செய்தலும் காணப்பெற்றன. அதன் காரணமாக அவர்கள் புனிதமான அதிர்வுகளை ஏற்படுத்தினர். இதற்கு மாறாக இன்றைய பெண்கள் கர்ப்பமுற்றிருக்கும்பொழுது ஒரு நாளில் மூன்று படங்களைப் பார்க்க விருப்பப்படுகிறார்கள். அதன் காரணமாகப் பிறக்கும் ''சினிமாக் குழந்தைகள்'' கீழ்த்தரமான குணவியல்புகளைக் கொண்டனவாகக் காணப்படுகின்றன.

## பெற்றோரின் பாத்திரம்

பிள்ளைகள் மீதுகொண்ட தவறான அன்பு காரணமாக பெற்றோர் தமது செல்வங்களை வழிதவறிச் செல்ல அனுமதிக்கின்றார்கள். பண்டைக் காலத்திற் பெற்றோர்கள் பிள்ளைகள் மீது அதிக அன்பு வைத்திருந்தார்கள். இதனால் பிள்ளைகள் பெற்றோரிடமிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலகிச் செல்வதில்லை. இன்று இது தலைகீழாகி விட்டது. பெற்ருேர்கள் அன்பையும் ஒழுக்கத்தையும் ஒன்று சேர்த்துப் பிள்ளைகளுக்கு வழங்கத் தவறியமையே இதற்குரிய காரணமாகும். ஆசிரியர் பெற்ருேருடன் தொடர்பு வைத்தல் வேண்டும். அப்பொழுதுதான் பெற்ருேர் மனித மேம்பாட்டுக்கான விழுமியங்களைப் பின்பற்றித் தமது குழந்தைகளைச் சீர்திருத்த முடியும்.

பிள்ளைகள் கேட்கும் பணம் எல்லாவற்றையும் கொடுத்து, அவர்கள் விரும்பும் உடைகளைக் கொடுத்து, மோட்டார்கார் அல்லது மோட்டார் சைக்கிள் முதலியவற்றைக் கொடுத்து விரும்பிய விழைவுகளுக்கு அனுமதி கொடுத்துப் பிள்ளைகளைக் கெடுத்துவிடுகின்றார்கள்

''நாங்கள் எப்பொழுதும் உண்மை பேசவேண்டும்'' எனப் பிள்ளைகளுக்குக் கற்பியுங்கள். வீட்டுக்குத் தொலைபேசி அழைப்பு வருகின்றது. சிறுவன் தொலை பேசியை எடுக்கின்றான். தமக்கு விருப்பமில்லாதவர் பேசுவதாயின் தான் (தந்தையார்) வீட்டில் இல்லை என்று கூறும்படி கேட்கின்றார். உண்மை பேசு என்று கூறிவிட்டு தந்தையாரின் செயல்கள் பிள்ளைக்குப் பொய் கற்பிப்பதாக அமைகின்றன !

## சாயி ஆன்மீகக் கல்வி

### ஆசிரியர்களுக்குப் புதிய விளக்கம்

உலகில் தர்மத்தை நிலைநிறுத்தும் அடிப்படை நோக்குடன் ஆரம்பிக்கப் பட்ட இயக்கமே சாயி தெய்வீகக் கல்வி (பாலவிகாஷ்) யாகும். பெரியோர்கள் தமது வழியிலும், மனோபாவங்களிலும் எங்கோ சென்றுவிட்டார்கள். சிறுவர்கள் எளிமை, அமைதி ஒழுக்க நெறிப்பட்ட வாழ்க்கை முதலியவற்றில் சரியாக வழிப்படுத்தப் படவேண்டியுள்ளார்கள். சாயி தெய்வீகக்கல்வி வகுப்பு களுக்கு வரும் சிறுவர்கள் ஒளியும், மகிழ்ச்சியும் ஒத்துழைப்பும் கொண்ட உதாரணர்களாக இருக்கும் பட்சத்தில் பெற்ருேர் அன்புடன் இசையச் செய்யப்படக் கூடியதாக இருப்பர். அதனால் அவர்கள் தமது பிள்ளைகளை அன்புடன் பால விகாசுக்கு அனுப்புவார்கள். உங்கள் கைகளிலே தடிகளை வைத்துக்கொண்டு குழந்தைகளைக் கவர முடியாது என்பது உங்களுக்குத் தெரியும். தடிக்குப் பதிலாக நீங்கள் தித்திப்பான பண்டங்களை வைத்திருத்தல் வேண்டும். ஆகவே ஆசிரியர்கள் அன்பையும், பொறுமையையும், கொண்டிருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மையானதும் தெளிவான உணர்வுகள் கொண்டதுமான ஒரு தலை முறை ஆண்களையும் பெண்களையும் உருவாக்குதலே சாயி தெய்வீகக் கல்வியின் (பாலவிகாஷ்) இலட்சியம். மாண்புறு பழக்கங்களும், இலட்சியங்களும் வளர்ந்து பயன்கொடுக்கும் சூழ் நிலை உருவாக்குதலே இங்கு பாடத்திட்டத்திலும் முக்கியமானதாகக் கருதப்படும். வாரத்தில் ஒரு நாளில் மட்டும் மாணவர் பாலவிகாஷ் ஒழுக்கக் கலைத்திட்டத்தைக் கற்பர். மற்றைய நாட்களிலே அவர்கள் தமக்குரிய பாடசாலைகளுக்குச் செல்வர். ஆகவே இந்த மாணவர் களின் நடத்தைக் கோலங்களை நன்கு வடிவமைப்பதற்குக் குரு மிகுந்த ஆற்றல் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

இந்த வகுப்புக்களில் உள்ள தமது பிள்ளைகள் வெளியேற ஆசிரியர் அனுமதித்தலாகாது தமது உணர்ச்சிகளை ஆசிரியர் குலைத்துவிடக்கூடாது. தமது மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்தல் வேண்டும் தமது சோகம், உற்சாகமற்ற நிலை, சித்ததடுமாற்றம் ஆகியவற்றை ஆசிரியர் வெளிக்காட்டலாகாது. எண்ணளவிலும் பார்க் கப் பண்பளவு வேலையே முக்கியமானது. ஆகவே திருப்தி கரமாகச் செய்வதிலும் கூடுதலான வேலைகளைப் பொறுப்பேற்கக்கூடாது. மாணவருக்கும், சமூகத்துக்கும் தாம் போதுமான அளவு பணிகளைச் செய்கின்றோம் என்று கொள்ளும் மனச்சாட்சியே அவர்களின் பணிக்குரிய நீதிபதியாக இருக்கட்டும்.

தெய்வீகக் கருத்துக்கள், எளிய வாழ்க்கை, தெய்வீகத்தேடல், அன்பு நிறைந்த,சேவை என்பவற்றை வலியுறுத்துவதற்கான சூழமைவு போதாமல் இருக்கின்றது. சாயிபக்கதர்கள் அல்லது வேறு எவ்வித தெய்வீக வழிவகைகளும் கிடைக்காத குழந்தைகள் மீது ஆசிரியர் அனுசரணை காட்டல்வேண்டும். ஆசிரியைகள் அர்ப்பணிப்புடன் மேற் கொண்ட இந்தப்பணியை அவர்களின் கணவர்கள் உற்சாகப்படுத் தாது விடலாம். அப்படியிருந்தபோதிலும் இந்தியாவிலும், பிறநாடு களிலும் சாயியின் தெய்வீகக் கல்வியைப் (பாலவிகாஷ்) பரப்புவதில் அடைந்த வெற்றியை நான் அறிவேன். கிராமங்களிலும், சேரிகளிலும், இந்தவேலைத்திட்டம் மேலும் விரிவுபடுத்தப்படல் வேண்டும்.

இதுதொடர்பான மேலும் பல பிரச்சினைகள் எழுகின்றன. வேறுபடுத்தலாலும், ஆழ்ந்த அன்பினாலும், பிரச்சினைகளைத் திருங்கள். குழந்தைகளுக்கு மேலும் சிறப்புடன் சேவை செய்தல் என்ற நோக்குடன் பிரச்சினைகளை அணுகும்பொழுது அவை இலகு வாகத் தீர்க்கப்படும். சாயி தெய்வீகக்கல்வி மாணவர்க்கு மட்டுமல்ல, ஆசிரியருக்கும் வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதைப் படிப்படியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் உணர்வீர்கள். இதில் ஈடுபடும்பொழுது, வேறு தெய்வீக சாதனைகளிலும் பார்க்க ஆசிரியர்களின் சிந்தனைகள், மனவெழுச்சிகள் முதலியவை மேலும் மேன்மையடையும். உங்களை வழிநடத்தும் ஓர் ஆசிரியர் உண்டு என்பதை நினைவிலே வைத்திருங்கள். ஆகவே நீங்களும் மாணவர்கள் தான். ஆசிரியராக இருந்துகொண்டே சமத்துவம், சாந்தம், தன்னலமற்ற அன்பு, முதலிய பாடங்களைக் கற்றுக்கொள்ளுங்கள்.

வெவ்வேறு சமயங்களைக் கொண்ட குழந்தைகளை இந்த வகுப்புக்களிலே வைத்துக்கொள்ளுங்கள். அப்பொழுதுதான் அவர்களுக்கிடையே நட்புறவும் அதன் வழியாக அன்பும் வளரும். ஆரம்பத்தில் சமயங்களுக்கிடையேயுள்ள வேறுபாடுகள் பற்றிப் பேசாதீர்கள். சமயங்களுக்கிடையே காணப்படும் பொதுப்பண்புகளை எடுத்துக் கூறினால் உங்களிடம் தரப்பட்டுள்ள பிஞ்சு உள்ளங்கள் குழப்பமில்லாது இருப்பார்கள். எல்லாச் சமயநூல்களிலும் கூறப்பட்ட கதைகளை உங்கள் மாணவர்க்குக் கூறுங்கள். அப்பொழுது எல்லா நாடுகளிலுமுள்ள தெய்வீகசாதுக்களும் போற்றுதற்குரியவர்கள் என்பதை மாணவர்கள் அறிந்துகொள்வார்கள்.

பிரார்த்தனை என்பது அனைத்து உலகத்துக்கும் பொதுவானது. எந்த மொழியிலும் சொல்லப்படும் நாமங்கள் இறைவனைச் சென்றடையும் என்பதை மாணவர்கள் உணரவேண்டும். ஒருபடம் அல்லது ஓர் உருவத்தின் வழியாக அவர்கள் இறைவனை விளங்கவும், பிரார்த்தனை செய்யவும் முடியும். ஒருவருக்கு உதவுதல்போன்று மற்றவர்க்கும் அது உதவும் பட்சத்தில்தான் உண்மையான விருப்பங்களை நிறைவேற்றிவைக்கும். அன்பு அனைத்துக் குழந்தைகளையும் ஒன்றிணைக்கும். அவர்கள் பிறரை இன்னமும் வெறுக்கப் பழகவில்லை. அன்பு எல்லா மனிதரையும் ஒன்றிணைக்கும். அவா, பொறாமை, விருப்பு என்பவற்றிலிருந்து ஒருவரை விடுபடவைக்கும் பொழுது அன்பு மேலோங்கும். அனைத்துச் சமயங்களும் எவ்வாறு மனித விழுமியங்களைப் போதிக்கின்றன என்பதை ஆசிரியர் சுட்டிக்காட்டல வேண்டும். தனக்கு ஆசிர்வாதம் வேண்டிக் கடவுள் மீது பயபக்தியுடன் அன்பு வணக்கம் செய்யவேண்டுமென வேதம் கூறுகின்றது சாந்திக்காகப் பிரார்த்தனை செய்து, அறம் செய்யவேண்டும் என பைபிள் கூறுகின்றது. கஷ்டப் படுவோருக்குக் கருணைகாட்டி, தனது சித்தத்தை அல்லாமீது சரணடையச் செய்ய வேண்டுமென்று அல் கூர் ஆன் கூறுகின்றது. துறவு, புலக்கட்டுப்பாடு ஆகியவற்றை பௌத்த நூல்கள் வற்புறுத்துகின்றன. சென்ட் அவெஸ்தா என்ற செறொஸ்ரியன் சமய நூல் மனிதன் கெட்ட உணர்வுகளில் இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுபடவேண்டும் எனவும் அவனது அகத்தில் உள்ள ஒளி மேலோங்கவேண்டும் எனவும் வற்புறுத்துகின்றது. இந்தப் பண்புகளை ஆசிரியர் வலியுறுத்துவதுடன், அவற்றுக்கு விளக்கமாகவும் உதாரணமாகவும் விளங்குதல் வேண்டும்.

ஆசிரியர் அமைதியும், சாந்தமும், கொண்டவராகவும், சூழலின் தாக்கத்தினால் குழம்பாதவராகவும் இருத்தல்வேண்டும். நீங்கள் சாந்தமானவரா என ஒருவர் விசாரணை செய்தால் நீங்கள் கோபமடைந்துவிடாதீர்கள். இதைக் கேட்கும்பொழுது சிலர், மேலும் மேலும் கோபமடைவர். எல்லா வழிமுறைகளும் தோல்வி என்று கண்டதும் நீங்கள் கோபம் வரும் நிலையிலிருந்தாலும் அமைதியாயிருங்கள். உங்கள் உள்ளம் வன்மத்தாலும், சார்பு எண்ணங்களினாலும் வலிமை பெறாதிருத்தல் வேண்டும்.

## இலட்சிய ஆசிரியர்

சாயி தெய்வீகக்கல்வி (பாலவிகாஸ்) ஆசிரியர்கள் தமது மாணவர் மீது அன்பை வளர்த்தல்வேண்டும். தமது பிள்ளைகள் போன்று அவர்கள் மாணவரைக் கருதவேண்டும். அதற்காக அவர்கள் கட்டுப்பாடற்ற முறைக்குக் கீழிறங்கிவிடக் கூடாது. அன்புடனும், விளக்கத்துடனும் ஒழுக்கங்கள் செயற்படுத்தப்படல் வேண்டும். மாணவர்க்கு ஆசிரியர் மீது மதிப்பு இருக்கும்பொழுது மட்டுமே கற்பித்தல் சிறப்பும் சீர்மையும் கொண்டிருக்கும். ஆசிரியர் அன்புடையவராகவும் அதே வேளை உறுதியானவராயும் இருத்தல்வேண்டும் முற்காலத்தில் கற்ற பெற்றோர்கள் கூட தமது பிள்ளைகள் சரியான ஒழுக்க விதிகளை அறிந்து கொள்ளவேண்டும் என்பதன் பொருட்டு ஆசிரியர்களிடம் அனுப்பிவைத்தார்கள்.

மாணவர்கள் மீதான அன்பு ஒழுக்கத்துடன் இணைத்து வலியுறுத்தப்படல் வேண்டும். ஒழுக்கமின்றி மாணவரின் கற்றற் செயற்பாடு ஒழுங்காக முன்னேற மாட்டாது. ஆகவே ஆசிரியர் தற்றுணிவுடன் மாணவரைக் கையாளுதல் வேண்டும். இந்தப் பொறுப்புணர்ச்சியை ஆசிரியர்கள் என்றும் மனத்திலே வைத்திருத்தல் வேண்டும். நாளைய உலகின் இலட்சியப் பிரஜைகளாக வருமாறு இன்றைய மாணவரை உருவாக்கும் பணி ஆசிரியர்களால் மேற்கொள்ளப் படுகின்றது.

அனைத்துச் சமயங்களுக்கும் மரியாதை, வணக்கம், ஆகியவற்றைச் செய்யும் வண்ணம் மாணவர் கற்பிக்கப்படல் வேண்டும். தனது சமயத்தின் மீதுள்ள அன்பை பிறசமயங்கள் மீதுள்ள நம்பிக்கையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிவாக்குதல்வேண்டும். சமய வெறுப்புணர்வு சிறுவர்களின் உள்ளங்களிலே வளரவிடப்படலாகாது. எல்லாச் சமயங்களினதும் அடிப்படை ஐக்கியத்தையும் பொது இலக்கையும் கற்பித்தல்வேண்டும். சமய அனுட்டானங்களாலும், வழிபாட்டாலும் இவ்வாறான ஐக்கியத்தைச் சுட்டிக்காட்டல் வேண்டும். பிள்ளைகளுக்கு அவர்களது சமயநூல்களிற் கூறப்பட்டுள்ள பிரதான கருத்துக்களைக் கற்பிப்பதோடு, பிறசமயநூல்களின் கருத்துக்களையும் கற்பித்தல் வேண்டும்

ஆசிரியர் உதாரணமாக இருத்தலே சிறந்த கற்பித்தல் முறை என்பதை மறந்துவிடலாகாது. அவ்வாறு இல்லாவிடில் எமது கற்பித்தலால் எந்தவித பயனும் ஏற்படப்போவதில்லை. மாணவர் உள்ளத்திலே எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தப்போவதில்லை நான் சிறுவனாக இருந்தபொழுது ஒரு நாடகம் எழுதினேன் ''கற்பிப்பதை மக்கள் கடைப்பிடிப்பதுண்டா?'' என்பது தான் அந்த நாடகம். பெற்றோர் சொல்வது ஒன்று செய்வது வேறு ஒன்று ஆகவிருந்தால் அதன் பயன் யாது? அப்பொழுது பிள்ளைகள் சரியாக நடக்காதுவிட்டால் பிள்ளைகள் மீது தவறு காண அவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? விளக்குவதற்கு முன்னர் செய்துகாட்டுங்கள். அதுவே முக்கியமானது.

நீங்கள் கற்பிக்கும் பிள்ளைகளின் பெற்றோருக்கும் கற்பித்தல் தொடர்பான அறிவை வழங்குங்கள். அவர்களது ஆலோசனைகளையும் கேளுங்கள்.

இன்றைய நிலை விநோதமாகவுள்ளது. ''நாங்கள் எப்பொழுதும் உண்மை பேசல்வேண்டும்'' என்று கற்பிக்கின்றோம். வீட்டிலே தொலைபேசி அழைப்பு வருகின்றது. மாணவன் எடுக்கின்றான். தந்தையாருடன் பேச வேண்டுமென்று கேட்கப்படுகின்றது தான் வீட்டில் இல்லை என்று கூறும்படி தந்தையார் கேட்கின்றார். உண்மைபேசவேண்டும் என்று கூறும் தந்தையார் பொய் கூறும்படி தமது பிள்ளைக்குப் பணிக்கின்றார். உங்கள் கற்பித்தலும் முற்றிலும் முரணான வகையில் கற்பித்தல் இடம்பெறுகின்றது மாணவரைக் கெடுப்பதற்குப் பெற்றோரே உண்மையிற் பொறுப்பாளிகளாகின்றனர்.

சில பெற்றோர் அதிக அளவு போகங்களைப் பிள்ளைகளுக்குக் காட்டுகின்றார்கள். எல்லா போகங்களையும் வழங்குகின்றார்கள். அவர்களது தேவைக்கும் கூடிய பணத்தைக் கொடுக்கின்றார்கள். சிறுவயதிலிருந்தே குழந்தை வீண்விரயம் செய்யும் பழக்கத்தை மேற்கொள்ளுகின்றது கெட்ட பழக்கங்களைப் பழகிக்கொள்ளுகின்றது பிள்ளைகளின் நன்மைகள் அனைத்துக்கும் தாமே பொறுப்பு என்பதைப் பெற்றோர் மறந்துவிடலாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரும் தமக்குரிய புனிதமான பாத்திரத்தையும் பொறுப்பையும் எப்பொழுதும் மனத்திலே வைத்திருத்தல் வேண்டும். ஒரு குழந்தை கூடாததென்றால் எல்லோரையும் அது பாதிக்காது. ஆனால் ஓர் ஆசிரியர் தவறிழைத்தால் அனைவரையும் அது பாதிக்கும். ஆயிரக் கணக்கான பிள்ளைகளை அது பாழாக்கும்.

மாணவரிடத்து நல்லதும் உயர்ந்ததுமான இலட்சியங்களைத் தூண்டக்கூடிய நல்ல புத்தகங்களை ஆசிரியர் கொடுத்தல் வேண்டும். அவர்களது மனத்தைக் கெடுக்கும் நூல்களை வாசிக்கச் செய்யாதவாறு ஆசிரியர் தடுத்தாட்கொள்ளல் வேண்டும். மாணவரைக் கெடுக்கும் நூல்களே இன்று அதிக அளவில் உண்டு. நல்ல புத்தகங்களை வாசிக்கும் பழக்கத்தை மட்டுமே நீங்கள் புகட்டுதல் வேண்டும்.

உங்களுடைய சேவை நாட்டுக்கு மிக்க மாண்புடையதாகும். உள்ளம், ஆத்மா என்பவை ஈடுபடத்தக்க வகையில் நீங்கள் கடினமாக உழைக்கும் திட சங்கற்பம் கொண்டிருத்தல் வேண்டும் இறுதியில் உங்களுக்கு இது மிக்க நன்மை பயக்கும் நாட்டுக்கும் இது நன்மை பயக்கும்.

இந்த நாட்டின் இளைஞர்களை நல்லவர்களாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம். நாளைய நல்ல பிரஜைகளாக்க முயன்றுள்ளோம். சாயி தெய்வீகக் கல்வி வகுப்புகளில் உள்ள உங்கள் பிள்ளைகள் நாளை எமது உயர்கல்வி மாணவர்களாகச் செல்லவிருக்கின்றார்கள். இன்று பெறும் ஆரம்பக்கல்வி எதிர்கால உயர் கல்விக்கு அத்திவாரமாகின்றது. ஆரம்பக்கல்வி தவறாக அமைந்தால் அத்திவாரமே தவறாகிவிடும். அப்போது மேலமையும் கல்வி எவ்வாறு நிலை நிற்கும்? அத்திவாரம் வலிமையாக்கப்படல் வேண்டும். அவர்களது முழுவாழ்க்கைக்கும் ஆதாரமாக அது இருத்தல் வேண்டும். அவர்களது சொந்த வாழ்க்கைக்கு மட்டுமல்ல நாட்டின் எதிர்காலத்துக்கும் உறுதி பயப்பதாயிருத்தல் வேண்டும். நீங்கள் மேற்கொள்ளும் இந்தச் சேவை மாண்புமிக்கது. எல்லாவிதமான சேவைகளையும் இது வளமாக்கவல்லது. அறியாமையிலிருக்கும் மக்கள் ஆசிரியத்துவம் பற்றித் தவறான கருத்தை வைத்திருக்கின்றார்கள். வேறு தொழில் வாய்ப்புக்களைப் பெறமுடியாதோரே ஆசிரியர் பணிக்கு வருகின்றனர் என்பது அவர்களுடைய கருத்து. இது ஒரு முட்டாள் தனமான கருத்து. நாட்டின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும் சிற்பிகளே ஆசிரியர்கள். ஆசிரியர்களை இலட்சிய வடிவங்களாக்க, ஆளுமைப் பொலிவு கொண்டவர்களாக்க, உடல், உள்ளம், தெய்வீகம் என்பவற்றில் மலர்ச்சி கொண்டவர்களாக முயலவேண்டும். இந்தப் புனித பணியை மேற்கொள்ளும் உங்களை நான் ஆசிர்வதிக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆக்குதலும் காத்தலும் அழித்தலும் மேற்கொள்பவர்

மாணவரின் உள்ளத்திலே ஆசிரியர் அருள், ஞானம், நம்பிக்கை முதலிய விதைகளை விதைக்கின்றார். ஆகவே இறைவனோடு அவரை ஒப்பிட முடியும். நன்கு பண்படுத்தப்பட்ட நிலத்திலே கன்றுகளை நடும் தோட்டக்காரன் போன்று ஆசிரியர் விளங்குகின்றார். அவ்வாறு கன்றுகளை நட்ட தோட்டக்காரன் தனது கைகளைக் கட்டிக்கொண்டு இருந்துவிடுவதில்லை. ஒவ்வொரு படிநிலையிலும் கன்றுகள் செழித்து வளர அவன் இடைவிடாத முயற்சியும் உற்சாகமும் எடுக்கின்றான். இவ்வாறான பணியை ஆசிரியர் மேற்கொள்ளல் வேண்டும். முதல் ஓரிரு வகுப்புக்களைத் தொடர்ந்து ஆசிரியர் அமைதியாக இருந்து விடலாகாது. மாணவரின் வளர்ச்சியின் ஒவ்வொரு நிலைகளிலும் அவர் வழிகாட்டி நற்பழக்கங்களையும், நிலையாயிக்கும் திறன்களையும், நல்ல மனவொழுச்சிகளையும் வளர்க்க உதவுதல்வேண்டும்.

மாணவர் வழிதவறிச் செல்லும்பொழுது அவர்களைத் திருத்தி நல்வழிக்குக் கொண்டு வரும் கடமை ஆசிரியருக்குரியது களைகளை வளரவிடாது தோட்டக்காரன் எச்சரிக்கையாயிருத்தல் போன்று ஆசிரியரும் மாணவரிடத்துக் கெட்ட பழக்கங்கள், பொறுப்பின்மை போன்ற களைகளை வளரவிடாது விழிப்பாயிருத்தல்வேண்டும். தனக்குத் தரப்பட்ட பொறுப்புக்கள், விழுமியங்கள் பற்றிய தெய்வீக உணர்வு கொண்டவராக ஆசிரியர் என்றும் இருத்தல்வேண்டும். ஆசிரியர் என்ற ஒளியிலிருந்து மாணவர்கள் ஒளியையும் அன்பையும் பெறுகின்றார்கள். சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை முதலியவற்றுடன் மாணவரை இணைத்து, இந்தப் பண்புகளை அவர்களிடத்துத் தூண்டி அவர்களுக்கும் அவர்களது இல்லங்களுக்கும் ஆசிரியர் வழிகாட்டல் வேண்டும்.

## சாயி தெய்வீகக் கல்வி ஆசிரியர்கள்

உயர்நிலையான இலட்சியங்கள் இலக்குகள் என்பவற்றை நோக்கிய உள்ளார்ந்தவலு குழந்தைகளின் உள்ளத்திலே காணப்படுகின்றது. இவை உங்களால் விருத்தி செய்யப்படல் வேண்டும். சிறுவர்களுக்கு ஒன்றுமே தெரியாது என்று எண்ணி விடாதீர்கள். அவ்வாறு நீங்கள் எண்ணுதல் தப்பானது. சிறுவர்கள் உள்ளார்ந்த வலுவுக்கு அங்கீகாரமளியுங்கள். சிறுவர்கள் தாமே விதப்புரை செய்யும் கற்பித்தல் முறையியல்களை நீங்கள் பின்பற்றுங்கள். தெய்வீகத்தை உணரும் வண்ணம் சிறுவருக்கு உதவுங்கள். சிறுவர்கள் தாழ்ந்த ஆளுமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவர்கள் என்று எண்ணாதீர்கள். உயர்நிலைமை அந்தப் பருவத்தில் அவர்களால் அடைய முடியாது என்று கருதிவிடாதீர்கள்.

சிறுவர்களை வழிநடத்த பெற்ருேரும் போதிய ஆற்றலற்றவர் களாயிருக்கின்றனர். சிறுவர்களில் மதிமயங்கி அவர்களை எவ்வாறு திருத்துவது என்பது பற்றிப் பெற்ருேர் அறியாதிருக்கின்றனர். பெற்ருேர் குற்றம் என்று கருதத்தக்க பழக்க வழக்கங்களையும் வாழ்க்கை முறையையும் கொண்டுள்ளர். புகைத்தல், சீட்டாடுதல், சூதாடல், குடித்தல், வீட்டிற் சண்டையிடுதல், பொய்யுரைத்தல், அவதூறு பேசுதல், பிள்ளைகளின் முன் அவற்றைச் செய்தல், முதலிய நடத்தைகளிலே பெற்ருேர் ஈடுபடுகின்றனர். இப்படியிருக்கும் பொழுது அவர்கள் சிறுவர்களை எவ்வாறு வழிநடத்த முடியும்? அத்தகைய பெற்ருேரை நீங்கள் அனுதாபத்துடன் அணுகுதல் வேண்டும். அவர்களை எதிரிகளாகவோ, தடை செய்பவர்களாகவோ, கருதாது அவர்களை நல்லாற்றுப்படுத்தல் வேண்டும்.

பழைய மரபுகளும், வாழ்க்கை முறைகளும் வேகமாக மறைகின்றன. கெட்ட பழக்கங்கள், கெட்ட நடை உடை பாவனை பேச்சு முதலியன அவற்றுக்குப் பதிலாக வருகின்றன. இது பற்றிச் சிறுவர்களுக்கு விளங்கப்படுத்தல் வேண்டும். இந்தக் கேடுகளைக் கண்டு அவர்கள் வெறுத்து ஒதுக்குதல் வேண்டும். ஆபாசமான சுவரொட்டிகள் வீதி ஓரங்களிலே ஒட்டப்பட்டுள்ளன. அவை மாணவரின் ஒழுக்கத்தை மிக நுட்பமாகக் கெடுத்துவிடுகின்றன. பொதுவிடயங்களிலே அவ்வாறான ஆபாச சுவரொட்டிகள் இருத்தல் வெட்கக் கேடானது எனச் சிறுவர்கள் வளர்ந்தோருக்கு உணர்த்துதல் வேண்டும் மனித விழுமியங்கள் கீழிறக்கப்படுவதைச் சுட்டிக்காட்டுதல் வேண்டும். இந்த இலட்சியங்களைச் சிறுவர்களிடத்து நிலை நிறுத்தாவிடில், உலகம் சீரழிவை நோக்கித் தள்ளப்பட்டு விடும்.

**வேலை, வணக்கம், ஞானம் ஆகிய பேறுகள்**

தேசத்தை வளப்படுத்துவதற்குரிய பேறுகளைத் தரக்கூடிய பயிர்களாகச் சிறுவர்கள் வளர்கின்றார்கள். நாட்டின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும் தூண்களாக அவர்கள் விளங்குகின்றார்கள். தேசிய விருட்சத்தின் வேர்களாகவும் அவர்கள் உள்ளனர். இவர்களே அடுத்த தலைமுறையினருக்கு வேலை, வணக்கம், ஞானம் ஆகிய பேறுகளை வழங்குவர்.

சாயி தெய்விகக் கல்வி (பாலவிகாஸ்) இந்த வேர்களைப் பலப்படுத்தி வளம் ஊட்டி செழிப்படையச் செய்யும் நடவடிக்கையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்குகின்றது. இன்றைய சிறுவர்கள் தூய்மைக் கேடான சூழலிலே வாழுகின்றார்கள். ஊழலும், பதுக்கிப்பும், அவாவும், மேலோங்கி உள்ளன. இதற்குக் காரணம் மேலோட்டமான பொருளாதார விருப்புக்களிலே மக்கள் ஈடுபட்டிருத்தலாகும். இந்தப் பண்பாடு பெருமளவில் மேற்குலகிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. பெற்றோரும், ஆசிரியரும், அரசியல் தலைவர்களும் கூட எமது பண்டைய பண்பாட்டின் அடிப்படைகளை விளங்காதவர்களாகவும், பின்பற்றாதவர்களாகவும் இருக்கின்றனர். சிறுவர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஒப்புயர்வற்ற எமது பண்பாட்டுச் செல்வங்கள் உரிய முறையிலே வழங்கப்படவில்லை. அந்நிய கருத்துக்கள், சிந்தனைகள், பழக்கவழங்கங்கள் முதலியனவே நமது சிறுவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. தமது தாய் மொழியில் உள்ள இனிய பாடல்களைப் புறக்கணித்து வேற்று நாட்டுப் பாலர் பாடல்களைப் பாடுவதற்காகச் சிறுவர்கள் பாராட்டப்படும் வேடிக்கையும் உண்டு! படித்த சிறுவர்கள் கிராமியச் சிறுவர்களிடமிருந்தும், பள்ளிக்கூடம் செல்லாத சிறுவர்களிடமிருந்தும் துண்டிக்கப்படுகிறார்கள்.

வயது முதிர்ந்தவர்கள் குறுங்காலத்துக்கு மட்டுமே உலகில் வாழ்வார்கள். ஆனால் சிறுவர்களோ நெடுந்தூரம் பயணம் செல்ல வேண்டியுள்ளனர். தங்களுடன் சிறுவர்கள் நாட்டு முன்னேற்றத்தையும் எடுத்துச் செல்ல வேண்டியுள்ளது. நாட்டின் முன்னேற்றம் அவர்கள் கைகளிலே தங்கியுள்ளது.

## ஆசிரியர்களுக்கு வழிகாட்டல் அறிவுரைகள்

தந்தை, தாய், ஆசிரியர் ஆகிய மூவருமே நாட்டின் எதிர்கால உருவாக்கத்துக்குப் பொறுப்பானவர்கள். இவர்களுள் ஆசிரியரே மிக முக்கியமான பாத்திரமாவார். ஆசிரியர் பணிக்கு என்று அவர்கள் சிறப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். தாமே விரும்பி இந்தப் பணியை ஏற்றுக்கொண்ட ஆசிரியர்கள் அதனைச் சிறந்த முறையிலே மேற்கொள்ளல் வேண்டும். ஆசிரியர்கள் மாணவரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள். பெற்றார், பொதுமக்கள் ஆகியோர் ஆசிரியர் மீது வைத்துள்ள நம்பிக்கைக்குப் பதிலாக ஆசிரியர் மதிப்பார்ந்த சேவையை வழங்குதல் வேண்டும். மாணவராலும் பொதுமக்களாலும் அவர் ''குரு'' என்று மதிப்பளிக்கப்படுகின்றனர். ஆசிரியர்கள் வறுமையாக இருக்கலாம், உயர்ந்த அந்தஸ்தில் உள்ளவர்களால் கவனிக்கப்படாதிருக்கலாம். ஆனால் அவர்கள் வழங்கும் ஆக்கபூர்வமான சேவை மூலமாகக் கிடைக்கும் திருப்தி அவற்றை ஈடு செய்யும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னதான் தவறாக நடந்தாலும் பிள்ளைகளை ஆசிரியர் எப்பொழுதும் ஆசீர்வதித்தல் வேண்டும். ஆசிரியர் அநாகரிகமாக நடந்துகொண்டால், பிள்ளைகளும் அந்த நிலைக்குக் கீழிறங்கி விடுவார்கள்.

ஆசிரியர்கள் தமது நடத்தைகளைத் தீவிரமாகத் தாமே நோக்குதல் வேண்டும். தம்மிடமுள்ள யாதாயினும் பண்புகள் பிள்ளைகளால் பின்பற்றப்படுமாயின் அதனால் ஏற்படக் கூடிய தீமைகள் பற்றியும் அறிந்தவராக இருத்தல் வேண்டும். ஆலோசனையை உள்வாங்கக் கூடியவர்களாகவும் அவர்கள் இருத்தல் வேண்டும். உங்களிடத்து விளைவுகளை எதிர் கொள்ளக் கூடிய தைரியம் இருந்தால் நீங்கள் ஒரு பொழுதும் தவறானவற்றைச் சொல்லமாட்டீர்கள்.

பயத்தை காட்டி ஆசிரியர் தமது பணியைச் செய்யலாகாது. இது மாணவரிடத்தே அதிக ஆபத்தை ஏற்படுத்தும். அதற்குப் பதிலாக அன்பு வழியைப் பின்பற்றுங்கள். பிரார்த்தனை, தியானம், போன்ற நல்லொழுக்கங்களை ஆசிரியர்கள் தமக்குரிய தாக்குதல், அவர்களுக்கு மனச்சாந்தியைத் தரும். இதுவே இன்றைய அல்லலின் மத்தியிலே வேண்டப்படுவதுமாகும். ஆசிரியர்கள் எளிமையான வாழ்க்கையும் உயர்ந்த சிந்தனையும் கொண்டவர்களாயிருத்தல் வேண்டும். ஏனெனில் மாணவர்கள் ஆசிரியர்களைத் தமது விருப்பத்துக்குரிய தலைவர்களாகக் கொண்டு, அவர்களைப் பின்பற்றத் தொடங்குவார்கள். எமது கடந்த தலை முறையினர் தெய்விக ஒழுக்கம், சாதனைகள் என்பவற்றைக் கொண்ட பெரும் செல்வங்களைக் கொண்டிருந்தனர். இந்தச் செல்வங்களை எமது மாணவர்க்கு வழங்கி, வருங்காலச் சந்ததியை மேம்பாடு கொண்டவர்களாக்க ஆசிரியர்கள் முயல வேண்டும்.

## மேற்கோள்கள்

**கல்வி**

1. கல்வி என்பது வாழ்க்கை, அது வெறுமனே வாழ்வதற்காக அல்ல.

2. கொள்கையற்ற அரசியல்,
 நற்பண்புகள் இல்லாத கல்வி,
 மானுடநேயம் இல்லாத விஞ்ஞானம்,
 அறவொழுக்கம் அற்ற கல்வி.
 ஆகியவை பயனற்றதும், நேர்முகமான ஆபத்தானவையுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கல்வி பணிவைத் தருகின்றது. ஆற்றலை வெளிப்படுத்தும் அறக்கொடையாக அமைகின்றது. அதனால் ஒருவரது செல்வாக்கு மேலோங்கும். அவற்றைப் பயன்படுத்தி ஒருவர் தர்மம் இரக்கம் முதலியவற்றை வளர்க்கலாம். அவற்றின் விளைவாக இவ்வுலகில் மகிழ்ச்சியையும், அதனைத் தொடர்ந்து சாந்தியையும் வென்றெடுக்கலாம்.

4. உள்மாத்திரையில் எழுகின்ற பளிச்சீடே ஞானம். ஒருவர் அந்தப் பளிச்சீடைப் பேணி ஒளியைப் பாதுகாத்தல் வேண்டும். அதுவே உண்மையாகக் கற்றவனுக்குரிய அடையாளம்.

5. தந்தை, தாய், ஆசிரியர் ஆகிய மூவருமே நாட்டின் எதிர்காலத்தை உருவாக்கும் அடிப்படையானவர்கள்.

6. பொருள்கள் மற்றும் மனிதர் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ளல் கல்வியாகாது. தன்னுள்ளே பொதிந்துள்ள நித்திய தெய்வீகத்தை உணர்வதே கல்வி. அந்தத் தெய்வீகத்திலிருந்தே மகிழ்ச்சி, சாந்தி, செயலாற்றல் முதலியவை ஊற்றெடுக்கின்றன.

7. கல்லூரிப்படிப்பு பணமீட்டும் சந்தர்ப்பத்தையும் அதனைத் தொடர்ந்து வாழவும் வழிவகுக்கின்றது. மனிதர்களால் உருவாக்கப்பட்ட பல்வேறு மாயைத் தோற்றங்களை உங்கள் கல்வியைத் துணைக்கொண்டு அழித்தால் மட்டுமே மகிழ்ச்சி பொங்கும்

8. ஒழுக்கமே கல்வியின் பெரும்பேறான கொடை.

9. சரியான முறையிலே நீங்கள் கற்காவிடில் பெருந்தொகுதி புத்தக அறிவைப் பெற்றுக் கொண்டதாகவே முடியும்.

10. பல்வேறு உலகியல் கற்கைகளில் ஈடுபடும் மாணவர்களிடத்துத் தெய்வீக உண்மை பற்றிக் கற்பிக்காது விடும் ஒரு கல்லூரியானது சந்திரனது ஒளியில்லாத வானம் போலவும், சாந்தியில்லாத மனம் போலவும், சட்டம் ஒழுங்கில்லாத் தேசம் போலவும் காட்சி தரும்.

11. பல்வேறு செயல்களுக்கும் பின்னால் உள்ள தெய்வீகத்தை உணரும் வகையிலே கல்வியானது கண்களைத் திறத்தல் வேண்டும்.

12. சாந்தி, பாதுகாப்பு, மகிழ்ச்சி ஆகியவற்றைக் கல்வி வளர்த்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. மனிதரது உள்ளத்திலும், மானுடம் அனைத்திலும் சாந்தியை நிலைநிறுத்துவதற்குரிய தெய்வீக சாதனையை ஏற்படுத்தும் வழிமுறையிற் கல்வியை வரவேற்க வேண்டும்.

14. கல்விகற்ற ஒரு மனிதனுக்குரிய அடையாளம் நல்ல பழக்க வழக்கங்களாகும்.

15. கல்வியின் இலக்கு குழந்தைகளின் உள்ளங்களிலே பதிவு செய்யப்படல் வேண்டும். இன்றைய புலமைக் கல்வியானது மேலோட்டமானதாகவும், பயனற்றதாகவும் உள்ளது ஏனெனில் அது விழுமியப் புரிந்துணர்வை வழங்காதுள்ளது.

16. கல்வி மனிதனை மேன்மைப்படுத்தல் வேண்டும். இதற்கு மாறாக அது மனிதனைக் கீழ்மைப்படுத்தி விடுகின்றது. இளம் மாணவர்களை அது மாணிக்கங்களாக மாற்றாது கரித்துண்டுகளாக்கி விடுகின்றது. அவர்களிடத்தே அது நிலை மாற்றத்தைக் கொண்டுவரவில்லை. ஞானத்தையும் வழங்கவில்லை.

17. அறிவு வளரும் பொழுது அவாவும் வளருமானால் அதனாற் பயனேதும் இல்லை. அது சொல்லளவில் ஒருவனைத் தலைவனாக்கும். செயலளவில் அவனது நடவடிக்கைகள் பூச்சியம் தான்.

18. கல்வி ஒருவனது தரிசனத்தை விரிவாக்குதல் வேண்டும் மனிதரின் நோக்கை அகலித்தல் வேண்டும்.

19. தலை சிந்திப்பதை இதயம் விமர்சித்துப் பரிசீலித்தல் வேண்டும். சரியான தீர்மானங்களே கைகளாற் செய்யப்படல் வேண்டும் இதுவே கல்விச் செயல் முறையின் முதன்மையான விளைவாக இருத்தல் வேண்டும்.

20. EHV என்பது முக்கியமன்று 3HV தான் முக்கியம் (தலை, இதயம், கைகள் என்பவை தான்) தலையிலிருந்து பிறக்கும் கருத்துக்கள் இதயத்தால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் கைகளால் நிறைவேற்றப்படல் வேண்டும்.

21. தனது வலிமையில் ஒருவன் தங்கியிருக்கும் தன்னம்பிக்கையைக் கல்வி தருதல் வேண்டும்

22. அறிவின் விளைவு ஞானம்.
பண்பாட்டின் விளைவு பூரணத்துவம்.
ஞானத்தின் விளைவு பூரணவிடுதலை.
கல்வியின் விளைவு நல்லொழுக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. கல்வியின் விளைவு நல்லொழுக்கம். ஒருவனது சுயநல இச்சைகளைத் துறக்கும் விருப்பத்தை நல்லொழுக்கம் கொண்டிருக்கும்.

24. இந்தப் பிரபஞ்சமே மிகப் பெரும் பல்கலைக்கழகம்.

25. புலமைக் கல்வியுடன் தெய்வீக ஒழுக்கச் சாதனையும் முக்கியமானது.

26. நல்லது கெட்டது, சரியானது தவறானது என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகளைக் கண்டறியக் கூடியதாக கல்வி பயன்படல் வேண்டும். இந்த வேறுபாடுகளைக் கண்டறியாவிடத்து மனிதர் விலங்குகளிலும் தரங்குன்றியோராவர்.

27. வாழ்வதற்காக அல்ல வாழ்வதன் வாயிலாக மிகவுயர்ந்த பேறுகளைப் பெறுவதற்காக என்ற நோக்குடன் சிறார்களுக்குக் கல்வியை வழங்குதல் வேண்டும்.

28. கல்வி நிறுவனங்கள் மாணவரிடையே ஒருங்கிணைவு, ஒழுக்கம், தன்னம்பிக்கை முதலியவற்றை வளர்த்தலைத் தமக்குரிய முதன்மை நோக்கமாகக் கொள்ளல் வேண்டும் அறிவை வளர்த்தல் இரண்டாம் பட்சமானது கல்வி பணிவை வளர்த்தல் வேண்டும். வாழ்க்கையின் அனைத்து வெற்றிகளுக்கும் அதுவே தோன்றாத் துணையாகும்

29. இன்றைய கல்விச் செயல்முறையானது பணிவை வளர்க்கவில்லை. கற்பவனது தலைக் கனத்தை மேலோங்கச் செய்கின்ற பட்டங்களையே வழங்குகின்றது.

30. நல்லொழுக்கம், மனிதவிழுமியங்களை மேம்படுத்தும் நடத்தை. முதலியவற்றைக் கொண்ட மாணவர்களைக் கல்விச் செயலமைப்பு உருவாக்கித் தருமாயின், நாடு வலிமையாகவும், சிறப்பாகவும் முன்னேற்றமடைந்து உலகுக்கே எடுத்துக்காட்டாக விளங்கும்.

31. இன்றைய கல்வி SKILL என்பதிலுள்ள S என்ற எழுத்தை உதைத்துத் தள்ளி விடுகின்றது. அதன் காரணமாக அறிவு KILL என மாறுகின்றது. இது மனித குலத்துக்கு அவலங்களையே தருகின்றது.

32. கல்விச் செயலமைப்பிலே உண்மையான முன்னேற்றங்களைக் கொண்டு வர வேண்டுமாயின் கல்வி நிறுவனங்களை அரசாங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்தல் வேண்டும் கல்விக்கும் பணத்துக்குமிடையே தொடர்பு இருத்தலாகாது.

33. கல்வியின் விளைவு ஒழுக்கம்.
அறிவின் விளைவு அன்பு.

34. வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்துடனும் கல்வி தொடர்புடையது. அது வெறுமனே வாழ்வதற்காக என்பதை விடுத்து வாழ்க்கை இலக்குடன் உண்மையிலே முழுமையான தொடர்புடையது.

35. மனித வாழ்க்கை தொடர்பான புனித கருத்துக்களை மக்கள் உள்ளங்களிலே பதிய வைப்பதற்கு கல்வியே உறுதுணையாகின்றது

36. இன்று நாம் பாடசாலைகளில் எதனைக் கற்பித்தல், கற்றல் செய்கின்றோமோ அவற்றை உண்மையான கல்வி என்று கொள்ள முடியாது.

37. இன்றைய கல்விச் செயலமைப்பானது தேசியப்பண்பு கொண்டது என்று விளக்கப் பட்டாலும் உண்மையில் அது எதிர்த்தேசியப் பண்புகளையே கொண்டுள்ளது.

38. விழுமியங்கள் அற்ற சமூகத்தில் மனிதப் பண்புகள் அழிந்து விடும்.

39. மனிதருக்குரிய அருளைப் பிறரிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியாது. வெறுமனே புத்தகங்களைப் படிப்பதாலும் அதனைப் பெற முடியாது. ஆசிரியரிடமிருந்து தயாரிக்கப்பட்ட வடிவத்திலும் அதனைப் பெற இயலாது அது ஒவ்வொருவரிடத்திலும் வளர்க்கப்படல் வேண்டும். அதிலிருந்து பெறும் மகிழ்ச்சியும் அவரால் அனுபவிக்கப்படல் வேண்டும்.

40. ஒருவரது புலக்காட்சியைக் கல்வி தூய்ம்மைப்படுத்துவதாய் அமைதல் வேண்டும். அது அறம் சார்ந்ததும், தெய்விகவயப் பட்டதுமான உந்தல்களை வளர்த்து ஒருங்கிணைத்து அதன் வழியாக நல்ல பண்புகளை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

41. உங்கள் அறிவைப் பகிர்ந்து கொள்ளுங்கள். அது மேலும் மேலும் வளரும்.

42. உள்ளத்தை நிலை மாற்றும் நோக்கத்தைக் கல்வி கொண்டுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43. பட்டங்களைப் பெறுதலே கல்வியின் நோக்கம் என்று பலர் கருதுகின்றனர். B. A. என்றால் என்ன? B. A. + D (D என்பது பட்டத்தைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லின் முதல் எழுத்து) BAD அது கூடாதது என்று வரும். மேலும் நீங்கள் பட்டம் எடுத்தால் MA+D = MAD அது சித்தக்குழப்பத்தைக் குறிக்கும்

44. அறிவு என்பது ஞானமாக்கப்பட வேண்டும். ஞானம் ஒழுக்கத்தின் வாயிலாக வெளிப்படுத்தப்படல் வேண்டும். அல்லாவிடில் கல்வி பயனற்ற செயல் முறையாகிவிடும்.

45. இன்றைய கல்வி முறை கற்றவர்களைச் சுயநலம் உள்ளவர்களாக்குகின்றது. அது புலன்களுக்கு அவனை அடிமையாக்கி விடுகின்றது. அதனால் அவன் தன்னிடமுள்ள தெய்வீக இயல்புகளை மறந்து விடுகின்றான்.

46. இறைவனிடம் சரணாகதியடையும் விருப்பத்தைக் கல்வி கொடையாக வழங்குதல் வேண்டும்.

47. மன ஒருமைப்பாடு, இயற்கை அன்பு, ஐக்கியம், ஆகியவை இன்றைய நிலையிலே விருத்தி செய்யப்பட வேண்டிய பண்புகளாகும். கல்வி என்பது பல்கலைக் கழகப் பட்டங்களைப் பெறுவதற்காக இருத்தலாகாது.

48. கல்வி என்பது இளைஞர்கள் தமது பெறுமதி மிக்க பண்பாட்டுப் பாரம்பரியங்களையும் தெய்வீகத்தையும் விளங்கும் உற்சாகத்தைத் தருவதாகவும், அவர்களிடமுள்ள உயர் நிலையான வலுவைத் தூண்டுவதாகவும் அமைதல் வேண்டும்.

49. பணிவும் ஒழுக்கமும் கல்வியால் விளைவிக்கப்படல் வேண்டும். ஆனால் இன்று அது பெருமை, பொறாமை ஆகியவற்றை உருவாக்கித் தருகின்றது.

50. கற்றவர்களது வாழ்க்கை தானாகவே ஒளி வீசி மனுக்குலத்துக்கு அவரது செய்தியாக அமையும்.

51. சத்தியம், பிரேமை, பயபக்தி, ஆகியவற்றின் கவிநிலையிலே வளரும் கல்வியானது ஒரு தேசத்தைச் செழிப்படையவும் மகிழ்ச்சியடையவும் செய்யும்.

52. உண்மைக்கல்வியானது வாழ்க்கைச் சவால்களைச் சந்திப்பதற்குத் திரட்டிக் கொண்ட அறிவைப்பயன்படுத்துவதற்கும், அனைத்து மக்களையும் இயன்றவரை மகிழ்ச்சியாக வைத்திருப்பதற்கும் உதவுகல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53. சொல் சார்ந்த அறிவை வழங்குதல் மட்டும் கல்வியின் பொருளாகாது.

54. பணிவு, பயபக்தி, தயவு, பொறுமை, தியாகம், சுயகட்டுப்பாடு ஆகியவை உண்மைக்கல்வியின் பெறுபேறுகள் என்பதை உணரல் வேண்டும்.

55. வேறுபாடு காணமுடியா விஞ்ஞானம்
ஒழுக்கமற்ற மனித இருப்பு
நன்றியில்லாத நட்பு
சுருதியில்லாத இசை
அறமும் நீதியுமற்ற ஒரு சமூகம்
ஆகியவை மக்களுக்கு நன்மை தரா.

56. நாளாந்த வாழ்க்கையின் சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய ஆற்றலைக் கொண்டதாக இன்றைய கல்வி வழங்கப்படவில்லை. கல்வி நிகழ் புலம் அறியாமை விளையாடும் புலமாகியுள்ளது.

57. உண்மையான அறிவானது விஞ்ஞானம் தெய்வீகம், அறவொழுக்கம் என்பவற்றுக்கிடையே ஒத்திசைவையும் நிலை நிறுத்துவதாய் இருக்கும்.

58. நவீன கல்வி அறிவை விருத்தி செய்கின்றது. திறன்களை வழங்குகின்றது. ஆனால் நற்பண்புகளை வளர்க்கவில்லை.

59. இன்றைய கல்விச் செயல்முறையில், பாடப்புத்தக உள்ளடக்கத்தை மனத்திலே நிறைத்தலும், பரீட்சை மண்டபத்தில் அவற்றை வெளியேற்றிவிடுதலும் வெற்றுத் தலையுடன் வெளியேறுவதுமே நிகழ்கின்றன.

60 உண்மைக் கல்வியானது உள்ளத்தைப் பண்படுத்தும் உபாயங்களையும் கொண்டிருக்கும்.

61. அன்பை வளர்த்தலே இன்றைய மிகப் பெரிய தேவை.

62. தொழில் ஒன்றைப் பெறுவதற்காக கற்றல் ஒரு பாதியாக மட்டுமே அமைகின்றது. வாழ்க்கையை கருத்து நிறைந்ததாகவும்' உபயோகமுள்ளதாகவும் ஆக்குதல் அதன் மறுபாதியாகும்.

63. மாணவர்கள் அறம், தெய்வீகம் சார்ந்த வாழ்க்கையிலே உள்நுழைவதற்குக் கல்வியே முழுப்பொறுப்பையும்எடுத்தல் வேண்டும்.

64. உண்மை அழகு உண்மைக்கல்வியில் தங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

65. உணவுக்காக மட்டும் வாழ்வதல்ல இலட்சியத்துக்காக வாழ்வதே கல்வியின் இலக்கு

66. தூய எளிய வாழ்க்கை வாழ்வதற்குரிய பண்புகளை அடையும் வகையில் கல்வி வடிவமைக்கப்படல் வேண்டும்.

67. இன்றைய உலகம் எதை வேண்டுகின்றது? புதிய ஒழுங்கமைப்பையோ, புதிய கல்வியையோ, புதிய செயலமைப்பையோ, புதிய ஒரு சமூகத்தையோ, புதிய ஒரு சமயத்தையோ வேண்டவில்லை. எமது உள்ளங்களிலேயே தீர்வு உண்டு. புனிதம் நிறைந்த உள்ளங்களே வேண்டப்படுகின்றன.

68. இலட்சியப் பாங்கான சேவையும், அதனை நடைமுறைப்படுத்துவதற்கான விருப்பமும் கல்வியின் அடிப்படையாகின்றன.

69. தூய அன்பே கல்வியின் பிரதான வெளிப்பாடு.

## ஆசிரியர்கள்

1. மாணவர்களுக்கு நீங்கள் வழங்கும் சேவைகள் மாணவருக்காக் மட்டும் என்று எண்ணாதீர்கள். அது உங்களுக்காகவும் அமைகின்றது.

2. மாணவரை வளர்த்தெடுத்தல், உயர்த்துதல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள நீங்கள் இந்தச் செயலின் மேன்மையையும், செயலில் அதனை வெளிப்படுத்த வேண்டிய தேவையையும், அறிந்திருத்தல் வேண்டும்.

3. மாணவர்கள் உங்களுடைய சேவையை வேண்டி நிற்கின்றார்கள் என்ற கற்பனையில் நீங்கள் பெருமையை வளர்த்துக்கொள்ளாதீர்கள்.

4. மாணவர் மீது பரஸ்பர அன்பை வளர்த்துக்கொள்ளும் ஆசிரியர்களே இன்று தேவைப்படுகிறார்கள்.

5. சாந்தி, அன்பு, பக்தி ஆகியவற்றின் ஊற்றுக்கண்ணாய் மனிதன் விளங்குகின்றான். வளருங்காலத்தில் இவற்றை உணர்வுடனும், எடுத்துக்காட்டுடனும், பயிற்சியுடனும் விருத்தி செய்யுங்கள். அப்பொழுது வாழ்நாள் முழுவதும் கல்வி பாதுகாப்பையும் மகிழ்ச்சியையும் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. மனித மேம்பாட்டுக்கான விழுமியங்களை விரிவுரைகள், பாடப் புத்தகங்கள், ஆகியவற்றிலிருந்து கற்கமுடியாது. விழுமியங் களைக் கற்பிக்க முனைவோர் அவற்றைத் தாமே நடைமுறைப் படுத்திக் காட்டி உதாரண புருஷர்களாயிருத்தல் வேண்டும்.

7. உங்கள் உள்ளத்தை அன்பால் நிறைத்துக் கொள்ளுங்கள். உங் களுடைய இலட்சியப் பாதையில் சிறுவர்களை அன்புடன் வழிநடத்திச் செல்லுங்கள்.

8. உங்களது வழிகாட்டலின் கீழ் உள்ள தூய உள்ளங்களைக் கொண்ட சிறுவர்களுக்காக நீங்கள் எல்லாவற்றையும் தியாகம் செய்ய திடசித்தம் கொள்ளுங்கள்.

9. அன்பு வழியாக மட்டுமே மாணவர்க்கு அன்பைக் கற்பிக்கமுடியும்.

10. நீங்கள் பிஞ்சு உள்ளங்களைப் பொறுப்பேற்றுள்ளீர்கள். அவர் களுக்குரிய ஆசிரியர்களாகவும், வழிகாட்டிகளாகவும், உதாரண புருஷர்களாகவும் இருக்கின்றீர்கள். மேற்கூறிய பாத்திரங்களுக் குரிய நிறைவை மேற்கொள்ள மனிதனுக்கே சிறப்பாக உரியதான மேம்பாட்டு விழுமியங்களின்படி வாழ்ந்து கொள்ளுங்கள்.

11. சேவை செய்து தலைமைப் பதவியைச் சம்பாதியுங்கள் நல்ல வேலையாளனே சிறந்த எஜமானாகலாம்.

12. உங்களுடைய வாழ்க்கை நலமுடையதாக இருந்தால் மட்டுமே இந்தப் புதிய கல்வித்திட்டம் வெற்றியடைய முடியும்.

13. ஆசிரியர்கள் உயர்ந்த இலட்சியத்தை அடையலாம். ஆனால் அவர்கள் கூட்டுறவுடனும், நல்லொழுக்கத்துடனும், சேவையிலும் தியாகத்திலும் தோய்ந்து வாழவேண்டும். வெற்றியை நோக்கிய திடசங்கற்பத்துடன் இருத்தல் வேண்டும்.

14. மாணவர்களைப் பெற்றோருக்கு மரியாதை தரும்படி போதியுங் கள். இதுவே முதற்கடமையாக அமைகின்றது.

15. நாட்டின் எதிர்காலத்தை உருவாக்குவதிற் பெரிய பங்கு ஆசிரியருக்கே உரியது. எல்லா வாண்மைகளிலும் உங்களுடையதே உயர்தரமானது, மிகவும் கடினமானது, மிகவும் முக்கியமானது.

16. ஒரு மாணவனிடத்துத் துர்க்குணமிருந்தால் அவன் மட்டுமே அதனாற் பாதிக்கப்படுவான். ஆனால் ஓர் ஆசிரியருக்குத் துர்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணமிருந்தால் ஆயிரக்கணக்கான மாணவர்கள் மாசுபடுத்தப் படுவார்கள்

17. கற்பிப்பவர்கள், கற்போர் ஆகியோரிடத்து ஆழ்ந்த அமைதி, செறிவு, கலைக் கப்படாத கவனம், ஆகியவை இருத்தல் வேண்டும்.

18. ஒரு பேராசிரியரால் மட்டுமே சிறந்த மாணவனை உருவாக்க முடியும்.

19. இளம் உள்ளங்களிலே தெய்வீக விதைகளை நீங்கள் விதைத்தல் வேண்டும். அவை வளர்வதற்குரிய நிலமைகளையும் ஏற்படுத்தல் வேண்டும்.

20. எல்லா வாண்மைகளிலும் கற்பித்தல் வாண்மையே அதிக பொறுப்பு வாய்ந்தது. இன்றைய இளம் சந்ததியினரை உருவாக்கும் பொறுப்பு ஆசிரியர்களுக்கே உரியது. அவ்வாறு செய்யும் பொழுது பெறுமதிவாய்ந்த நாளைய பிரஜைகள் உருவாக்கப் படுவர்.

21. சத்தியம் போன்ற சாதாரண அறஒழுக்கங்களை ஆசிரியர் தாமே பின் பற்றாத நிலையில் எங்ஙனம் நல்ல பழக்கங்களையும், விழுமியங்களையும் மாணவர் உள்ளங்களிலே பதியச் செய்ய முடியும்?

22. வேலை நேர ஒழுங்கு முறைகளுக்குள் ஆசிரியர் கட்டுப்பட்டவர்கள் அல்லர் தேவைப்படுமிடத்து மாணவர்களது சந்தேகங்களை நீக்கவும், அவர்களது ஒப்படைகளை நிறைவேற்றவும், கூடுதலான அளவு நேரம் வேலை செய்யவும் தயாராக இருத்தல் வேண்டும்.

23. ஆசிரியர்கள் தங்களது பாத்திரத்தைச் சரியாக நிறைவேற்றி வைத்தால் நாடு நல்ல முறையிலே நிலைமாற்றம் பெறும். மாணவர், பெற்றோர் ஆகியோரிடம் நிலவும் தவறான பழக்க வழக்கங்களுக்கு ஆசிரியர் மீதே குற்றம் சுமத்தவேண்டும்.

24. சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை ஆகிய விளைவுகளைப் பெறுமாறு உள்ளத்தைப் பண்படுத்துங்கள். இவை உங்கள் உள்ளத்திலே வளர்க்கப்பட்டு எல்லோராலும் பகிர்ந்து கொள்ளப் படடல் வேண்டும்.

25. உலகியற் கல்வியோடு நீங்கள் மனித விழுமியங்களை வளர்க்கவும் தெய்வீக ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்கவும் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. விலைமதிக்க முடியா மாணிக்கங்களாகிய மனிதமேம்பாட்டு விழுமியங்களைக் கற்பிப்பதற்கு இந்த விழுமியங்களைச் சாதனை செய்யும் ஆற்றலும் சேவை மனப்பாங்கும் கொண்ட ஆசிரியர்கள் வேண்டப்படுகின்றனர்.

27. மனித மேம்பாட்டுக்கான விழுமியங்களை வளர்த்தெடுக்கையில் பணம், உணவு, நேரம் ஆகியவற்றின் விரயங்களைத் தவிர்த்தல் வேண்டும். இவ்வகையில் ஆசிரியர்களுக்கும் பயிற்சியளித்தல் வேண்டும்.

28. சிறார்களுக்கு வழங்கப்படும் சேவை மிகவும் புனிதமானது.

29. சத்தியம் என்ற மகிழ்ச்சிதரும் பாதையில் சிறாரை வழிநடத்திச் செல்லுங்கள். எப்பொழுதும் உங்கள் முகத்திலே புன்னகை பூத்துக்குலுங்கவேண்டும். மாணவரின் சிரித்த முகங்களைப் பார்ப்பதன் வழியாகவே அந்தப் புன்னகை ஊற்றெடுத்தல் வேண்டும்.

30. அன்போடும் சேவை மனப்பாங்கோடும் அர்ப்பணிப்போடும் உங்கள் கடமைகளைச் செய்யுங்கள். நாட்டுக்கும் உலகத்துக்கும் நல்ல உதாரணங்களாக விளங்குவீராக.

31. தேசத்தின் பாதையைப் பிரகாசிக்க வைக்கும் விளக்குகளே சிறார்கள்.

32. மாணவரின் உள்ளத்தில் அருளை வளர்த்தெடுத்தலே ஆசிரியரின் முதலாவது பணி.

33. வேறு எந்தவித வெகுமதிகளும் அல்ல. அன்புதான் ஆசிரியர் மாணவர் ஆகியோரை மகிழ்ச்சியில் ஆழவைக்கின்றது.

## மாணவர்கள்

1. நன்றியுணர்வு, தயவு, சகிப்புத்தன்மை ஆகிய பண்புகளை மாணவர் வளர்த்தல் வேண்டும். வறியவர்கள் மீது அனுதாபம் காட்டுதல் அடிப் படையான மானிடப்பண்பு.

2. சிறிதளவு தவறும் பொருமளவு அநர்த்தங்களை ஏற்படுத்தும் பருவமே இளமைப் பருவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சேவை செய்யும் விருப்பையும், திறன்களையும் வளர்க்காதவிடத்து மாணவர் சமூகத்துக்குப் பாரமாகவே இருப்பர்.

4. எத்தகைய கல்வியை நீங்கள் கற்றாலும் கடவுள் நம்பிக்கையைக் கைவிடாதீர்கள். கடவுள் நம்பிக்கையைக் கைவிடல் வாழ்க்கையைக் கைவிடலுக்கு ஒப்பானது. வாழ்க்கையே கடவுள். உண்மையே கடவுள். நீங்கள் மனித மேம்பாட்டுக்கான விழுமியங்களை காட்டுதலே கடவுளுக்குத் தரும் காணிக்கையாகும்.

5. நல்ல பண்புகள் ஒருவரிடத்து இல்லாதவிடத்து அனைத்துப் பட்டங்களும், புலமைகளும் பாண்டித்தியங்களும், பெறுமதியற்றவையாகும். அருளை வளருங்கள்.

6. இன்றைய மாணவர்கள் நாளைய ஆசிரியர்கள்.

7. மகிழ்ச்சிகரமாக வாழும் கலையை மேலும், மேலும் அறிந்து கொள்ளும் ஆவலுடையோராய் இருங்கள்.

8. பெற்றோரை விளங்கி அவர்களுக்கு மதிப்புத் தருதல் ஒவ்வொரு மனிதரதும் கடமை ஆகும்.

9. மாணவர் பரவலான விருப்புக்களைக் கொண்டிருத்தல் வேண்டும். பரந்த தரிசனங்கள் அவர்களுக்கு வேண்டும்.

10. மாணவர் அமைதியாயிருக்கும் கவிநிலையில் சாந்தமும் பாதுகாப்பும் காணப்படும். அத்தகைய ஒரு சூழலே கல்வியை மேலோங்கச் செய்யும்.

11. ஒருவர் மிக உன்னத வாழ்க்கை வாழ்வதன் மூலமே தான் பெற்ற பட்டத்தை நியாயப்படுத்த முடியும்.

12. மாணவர்கள் ஆசிரியரைக் கடவுள் என்ற அந்தஸ்திலே வைத்துக் கௌரவிக்காமை அனுதாபத்துக்குரியது. அதனிலும் அனுதாபத்துக்குரியது தாய் தந்தை ஆகியோரை மதிக்காத பாவச் செயலில் ஈடுபடுதலாகும்.

13. 16 தொடக்கம் 30 வயதுவரையிலான காலப்பகுதி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இக்காலப் பகுதியில் வாழ்க்கைக்கு இனிமை சேகரிக்கப்படுகின்றது. திறன்கள் மனோபாவங்கள் ஆகியவை ஒருவரால் சேகரிக்கப்பட்ட பின்னர் அவை படமிடப்படுகின்றன. சுயநலமற்ற சேவை இந்தப்பருவத்திலே மேற்கொள்ளப் படுமாயின் வாழ்க்கை முழுநிறைவடையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. ஒவ்வொரு மாணவனதும் பக்தியையும் நம்பிக்கையையும் வளர்த்தல் வேண்டும்.

15. ஆசிரியர்மீது நீங்கள் அன்பும் பயபத்தியையும் காட்டுதல் வேண்டும். மிகவுன்னத குணவியல்புக்கு உங்களை அழைத்துச் செல்லும் முதலாவது படியாக அது அமையும்.

**சிறுர்கள்**

1. மாணவரின் உள்ளம் கள்ளங்கபடமற்றது. தூய்மையானது ஆசிரியருக்கும் பெற்ருேருக்கும் சிறுர்கள் வெண்பளிங்குக் கற்கள் போன்றவர்கள். கடவுளின் உருவத்தை அங்கு வார்த்தெடுத்தல் வேண்டும். சிறுவர்கள் இறைவனுக்கு அர்ப்பணமாக மலர்ந்து முகையவிழ்க்க வேண்டிய நிலையிலுள்ள அரும்புகள் என்பதை நினைவிற் கொள்ளல்வேண்டும்.

2. இயற்கையில் சிறுவர்கள் நல்லவர்கள். அவர்கள் தமது கடமையைச் செய்யவும், கற்றலிலே பிரகாசிக்கவும் விருப்பம் உடையவர்கள். ஆனால் முதியோர்கள் உண்மைக்கு உகந்த வகையில் நடக்காமையும் சுயகட்டுப்பாடின்றி வாழ்வதும் சிறுர்கள் நெறி பிறழ்வதற்கும் இடையிடையே ஒழுக்கம் பிறழ்வதற்கும் காரணம்.

3. தீவிர மனப் பதிவுகள் நிகழும் குழந்தைப் பருவத்தினரிடத்து எல்லோரிடத்தும் அன்பு செலுத்தும் வண்ணம் கற்பித்தல் வேண்டும். அன்பு ஐக்கியத்தை ஏற்படுத்துகின்றது, ஐக்கியம் தூய்மையை வளர்க்கின்றது. தூய்மை தெய்வீகத்திற்கு அழைத்துச் செல்கின்றது.

4. தமக்கு அனைத்தையும் வழங்கும் பெற்ருேரிடத்து அன்பும் மரியாதையும் செலுத்துதலே சிறுர்க்குரிய முன் நிபந்தனையாகும்.

5. ஓர் இளம் மரக்கன்றை நேராக வளருமாறு செய்யவாம். ஆனால் அது வளர்ந்து பெருமரமான பின்னர் வளர்ச்சியை வழிப்படுத்த முடியாது.

6. மனிதரிடத்துச் சகோதர உணர்வையும் இறைவனிடத்து தந்தை உணர்வையும் ஏற்படுத்தும் நிலையில் சிறுவர்கள் வளர்க்கப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. பக்தி, வழிபாடு, பரஸ்பர சேவை. கூட்டுறவு என்பவற்றைக் கொண்ட குழுவில் சிறுவர்கள் வளர்க்கப்படல் வேண்டும்.

8. நாளாந்தப் பணிகளைத் தொடங்குவதற்கு முன்னர் சிறுவர்களாயினும் சரி வளர்ந்த ஆண்கள் பெண்களாயினும் சரி, தமது தாய் தந்தையரின் கமல பாதங்களைத் தரிசித்தல் வேண்டும்.

**பெண்கள்**

1. பொறுமையும் தெய்வ வழிபாடும் பெண்களுக்குரிய உரிமையான ஆபரணங்களாகும்,

2 சத்தியம், வீரம், அன்பு, தயவு, அருள், ஆகிய பண்புகள் பெண்களிடத்துக் காணப்படும்பொழுது, உலகம் சாந்தியும் மகிழ்ச்சியும் கொண்ட சகாப்தத்தை அடையும்.

3. இன்று பெண்பாலார்க்குப் பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் வழங்கப்படும் கல்வியானது விரும்பிய மனைவியரை உருவாக்குகின்றதேயன்றி விரும்பிய அன்னையரை உருவாக்கவில்லை.

4. சிறுர்களை ஒளிபடைத்தவர்களாகவும். அழகானவர்களாகவும், அருளாளர்களாகவும், உறுதியானவர்களாகவும் உருவாக்குபவர்கள் அன்னையரே. இன்று உலகில் நிகழும் இன்னல்களுக்குரிய மீட்சிக்கு இது ஒரு வழியாக அமைகின்றது.

5. பெண்களே இல்லத்தில் பாதுகாவலராயிருத்தல் வேண்டும். அவர்கள் இல்லத்தரசிகளாக இருத்தல் மட்டுமன்றி நாட்டின் சிறப்பு அனைத்தும் அவர்கள்மீதே தங்கியுள்ளது.

6. ஒரு குழந்தையின் இயல்பைத் தீர்மானிக்கும் பிரதான காரணியாக அன்னையர் விளங்குகின்றனர். குழந்தையின் எதிர்காலம் அன்னையரால் உருவாக்கப்படுகின்றது.

**பெற்ருேர்கள்**

1. சிறுர்களின் உள்ளத்திலே பெற்ருர் செலுத்தும் செல்வாக்கு பொருண்மை கொண்டது. சிறாரின் ஆளுமையிலும் நடத்தைக் கோலத்திலும் அதுவே பிரதான ஆளுகை செலுத்துகின்றது.

2. சிறுரின் ஆளுமைப் பண்புகளை உருவாக்கும் பிரதான பொறுப்பு பெற்ருருக்கே உரியது. அதீத அன்பு காரணமாகச் சிறுவர்க்கு அளவிறந்த சுதந்திரத்தைக் கொடுத்தலாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. தங்கள் மீது பொறுப்பாக விடப்பட்ட மாணவர்களின் ஆளுமையை உருவாக்கும் பொறுப்பு பெற்றருக்கும், ஆசிரியருக்கும் உரியது. அவர்கள் சரியான உதாரணங்களைக் காட்டுவார்களாயின் அவற்றை மாணவர்கள் பின்பற்றி தேசத்துக்கு மேன்மைதரும் மாண்புள்ளவர்களாக மலர்வார்கள்.

4. தவறான அன்பு காரணமாக பிள்ளைகள் பிறழ்வாக அலைந்து திரியப் பெற்ரோர் அனுமதிக்கின்றனர்.

5. பாடசாலையில் ஆசிரியர் வழங்கும் பயிற்சிக்கு தந்தையும் தாயும் வீட்டில் அனுசரணை வழங்கல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed at Spartan Prints Ltd, 154, Wolfendhal St. Colombo 13. Tel : 23[illegible]8